சிவசக்தி
2003



ரோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்


சிவசக்தி

சிவசக்தி

SIVASAKTHY 2003



நோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்

Royal College Hindu Students' Union



றோயல் கல்லூரி
இந்து மாணவர் மன்றம்
பெருமையுடன் வழங்கும்

கலைமகள் விழா 2003

காலம்	:	ஞாயிற்றுக்கிழமை, 28.09.2003
நேரம்	:	பிற்பகல் 3.15 மணி
இடம்	:	"நவரங்கஹல"
பிரதம விருந்தினர்	:	சுவாமி போதமயானந்தா இராமகிருஷ்ண மிசன் ஆச்சிரமம் தி. நகர், சென்னை 17, இந்தியா
கௌரவ விருந்தினர்	:	திரு. H. L. B. கோமஸ் அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு 7

Royal College
Hindu Students' Union
proudly presents

Kalaimagal Vizha 2003

Date	:	Sunday, 28.09.2003
Time	:	3.15 p.m.
Venue	:	"Navarangahala"
Chief Guest	:	Swami Bodhamayananda Ramakrishna Mission Ashrama T. Nagar, Chennai 17, India
Guest of Honour	:	Mr. H. L. B. Gomes Principal, Royal College, Colombo 7



சித்தமெல்லாம் சிவனடிக்கே வைத்து,
சிறப்பையெல்லாம் அவனுக்கே ஆக்கி,.
முக்திநிலைக் கடலுக்குள் மூழ்கி,
மும்மலத்தார் பிணிகள் நீக்கும்
அட்டமா சித்திகள் பெற்று,
அன்பென்ற அகச் சமுத்திரத்தால்,
பித்தராய்த் திரிவர்! — எனினும்
பேரின்ப வீட்டில் கிடப்பர்!
நற்றவ முனிவர் போலும்,
நாயினுக்கடியர் போலும்,
பற்பலவாகத் தெரிவர்!
பரம்பொருளின் உருவமாவர்!
அற்புதக் கோலங் காட்டி,
அருளிடும் ஞானச் **சித்தர்**
பொற்பத அடிகளுக்கே — இப்
பக்தி நூல் **சமர்ப்பணமாகும்!**

விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— கபிலதேவர்

உ

சிவமயம்

பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

— *திருநாவுக்கரசர்*

திருவாசகம்

காதார் குழையாடப் பைம் பூன் கலனாட கோதை குழலாட வண்டின் குழாமாட
சீதப் புனலாடி சிற்றம்பலமாடி வேதப் பொருள்பாடி அப்பொருளாமாபாடி
சோதித் திறம்பாடி சூழ் கொன்றைத் தார் பாடி ஆதித் திறம் பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

— *மாணிக்கவாசகர்*

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாதொன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே சித்தத்துள் சித்திக்கும் தேனே
அளிவளருள்ளத்து ஆனந்தக்கனியே அம்பலம் ஆடரங்காக,
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

— *திருமாளிகைத்தேவர்*

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாள் உமை கோன்அடி யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே.

— *சேந்தனார்*

திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையேயுருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

— *சேக்கிழார்*

திருச்சிற்றம்பலம்

பராசக்தி துதி

மலைமகள்

ஆத்தாளையெங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியை தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

அலைமகள்

பொன்னரசி நாரணார் தேவி புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

கலைமகள்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

School of Our Fathers

(Words and Music by late Maj. H. L. Reed, Principal 1921-31)

Thy spirit first to life awoke,
In eighteen hundred and thiry-five,
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's learning thrive.

Refrain :

School where our fathers learnt the way before us,
Learnt of books and learnt of men through thee we'll do the same,
True to our watchword "Disce Aut Discede"
We will learn of books and men, and learn to play the game.

Within thy shade our fathers trod,
The path that leads to man's estate,
They have repaid the debt they owed,
They kept thy fame inviolate.

And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.



கதவின் கதைகள்

செந்தமிழைத் தந்தவனின்
தாள் பணியும் காலம் !
மந்திரமாய் வந்தவனில்
மலர் சொரியும் காலம் !
நந்தியேறும் சுந்தரனின்
நல்லருளின் காலம் !
நின்றிடுக தர்மநிலை !
நீங்குக கலி காலம் !

சத்தியத்தின் உத்தமத்தில்
சக்தி பெறும் காலம் !
சித்தமெலாம் பவித்திரமாய்
சிறந்திருக்கும் காலம் !
நித்தம் நித்தம் நிமலனையே
நினைந்துருகும் காலம் !
சத்தமின்றி அந்நிலைக்கு
மாறுக கலி காலம் !

உண்மைக்குப் பின்னாலே
உலகிருக்கும் காலம் !
நன்மைக்காய்ப் பிறந்தோர்க்கு
நன்றி சொல்லும் காலம் !
மங்கையவள் தன்கை அருள்
காத்தளிக்கும் காலம் !
பொங்கும் அந்தப் புதுயுகமாய்
ஆகுக கலி காலம் !

- ஆதித்தன்

றோயல் கல்லூரி
இந்து மாணவர் மன்றம்
செயற்குழு 2003

தலைவர்
திரு. H. L. B. கோமஸ்

பொறுப்பாசிரியை
திருமதி P. நீலலோஜனன்

உப பொறுப்பாசிரியர்கள்
திருமதி L. தவகுமார்
திருமதி S. கஜந்தன்
திரு. S. பாலேந்திரன்
திரு. S. சிவகுமார்

மன்றத் தலைவர்
M. பிரணவன்

செயலாளர்
V. விமலாதித்தன்

பொருளாளர்
A. சிந்துஜன்

மன்ற உப தலைவர்
N. நிஷாந்தனன்

உப செயலாளர்
S. அருணன்

உப பொருளாளர்கள்
V. T. தினேஷ்
N. ஜனகன்

பிரதம இதழாசிரியர்
P. சுந்தரகுமார்

துணை இதழாசிரியர்கள்
S. மகாறமணன்
K. பாலராஜன்

செயற்குழு உறுப்பினர்கள்

S. அச்சுதன்
N. N. ஜனகன்
V. ரதீஷ்
M. டிலக்ஷன்
B. புருஷோத்தமன்
T. ஸ்ரீரமணன்

A. சோபன்
P. மயூரன்
P. ஜெயப்பிரகாஷ்
J. உமேஷ்
S. திருப்பரன்
S. சுகோதயன்

P. விகாஷ்
K. பிரவீன்
V. லோகேந்திரன்
K. அரவிந்தன்
N. ரகுநாத்
M. திவாகரன்



சிவசக்தி 2003

இதழாசிரியர் அணி

பிரதம இதழாசிரியர்

பி. சுந்தரகுமார்

துணை இதழாசிரியர்கள்

சி. மகாறமணன் **கு. பாலராஜன்**

விட்டகுறை தொட்டகுறை விரைந்து முடிப்போம் !
தட்டிவிட்ட தருக்கர்தலை விரைந்து தகர்ப்போம் !
சத்தியத்தின் பாதைதன்னில் விரைந்து நடப்போம் !
நித்தியமாம் இந்துவெனுந் தீ விரைந்து வளர்ப்போம் !

EDITORIAL BOARD

Chief Editor

P. Suntharakumar

Sub Editors

S. Maharamanan **K. Balarajan**

வெளியீடு:
றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்
Published by:
Royal College Hindu Students' Union

இதழ் தந்த இதயங்கள் குரல் தருகையில்.....

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள் !
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள் !
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள் !

எங்கெங்கிலுமிருந்து அறிவுக்கு அருள் செய்யும் கலையரசியின் கழல் பணிந்து, வழமைபோல் இவ்வாண்டும் இந்து மாணவர் மன்றம் நடாத்தியுள்ள கலைமகள் விழாவின் பெருமையதனை தாங்கி நிற்கும் "சிவசக்தி 2003"ன் ஊடாக உங்களைக் காண்பதில் அகமகிழ்வடைகிறோம்.

'அன்பின் உருவே ஆண்டவன்' எனும் அறக்கருத்தை சிரமேற்கொண்டு, இந்து மாணவர் மன்றம் எடுத்த முயற்சிகளில் தலைசிறந்து திருவினையாகி விளங்கும் இந்த "சிவசக்தி 2003" மலரினைக் காண்கையில் நாமடைந்த மகிழ்வு அளவிடற்கரியது. அதை நீங்களும் அடைய வேண்டும் என்பதே எமது அவா.

நல்லவர் தாள் தொட்டு, நாம் தொடங்கிய இப்பணிக்கு, தொல்லைகள் பாராமல் ஆக்கங்கள், ஆசியுரைகள் அளித்த பெருந்தகையாளர்கட்கும், எம் மாணவத் தோழர்கட்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். சிறியோர் எம் செயலில் குறை இருந்தால் பெரியோர் மன்னித்தருளல் வேண்டும். நிறைவினால் மனம் நிறைந்து எம்மை வாழ்த்தி ஊக்குவித்து, எமது மன்றம் மேலோங்கச் செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!

P. சுந்தரகுமார்
இதழாசிரியர்

S. மகாறமணன், V. K. பாலராஜன்
துணை இதழாசிரியர்கள்

Message from the Chief Guest

I am happy to know that the Royal College Hindu Students' Union of Colombo is celebrating "Kalaimagal Vizha 2003" on Sunday the 28th of September 2003 and bringing out a souvenir "Sivasakthy 2003" on the occasion.

The youth are a great asset to the development and progress of a nation in all its areas. If the youth energy is channelled to constructive and positive purposes through "Real Education" then they will undoubtedly become Enlightened Citizens and make the country proud of its Heritage.

On this occasion of the "Kalaimagal Vizha 2003" I convey my love and best wishes to the Principal, Teachers and Students of Royal College Hindu Students' Union of Colombo and wish the function all success.

Swami Bodhamayananda
Ramakrishna Mission Ashrama
T.Nagar, Chennai 17
India

SPOKEN ENGLISH

யாருக்காக ?

By

K.M.N. Nalravi

★ தொழில் புரிபவர்களுக்காக
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- பேச்சுப் பயிற்சிக்காக அதிக நேரம். ● அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- அதி நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப் பயிற்சி.
- **Computer** மூலமாகவும், பிரித்தானிய, அமெரிக்க உச்சரிப்பு பேச்சுப் பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- **Audio Cassette** மூலமாகவும், வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற **Cassette**கள். ● வகுப்பில் பயிற்சி பெற **Video Cassette**கள். ● மாணவர்களின் தலைவர்கள் மூலமாக அவர்களின் தேவைகளையும், குறைகளையும் அவ்வப்போது நிவர்த்தி செய்தல்.
- 3 மாத காலப் பாடத்திட்டம். ● பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஞாயிறு, போயா தினங்களைத் தவிர அலுவலகம்
காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும்.

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE

527, Galle Road, Wellawatta, Colombo -06.
(Vivekananda Roadக்கு முன்னால்) E-mail : nalravi@yahoo.com

Talent Media-2679475



Principal's Message

It is a great pleasure to contribute this message to the Souvenir "Sivasakthy" to be published on the occasion of "Kalaimagal Vizha" which is an annual event celebrated by the Hindu Students' Union of Royal College.

Members of the Hindu Students' Union organize this festival to invoke the blessings of the Goddess of Education and Fine Arts. I am happy that the students feel the importance of Education and Fine Arts to develop their own personalities and to become respected citizens of Sri Lanka.

Functions of this nature will no doubt help to inculcate the correct values in the minds of the young Royalists of multi-religious, multi-cultural and multi-racial environment and promote ethnic harmony.

I thank the Teachers and the Organizing Committee for their untiring efforts to make this event a success.

H. L. B. Gomes
Principal
Royal College

With Best Compliments from



GANESH
TEXTILES (PVT) LTD.

Wholesale & Retail Dealers in Textiles

81- 83, Main Street, Colombo 11
Tel: 2325128, 2343078

Message from the Vice Principal

It is with great pleasure that this message is contributed to the "Sivasakthy 2003", the souvenir published to mark the "Kalaimagal Vizha 2003", another important event of the Royal College calendar of the year, organized by the Hindu Students' Union of Royal College.

The Hindu Students' Union was able to organize this annual event almost every year from its inception in 1955. This gives immense opportunities to the children of Royal College as well as the children of other schools, since they have organized inter-grade as well as inter-school competitions in Hinduism.

Since religion is one of the subjects taught in the school, I appreciate the efforts made by an organized body like the Hindu Students' Union, in order to molify the minds of the Tamil children at Royal College. Hence, I take this opportunity to thank Mrs. P. Neelalojanan, the teacher-in-charge, the other teachers involved and also the members of the committee for their hard work to bring this to the stage in the current year too.

Good Luck!

S. P. Senaratne
Vice Principal
Royal College

Message from Assistant Principal

I have great pleasure in contributing this message to the "Sivasakthy 2003" souvenir which is being published by the Royal College Hindu Students' Union.

In the era when religious beliefs are fading away, it is heart-warming to see the students promote and revive the religious beliefs. When you believe in religion, you believe in God. And when you believe in God you are afraid to do wrong deeds. So this brings out the good in people, thus making the world a better place to live in.

I take this opportunity to wish the Hindu Students' Union all success in all their endeavours and congratulate the Teachers-in-charge for their invaluable assistance rendered to the students.

R. L. Senanayake
Asst. Principal
Co-curricular



உதவி அதிபரின் ஆசிச் செய்தி

கொழும்பு றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் "சிவசக்தி" மலருக்கு ஆசிச் செய்தி தருவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். இந்து மாணவர் மன்றம், இந்து மதம் தொடர்பாகப் பல பணிகளை கல்லூரிக்குள்ளும், கல்லூரிக்கு வெளியேயும் ஆற்றி வருகின்றது. போயா தினங்களுக்கு முன்னைய தினங்களில் சமயப் பெரியார்களை அழைத்துப் பேச வைத்தல், எமது கல்லூரி மாணவரிடையே சமயப் போட்டிகளை பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை நடாத்துதல், பாடசாலைகளுக்கிடையே சமயம் சம்பந்தமான போட்டிகளை ஏற்படுத்தல் மூலம் மாணவரிடையே சமய எழுச்சியை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி எமது மாணவர்களை சமய வாழ்வில் ஈடுபாடடையச் செய்வதில் முன்னணியில் திகழ்கின்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற முதுமொழிக்கிணங்க இத்தகைய இறைபணியில் ஈடுபடும் திருமதி புஷ்பா நீலலோஜனன் அவர்கட்கும், ஏனைய இந்து மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியர்கட்கும், அதன் செயற்குழுவுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் இப்பணி மேலும் சிறக்க இறையாசியை வேண்டுகின்றேன்.

நன்றி.

சி. இரத்தினசபாபதி
உதவி அதிபர்
தமிழ்ப் பிரிவு
றோயல் கல்லூரி



தமிழ்ப் பிரிவுத் தலைவரின் உள்ளத்திலிருந்து .....

நோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் ஆண்டு தோறும் நடாத்திவரும் சரஸ்வதி பூசையின் வெளியீடான "சிவசக்தி" மலரின் ஊடாக உங்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். முப்பெரும் தேவியருக்கு விழாவெடுத்து சைவத்தின் பெருமையை தலைநகரில் நிலை நிறுத்தி வருவதில் நோயல் கல்லூரி பின்னிற்பதில்லை என்பதைப் பறைசாற்றுவதே "கலைமகள் விழா" ஆகும்.

மரபுகளும், வழக்காறுகளும் சீர்குலைவடைந்து வரும் இக்காலத்தில் அத்தகைய மரபுகளையும் வழக்காறுகளையும், விழுமியங்களையும் பேணும் நடத்தையில் முன்னின்று வழிநடத்தும் இந்து மாணவர் மன்றத்தினருக்கு எனது வாழ்த்துக்கள்.

இம்மன்றத்தினரைச் செவ்வையாக வழி நடத்தும் திருமதி புஷ்பா நீலலோஜனன் அவர்கட்கும், நோயல் கல்லூரி இந்து மாணவர் மன்ற 2003 நிர்வாகக் குழுவினருக்கும் தங்கள் பணி சிறக்கவும் ஆண்டு தோறும் தொடரவும் இறையாசியை வேண்டுகின்றேன்.

நன்றி.

மா. கணபதிப்பிள்ளை
தமிழ்ப் பிரிவு முதல்வர்
நோயல் கல்லூரி

பொறுப்பாசிரியையின் பொன்மனதிலிருந்து ....

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய அன்னை ஆதிபராசக்தியின் மூன்று வடிவங்களான மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் விரதம் அனுஷ்டிக்கும் நவராத்திரி நன்னாளிலே அகிலமெங்கும் விழா எடுக்கும் வேளையில் நம் பாடசாலையிலும் கலைமகள் விழா கொண்டாடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பாடசாலை மட்டத்தில் சமயத்தையும் அதனூடாக மனித விழுமியங்களையும் வளர்க்க முயற்சிக்கும் நம் வேத்தியச் செல்வங்களின் அயராத உழைப்பால் கலைமகள் விழாவும், சிவசக்தி இதழும் உங்கள் புலன்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டிக்கொண்டிருக்கின்றன.

மாணவர் மத்தியில் எதிர்மறை எண்ணங்கள் துரிதமாக வளரும் இக்காலகட்டத்தில் பாடசாலை மன்றங்களும் அறநெறி பாடசாலைகளும் மிகவும் இன்றியமையாதனவாக அமைகின்றன. எனவே மாணவ உள்ளங்களைப் பண்படுத்தப் பாடுபடும் இம்மன்றங்களின் பணி தொடரவும் வளரவும் உங்கள் அனைவரது ஆதரவை வேண்டுவதுடன் அன்னை பராசக்தியின் அருளையும் வேண்டி நிற்கின்றோம்.

"ஈஸ்வரீம் ஸர்வ பூதானாம்!

Neelaloga.

திருமதி புஷ்பா நீலலோஜனன்
பொறுப்பாசிரியை
இந்து மாணவர் மன்றம்
றோயல் கல்லூரி

Message from the Buddhist Brotherhood

"Kalaimagal Vizha 2003" is a ceremony that is staged in the "Navarangahala" with much practice and great effort.

Things we learn and practise are retained in our memory for a long time. Even after completing school life we can recall the memories of the things we did as school children. According to Buddhism what we do and say become "Karma".

Lord Buddha stated that anything done with the control of the mind would remain in ones deep conscience. Further he said that the results of our actions which are called "Karma" would decide our fate. If you study hard you will be successful at the examination. Likewise one's own deeds will bring good or bad results in their life.

The disasters like floods, cyclones, earthquakes etc. are considered to be natural phenomena and cannot be categorized as "Karma". However your own thoughts and actions would lead to corresponding consequences. Accordingly Lord Buddha such consequences are five-fold. One of this is "Karma". He further stated that in order to lead a good life free of pain and sorrow one should observe five precepts.

In conclusion let me wish you peace and happiness for engaging in such good deeds while continuing your education at Royal College, your alma mater.

Sarath Munasinghe de Silva
Teacher-in-charge
Buddhist Brotherhood



Message from the Islamic Society

It is with great pleasure that I contribute this message on behalf of the Islamic Society to the "Sivasakthy 2003", the publication which is issued to mark the 48th anniversary of Hindu Students' Union of Royal College.

As you know Royal College is a symbol of unity and brotherhood, and the college encourages all students in their religious activities. Like the Islamic Society, the Hindu Students' Union also promotes inter-religious understanding among students.

It is indeed a great achievement to organize inter-school, inter-grade competitions and the annual event which gives many opportunities to students.

Let me take this opportunity to congratulate the Teacher-in-charge Mrs. P. Neelalojanan, Assistant Teachers-in-charge and the Organizing Committee for their untiring efforts to make this event a success.

Mrs. Yasmin Munaz
Senior Vice President
Islamic Society



Message from the Students' Christian Movement

It is with great pleasure that I convey a message to the annual "Kalaimagal Vizha 2003" magazine.

Religious festivals like this continue to keep up the religious and racial harmony among every student of Royal College and it must be so even in the years to come.

I congratulate and also thank the Students and Teachers of the Hindu Students' Union of Royal College for their untiring efforts to make this event a success.

Anton De Silva
Teacher-in-charge
Students' Christian Movement

Message from the Catholic Students' Union

This message of sincere good wishes is conveyed to the Hindu Students' Union on the occasion of "Kalaimagal Vizha 2003" with utmost pleasure.

The Hindu Students' Union has always been working quite harmoniously with all other societies of the College. On behalf of the Catholic Students' Union, I hope and wish that the Hindu Students' Union will achieve its great objective of worshipping goddess Saraswathi for talents in education and fine arts together with goddess Lakshmi the Goddess in charge of wealth, and goddess Durga who is in charge of strength and vigour.

We wish Mrs. Neelalojanan, the Teacher-in-charge and her committee, all success in achieving their objectives.

Pearl Perera

Mrs. P. Perera
Teacher-in-charge
Catholic Students' Union

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆசீச் செய்தி

ஸ்ரீலங்காவில் உள்ள றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் ஆண்டு தோறும் கலைமகள் விழாவில் "சிவசக்தி" என்னும் நூலின் மூலம் இந்துக்களின் சம்பிரதாயம், ஒழுக்கம் முதலிய பல நல்ல விஷயங்களை வெளியிட்டு வருவதையும் 2003ம் ஆண்டின் கலைமகள் விழாவிலும் இவ்வாண்டிற்கான "சிவசக்தி" வெளியிட இருப்பதையும் அறிந்து ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

இந்து ஸமுதாய நலனுக்காக பாடுபடும் இந்தக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து தொண்டு செய்து கொண்டு விளங்கட்டும் என்று ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஆசீர்வதித்த செய்தி தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ கார்யம்
காஞ்சி காமகோடி பீடம்
காஞ்சிபுரம், தமிழ் நாடு
இந்தியா

MESSAGE FROM

SWAMI ATMAGHANANANDA

We are glad to forward this message to the Souvenir "Sivasakthy 2003" brought out by the Hindu Students' Union of the Royal College, Colombo, on the occasion of the "Kalaimagal Vizha" celebrated by them on the 28th of September, 2003.

Today a student has to work very hard to pass the examinations with distinctions in order to enter the university. In that hot chase, he hardly finds time to pay any attention to the strengthening of his character through prayer, social service, study of religious texts etc. Whatever little leisure got is rather spent mostly in front of the TV or in playing cricket or doing something else than even spend some happy moments with parents and neighbours. This is the life style of a good number of the students today. Most of the parents also appear to be more worried about the school result of their wards than their general welfare. In that rat race for a golden result, both the parents and the children pitiably forget even to strengthen their filial ties, thus unknowingly make life more mechanical and lifeless. In this age of materialistic culture, when alcoholism, drug abuse, pornography and all sorts of vulgarity are ruling the atmosphere, one can well imagine how much challenging it is for a student to build up his character against these odds. But students in general appear to be less concerned about this challenge, but look more bothered about their future career. This is not their fault. They only reflect the concern of their parents and teachers, in general, who expect this much only from their wards. The end result is the slow death of morality and sympathy in the society and a fast growing evil of competition, corruption and vulgarity. If good meaning people want this depressing situation to improve for better, then it is imperative that they pay more attention to the development of character of the children than turning them out to be mere doctors or engineers. Sooner this is done, better would be the future of the society.

We are glad that the Hindu Students' Union of the Royal College is keen to observe the 'Kalaimagal Vizha' in the traditional way, and are bringing out a Souvenir also to mark the occasion. We wish the 'Kalaimagal Vizha' a success!

Swami Atmaghanananda
Ramakrishna Mission
Ceylon Branch

ஓம்

பிரமசாரி ரமண சைத்தன்ய அவர்களின் ஆசிச் செய்தி

றோயல் கல்லூரியில் கலைமகள் விழா நடைபெறுவது கேள்வியுற்று மகிழ்ச்சியடைகிறேன்.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பதற்கமைய ஏட்டுக் கல்வி மட்டுமே ஒரு மனிதனை முழுமையாக்காது. ஏட்டுக் கல்வியுடன் ஏனைய கலைகள் பற்றிய விழிப்புணர்ச்சியும் அன்றாட வாழ்வுக்குத் தேவையான சமயோசித அறிவும் (common sense) மிகவும் அவசியம்.

இந்த விழாக்கள் மாணவரிடையே அப்படிப்பட்ட அறிவினை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவர்கள் மென்மேலும் தங்களுடைய தேர்ந்தெடுத்த துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பேரும் புகழும் கூடப்பெற்று சிறப்பாக வாழ கலைமகள் அருள் புரியட்டும் என்று வேண்டி நிறைவு செய்கிறேன்.

இறையருள் குறை தீர்க்கும்.

இறைப் பணியில்

Ramana

ரமண சைத்தன்ய
ஆச்சாரியர்
இலங்கை சின்மயா மிஷன்

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ சந்திர சேகர சுவாமிகளின் ஆசிச் செய்தி

நாம் வாழும் இப்பூமியின் உதரத்தில் வனப்பூட்டும் தாதுப் பொருட்கள், கனிப் பொருட்கள், உலோகங்கள் என்பன மண்டிக் கிடக்கின்றன. அவற்றை நிபுணர்களாலும், விஞ்ஞான ஆராச்சி செய்பவர்களாலும் வெளிக் கொணரப்படுவது போல் ஸ்ரீலங்கா தலைநகரில் அமையப்பெற்றுள்ள றோயல் கல்லூரி தொடர்ந்தும் வனப்பூட்டும் நிபுணர்களை வெளிக் கொணர எல்லாம் வல்ல ஸ்ரீ ஆஞ்ச நேயப் பெருமானை சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்.

ஸ்ரீ சந்திர சேகர சுவாமிகள்
ஸ்ரீ ஆஞ்ச நேயர் ஆலயம்
தெஹிவளை

அம்பாள் துணை



அன்னை சிவத்தமிழ் செல்வியின் ஆசி

துர்க்கா துரந்தரி
சிவத்தமிழ் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
தலைவர்
துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

புகழ் பூத்த நோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவு மாணவர்களின் நவராத்திரி விழா குறித்து வெளியிடப்படும் மலருக்கு ஆசி வழங்குவதில் அக மகிழ்கிறேன். கல்லூரி இந்து இளைஞர்களின் சமயப்பற்றுகண்டும் பெருமை கொள்கிறேன். ஏனைய கல்லூரிகளுக்கு முன்னுதாரணமாக நோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் விளங்குவதை யாவரும் ஒப்புக்கொள்வர். நோயல் கல்லூரி கலை விழாக்களில் கலந்து கொண்ட அனுபவம் எனக்குண்டு. பல வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டு விளங்குகின்ற இக்கல்லூரியில் தமிழ் மாணவர் தம் கலாச்சார விழாக்களைத் தவறாது கொண்டாடிவருவது பாராட்டுக்குரிய விடயமாகும். நவராத்திரி விழா ஆலய கலைகளை அரங்கேற்றும் விழா, பத்தி உணர்வை மாணவர்களிடையே பரப்புகின்ற உன்னத விழா. நோயல் கல்லூரிச் சமூகத்தை மனமார வாழ்த்துகிறேன். மாணவர்களின் பேரார்வம் கண்டு பெருமை கொள்கிறேன். எல்லாம் வல்ல ஈஸ்வரி துர்க்கை யாவருக்கும் நல்லருள் பாலிக்க வேண்டி நிறைவு செய்கிறேன்.

மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்

— பாரதியார்

தங்கம்மா அப்பாக்குட்டி



செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன் (B.A.)
ஆசிரியர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நவராத்திரி விழாவை எழிற்சி மிக்க சைவத் தமிழ் விழாவாகக் கொண்டாடுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். பேரறிஞர்களை உருவாக்குகின்ற பெருங்கல்விக் கூடமாக விளங்குவது றோயல் கல்லூரி. இக் கல்லூரித் தமிழ்ப் பிரிவு மாணவர் வருடாவருடம் கலைமகளுக்கு விழா எடுத்து தம் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நிலைநிறுத்தி வருவது மெச்சத்தக்கது. கல்வியோடு கடவுள் பக்தி இணைகின்ற போதுதான் நாட்டுக்குகந்த நல்ல சமூகம் எதிர்காலத்தில் உருவாகும். இந்து மதத்தவர்களின் ஒவ்வொரு விழாக்களும் வாழ்வியற் சிந்தனைகளை வளப்படுத்துவன. அவ்வகையில் நவராத்திரி விழா கல்வி, செல்வம், வீரம் என்ற அடிப்படைகளை இறைவனிடம் இறைஞ்சி இனிய மனிதர்களாக வாழ்வதற்குரிய தெளிவை விளக்கும் விழாவாக அமைந்துள்ளது. றோயல் கல்லூரி இந்து இளைஞர்களின் சமய ஆர்வம், மொழி ஆர்வம் கண்டு மிக மகிழ்வடைகிறேன். "சொல்லிற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல" நல்வித்தை யாவும் தருகின்ற அன்னை கலைவாணியின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன். கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி நிறைவு செய்கிறேன்.

ஆறு. திருமுருகன்

மன்றத் தலைவரின் மனோசங்கற்பம்

சேதிக்கலாம் தர்க்கமார்க்கங்கள் எவ்வெவர் சிந்தனையையும்
சோதிக்கலாம் உறப்போதிக்கலாம் சொன்னதே துணிந்து
சாதிக்கலாம் மிகப்பேதிக்கலாம் முத்திதான் எய்தலாம்
ஆதிக் கலாபமயில் வல்லி பொற்றாளை அடைந்தவர்க்கே.

வெண்தாமரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வெள்ளை உள்ளத்துக் கலைத்தாயின் அருளாசி வேண்டி வேத்தியர் நாங்கள் வருடாவருடம் கலைமகள் விழாவை நடாத்தி எம் திறன்களை யெல்லாம் கலைவாணிக்கு அர்ப்பணம் செய்து அவள் தாள் தொழுது நிற்கின்றோம்.

இந்து மாணவர் மன்றம் தனது 48வது அகவை தன்னில் வீறுநடைபோட்டு பொன்விழாவை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பல தடைகளையும் உடைத்தெறிந்து, சுமைகளை எல்லாம் சகித்து, சுகங்களாக எண்ணி வலிய எங்கள் இளைய தோள்களால் தாங்கப்பட்ட தூண்களின் மேல் இன்று "கலைமகள் விழா 2003" அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

ஈழத்தின் தலைசிறந்த கல்லூரிகளுள் முதன்மையானதான றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிய பிற பாடசாலைகளுக்கும், மற்றும் பல இனிய நெஞ்சங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு கலைத்தாயின் ஆசியும் கிடைக்கவேண்டி விடைபெறுகிறேன்.

M. Biranavan

ம. பிரணவன்
மன்றத் தலைவர்
இந்து மாணவர் மன்றம்

செயலாளரின் செழுந்தமிழ் ஓலை !

சிறந்திடும் அறுபத்துநான்கு சீரிய கலைகளுக்கெல்லாம்
அறந்தரும் அதிபதி, தாயின் அடிகளுக்கு, அர்ப்பணமென்றே
நலந்தரும் "கலைமகள் விழாவை" நவராத்திரியில் ஒருநாள்
திறந்திடும் மடையைப் போல, திறமையால் அரங்கில் தந்தோம் !

நலமுற, அகில இலங்கை நாட்டிடை "சமயத் திறன்காண்
செழுந்தமிழ்ப் போட்டிகள்" வைத்தோம் ! சைவத்தின் மாண்பு காட்டி
ஒளிவிடும் "சிவசக்தி" என்பதொரு தீபம் வைத்தோம் !
உழைத்திட்ட தோள்களுக்கெல்லாம் உண்டிங்கு கோடி நன்றி !

இந்துவின் மேன்மை தன்னை, இனியதாய், மாணவரிடையே
சுந்தரத் தமிழால் பரப்பும் சின்னவர் எங்கள் செயலில்,
சிந்தனைச் செல்வரெல்லாம் கறை, குறை கண்டிடாமல்,
நின்றிடும் நிறைகள் காண்க, நம்மவர் கொள்கை ஓங்க !!

சொல்லிய சைவ மாண்பு சுந்தரத் தமிழின் சாறு,
மெல்லிய "குயிலின் குரல்" போல் மகிழ்விக்கும் பண்களோடு,
வல்வினை நீக்கும் வேலன் வழங்கிடும் அருளினோடு,
நல்லுலகெல்லாம் பரவி, நல்குக இன்ப வீடு !

V. Vimalathithan

வி. விமலாதித்தன்
செயலாளர்
இந்து மாணவர் மன்றம்

Royal College
Hindu Students' Union
Office Bearers 2003

President
Mr. H. L. B. Gomes

Senior Vice-President
Mrs. P. Neelalojanan

Vice-Presidents
Mrs. L. Thavakumar
Mrs. S. Gajenthan
Mr. S. Balaendran
Mr. S. Sivakumar

Student Chairman
M. Branavan

Secretary
V. Vimalathithan

Treasurer
A. Sindujan

Asst. Student Chaiman
N. Neshanthanan

Asst. Secretary
S. Arunan

Asst. Treasurer
V. T. Dinesh
N. Janagan

Editor
P. Suntharakumar

Sub Editors
S. Maharamanan
K. Balarajan

Committee Members

S. Atchuthan
N. N. Janakan
V. Ratheesh
M. Dilakshan
B. Purushoththaman
T. Sriramanan
A. Soban
P. Mayoorun
P. Jeyaprakash
J. Umesh
S. Thirupparan
S. Sugothayan
P. Vikash
K. Praveen
V. Logendran
K. Aravinthan
N. Ragunath
M. Thivakaran

Office Bearers 2003



Seated (L - R) : Mrs. L. Thavakumar *(Asst. Teacher-in-charge)*, Mrs. P. Neelalojanan *(Teacher-in-charge)*, P. Suntharakumar *(Editor)*, M. Branavan *(Student Chairman)*, Mr. H. L. B. Gomes *(Principal)* Mr. S. P. Senaratne *(Vice-Principal)*, V. Vimalathithan *(Secretary)*, A. Sindujan *(Treasurer)*, Mr. S. Balaendran *(Asst. Teacher-in-charge)*, Mr. Sivakumar *(Asst. Teacher-in-charge)*

Standing (L - R) : P. Vikash, S. Arunan, N. N. Janakan, P. Mayoorun, V. T. Dinesh, K. Praveen, V. Ratheesh, K. Balarajan, P. Jeyaprakash, M. Dilakshan, K. Kokullanath, S. Atchuthan, N. Janagan, J. Umesh, K. Aravinthan, B. Purushoththaman, N. Neshanthanan, S. Maharamanan

Absentees : V. Logendran, T. Sriramanan, S. Sugothayan, A. Soban, N. Ragunath

Organizing Committee 2003

M. Branavan
V. Vimalathithan
A. Sindujan
P. Suntharakumar
N. Neshanthanan
S. Arunan
V. T. Dinesh
N. Janagan
S. Maharamanan
K. Balarajan
S.Atchuthan
A. Soban
P. Vikash
N. N. Janakan
P. Mayoorun

K. Praveen
V. Ratheesh
P. Jeyaprakash
M. Thivakaran
J. Umesh
K. Aravinthan
B. Purushoththaman
S. Thirupparan
V. Kishaan
N. Ragunath
T. Sri Ramanan
S. Sugothayan
S. Risheeban
V. Logendran

Organizing Committee 2003

Seated (L - R) : S. Maharamanan, S. Arunan, N. Neshanthanan, A. Sindujan *(Treasurer)*, M. Branavan *(Chairman)*, V. Vimalathithan *(Secretary)*, P. Suntharakumar *(Editor)*, V. T. Dinesh, N. Janagan, S.Atchuthan

Standing (L - R) : A. Soban, P. Vikash, N. N. Janakan, P. Mayoorun, K. Praveen, V. Ratheesh, K. Balarajan, P. Jeyaprakash, M. Dilakshan, K. Kokullanath, M. Thivakaran, J. Umesh, K. Aravinthan, B. Purushoththaman, S. Thirupparan, V. Kishaan, N. Ragunath

Absentees : V. Logendran, T. Sriramanan, S. Sugothayan, S. Risheeban

JUNIOR AND INTERMEDIATE COMMITTEE MEMBERS 2003

Junior Committee

R. Sarangan (Chairman)

T. Kapilan (Secretary)

M. Pranavan (Treasurer)

V. Artheeckumar (Treasurer)

J. Abeegithan

P. Sushanthan

B. Kogulan

K. Risho Navinraj

U. Sajeev

Intermediate Committee

M. Umeshan (Chairman)

S. Mayuran (Secretary)

G. Pirahalaathan (Treasurer)

B. Krishoban

S. Roshanth

R. Anapayan

M. Mathurangan

M. Niroshan

S. Vasuneyan

A. Navin

Junior Committee & Intermediate Committee 2003

Seated (L - R) : M. Pranavan *(Treasurer)*, R. Sarangan *(Chairman)*, T. Kapilan *(Secretary)*, S. Mayuran *(Secretary)*, M. Umeshan *(Chairman)*, G. Pirahalaathan *(Treasurer)*,

Standing (L - R) : V. Artheeckumar *(Treasurer)*, J. Abeegithan, P. Sushanthan, B. Kogulan, K. Risho Navinraj, U. Sajeev, B. Krishoban, S. Roshanth, R. Anapayan

Absentees: : M. Mathurangan, M. Niroshan, S. Vasuneyan, A. Navin

Royal College
Hindu Students' Union

Year	*Student Chairman*	*Secretary*
1963/1964	S. Baskaran	M. Oerakumar
1964/1965	S. Gangadaran	R. Balasubramanium
1965/1966	L. N. Shanmugaratnam	R. Rajaiya
1966/1967	K. Wijendra	R. Rajaiya
1968	A. Rajeswaran	K. Premarupan
		S. Rajasunderam
1973/1974	S. Surendran	P. Udhayanan
1974/1975	R. Sashidaran	
1976/1977	S. Jayakumar	
1978/1979	R. Ajanthan	
1979/1980	S. Manikkalingam	
1980/1981	T. Aathirayen	
1982/1983	T. Arthiraiyen	
1984/1985	V. Karunakaran	
1985/1986	V. V. Sabaratnam	S. Lingan
		S. Sathiendra
1986/1987	S. Senthilkumaran	
1990/1991	B. Balaretnarajah	S. Rajkumar
1992/1993	S. Chandramohan	V. Jeyaprakash
1993/1994	G. Navadeepan	A. Segar
1994/1995	K. Gangatharan	S. Jeyanthan
1998/1999	N. Sudarshan	R. Anandan
1999/2000	P. S. Senthuran	T. Yogendran
2000/2001	S. Gajendran	B. Baherathan
2001/2002	H. Sriram	N. Vivek, M. Pradeep
2002/2003	S. Aravindh	G. Saroj Pragash
2003/2004	M. Branavan	V. Vimalathithan

Royal College Hindu Students' Union

PAST EDITORS

1998	E. Bramavinayagan
1999	N. Shangeethkanna
2000	B. Kandeepan
2001	U. L. M. Resha, K. T. Suvagithan
2002	T. Jeyapragash
2003	P. Suntharakumar

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 1955ல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் துரதிஷ்டவசமாக சகல விபரங்களும் எம்மிடம் வைப்பில் இல்லை.

விபரம் அறிந்தவர்கள் எமக்கு அவற்றை தந்துதவுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

With Best Compliments from

Asbestos Cement Indutries Limited
Manufacturers of

"Elephant Masconite Brand"

Asbestos cement 'Elephant Masconite'
"Color Plus" in 5 attractive colours
(Autumn Red, Spruce, Antelope, Torres Blue & Clay Pot)

- **With ISO 9002 Accreditation.**
- **Conforming to Sri Lanka and British Standards**

Head Office:
175, Sri Sumanatissa Mawatha
Colombo 12
Tel: 2435115 (Hunting)
2440014, 2440024
Fax: 2449537
E-mail: aciho@sltnet.lk

Factory:
68, Katukuruduwatta
Off Attidiya Road
Ratmalana
Tel: 2737417, 2717289, 2714119
Fax: 2449537
E-mail: aciho@sltnet.lk

Distributors:

Mascons Limited.
175, Sri Sumanatissa Mawatha
Colombo 12
Tel: 2325561-3

Building Material Corporation.
541, Sri Sangaraja Mawatha
Colombo 12
Tel: 2326701-5
and Branches Islandwide

"Stamp of strength"

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

கடவுள் வாழ்த்து

பூசை

வரவேற்புரை

ஒளிரும் இளம் சுடர்கள்

மலர் வெளியீடு

அதிபர் உரை

பரிசளிப்பு

பல்லியம்

பிரதம அதிதி உரை

நாடகம்

நன்றியுரை

வில்லுப்பாட்டு

பாடசாலை கீதம்

தேசிய கீதம்

With Best Compliments from

SEVANA LOTTERY

A portion of every rupee earned through Sevana Lottery ticket sales goes for providing shelter to the poorest of the poor and developing projects of Religious and Social interest.

BUY SEVENA LOTTERY
WITH A SURE CHANCE TO WIN

SEVANA

We draw upon your dreams

Sevana Lottery
National Lottery Board
No. 234/2, Galle Road
Colombo 3

With Best Compliments from

V. Sujeevan
S. Prasanth
K. Mowliharan
T. Harisuthan
S. Varnasuthan

Programme

Lighting of the Oil Lamp

Prayers

Pooja

Welcome Speech

Children's Programme

Release of Souvenir

Speech by the Principal

Prize-giving

Palliyam

Speech by the Chief Guest

Drama

Vote of Thanks

Villu Pattu

School Song

National Anthem

With Best Compliments from

Omega Traders

Importers & Exporters

OMEGA TRADERS

No. 62 A, Old Moor Street, Colombo 12, Sri Lanka
Tel: 0094-1- 2341747, 2432350
Fax: 0094-1-2434905
E-mail: omega@sierra.lk Website: www. omega.lk

கடந்து வந்த காலங்கள்

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் தனது வருடாந்த பொதுக்கூட்டத்தை 13.11.2002 அன்று கூட்டியது. அன்றைய தினம் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டு மன்றப் பொறுப்புகள் கையளிக்கப்பட்டன.

அன்றிலிருந்து நாம் கடந்து வந்த காலச் சுவடுகள், ஏறி வந்த வெற்றிப் படிகள் இதோ உங்கள் முன்னே .....

* முதன் முதலில் நாங்கள் எடுத்த முயற்சியே சிறந்து விளங்கியது. 02.02.2003 அன்று இந்து மாணவர் மன்றத்தினால் பிற பாடசாலைகளுக்கு இடையேயான "சமயத் திறன்காண் போட்டிகள் 2003" அகில இலங்கை ரீதியில் வெற்றிகரமாக நடைபெற்றது. அப்போட்டிகளில் பரிசு பெறுகின்ற இருபது பாடசாலைகளுள் பத்து பாடசாலைகள் கொழும்பு மாவட்டமல்லாத பிற மாவட்ட பாடசாலைகள் என்பது இங்கே மகிழ்வோடு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

* மாணவர்களின் உள்ளத்தே ஆன்மீகப் பயிர் வளர்க்க எமது மன்றமானது மாதாமாதம் பௌர்ணமிக்கு முன் தினங்களில் சமயப் பெரியார்களை அழைப்பித்து சமய விரிவுரைகளை ஆற்றச் செய்கிறது.

* இந்து மாணவர் மன்றம் எங்கள் மாணவர்களிடையே இந்து சமய அறிவு வளர்ச்சிபெற கல்லூரிகளுக்குள்ளான போட்டிகளை நடாத்தி அவர்களின் திறன்களை வெளிக்காட்டச் செய்தது.

* பிற சகோதரப் பாடசாலைகள் நடாத்திய போட்டிகளிலும் 2ம் உலக இந்து மாநாட்டிற்காக நடாத்தப்பட்ட போட்டிகளிலும் விவேகானந்த சபையால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிகளிலும் எமது இளங்கன்றுகள் இந்து மாணவர் மன்றத்தினூடாகப் பங்கு பற்றி வெற்றிக் கொடி நாட்டினார்கள்.

* றோயல் கல்லூரி நூலகத்துக்கு எம் மன்றம் இந்து மதம் சம்பந்தமான நூல் தொகுதிகளை வழங்கியது.

* எமது மன்றத்தால் நவராத்திரி நாட்களில் தினமும் காலை வேளைகளில் பூஜைகள் செய்து பிரசாதம் விநியோகிக்கப்பட்டது.

* இவையோடு இன்னும் எத்தனையோ நற்பணிகள் நாம் புரிந்திருப்பினும் அன்னை கலைமகளின் அடிகட்கு அவற்றையெல்லாம் சமர்ப்பித்து இறும்பூதெய்தி நிற்கிறது றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்.

செயற்குழு
2003 - 2004



அன்புச் சமயம்

பேராசிரியர் கலாநிதி **அ. சண்முகதாஸ்**
தலைவர் — தமிழ்த் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இந்து மதம் எங்களுடைய சமயம். இதனுடைய தொன்மையான நிலை சிவசமயமேயாகும். சிந்துவெளி நாகரிக எச்சங்கள் இதற்குச் சான்று காட்டுகின்றன. சிவசமயம் பற்றி நாம் பேசினால், அது இந்து சமயம் பற்றியதுமாகும். எனவே சிவசமயத்தின் ஒரேயொரு பண்பினை மட்டும் இக்கட்டுரையிலே விவரிக்கலாமென எண்ணுகிறேன். சைவ சமயத்தினுடைய அடிப்படையை சைவசித்தாந்த அறிஞர் சிவபாதசுந்தரனார் பின்வருமாறு கூறுகிறார்:

> "ஒரு கடவுள் இருக்கிறார். பல ஆன்மாக்கள் இருக்கின்றன. இவற்றின் அறியுந் திறமை ஆணவத்தால் தடுக்கப்படுகின்றது. ஆன்மாக்கள் கன்மத்தைச் செய்து அதன் விளைவுகளை அனுபவித்தல் மூலம் இத் தடைகள் படிக்கிரமமாக அகற்றப்படுகின்றன. பிழையான செயல்களின் விளைவு துன்பம். சரியான செயல்களின் விளைவு இன்பம் என்பது கன்ம விதி. ஒவ்வொரு ஆன்மாவும் எதுவித விலக்குமின்றி இறுதியில் முத்தியையே (பேரின்பத்தை) அடையும்."

இந்த வகையில் எல்லா ஆன்மாவுக்கும் இறைநிலை அளிக்கும் சமயம் இந்து சமயப் பிரிவுகளுள் ஒன்றான சிவசமயமாகும். இச்சமயத்தினுடைய இன்றியமையாத பண்பாக அன்பு எடுத்துக் கூறப்படுகின்றது. — திருமூலர்,

> "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலர்
> அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே"

என்று கூறுகிறார். அன்பும் சிவமுமாய் அமைந்துள்ள சிவசமயம் எவ்வாறு அன்புச் சமயமாயுள்ளது என்பது பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரையிலே கூறப்படவுள்ளது.

இறை ஆர்வத்தினை ஊட்டுவதாக அமைவது இறை அன்பேயாகும். "அன்பீனும் ஆர்வமுடைமை" என்று வள்ளுவர் கூறுகிறார். இதனைப் பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார், கண்ணப்ப நாயனாருடைய வரலாற்றினூடாகப் புலப்படுத்துகிறார். குழந்தைப் பருவத்திலே கண்ணப்பருக்குச் சூட்டப்பட்ட பெயர் திண்ணன். திண்ணனும் அவனுடைய தோழன் நாணனும் வேட்டையாடத் திருக்காளத்தி மலைப்பக்கமாக வந்தபோது திண்ணனுக்கு அந்த மலையின்



உச்சிக்குச் செல்லவேண்டுமென்னும் ஆர்வம் ஏற்படுகின்றது. அந்த ஆர்வம் ஏற்படுதற்குக் காரணமாயிருந்தது அன்பேயாகும். திண்ணனே அன்பு வடிவமாகிவிட்டான். இதனைச் சேக்கிழார், திண்ணனும் நாணனும் காளத்திமலையிலே ஏறும் காட்சியை வர்ணிக்கும்போது உணர்த்துகிறார்:

"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாழும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்"

இப்பாடலிலே "நாணனும் திண்ணனும்" என்று அமையவேண்டியவிடத்து "நாணனும் அன்பும்" என்று சேக்கிழார் கூறுகிறார். இங்கே திண்ணனார் அன்பாகிவிட்டார். ஒரு சைவ நாயனார் அன்பு வடிவமாக நோக்கப்படுகிறார்.

சைவ நீதி அன்பினை அடிப்படையாகக் கொண்டது. மனுநீதி கண்ட சோழன், தன்னுடைய கன்றினை இழந்து வந்து ஆராய்ச்சி மணியை அடித்த தாய்ப் பசுவுக்கு இரக்கங்கொண்டு தன் மகனையே தேரின் கீழிட்டுக் கொன்று நீதி வழங்கியவன். அரச வீதியிலே தேரிலே சென்ற இளவரசன் வேண்டுமென்றே பசுக்கன்றினை மோதவில்லை. தேரிலே பூட்டப்பட்ட மணிகள் ஒலிக்கவே அவன் தேரைச் செலுத்தியுள்ளான். அரச வீதியில் உண்மையிலே பசுக்கன்று வந்திருக்கக் கூடாது. இவ்வாறெல்லாம் மன்னனுக்கு அமைச்சர்கள் எடுத்துக் கூறி இளவரசனில் பிழையில்லை என்று வாதிட்டனர். ஆனால், எதிர்கால மன்னனாக முடிசூடக்கூடிய இளவரசன் தேரிலே சென்றாலும் மிக அவதானமாகச் சென்றிருக்க வேண்டும். இந்த அவதானம் இல்லாமல் ஒரு நாட்டை எவ்வாறு ஆளலாம் என்பதே மன்னனுடைய சிந்தனை. மனிதர்களுடைய குறைகேட்டு நீதி தீர்ப்பதற்கு மேலாக ஒரு பசுவின் குறையறிந்து நீதி தீர்க்கும் சைவநீதி உலகமெல்லாம் பரவவேண்டும் என்பதே சேக்கிழாருடைய விருப்பம். இதனாலே,

"வான்முகில் வழாஅது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

என்று பாடியது மட்டுமன்றி மனுநீதிகண்ட சோழனின் நீதி தீர்த்த வரலாற்றைத் தன் காவியத்தின் திருநகரச் சிறப்பிலே எடுத்துரைத்துள்ளார்.

தமிழரின் தனிப்பெருஞ் சிறப்பை உலகமெல்லாம் எடுத்துக்காட்டும் திருக்குறளிலே வள்ளுவன் விருந்து என்றொரு அதிகாரத்தை அமைத்துள்ளான். விருந்து அன்பை அடிப்படையாகக் கொண்டது. வருபவர்க்கெல்லாம் உணவளிக்கும் பெரிய மனம் என்பது அன்பினாலேயே உருவாகின்றது. இவ்வாறு உணவளிக்கும் பண்பினை இந்துமதம் கொண்டமைகின்றது. இதன் சிறப்பினை விளக்க சைவ சமயத்திலிருந்து பல எடுத்துக் காட்டுகளைத் தரலாம். அப்பூதியடிகள் என்னும் சிவனடியார் தன்னுடைய ஊரிலே



வருபவர்க்கெல்லாம் உணவு கொடுத்த செய்தியினைப் பெரியபுராணம் கூறுகின்றது. தன்னுடைய வீட்டிலே உணவாக்குதற்கு எதுவுமில்லாத வேளையிலே, அடைமழை பெய்து கொண்டிருந்த இரவு வேளையிலே வந்த சிவனடியாருக்கு உணவு வழங்கப் படாதபாடு பட்ட இளையான்குடிமாறனுடைய சிறப்பினையும் பெரியபுராணம் பாடுகின்றது. பெரிய அளவிலே செய்ய வேண்டிய அன்னதானத்தினைச் சிறிய அளவிலே ஒவ்வொருவரும் மனத்திலும் செயலிலும் கொள்ளவேண்டும் என்பதை,

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்னும் திருமூலர் வாக்குக் கூறுகின்றது. இறைவனை நிறைய மலர்கள் கொண்டு வழிபடலாம். ஆனால் இறைவனை நன்றாக மனத்திலே நினைந்துகொண்டு ஒரு பச்சிலையை இட்டால், அது சிறந்த வழிபாடாகிவிடும். இது போன்றே பாரிய அளவிலே பலருக்கும் உணவிடப் பொருள் இருப்பின் அன்னதானம் செய்யலாம். இவ்வாறு உணவு வழங்குபவருடைய மனம் இறைபக்தியும் பரநல விருப்புமுடையதாகவே இருக்கும். இத்தகைய மனம் உடையவர்கள் உண்ணும்போது பிறருக்கு என ஒரு பிடி அன்னத்தினை எடுத்து வைப்பர். ஒவ்வொரு நாளும் உணவுக்கான அரிசியிலே ஒரு பிடி எடுத்து வைத்தால் காலகதியிலே பெருமளவு அரிசி வந்துவிடும். அன்னதானம் செய்பவர்களிடம் அதைக்கொடுத்து அத்தானம் மேலும் சிறப்படையச் செய்யலாமல்லவா?

அடியார்களுடைய அன்பினை விட இறை அன்பு இன்னும் மேலானது. மாணிக்கவாசகர் இறைவனுடைய அன்பினை நினைக்கும்போது தாயை உவமையாகக் காட்டுவார். தன்னுடைய சிறுமையைக் கூறும்போது நாயை உவமையாக்குவார்.

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"

என்று சிவபுராணம் கூறுகின்றது. தன்னலமில்லாது, பால் நினைந்து ஊட்டும் தாயன்பு ஈடு இணையற்றது. ஆனால், இறைவனுடைய அன்போ அந்தத் தாயின் அன்பைவிடச் சிறந்தது என்பதை இறை அநுபூதியாளர் கூறியுள்ளனர்.

இந்து சமயத்துள் ஒரு பகுதியாகப் பேசப்படும் சைவ சமயம் அன்பே உருவாய சமயம். அது அன்பே உருவான சிவனை இறைவனாகவும், அன்பே உருவான அடியார்களையும், அன்பினை வளர்க்கும் சமயக் கோட்பாட்டினையும் உடையதாயுள்ளது. சென்ற காலத்துப் பழுதிலாத் திறனும் இனி வருங்காலத்துச் சிறப்பினையும் கொண்டதாக அமையும் அன்புச் சமயம் எங்களுடைய சமயம் என்பதில் நாம் பெருமையடைகிறோம்.

ஆளுமை விருத்தி

—ந. கார்த்திகேயன்
விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

உலகமெங்கும் ஆளுமை நிறைந்த மனிதர்களாக வளரும் நாட்டம், ஆளுமை நிறைந்த மனிதர்களை உருவாக்கும் தொடர்ச்சியான முயற்சிகள் எப்போதும் இருந்து வந்துள்ளன. இன்று இந்த நாட்டம், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், அதிகமாகவே உள்ளது.

நடைமுறை வாழ்க்கையில் நாம் ஆளுமை நிறைந்த மனிதர்களாக மாறுவது எப்படி? இதற்கான உறுதியான பதிலும், அனுபவபூர்வமான வழிகாட்டுதல்களும் எமது வேதங்களிலும், எமது சமயப் பெரியார்களின் வாழ்க்கை மற்றும் உபதேசங்களிலும் நிறையவே உள்ள.

உண்மையான ஆளுமை விருத்தி ....?

மேற்குலக நாடுகளில், மனிதன் நடந்துகொள்ளும் விதம், உணரும் விதம், எண்ணும் விதம், அவனது ஆளுமையைக் (Personality) காட்டுகிறது என ஒரு பிரிவினரும், பல்வேறு காரணங்களால் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர்களே ஆளுமை மிக்கவர்கள் என ஒரு பிரிவினரும், நாகரிகம் நிறைந்த மனிதனே ஆளுமை நிறைந்தவன் என ஒரு பிரிவினரும், மனிதனின் இயல்பே அவனது ஆளுமையை நிர்ணயிப்பதாக இன்னொரு பிரிவினரும் கூறிவருகின்றனர். இவை வெறும் மேலோட்டமான, தெளிவற்ற சிந்தனைகளாகவே புலப்படுகின்றன.

இயந்திரமயமான உலகில் சஞ்சரிக்கும் 21ஆம் நூற்றாண்டு இளைஞர்கள், குறுகிய காலத்தில் ஆளுமை நிறைந்தவர்களாக மாறிவிடத் துடிக்கிறார்கள். இந்த ஆர்வம் நல்லதுதான்; அவசியமானதுதான்; எமது சமயம் காட்டும் குறிக்கோளும் அதுதான். ஆனால், மேற்குலக நாகரிகத்தால் கவரப்பட்டு, பல்வேறு குறுக்கு வழிகளில் ஆளுமை மிக்கவர்களாக மாறிவிடத் துடிப்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். வெளிப்படையான 'மாற்றத்திற்கும்', உள்ளார்ந்த 'விருத்திக்கும்' (வளர்ச்சிக்கும்) இடையில் வேறுபாடு உண்டு.

குறுகிய காலத்தில் ஒருவரின் வெளித்தோற்றத்தை மாற்றுவது சாத்தியமானதே! அழகு நிலையங்கள், அழகு சாதனங்கள், நாகரிக உடைகள், முடி திருத்தகங்கள், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை முறைகள், உடலைக் கட்டுடலாக மாற்றவல்ல நவீன உபகரணங்கள், உயரமான பாதணிகள் போன்றவை இந்த மாயா ஜாலத்தைச் செய்ய வல்லவை. இவை பெரும்பாலும் புறத்தோற்றத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வல்லவை. இவற்றினால் நாம் ஆற்றல் மிக்கவர்களாக, ஆளுமை மிக்கவர்களாக மாறமுடியாது.

எனவே, எது உண்மையான ஆளுமை விருத்தி? மனித ஆளுமை என்பது, அவனது உடல்வளம், ஆடை, அணிகலன்களால் ஏற்படும் கவர்ச்சிமிகு வெளித்தோற்றமா? அல்லது பட்டம்,

பதவி, மதிப்பு, புகழ், செல்வம் போன்ற சிறப்புகளா? அல்லது பழக்கவழக்கம், செயலாற்றல், உள்ளார்ந்த திறமைகளா? அல்லது அவனது எண்ணங்கள், நம்பிக்கை, அபிப்பிராயம் போன்றனவா?

இந்து சமயம் கூறும் ஆளுமை விருத்தி

எமது வேதங்களில், மனித உடல் ஐந்து கோசங்களை உடையது என்று கூறப்படுகிறது. (i) பௌதீக உடல் மற்றும் புலன்களால் ஆன அன்னமய கோசம். (ii) இரத்த ஓட்டம், சமிபாடு, மூச்சு முதலிய பிரதான செயற்பாடுகளுக்கு ஆதாரமானதும், மனத்தையும் புலன்களையும் இணைப்பதுமான பிராணமய கோசம். (iii) எண்ணங்களின் உறைவிடமும், புத்தி, சித்தம் முதலிய செயற்பாடுகளின் நிகழ்விடமும், புலன்களை இயக்குவதுமான மனோமய கோசம். (iv) மனவலிமைக்கும், விவேகத்திற்கும், பகுத்தறிவிற்கும் ஆதாரமான விஞ்ஞானமய கோசம். (v) எதிர்பார்ப்புகளற்ற தூய அன்பினாலும் நற்செயல்களாலும் நற்பண்புகளாலும் விளையும் பேரானந்தம், அமைதி முதலியவற்றுக்கு காரணமான ஆனந்தமய கோசம்.

இதன் அடிப்படையில், மனித வளர்ச்சியானது அன்னவுடல், பிராணவுடல், மனம், அறிவு, ஆன்மிகம் (ஆனந்தம், அன்பு) எனும் ஐந்து பரிமாணங்களை உடையதென நுட்பமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஐந்து கூறுகளின் முரண்பாடற்ற, ஒத்திசைவான வளர்ச்சியே உண்மையான, முழுமையான ஆளுமை விருத்தி ஆகும்.

எனவே முழுமையான ஆளுமை உடையவராக வளர விரும்பும் ஒருவர், முதலில் இந்த ஐந்து பரிமாணங்களின் செயற்பாடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்துகொள்ள வேண்டும். பிறகு அவற்றை விருத்தி செய்யும் முறைகளை அறிந்துகொண்டு, அவற்றை நாளாந்த வாழ்க்கையில் பூரண ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தி வரவேண்டும்.

உடற் பரிமாணங்களின் விருத்தி

இங்கு உடல் என்பது, பௌதிக உடல், பிராண உடல் இரண்டையும் குறிக்கும் பொதுச் சொல்லாக கையாளப்படுகிறது. மனித வாழ்க்கைச் செயற்பாடுகள் அனைத்துக்கும் பிரதான ஆதாரமாக அமைவது உடலாகும். ஞானத்தைப் பெற்றுக்கொள்ள உதவும் பஞ்ச ஞான இந்திரியங்கள் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்), தொழிற்பட உதவும் பஞ்ச கர்ம இந்திரியங்கள் (வசனம், தானம், கமனம், விசர்ச்சனம், இன்பம்), தசைகள், நார்கள், இரத்தம், பத்து வகைப் பிராணன்கள் முதலிய பாகங்களை உள்ளடக்கியது இந்த உடலாகும். இத்தனை முக்கியமான உடல் உறுதியானதாகவும், ஆரோக்கியமானதாகவும், சீராக இயங்க வல்லதாகவும், வலுவுள்ளதாகவும் அமைவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் சிறுவயது முதல் ஆர்வத்துடன் செய்வதே இப்பரிமாணத்தின் முழுமையான விருத்திக்கான வழியாகும்.

இந்த உடற் பரிமாணத்தின் விருத்தியில் 'உணவு', 'உடற்பயிற்சி', 'பழக்கவழக்கங்கள்', 'சூழல்' ஆகிய நான்கு காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தினசரி தூய, சத்துள்ள, சத்துவ உணவு வகைகளை, உரிய வேளைகளில், அளவுடன் உண்டு வருதல், எமது உடல் உறுதியானதாகவும் ஆரோக்கியமானதாகவும் விருத்திபெற உதவும் அத்திவாரம் ஆகும். அத்துடன் யோகாசனம், பிராணாயாமம் முதலிய பயிற்சிகள், எமது உடலின் இந்திரியங்கள், பிராணன்கள் முதலியவற்றின் சுத்தத்தையும், சீரான இயக்கத்தையும், வலிமையையும் பேணுகின்றன.

மதுசாரம் அருந்துதல், புகைத்தல், போதைப்பொருள் பாவனை, புலனின்ப நாட்டம் போன்ற தீய பழக்கவழக்கங்களை அறவே ஒழித்து, புலனின்பக் கட்டுப்பாடு, அதிகாலையில் எழும்புதல் முதலிய நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் உடற்பரிமாணத்தின் சிறப்பான விருத்திக்கு மட்டுமல்லாது அதனைப் பேணுவதற்கும் இன்றியமையாததாகும். மேலும் நாம் வாழும் தூய்மையான சூழல், சுத்தமான சுற்றாடல் முதலியனவும் இப்பரிமாணத்தின் விருத்திக்கு துணைபுரியும் காரணிகளாகும்.

மனப் பரிமாணத்தின் விருத்தி

எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் உறைவிடமாக மனம் விளங்குகிறது. பிராணன்கள் மனத்தை உடலுடன் இணைக்கின்றன. அதனூடாக மனம் மனிதச்செயற்பாடுகள் அனைத்தையும் நெறிப்படுத்தும் ஆற்றல் உடையது. அதாவது ஐம்புலன்களின் வழியே பெறக்கூடிய ஞானம் அனைத்தையும் பதிவுசெய்து வைப்பது, அடையாளம் காணுவது, அறிவின் துணையுடன் சிந்தித்து அலசி ஆராய்வது, இதன் விளைவாக ஏற்படும் எண்ணங்களை செயலாக மாற்றுவது அல்லது கர்ம இந்திரியங்களை இயக்குவது முதலிய பல்வேறு செயற்பாடுகளை மனமே செய்கிறது.

இத்தகைய முக்கியத்துவம் உடைய மனம் தூய்மையானதாகவும், வலிமையானதாகவும், உறுதியானதாகவும் வளர்ச்சிபெறுவதே மனப்பரிமாணத்தின் விருத்தியாகும். விருத்தியடைந்த மனம், அறிவின் உதவியுடன், ஐம்புலன்களையும் ஏனைய மனிதச் செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி ஒருவரின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் காரணமாக அமைகிறது.

சாதாரண மனம் அலைபோல் எப்போதும் பாய்ந்துகொண்டிருக்கும் தன்மை உடையது. இந்த மனம் இந்திரியங்கள் ஈர்க்கும் பக்கமெல்லாம் அலைக்கழிக்கப்படுவதால் புலனின்ப நாட்டத்திற்கு அடிமையாகி உறுதியற்றதாகவும், வலிமையற்றதாகவும், தூய்மையற்றதாகவும் ஆகிவிடுகிறது. இத்தகைய மனம் உடையவர் எந்தவொரு காரியத்தையும், அது கல்வியாகவோ, தொழிலாகவோ அல்லது விளையாட்டாகவோ இருந்தாலும், அதனைச் சிறப்புறச் செய்ய முடியாதவராகவே இருப்பார்.

தீயவற்றைப் பார்ப்பது, சிந்திப்பது, செய்வது போன்றவை மனதில் தீயபதிவுகளை ஏற்படுத்துகின்றன. இது தூய்மையற்ற மனத்தை உருவாக்குகிறது. தீயபதிவுகளால் நிரம்பிய மனது மனிதனைத் தீயவனாக செயற்பட வைக்கிறது. அதனால்தான் சினிமாவை அடிப்படையாக வைத்து வியாபார நோக்குடன் ஒளிபரப்பாகும் பெரும்பாலான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தவிர்ப்பது நல்லது எனக் கூறப்படுகிறது. அவை புலனின்ப அல்லது போதை நாட்டத்திற்கும்,



வன்முறைகளுக்கும், விரசத்திற்கும் தூண்டுகோலாக அமைவனவாகவே உள்ளன. இது மனிதனையும் சமூகத்தையும் மிகவும் இழிவான நிலைக்கு கொண்டு வந்துவிடும்.

சிகரட், மதுபானவகைகள் முதலிய போதைப்பொருட்களின் பாவனையும் ஒருவரது மன உறுதியையும் மனவலிமையையும் கடுமையாகப் பாதிக்கக் கூடியவை. அத்தகைய உணவுகளையும் பழக்கவழக்கங்களையும் தவிர்த்துக்கொள்வது மனப்பரிமாணத்தின் பூரண விருத்திக்கு அவசியமானது.

நல்லதைப் பார்ப்பதால், நல்லதைச் சிந்திப்பதால், நல்ல செயல்களால், நல்லவர்களின் நட்பால், நல்ல புத்தகங்களைப் படிப்பதால் மனதில் நல்ல பதிவுகள் ஏற்படுகின்றன. இதனால் மனம் தூய்மை பெறுகிறது. யோகாசனம், பிராணாயாமம், தியானம் போன்ற பயிற்சிகளை இடைவிடாது செய்வதாலும் வைராக்கியத்தாலும் மனம் வலிமையும் உறுதியும் அடைகிறது.

எனவே கல்வியில் சிறந்து விளங்க முயலும் மாணவராகவோ அல்லது வாழ்க்கைப் பாதையில் பல வெற்றிகளைப்பெற ஆர்வம் உடையவராகவோ இருக்கும் ஒருவர் தனது மனதை உறுதியானதாகவும், வலிமையானதாகவும், தூய்மையானதாகவும் விருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. "எவனொருவன் தனது மனதைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெறுகிறானோ, அவனால் மட்டுமே இந்த உலகத்தை வெற்றிகொள்ள முடியும்" என எமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அறிவுப் பரிமாணத்தின் விருத்தி

அறிவின் ஆற்றல் உடல், பிராணன், மனம் ஆகியவற்றின் ஆற்றல்களைவிட உயர்ந்ததாகும். நல்லதையும் தீயதையும் பிரித்து அறிந்துகொண்டு, நல்லவற்றைப் பின்பற்றவும் தீயவற்றை விலக்கவும் உதவுவது விவேகத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவு ஆகும். மனிதச் செயற்பாடுகள் அனைத்தையும் நெறிப்படுத்தவல்ல மனதைக் கட்டுப்படுத்தி, அதைத் தர்ம நெறியில் செலுத்தும் வல்லமை தூய அறிவுக்கு இருக்கிறது. மேலும் படைப்பாற்றல், ஆழ்ந்த சிந்தனை, தனித்தன்மை போன்ற உயர் பண்புகளும் வலிமையான அறிவின் வெளிப்பாடுகளே.

இங்கு குறிப்பிட்ட அறிவானது கல்லூரி, பல்கலைக்கழகப் படிப்புக்களால் ஏற்படும் மேலோட்டமான அறிவைக் குறிக்கவில்லை. அதைவிட உயர்ந்த தூய, ஆற்றல்மிக்க, பிரகாசமான அறிவைக் குறிக்கிறது. தன்னலமற்ற செயல்கள், தன்னலமற்ற சேவைகள், தியானம், தவம் போன்றவற்றால் கிடைக்கும் அனுபவங்கள் உயர்ந்த, தூய, நுண்ணிய அறிவாற்றலை வளர்க்க உதவுகின்றன.

ஆன்மிகப் பரிமாணத்தின் விருத்தி

ஒவ்வொரு மனிதரிலும் அன்பு, உண்மை, தூய்மை, ஞானம், கருணை, பரிவு, முதலிய தெய்விக இயல்புகள் அவனது ஆன்மாவிலிருந்து ஊற்றெடுக்கின்றன. இவை ஆன்மாவின் கவசம்



போல விளங்கும் ஆனந்தமய கோசத்தில் முழுமையாகப் பிரதிபலிக்கும்போது மனிதன் பேரானந்தம், பேராற்றல், துணிவு, அமைதி, சுதந்திரம் முதலியவற்றைப் பெறுகிறான்.

ஆனால் இவற்றை மனிதன் அனுபவிப்பதில் பிரதான தடையாக இருப்பது அவனது அறியாமை ஆகும். அறியாமை என்பது மனிதனில் நிரம்பியிருக்கும் காமம் (இச்சை), குரோதம் (கோபம் / வெறுப்பு), மோகம் (பேராசை), லோபம் (பற்று), மதம் (அகம்பாவம்), மாச்சரியம் (பொறாமை) ஆகிய தீய உணர்வுகளே. முகில்கள் போன்ற இத்தீய இயல்புகள் சூரியன் போன்ற ஆன்மாவின் பிரகாசத்தை மங்கச் செய்கின்றன.

இவற்றை அகற்றுவதற்கு பக்தி யோகம் (வணக்க, வழிபாட்டு மார்க்கம்), ஞான யோகம் (பகுத்தறிவு முதிர்ச்சிபெற்று உண்மையை இனங்காணும் மார்க்கம்), கர்ம யோகம் (தன்னலமற்ற செயற்பாட்டு மார்க்கம்), இராஜ யோகம் (தியான மார்க்கம்) என நான்கு மார்க்கங்களை எமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒருவரின் மனநிலைக்கேற்ப, இவற்றில் ஒன்றையோ, பலவற்றையோ, அல்லது அனைத்தையுமோ கிரமமாகக் கடைப்பிடிப்பது, அறியாமை அகன்று, மறைந்துள்ள தெய்விக இயல்புகள் பிரகாசிக்க உதவும்.

நிறைவுரை

இங்கு குறிப்பிட்ட ஐந்து பரிமாணங்களின் முரண்பாடற்ற, ஒத்திசைவான வளர்ச்சியே ஒருவரை பூரண ஆளுமை விருத்தி பெற்றவராக மிளிரவைக்கும் என்பதைத் தற்போது உணர முடியும். இந்த உன்னத நிலையை அடைய ஒருவர் தனது மனநிலைக்கேற்ப பொருத்தமான செயல்முறைகளைத் தெரிவு செய்து, அயராத முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

எமது விழாக்களும் பண்டிகைகளும் நாம் பூரண ஆளுமை நிறைந்தவர்களாக ஆகுவதற்கு ஊக்கமளிக்கும் களங்களாக அமைகின்றன.

நவராத்திரி விழா இதில் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மாணவர்கள் ஒன்பது தினங்களும் இல்லத்தைத் தாமே சுத்தம் செய்து விரதம் இருந்து கொலு வைத்து, பூக்கள், மாலைகள் கொண்டு அலங்காரம் செய்து சத்துவ உணவுகளைச் சமைத்து, படைத்து, பகிர்ந்துண்டு, தோத்திரங்கள் பாடி, பிரார்த்தனை, பூசை, தியானம் செய்து நல்லவற்றைப் படித்து, பேசி, சிந்தித்து பாடசாலைகளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று இவ்வாறு பலவற்றை மாணவர்களே ஆர்வத்துடன் செய்யும்போது பெறும் அனுபவங்கள் அவர்களின் ஆளுமையை விருத்தி செய்கிறது.

* * * * *

"அணுத்தரும் தன்மையில் ஐயோன்"

சித்தாந்தரத்தினம்
கலாநிதி க. கணேசலிங்கம்
ஆதீனப்புலவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
தலைவர், சிவத்திருமன்றம், கொழும்பு

தன்னை ஆட்கொண்ட திருவருளை எண்ணும் தோறும் மணிவாசகப் பெருமானின் உள்ளம் நெகிழ்ந்து உருகுகிறது. மெய் சிலிர்க்கிறது. கண்ணீர் பெருகுகிறது. அவர் பெற்ற அனுபவங்கள் அருட்பாடல்களாக வெளிவருகின்றன.

வெறும் வார்த்தைகளால் இறைவனின் கருணையையும் பெருமையையும் விளக்க முடிவதில்லை. ஆயினும் அவனின் தன்மையைச் சொல்லில் வடிக்க அருளாளர் பலரும் பலவாறு முனைந்துள்ளனர்.

மணிவாசகர் பெற்ற அருளனுபவம் இறைவனைப் பல்வேறு கோணத்தில் பார்க்கத் துணை செய்கிறது. எக்கோணத்தில் பார்த்தாலும் இறைத்தன்மையை எண்ணில் பெருவியப்பே ஏற்படுகிறது. எந்தப்பொருளுடனும் இறைவனை இணைத்து ஒப்பு நோக்க முடியவில்லை. அனைத்துப் பொருட்களிலும் அணுவொன்றே அவன் தன்மையை விளக்க அண்மைத்தாக உள்ளது. இதனை மணிவாசகரே உணர்த்துகிறார்.

"அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க"

திருவாசகத்துக்குள்ள பல சிறப்புக்களில், இன்றைய விஞ்ஞானக் கருத்துக்களைப் பிரதிபலிப்பதும் ஒன்று. அத்துடன், விஞ்ஞான நோக்கிலும் ஒரு சிறந்த நூலாக இது விளங்குகிறது. இச்சிறப்பைக் கூடுதலாகக் கொண்டது அதிலுள்ள 'திருவண்டப்பகுதி'.

இவ்வுலகமும் இதனை உள்ளடக்கிய அண்டமும் குறித்த மணிவாசகரின் கருத்துக்கள் விஞ்ஞானச் சிறப்புமிக்கவை. உலகப் பொருள்கள் அனைத்தின் தோற்றத்திற்கும் அடிப்படையான ஒரு உள்பொருள் உண்டென்பது சித்தாந்தக் கொள்கை. காரணப்பொருளான இந்நுண்பொருள் *மாயை* எனப்படுவது. இது வேதாந்தம் கூறும் பொய்த் தோற்றமான மாயை அல்ல. விஞ்ஞானம் கூறும் மாறுதலடையும் சக்திபோன்றதே சித்தாந்தம் கூறும் மாயை. பிறப்பும் இறப்பும் இம்மாயை குறித்த நிலைமாற்றங்களே. எந்தச் சக்தியும் ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறுமேயன்றி, புதிதாக தோன்றுவதோ, இல்பொருளாக அழிவதோ இல்லை என்பது விஞ்ஞானக் கோட்பாடு. இந்த விஞ்ஞானக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே 'சத்காரியவாதம்' என்னும் சித்தாந்தக் கோட்பாடு.



அணு என்பது உலகப் பொருகளுக்கு அடிப்படையான ஒன்று. எந்தப் பொருளையும் பகுத்துக் கொண்டே போனால், அது இறுதியில் அணுவாகத் திகழ்கிறது. தமிழறிஞர்கள் அணு என்பதற்கு மிகச் சிறிய நுண்பொருள் என்று பொருள் கண்டு திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளனர். இது பொருத்தமானதே. ஆயினும் "அணு" என்ற சொல்லை மணிவாசகர் எடுத்தாளும் இடங்களையும் முறையையும் நோக்கின், அதன் பொருள் இன்னும் ஆழமாக, இன்றைய விஞ்ஞானக் கருத்துக்கு இயைந்ததாக, இருப்பதைக் காணலாம்.

'இல்நுழை கதிரின் துன்னணுப்புரைய சிறியவாகப் பெரியோன்' என்ற திருவாசகத் தொடருக்கு உரையாசிரியர் பலரும் ஒரே தன்மைத்தான பொருள் கண்டுள்ளனர்.

"வீட்டினுள்ளே சிறு வழியினால் நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை ஒப்ப அண்டப்பகுப்புக்கள் சிறியனவாகத் தோன்றும்படி, தான்அவற்றினும் பெரியோனாக இருப்பவன்." (சு. அருளம்பலவானார், 'திருவாசக ஆராய்ச்சியுரை')

சிவனின் வியாபகத் தன்மையை விளக்குவதாக இவ்வுரை அமைந்துள்ளது. இங்கே 'துன்னணு' என்பதற்கு நுண்பொருள் அல்லது சிறுதுகள் என்று பொருள் காணப்படுகிறது. துகள்கள் எல்லாமே ஒரேதன்மை கொண்டவையல்ல என்பதும் இங்கே கருதற்பாலது.

விஞ்ஞான உலகில் சென்ற நூற்றாண்டு வரை இருந்த பௌதீகவியல் (Physics) 'பண்டைய புகழ் வாய்ந்த பௌதீகவியல்' (Classical Physics) என்றும், சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் உண்டானது 'தற்கால பௌதிகவியல்' (Modern Physics) என்றும் கூறப்படுவது வழக்கம். தற்காலப் பௌதீக வியலுக்கு வித்திட்ட பிளாங் (Planck), ஐன்ஸ்டீன் (Einstein) போன்ற விஞ்ஞானிகளின் ஆய்வினால் அணுக்கொள்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரிக்க முடியாதது என்று இருந்த அணு பிரிக்கக்கூடிய அணுக்கூறுகளை உள்ளடக்கியதென்பதும், அவை கூட எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையான பொதுக்கூறுகள் என்பதும் இன்றைய விஞ்ஞானம் காட்டும் உண்மை. ஆகவே எப்பொருளை எடுப்பினும் அதன் மூலப்பொருள் அணுவாகி, பின் அதனுள் இயங்கும் ஆற்றல் மிக்க ஒன்றாகி நிற்பதை அறியலாம். இதன் மூலம் இறைத்தன்மையை உணர்த்தும் மணிவாசகரின் திருவாக்கு சிந்தனைக்குரியது.

"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே." — (கோயிற்றிருப்பதிகம்)

தற்கால விஞ்ஞான ஆய்வினால் அணு என்பது சிறுதுகள் என்ற முன்னைய கருத்து தவறானது என்ற நிலை ஏற்பட்டது. அணுவிற்குள்ளே ஒரு பெருவெளியும், நேர்மின்னணுக்கள் (Protons) பொது மின்னணுக்கள் (Neutrons) கொண்ட அணுக்கருவும் (Nucleus), அதனைச்சுற்றி இடைவிடாது சுழலும் எதிர் மின்னணுக்களும் (Electrons) உண்டென்பதும் புலனாகியது. 'கதிரியக்க



அலைவீச்சுக் கோட்பாடு' (Quantum Theory) 'சார்புக்கொள்கை' (Relativity Theory) போன்ற புதிய கொள்கைகள் எழுந்தன. இவற்றின் விளைவாக அணுவுக்குள் இருக்கும் அணுத்துகள்கள் *'இருமைத்தன்மை'* (Dual Aspect) உடையன என்பதையும் அறிய முடிந்தது. துகளின் (Particle) தன்மையையும், சக்தியான மின்காந்த அலை (Electro Magnetic Wave)த் தன்மையையும் ஒரு சேரக்கொண்டவையாக இவ்வணுத்துகள்கள் உள்ளன. இந்த இருமைத் தன்மை ஒளிக்குமுண்டு. ஒரே நேரத்தில் பொருள் தன்மையையும் (சக்தியாகிய) அலைத்தன்மையையும் கொண்டது ஒளி. 'இல்நுழை கதிரின் துன்னணுப்புரைய' என்ற தொடர் இந்த இருமைத் தன்மையையும் உணர்த்துவது. சிவசக்தி தத்துவத்தை விளக்கும் சிறந்த உதாரணமாகவும் இது விளங்குகிறது.

அணுச்சக்தியும் அணுத்துகளும் முறையே அசைவுக்கும் அசைவற்ற நிலைக்கும் அடிப்படையாக அமைந்தவை. இந்த இருவேறுபட்ட நிலைகளும் ஒருசேர இருப்பதை விளக்குவது விஞ்ஞான உலகிற்குக்கூடக் கடினமானது. இந்த இருமை நிலையை ஒருசேர விளக்குவதாக அமைந்தது ஆடும் கூத்தனின் அழகிய வடிவம். பொருளையும் ஆற்றலையும் விளக்க இதைவிடச் சிறந்த ஒரு வடிவத்தைக் காணமுடியாது. இதனாற்றான் கலாயோகி ஆனந்தகுமாரசாமி *'இக்கலை வடிவம் கவிதையாகவும் விஞ்ஞானமாகவும் விளங்குகிறது'* என்றார். ("This is Poetry; none the less Science" — A. K. Coomarasamy, 'Dance of Shiva').

சிவனின் திருநடன வடிவத்தை உலகறியச் செய்த பெருமை ஈழத்துக் கலாயோகி ஆனந்த குமாரசாமியைச் சாரும். சைவசித்தாந்த அடிப்படையில் விளக்கப்பட்ட இவரின் 'சிவனின் திருநடனம்' (Dance of Shiva) என்ற கட்டுரை உலக அறிஞர்களால் போற்றப்படுவது. சமயம், கலை, விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கூட்டிணைப்பாக விளங்குவது கூத்தப் பெருமானின் திருவுருவம் என்பதும், அகில உலகிற்கும் பொதுவான இந்த வடிவத்தை அகத்தில் தோற்றமாக முதற்கண்ட அருளாளரின் கலைத்திறன் வியப்பூட்டுவது என்பதும் இவரின் கருத்து. இக்கருத்து சித்தாந்த சைவத்திற்கும் தமிழ் உலகிற்கும் பெருமை சேர்ப்பது.

ஆனந்த குமாரசாமியின் பின்வரும் கூற்று சிந்தனைக்கு விருந்தளிப்பது:

'Every part of such an image as this is directly expressive, not of any mere superstition or dogma, but of evident facts. No artists of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena.' (A. K. Coomarasamy, 'The Dance of Shiva'.)

'இத்தகைய வடிவத்தின் ஒவ்வொரு கூறும், மூட நம்பிக்கையோ, போலிக்கோட்பாடோ இல்லாத, தெளிவான உண்மைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இன்றுள்ள எந்தக் கலைஞனாலும், அவன் எவ்வளவு திறமை வாய்ந்தவனாக இருந்தாலும் விஞ்ஞானம் ஆய்ந்தறிந்த இயற்கை நிகழ்வுகளின் அடிப்படையில் இயங்கும் சக்தியை அதிநுட்பமாகவும் விவேகத்துடனும் விளக்கும் இந்த வடிவத்தை உருவாக்க முடியாது'. (ஆனந்தகுமாரசாமி, 'சிவனின் திருநடனம்').

கலாயோகி ஆனந்தகுமாரசாமியின் இந்தக் கருத்துக்கு விளக்கமளிப்பதாக இன்றைய விஞ்ஞானிகள் சிலரின் கருத்துக்களும் அனுபவங்களும் அமைகின்றன. ∴பிரிற்யொவ் கப்ரா (Fritjof Capra) என்ற விஞ்ஞானி மேலைத்தேச விஞ்ஞானத்திலும், கீழைத்தேச மெய்ஞ்ஞானத்திலும் பெரும் ஒற்றுமையையும் இணைப்பையும் காணும் ஒரு சிறந்த பௌதீகவியல் ஆய்வாளர். அண்டத்தில் இடைவிடாது நிகழும் அணுவுலக ஆட்டத்தில் சிவ நடனத்தைக் கண்டவர்.

ஒரு மாலைப் பொழுதில் (1969), கடற்கரையில் அமர்ந்து அலைமோதும் அழகை அனுபவிக்கிறார். அப்பொழுது, எதிர்பாராத விதமாக அவரைச் சுற்றியுள்ள அனைத்தும் அண்டப்பெருவெளி நடனத்தில் (Cosmic Dance) திளைப்பதை உணர்கிறார். பௌதிகவியல் விஞ்ஞானியான இவருக்கு, நிலமும் நீரும் மலையும் காற்றும் எல்லாமே இடைவிடாது நடனமாடும் அணுக்களால் ஆனவை என்பது தெரிந்ததே. இந்த அணு இயக்கங்கள் அனைத்தையும் கணிதக் கோட்பாடுகள், வரைபடங்கள் (Mathematical Theories, Graphs) முதலியவற்றின் மூலமே அறிந்திருந்தார். ஆனால், அந்தப் பொழுதில் அவை நேராக தோற்றமளித்தது மட்டுமல்லாது, **அதுவே சிவனின் திருநடனமாகவும் புலப்பட்டது.** இந்த நிகழ்ச்சி அவரின் புகழ்பெற்ற THE TAO OF PHYSICS என்ற நூலை எழுதத் தூண்டியதாக அந்நூல் முன்னுரையில் அவரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஞ்ஞானிக்குப் புலப்பட்ட காட்சி, ஆடும் சிவனை ஒருவாறு உணரவைத்தது. எப்படி உணர்ந்தாலும் இது முழு அனுபவமல்ல. ஆயினும் இறைத்தன்மையை உணர்த்த அணுவின் தன்மையே அண்மித்ததாக உள்ளது. மணிவாசகர் இதனைக் கூறும் பாங்கு இன்றைய விஞ்ஞான உலகிற்கு ஏற்றதாகவும், விஞ்ஞானச் சிறப்பு மிக்கதாகவும் மிளிர்கிறது.

"அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க."

நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்!

செஞ்சொற்செல்வர் **ஆறு. திருமுருகன்**
ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

மகாகவி பாரதியாரின் பாப்பா பாட்டில் வரும் இவ்வடிகள் அப்பாட்டின் ஊடாக சொல்லப்படும் ஒப்பற்ற வாழ்வியல் தத்துவமாக அறிஞர்கள் கருதுவர். மனிதன் இவ்வுலகில் மாண்புடையவனாக வாழ்வதற்கு அவனிடம் இருக்கவேண்டிய பண்பினை இவ்வடிகளூடாக மழலைகளுக்கு பாரதியார் எடுத்துரைக்கிறார். மேலானவர்களாக நாம் இவ்வுலகில் பின்பற்றி வாழத்தகுந்தவர்களிடம் மூன்று விடயங்கள் ஒருங்கே அமைந்திருக்க வேண்டும் என்பதனை பாரதியார் ஞாபகப்படுத்துகிறார்.

மேலானவர் என்றால் அவரிடம் இருக்கும் கல்வியறிவு மட்டுமல்ல மேலானவர் என்றால் அவரிடமிருக்கும் செல்வம் மட்டுமல்ல மேலானவர் என்றால் அவரிடம் காணப்படும் உடல் தைரியம் மட்டுமல்ல. மேலானவர் என்று நாம் பின்பற்ற தகுதியுடையவரிடம் என்றும் நீதியான வாழ்வு இருத்தல் வேண்டும். வெறும் நீதி மட்டும் பேசுவதனால் நீதியானவனைப் பின்பற்ற முடியாது. நீதியானவனிடம் நிறைந்த புத்தியுடைய கல்வி அறிவு வேண்டும். எனவேதான் பாரதியார் நீதி உயர்ந்த மதி கல்வி எனக்குறிப்பிடுகிறார். நீதி தெரிந்தவனாகவும் நிறைந்த புத்திக் கூர்மை மிக்க கல்வியறிவுடையவனாகவும் ஒருவன் இருந்துவிட்டால் அவனைப் பின்பற்றிவிடக்கூடாது எனக் கருதும் பாரதி, நீதியுயர்ந்த மதி கல்வி என்று கூறிவிட்டு "அன்பு" நிறைய உடையவர்கள் மேலோர் எனக் குறிப்பிடுகிறான். எவ்வளவு கல்வியறிவு உடையவனாக ஒருவன் இருந்தாலும் அவனிடம் அன்பு இல்லையானால், இரக்கம் கருணையில்லையானால் அவனால் இவ்வுலகுக்கு என்ன பயன்? என வினா எழுப்பும் பாரதி மேலானவன் என்ற தகுதியுடையவரிடம் ஜீவராசிகள் மீது கருணை காட்டுபவனே மேலானவன் என ஞாபகமூட்டுவது மிக அற்புதமான கருத்தாகும்.

பாரதியாரின் பாடல்களில் பாப்பா பாட்டு மழலைகளுக்கு செய்தி சொல்லும் பாட்டு என மட்டும் கருதிவிட இயலாது. வாழும் மனிதர்கள் அனைவருக்கும் அடிப்படை வாழ்வியலை ஆன்மீக நோக்கோடு சொல்லும் செய்தியாகவே அப்பாடற் பகுதி அமைந்துள்ளமையை யாவரும் ஒத்துக்கொள்வர். இரத்தத்தில் செழும்பூறிய பெரிய மனிதர்கள் எங்கே திருந்தப் போகிறார்கள். எனவே வாழப்போகும் மழலையை மன்றாடி, அவர்களை அணைத்து அறிவுரையூடாக ஆன்மீக வாழ்வை, வாழ்வின் அர்த்தத்தைப் போதிக்கும் செய்தியாகவே பாரதியாரின் பாப்பா பாட்டு அமைந்துள்ளது.

"ஓடிவிளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!"

என்ற முதலாவது பாடல் அடிகளுக்குள்ளேயே ஆழமான கருத்து நிறைந்திருப்பதனைக் காணலாம். சிறியவர்களைக் கண்டால் பொதுவாக நாம் சொல்லும் புத்திமதி ஓடித்திரியாமல் ஓரிடத்தில் இரு என்பது. இது சாதாரண வழமை. பாரதி குழந்தை உளவியல் தெரிந்த அறிஞன். அவன் மாறாக பிள்ளைகளே நீங்கள் ஓடி விளையாட வேண்டும் என மழலைகளை ஈர்க்கும் அடிகளை முதல் அடியில் கூறி, மறுவரியிலேயே "ஓய்ந்திருக்கலாகாது " என வேண்டுதல் செய்கின்றான். எவ்வேளையும் ஒருவன் உற்சாகமாக சோம்பலின்றி இருக்க வேண்டிய கருத்தினை அழுத்திக் கூறும் பாரதி, இதே பாட்டில் மீண்டும் ஓரிடத்தில் "சோம்பல் மிகக் கெடுதி" பாப்பா! நீ திடங்கொண்டு போராடு பாப்பா! என மீண்டும் கேட்பது அவசரமான அற்புதமான வாழ்வியற் கருத்தாகும். முதலாவது பாடலின் ஆரம்பத்திலேயே பாரதி ஒற்றுமையை வலியுறுத்தும் பாங்கினைக் காணலாம். "கூடி விளையாடு பாப்பா! ஒரு குழந்தையை வையாதே பாப்பா!" எனச் சுட்டுவதன் மூலம் ஒற்றுமை, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பண்புகளை எடுத்துரைப்பதனைக் காணலாம். மனிதர்களுடன் மட்டுமல்ல உயிரினங்களுடனும் ஒன்றுபட்டு வாழ் எனக் கூற வரும் பாரதி,

"கொத்தித்திரியும் அந்தக் கோழி — அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!"

என்றும்,

"எத்தித் திருடுமந்த காக்காய் — அதற்கு
இரக்கப்பட வேணும் பாப்பா!"

என மீண்டும் இவ்வுலகில் ஒற்றுமையால் எல்லோரையும் அரவணைத்தும் வாழவேண்டும் என்ற நேயத்தை ஞாபகமூட்டுகிறான். பாப்பா பாட்டின் நிறைவிலும் மீண்டும் இதனை ஞாபகமூட்டுகின்ற பாரதி,

"உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேண்டும்"

என இயற்கை அனைத்தும் இறைவன் என நிறைவு செய்வதனைக் காணலாம். உலகை ரசிக்கத் தெரிவது அவசியமாகும். இயற்கை அழகை ரசிப்பவனே இனிய மனிதன். பறவைகள், மிருகங்கள், இயற்கைச் சூழல்கள் அனைத்தையும் ரசித்து வாழ்பவனிடமே கடவுளை உணரமுடியும் என்பதனை உணருகின்ற பாரதி,

"சின்னஞ்சிறு குருவி போலே — நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு — நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!"

என இயற்கையை ரசிக்குமாறு பாரதி வேண்டும் அழகினைக் காணமுடிகிறது.



மனிதர்கள் மட்டுமல்ல எமக்கு பால் பொழிந்து தரும் பசு முதல் நாய்வரை மனிதர்களுக்கு உற்ற நண்பர்கள் என்பதனை ஞாபகப்படுத்தி அவர்களுக்கு நன்றியாக வாழவேண்டும் என வலியுறுத்துகிறான். அத்தோடு மனித வாழ்வுக்கு மிருகங்கள் செய்யும் தியாகங்களை ஞாபகமூட்டுவதனை பின்வரும் பாடல் வரிகளில் காணலாம்.

"வண்டி இழுக்கும் நல்ல குதிரை — நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப்பிழைக்கும் ஆடு — இவை
ஆதரிக்க வேண்டுமடி பாப்பா!"

காலையில் எழுந்து கற்றுத் தேறவேண்டும். மாலையில் விளையாடி மகிழவேண்டும் எனக் கல்வியையும் தேக ஆரோக்கியத்தையும் வலியுறுத்தும் பாரதி ஒவ்வொரு மனிதனது வாழ்வும் சிறக்க அவன் பின்பற்ற வேண்டிய அடிப்படைகளில் சத்தியம், உண்மை, வாய்மை என்ற மகோன்னதத்தை பாரதி பாப்பா பாட்டில் பலதடவை அழுத்திக் கூறுவதைக் காணலாம். பொய்சொல்வதைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறிய பாரதி மற்றவர்களை குறை சொல்வதையும் தவிர்த்தல் வேண்டும் என இணைத்து வேண்டுகிறான். கடவுள் புனிதமாக வாழ்பவர்களுக்கு ஏதோ வடிவில் துணையாக வருவான். எமக்குத் தீமை வராது நீ நேர்மையாய் வாழ்ந்தால்... என வலியுறுத்துவதாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

"பொய்சொல்லக் கூடாது பாப்பா — என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத் துணை பாப்பா — ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!"

மழலைகளுக்கு மாசற்ற வாழ்வினை எடுத்துரைக்கும் பாரதி தீயவரைக் கண்டு அஞ்சாதே! தீமையை என்றும் துணிந்து எதிர்த்துவிடு என வலியுறுத்துவது சிறப்பு அம்சமாகும். இரக்க வாழ்வு, இறைவழிபாடு, பெரியவர்களை மதிக்கும் பண்பாடு, சத்திய வழி எனப்பலவற்றை வலியுறுத்திய பாரதி பாதகம் செய்பவரை, தீயவரை எதிர்த்து நில்! என வேண்டுதல் விடுப்பது மிக முக்கியமான செய்தியாகவும் பாப்பா பாட்டில் கொள்ளப்படுகிறது.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் — நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!"

என்ற அடிகளும் அதனைத் தொடர்ந்து

"மோதி மிதித்து விடு பாப்பா! — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு ..."

என்ற அடிகளும் பாப்பா பாட்டைப் படிப்பவர்களை நின்று நிதானிக்க வைக்கிறது எனலாம். தெய்வ நம்பிக்கையுடன் வாழ்ந்தால் இவ்வுலகில் தீமையின்றி வாழலாம். என்பதனை பாப்பாப் பாட்டு முழுவதும் வலியுறுத்தும் பாரதி

"தெய்வம் நமக்குத் துணை பாப்பா! — என்றும்
தீங்கு வரமாட்டாது பாப்பா!"

என்றும்,

"அன்பு மிகுந்த தெய்வமுண்டு — துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!"

என்றும்,

"உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்"

என்றும் தெய்வ நினைப்பை பாப்பா பாட்டில் பாரதி மழலைகளுக்கு வரிக்கு வரி ஞாபகமூட்டுகிறான்.

சாதியின் பெயரால் குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்! என்பதனை எடுத்துரைக்கும் பாரதி இவ்வுலகில் காணப்படும் வாழ்வுக்கு ஒவ்வாத தீய எண்ணங்களை விரட்டி மனிதன் புனிதனாக வாழ்வதற்குரிய மகத்தான வழிகளை மழலைகளுக்குச் செய்தி சொல்லும் பாப்பா பாட்டு ஊடாக அற்புதமாக எடுத்துரைத்துள்ளான். பாரதியின் பாப்பா பாட்டின் மாண்பினை உணர்ந்து, தெய்வ நம்பிக்கையுடன், மனித நேயத்துடன் வாழ வழி தேடுவோமாக!

ஓம்

கணபதி துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே

பதினாறு திருநாமங்கள்

ஓம்	சுமுகாய	நம :
ஓம்	ஏகதந்தாய	நம :
ஓம்	கபிலாய	நம :
ஓம்	கஜகர்ணகாய	நம :
ஓம்	லம்போதராய	நம :
ஓம்	விகடாய	நம :
ஓம்	விக்னராஜாய	நம :
ஓம்	கணாதிபதயே	நம :
ஓம்	தூமகேதவே	நம :
ஓம்	கணாத்யக்ஷாய	நம :
ஓம்	பாலசந்த்ராய	நம :
ஓம்	கஜானனாய	நம :
ஓம்	வக்ரதுண்டாய	நம :
ஓம்	சூர்ப்பகர்ணாய	நம :
ஓம்	ஹேரம்பாய	நம :
ஓம்	ஸ்கந்தபூர்வஜாய	நம :

தியாகவாழ்வு மனிதனைப் புனிதனாக்கும்

— திரு. சி. தாமோதரம்பிள்ளை
ஓய்வுபெற்ற அதிபர்
முன்னாள் தமிழ்ப் பிரிவு முதல்வர்
டி. எஸ். சேநனாயக்கா கல்லூரி

உலக மக்கள் யாவரும் உயர்வு பெறவேண்டும், பலரதும் மதிப்பைப் பெறவேண்டும் என்று எண்ணுகின்றனர். ஆனால், உயர்வு பெற்றவர் ஒரு சிலர் ஆவார். அதற்கு என்ன காரணம்? உயர்வு பெறவேண்டுமே என்று எண்ணுகின்றோமே அல்லாது, அதற்குரிய வழிவகைகளை நாம் நன்றாகச் சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதனைச் செயற்படுத்துவதும் இல்லை.

நமது சமூகத்தில் நிறைந்த பணம் படைத்தவர்கள் இருக்கின்றனர். படிப்பில் உயர்ந்தவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால், உலகம் போற்றுமளவுக்கு உயர்வுபெறுகின்றார்களில்லை. பணமும், படிப்பும், உயர்குலமும் ஒருவருக்குப் பெருமை தரமாட்டாது. எனவே, அவைகள் பற்றிய தற்பெருமையுடன் நாம் நின்றுவிடக்கூடாது.

நமது உள்ளத்தை உயர்த்த வேண்டும். உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெற முடியும். ஒரு தடாகத்தில் பத்தடி ஆழமுள்ள தண்ணீர் இருந்தது. அதிலுள்ள தாமரைத் தண்டின் நீளமும் பத்து அடி இருக்கும். அத்தண்டின் நீளத்தை இன்னும் நீளமாக ஆக்க வேண்டுமாயின், இரண்டுபேர் இருபக்கமும் பிடித்து இழுத்து நீட்டக் கூடாது. அது ஒழுங்கான முறையன்று. தாமரைத்தண்டின் நீளம் அதிகமாக வேண்டுமாயின், அதற்கு வழி யாது? மழை நன்கு பொழிந்தது. தடாகத்தில் இருந்த தண்ணீர் மேலும் ஐந்து அடி உயர்ந்தது. அதனால் இயல்பாகவே தாமரைத்தண்டின் நீளமும் ஐந்து அடி உயர்ந்து காணப்பட்டது. எனவே, தடாகத்தில் இருந்த தண்ணீர் மட்டம் உயர, உயர, தாமரை மலர் உயர்வது போல நமது உள்ளமும் உயர உயர்வும் உயர்ந்துகொண்டுபோகும். இந்த சிறப்பான அறிவுரையைத் திருவள்ளுவப் பெருந்தகை,

"வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய (து)யர்வு"
என, எமக்குத் தந்து அறிவுறுத்துகின்றார்.

நமது உள்ளம் எவ்வாறு உயரும் எனச் சிந்திக்க வேண்டும். நம்மை நாமே பரிசோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். இது நம்மவரிடம் இல்லை. சட்டைப் பையில் பணப்பை இருக்கிறதா என்று அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொள்ளுகின்றோம். வீட்டில் உள்ள அலுமாரிக்குள் வைத்த பொருட்கள் இருக்கின்றனவா எனவும் திறந்து பார்த்துக் கொள்கின்றோம். ஆனால், நம்மை மட்டும் ஒரு போதும் பரிசோதனை செய்துகொள்வதில்லை.

மகாத்மா காந்தியடிகள் இறுதி வரை தமது வாழ்க்கையும் சத்தியத்தையும் சோதனை செய்த வண்ணம் இருந்தார். அவரது ஜீவ வரலாற்றுக்கு 'சத்திய சோதனை' என்று பெயர் சூட்டப்பட்டது.

உயிரோடு வாழ்பவர் யார்? மூச்சு விடுவதனாலும் அங்குமிங்கும் அலைந்து திரிவதனாலும் ஒருவன் உயிர்வாழ்கின்றவன் ஆகமாட்டான். அன்பு நிறைந்த மனம் படைத்தவனே உண்மையான உயிர் வாழ்க்கை உடையவனாவான். அன்பில்லாதவன் எலும்பின் மீது தோல்போர்த்த ஓர் உயிரில்லாத பொம்மையாகக் காட்சி தருவான்.



"அன்பின் வழியது உயிர்நிலை அ.்.திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்பது குறள் கூறும் பொய்யா மொழி. "அன்பு என்றால் என்ன? அதன் வடிவம் யாது?" என்று நன்கு சிந்திப்போம். தொடர்புடையாரிடத்து விருப்பம் கொள்ளுதல்தான் அன்பு என்றால் அது பிழையான கருத்தாகும். மனைவி, மக்கள், நண்பர் போன்றோரிடம் பயன்கருதி வைக்கும் விருப்பத்துக்கு ஆசை என்று பெயர்.

பயன் கருதாமல் செய்கின்ற செயலே அன்பாகும். பலர் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது அன்பினாலன்று. கடவுள் நமக்கு பொருள் வருவாயும், புத்திரப் பேறும், தொழிலில் உயர்வும் தருவார் என்ற நோக்கமேயன்றி, பிறிதொன்றுக்காக அன்று. அது ஆசை வழிபாடேயாகும். எச்செயலையும் ஆசையின்றிச் செய்தல் வேண்டும். இந்நிலையில், திருமூலரின் கூற்றைச் சற்று நிலை நிறுத்தலாம் அல்லவா?

"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்"

எனவே, ஆசையை விட்டு, எவ்விடத்தும் எவரிடத்திலும் அன்பை வளர்க்க வேண்டும். ஆசையால் அல்லல் பல விளையும்.

பயன் கருதாத அன்பே தூய அன்பு. அன்புடையவர் தமது என்பையும் பிறருக்குப் பயன்படுமாறு உதவுவர். அன்பு அருளாக மாற வேண்டும். அதுவே தியாக வாழ்க்கை. அழுகின்ற குழந்தைக்குத் தாய் பால் தருகின்றாள். இது அன்பு. தெருவில் தனியே நின்று அழுகின்ற வேற்றுக் குழந்தையை வாரி எடுத்து, ஆறுதல் கூறி அணைத்துப் பால் கொடுப்பது அருள். இந்த அருள் உடையவர் தெய்வமாக நின்று உலகம் போற்ற விளங்குவார். அருள் உடையவர்களே கடவுளைக் காண்பர். அருட்கண் கொண்டு பார்த்தால் உலகம் எல்லாம் கடவுளின் சொரூபமாகவே காட்சியளிக்கும். அருட்கண் கொண்டு செய்கின்ற செயல் ஒன்று கோடி மடங்கு உயர்வு பெறுகின்றது. நாம் ஓர் ஏழைக்கு அன்பினால் செய்கின்ற உதவியிலும் அருளினால் செய்கின்ற உதவி அளவற்ற உயர்வுடையதாகும்.

அருள் சேராத நெஞ்சுடையவர்கள் இருள் மிகுந்த துன்ப உலகிலே சென்று துன்பப்பட்டுத் துவழ்வர். இறந்தவுடனே நமது வாழ்க்கை அத்துடன் முடிந்துவிட்டது என்று எவரும் எண்ணிவிடுதல் கூடாது. தூல உடம்பு நீங்கியவுடன், சூக்கும உடம்போடு தான் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்ப உலகங்களில் இவ் ஆத்மா சுகதுக்கங்களை அனுபவிக்கின்றது. அருளுடையார்க்கு இருளுடைய துன்ப உலகம் கிடையாது என்பதே திருவள்ளுவருடைய கருத்தாகும்.

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த
இன்னா வுலகம் புகல்"

இதன் கருத்தை உள்ளத்திருத்தி பல முறை படிக்கப்படிக்க, நமது உள்ளம் அன்பினாலும் அருளினாலும் உயரும்.

அருளின் உச்சியில் பிறப்பது தியாகம். அருள் உடையவர் தமது சொல், செயல், உடமை எல்லாவற்றையும் தியாகம் புரிந்துவிடுவர். தியாகம் புரிந்தோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்வார். இறுதியில் தன்னையே தியாகம் புரிவர். அவர்களுடைய தியாகத்தால் உலகமெல்லாம் உயர்ந்து இன்புறும்.



தியாகத்துக்காகத் தமது வாழ்வு முழுவதையும் அர்ப்பணம் செய்து, தியாகத்தின் சிகரமாக வாழ்ந்தவர் காந்தியடிகள். அவரது சொற்களில் தியாகமணிகள் உதிர்ந்தன. அவரது செயலில் தியாகப் பழங்கள் பழுத்துக் குலுங்கின. மன உறுதியுடன் மக்கள் சேவையே மகேசன் சேவை எனச் செய்து, இறுதியில் தன்னையே தியாகம் செய்து அமரவாழ்வு பெற்றுவிட்டார்.

காந்தியடிகளினது தியாகம் இமயமலை போல உயர்ந்து நிற்கிறது; என்றும் குன்றாத மணிவிளக்காக ஒளிர்ந்துகொண்டு இருக்கின்றது. கல்லைக் கனிவிக்கும் தியாகம் சொல்லையும் கடந்து என்றும் துலங்கிக்கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது. அவரது சாதனைகள் தனித்துவம் வாய்ந்தவை. அவர் உண்மையே பேசி உத்தமமாக வாழ்ந்த பெருமைக்குரியவர்.

அன்பின் உச்சியை அடைந்த கண்ணப்பர், தனது கண்களைத் தோண்டி காளத்தியப்பருக்கு சாத்திய தியாகத்தை எவராலும் அளவிட முடியுமா?

"கடந்த ஞானிகளும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்ற அரிய பெரிய திருவாக்கையும் கடந்து சிறுத்தொண்ட நாயனார் தனது அருமை மைந்தன் சீராள தேவனை சிவனடியார் பொருட்டு தாய் மடியில் இருத்தி, கவலையின்றிக் களிப்புடன் அரிந்து கறிசமைத்து உணவு படைத்த பெருந்தியாகம் நினைவுக்கும் எட்டாத அளவு உயர்ந்ததாகும். சரணடைந்த புறாவுக்காகத் தனது உடற்தசையை அரிந்து, தராசில் போட்டு, இறுதியில் தன் உடலையே முழுமையாக ஈந்து வேடனது வேண்டுகோளை நிறைவேற்றிய சிபிச்சக்கரவர்த்தியின் தியாகம் என்றென்றும் போற்றுதற்குரியது.

வறுமையுற்ற புலவனுக்குத் தன் தலையைச் சேதித்துத் தரமுயன்ற குமணவள்ளலுடைய தியாகமும்; அரிதிற் பெற்ற, நெடுநாள் வாழச் செய்யும் சஞ்சீவி போன்ற நெல்லிக்கனியை ஔவைப் பிராட்டிக்கு ஈய்ந்த அதிகமானுடைய தியாகமும்; காட்டில் படர கொழுகொம்பின்றித் தரையில் வாழாக்கிடந்த முல்லைக் கொடிக்கு தான் ஏறி வந்த சந்தனத்தேரை ஈய்ந்த பாரி மன்னனின் தியாகமும், தனது உயிர் பாதுகாப்புக் கென்று வைத்திருந்த கவசகுண்டலத்தை இந்திரனுக்கு உவந்தளித்த கர்ணனின் தியாகமும்; பாண பத்திரன் என்பவருக்கு தன் கருவூலத்திலிருந்த நவமணிகள் அத்தனையையும் பொதிசெய்து அனுப்பிய சேரமான் பெருமாள் நாயனாரது ஒப்பற்ற தியாகமும் எப்பொழுதும் செந்தமிழர் வரலாறுகளில் அணி செய்கின்றன.

தனது சொல், செயல், உடைமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணம் செய்து புகழ், புண்ணியம் என்பவற்றைக்கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்பவர்களே நாட்டையும் மக்களையும் காக்கும் வைரத் தூண்கள். நாம் கடவுளை வணங்கும்போது, "கடவுளே என்னைக் காப்பாற்று, என் குடும்பத்தைக் காப்பாற்று" என்று கேட்கக் கூடாது. "எங்கும் இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க" என்று உலக உயிர்கள் யாவற்றினதும் நலனுக்காக பிரார்த்தித்து, பரந்த நோக்கோடு வேண்ட வேண்டும்.

"அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்.
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்"

என வரம் கேட்கின்றார் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார்.

இத்தகைய தியாக உணர்ச்சியே மனிதனைப் புனிதனாக்கும். சிந்தையில் அமைதி நிலவும். உவகை ஊற்றெடுக்கும். முக ஒளி வீசும். பேச்சில் இன்பச்சுவை தவழும். இத்தகைய தியாகிகள் புகழ் என்றென்றும் கலங்கரை விளக்காக மற்றவர்களுக்கு வழிகாட்டும்.

* * * * *

இளம் இந்து சமுதாயத்தின் சிந்தனைக்கு . . .

இந்துவே சிந்தனை செய்; உறங்கி உறங்கிக் காலம் எல்லாம் வீண்விரயமாயிற்றே; விழித்தெழு; உனது தனித்துவத்தைக் குழிதோண்டிப் புதைத்து விடலாமா? கண்மூடித்தனமாக பிறமதக்கொள்கைகளுக்கு அடிமைப்பட்டு மதம் மாறும் எமது இந்துக்களின் நிலைபற்றிச் சிந்திக்கவேண்டிய காலகட்டம் இது.

எமது முன்னோராம் முனிவர்கள், ரிஷிகள் காலங்காலமாகப் புற உலகத் தொடர்பெதுவுமின்றி புலனடக்கி, ஆழ்ந்த தியான நிலையில்கண்டறிந்து உணர்ந்து வெளிப்படுத்திய ஒப்புயர்வற்ற சமய சாத்திரங்கள் எமது ஆன்மீகப்பொக்கிஷங்களன்றோ? இறைவனே எடுத்தோதிய பகவத்கீதை உணர்த்தும் வாழ்க்கை நெறி, உயர்ந்த ஆன்மீக தத்துவமே. சிவனே எழுதிய கையேடாம் மணிவாசகமாகிய திருவாசகம் தராத இறையுணர்வை வேறெந்த மதவாசகம் தரவல்லது? இவற்றில் அடங்கியுள்ள தத்துவக் கருத்துக்களை ஐயந்திரிபறக் கற்று உணர்ந்து நாம் அவ்வழி நிற்பதோடு எமது இந்துச் சகோதரர்களையும் அவ்வழியில் நெறிப்படுத்த வேண்டிய கடப்பாடு எமது கற்றறிந்த பெரியோரதும் இளைஞரதும் இன்றியமையாத கடமையாகும்.

அறியாமையிலும் வறுமையிலும் வாடும் எமது இந்துச் சகோதரர்களை மயக்கி ஏமாற்றி மதம் மாற்றும் தந்திர புத்திக்குச் சாவுமணி அடிக்கவேண்டும். கோலாகலமான கொண்டாட்டங்கள். விழாக்கள் எடுக்கலாம். விழாக்களின் சிறப்பான நிகழ்வுபற்றிப் பெருமை அடித்துக்கொள்ளலாம். அதனால், தாம் அரிய பெரிய காரியம் சாதித்து விட்டதாக தற்புகழ்ச்சி கொள்ளலாம். இவற்றால் முடிவான பயன் ஏதுமுண்டா? இவற்றால் இந்து சமுதாயத்துக்கு முக்கியமாக இளஞ்சமுதாயத்துக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன? இவை இந்துக்களின் உணர்ச்சியை எழுச்சி பெறச்செய்து வாழ்வின் இலட்சியத்தை அடையும் பாதையில் முன்னேறிச்செல்ல உதவியதா? இந்துக்களின் உணர்ச்சியைத் தூண்டி செயலில் முனைய உந்து சக்தியாக அமைந்ததா? மதமாற்றச் சக்திகளை வலுவிழக்கச்செய்யும் வகையில் பயன் விளைவிப்பதாயிற்றா? சிந்திக்க வேண்டிய கருத்துக்கள் இவைதாம்.

இந்து மதத்தின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஊட்டுவதற்கு ஏற்ற வழிவகைகளை ஆராய்ந்து ஏற்றவற்றைச் செயற்படுத்த வேண்டியது முக்கியம். இந்து கலாச்சார அமைச்சு இதுபற்றிச் சிந்திந்தித்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகப் பொருத்தமான பயனுள்ள செயற்பாடாக அமையும்.

இதற்கான செயற்பாடுகளை மூன்று வகையாகப் பகுத்துக்கொள்ளலாம்.

ஆலயங்களும் அவற்றைப் பரிபாலித்தலும்

நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் ஆலயங்கள் தோற்றம் பெறுகின்றன. பொருள் ஈட்டுவதுதான் ஆலயங்கள் எழுப்புவதன் நோக்கமோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. ஆலயங்கள் மக்களுக்கு ஆத்ம திருப்தியைத் தருவனவாக, மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவன்பால்



நிலைநிறுத்துவதற்கு ஏற்றனவாக பக்தியை வளர்ப்பவனாக அமைதல் வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு சிந்தனையும், பேச்சும், செயலும், மனத்தூய்மைக்கு, மனப்பண்பாட்டுக்கு, மன அமைதிக்கு, அன்பை வளர்ப்பதற்கு அன்பினால் உந்தப்பட்டு தியாக புத்தியுடன் பிறர்நலம் பேணி அவர்க்கு உதவுவதற்கு ஏற்ற வகையில் இருத்தல் அவசியம். ஆலயங்களில் அமைதி நிலவுதல் முக்கியம். சிவசிந்தனையை வளர்க்கின்ற துதிப்பாடல்களும், சத்விஷய தானமுமே அன்றி வேறேதும் பேசாத தன்மை நிலைபெறுதல் வேண்டும். சமய சம்பந்தமான புராணபடனங்களும் அவற்றுக்கான விளக்கங்களும் தத்துவக் கருத்துக்களும் அறிஞர் உதவியுடன் அடியார்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். பெண்கள் விரித்த கூந்தலுடன் ஆலய தரிசனத்துக்கு வருதலைத் தவிர்த்தலும் இந்துப் பண்பாட்டுக்கு ஏற்ற ஆடை அணிந்து கொள்ளுதலும் கட்டாயமாக்கப்படுதல் விரும்பத்தக்கது. ஆலய தரிசனத்துக்கு வருவோர் வழிபடுதல் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருத்தல் அவசியம். அவர்கள் அங்கு சொந்த விடயங்கள் பற்றி உரையாடுதல், அறிமுகமானவர்களைக் கண்டவுடன் குசலம் விசாரித்தல், அண்டை அயலார் அறிமுகமானவர்கள் பற்றிய செய்திகளைப் பரிமாறிக்கொள்ளுதல் போன்ற வேண்டாத பேச்சுக்களைக் கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கது. ஆலயங்களில் சிறுவர், சிறுமியர் ஓடியாடி விளையாட அனுமதிக்கலாகாது. இது போன்ற செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கு விளம்பரப் பலகையைத் தொங்க வைத்து அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதற்கு காவலர்களை அல்லது தொண்டர்களை அடையாளச் சின்னத்துடன் *(Badge)* நியமிக்க முடியும். சாதி அடிப்படையிலோ சமூகப் பொருளாதார அடிப்படையிலோ பக்தர்களிடையே ஏற்றத் தாழ்வு காட்டுதல் முற்றாகத் தடுக்கப்படுதல் அவசியம்.

மதமாற்றமும் தடை செய்யும் வழிவகைகளும்

கட்டாய மதமாற்றச் சட்டத்தை அமுல்படுத்துவது மிகுந்த மகிழ்ச்சி தருவதொன்று. ஆனால், கஷ்டப்பட்ட, அறிவு குறைந்த, வாழ வசதியற்றோருக்கு பொருள் உதவி, உடல் உதவிகளால் அவர்கள் மனதை மதமாற்றம் செய்யும் சாதுரிய புத்தி பிறமதத்தினரிடம் தாராளமாக இருக்கிறதே. நாமும் அவர்கள் உதவி வழங்குவது போன்று அல்லலுறும் எமது மதத்தவர்க்கு உதவி வழங்கி அவர்தம் துயர் துடைத்து மத அறிவைக் கொடுக்க வேண்டும். இதற்காக நாட்டிலுள்ள எல்லா இந்து மன்றங்களையும் இணைத்து ஒரு பொதுச்சபையை நிறுவலாம். அச்சபை உறுப்பினர்கள் தமது மன்றங்களினூடாகச் சமய சேவை, சமுகசேவை ஆற்றற்பொருட்டு அவ்வப் பகுதிகளில் இளைஞர்கள், யுவதிகள், மற்றும் தொண்டு மனப்பான்மை உடையோர் கொண்ட படையைத் திரட்டுதல் வேண்டும். அவ்வப் பகுதிகளில் அவர்களுக்கு வகுப்புகள் நடாத்தி அவர்கள் இந்து சமய அறிவை, தத்துவக் கருத்துக்களை ஓரளவாவது அறிந்து கொள்ள உதவ வேண்டும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களே முன்னின்று துன்புறும் மாந்தரின் இல்லங்களுக்குச் சென்று ஆறுதல் கூறி வேண்டிய ஆதரவு கொடுக்கும் நிலை உருவாக வேண்டும். அன்பு என்ற பண்பு வெறும் வார்த்தை அளவோடு நின்றுவிடாமல் அன்புடமையினால் பிறர் நேயமும், அவர்களுக்கு உதவும் மனப்பான்மையும், தியாக சிந்தையும் மக்களிடம் நிறைய வேண்டும். இந்து சமய கலாச்சார அமைச்சே முன்னின்று நாடளாவிய ரீதியில் இவ்வாறான ஒரு புரட்சியை உருவாக்குதல் இன்றியமையாதது.

பாடசாலைகளில் இந்து சமயக் கல்வி

பாடசாலை மட்டத்தில் கவனிக்க வேண்டிய சில முக்கிய விடயங்களும் உண்டு. இந்து சமய கலாச்சார அமைச்சு கல்வியமைச்சின் இந்து சமயப் பிரிவுடன் தொடர்புகொண்டு பாடசாலைகளில் இந்து சமயக் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். முக்கியமாக இந்து பாடசாலையல்லாத பாடசாலைகளில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களும் தாம் கற்பிக்கும் சமய பாடத்தில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் உடையோராய் இருத்தல் முக்கியம். அவ்வாறு அறிவுடைய ஆசிரியர்கள் இல்லாத இடத்து இந்து சமய தாபனங்கள் ஆசிரியர்களைக் கொடுத்து உதவ வேண்டும். அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பொதுவாக சமய பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமே சமய அறிவை வளர்ப்பதற்கேற்ற சமய வகுப்புக்களும். கருத்தரங்குகளும் நடத்துதல் வரவேற்கத் தக்கது. செயல்முறைப் பயிற்சிகள் பெரிதும் பயன்தரக்கூடியவை.

எமது கருத்தில் உதிர்த்த இந்த சிந்தனைகள் சிலவற்றை வாசகர்கள், இளைஞர்கள் சிந்தனைக்காக இங்கே தந்துள்ளோம். எமது இந்து சமய கலாச்சார அமைச்சு இதனைக் கருத்தில் எடுத்து சமய தாபனங்கள், ஆலய தர்ம கர்த்தாக்கள், அர்ச்சகர்கள், கல்வி உயர் அதிகாரிகள், சமயப் பேரறிஞர்கள் ஆகிய அனைவருடனும் ஆலோசித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதும் அதற்கு எமது இந்துக்கள் அனைவரும் முக்கியமாக இளைஞர்கள், யுவதிகள் ஒத்துழைப்புத் தந்து நடைமுறைப்படுத்த உதவுவதும் எமது இந்து மத உயர்வுக்கு, நிலைபேற்றுக்கு இந்துக்கள் இந்துக்களாகவே வாழ்வதற்கும் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒவ்வொரு மதத்தவனும் தனது சொந்த மதத்தைச் சரியானபடி அறிந்து அனுஷ்டித்து நல்வாழ்வு பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி
விவேகானந்த வீதி
கொழும்பு 6

"இடரினும் தளரா இந்துமதம்"

கு. ஸ்ரீராகவராஜன் (ஆசிரியர்)
றோயல் கல்லூரி
கொழும்பு 7

கி. பி. 1620ல் தொடங்கிய போத்துக்கேய தனியரசாட்சியில் முதற்தேசாதிபதியான பிலிப்தே ஒவ்வேறா நல்லூரை உறைவிடமாக்கினான். பின் நல்லூர்க் கந்தசாமி கோவிலைத் தரைமட்டமாக்கி இருந்த இடம் தெரியாமல் அத்திவாரத்தையும் கிளறுவித்தான். அக் கோயிற் கற்களைக் கொண்டு கோட்டையையும், வீடுகளையும் கட்டினான். யாழ்ப்பாணத்திலிருந்த சைவ, வைணவ ஆலயங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக இடிப்பித்தான். இதையறிந்த கோயில் அதிகாரிகளும், அர்ச்சகர்களும் தத்தம் கோயில் விக்கிரகங்களைக் கிணறுகளிலும், குளங்களிலும் போட்டு மறைத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தமது ஆட்சிக்குட்படுத்திய பிரதேசங்களிலெல்லாம் உள்ள புத்த, சைவ ஆலயங்கள் எல்லாவற்றையும் சமயம் வாய்த்த போதெல்லாம் பறங்கிகள் இடித்து நாசமாக்கி விட்டனர். கி.பி. 1552ல் நாடோறும் இரண்டாயிரஞ் சிற்பிகள் வேலை செய்தாலும் இருபது வருடங்களிற்றாயினும் முடித்தற்கரியதும், கருங்கற் திருப்பணியையுடையதுமான "சீத்தாவாக்கை" என்னும் இடத்தினிலிருந்ததுமான பெறன்டி (வைரவ ஆண்டி) கோயிலையும் - 1575ல் அளவற்ற திரவியத்தையுடைய முன்னீச்சரச் சிவாலயத்தையும், 1588ல் தெய்வந் துறையிலுள்ள பொன்மயமான செம்பினால் வேய்ந்த சிகரங்களையும், ஆயிரம் விக்கிரகங்களைக் கொண்டதுமான விஷ்ணு ஆலயத்தையும், 1622ல் திருகோணமலைச் சுவாமி மலையிலிருந்த அதிவிசித்திர அலங்காரமான கோணேஸ்வரர் கோயிலையும் பறங்கிகள் இடிந்து பொடியாக்கியது மட்டுமன்றி அவ்வக் கோயில்களிலுள்ள பெருந்திரவியங்களையுஞ் சூறையாடினர்.

கதிர்காமம் என்ற தலத்தில் மாத்திரம் பறங்கிகளின் எண்ணம் முற்றுப் பெறவில்லை. அளவிறந்த பொருள்களை அபகரிக்கலாமென்ற பேராசையுடன் பறங்கிகள் கதிர்காமஞ் சென்று ஒவ்வொரு கப்புறாளையாக மிரட்டி இறுதியில் இருவரின் துணை கொண்டு மலையடிவாரங்களும், குன்றுகளும், அடவிகள் எங்கும் அலைந்து திரிந்தும் நேர் வழியைக் கண்டு, தாம் எண்ணிய இடத்தை அடைய முடியாது ஏமாந்து சீற்றங் கொண்டு தாம் அழைத்துச் சென்ற கப்புறாளை இருவரையும் கொன்று கோயில் அகப்படாமைக்கு வருந்தி அதுவோர் பிசாசின் சேட்டை என எண்ணித் திரும்பினர். அவர்கள் போகும் வழியில் அம்பாந்தோட்டையிலிருந்து கண்டியரசனுக்கு உப்புப் பொதிகள் சுமந்து சென்ற ஆயிரம் பொதிமாடுகளை களவாடிச் சென்றனர்.

இவ்விதமான கொடுந் தொழிலைச் செய்வதற்கு அவர்களது சமய அபிமானமும், வைராக்கியமும் மறு சமயத்தவரது வழிபாட்டுக்குரிய கோயில்கள் தமது மதவிரோதமென்ற நம்பிக்கையுமே காரணங்களாக அவர்களைத் தூண்டிவிட்டனவெனினும் பொருள் அபகரிக்கும் பேராசையே முக்கிய காரணமென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்று உலகநாடுகள் பலவற்றில் பறங்கிகளின் ஆட்சி பூமியில் பல்வேறு மதக் கோயில்கள் கீழைத்தேச கோவில்களை விட சிறப்பாக இயங்குவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

திருகோணமலை கோணேசர் கோவிலுக்கு 1000 அமுணம் (1 அமுணம் 10 பறை) கொண்டது. (அளவுகள் ஊருக்கு ஊர் வித்தியாசமுடையன). நெல்விளையும் நிலங்கள் தம்பலகாமத்திலும், கந்தளாயிலுமிருந்தன. அக்காணிகளில் வருடம் இரு முறை நெல்விளைந்தது. பறங்கிகள் திருகோணமலைக்கு வந்தபின் பதினைந்து, இருபது கமக்காரர்களுக்கு மேல் அவ்வூர்களில் இருக்கவில்லை. மற்றக்குடிசனங்கள் பறங்கியரின் கொடுமைக்கஞ்சாது கொட்டியாரத்திற்கும் அயலூர்களுக்கும் குடி போனார்கள். இவ்வாறு பறங்கிகளுக்கு அஞ்சி அஞ்சி வாழ்ந்த எம்மக்களும், எம்மதமும் எத்தனை இடர்களைத் தாண்டி இன்று புதுப் பொலிவோடு அதே பண்பாட்டோடு, கலாச்சாரத்தோடு, எம் இந்து மதத்தை எடுத்து வந்துள்ளார்கள் என்றால் அது இந்து மதத்தின் சக்தி என்றால் வேறில்லை.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

நன்றி — யாழ்ப்பாண சரித்திரம்

"மனிதம்" மரித்துவிடக்கூடாது !

பாலேந்திரன் காண்டீபன்
ஒலிபரப்பாளர் / தயாரிப்பாளர் - சூரியன் FM
முன்னாள் இதழாசிரியர் - இந்து மாணவர் மன்றம்
தலைவர் - தமிழ் நாடக மன்றம்

இதயத்துக்கும் இரத்தத்துக்கும்
பேச்சுவார்த்தை !
இரத்தம் சொல்கிறது ....
உன்னுள் நான் நுழையமாட்டேன் !
இதயம் சொல்கிறது ....
உன்னை நான் அனுமதிக்கமாட்டேன் !
பாவம் பரிதவிக்கிறது ....
உணர்வுகளோடு உள்ள உயிர் !

சமயம் என்பது வாழ்க்கையின் நெறிமுறை. எப்படியும் வாழலாம் என்றில்லாமல், இப்படித்தான் வாழவேண்டும் என்கின்ற வரையறையை சமயம் கற்றுத்தருகிறது. இந்துவும், முஸ்லிமும், கிறிஸ்துவும், பௌத்தமும் "மனிதத்துவத்தையே" உணர்த்தி நிற்கின்றன. உணர்கின்றவர்களும், உணர்த்தப்படுகின்றவர்களும் தவறாக உள்வாங்கிக் கொள்வதால் சி(ப)ல இடங்களில் மதம்கூட மரித்துவிடுகின்றது. வள்ளுவன் அப்போதே இதை உணர்ந்து கொண்டதால்தான் மொழியையும் கடவுளையும் வள்ளுவம் இனங் காட்டிக்கொள்ளவில்லை. (தமிழ், கடவுள் என்கின்ற வார்த்தைகள் வள்ளுவத்திலேயே இல்லை.) தன் மதம் என்ன கூறுகின்றது என்பதை அறிந்துகொண்ட எந்த ஒரு மனிதனும், பிறமதமெதனையும் சாடமாட்டான்.

ஒன்றே குலமும் ஒன்றே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணமே
சென்றே புகுங்கதியில்லை நும் சிந்தித்து
நின்றே நில பெற நீர் நினைந் துய்மினே

என்கிறது திருமந்திரம்.

ஆறுகள் வேறுபட்டு சமுத்திரத்தில் சங்கமமாவதைப்போல மதங்கள் வேறுபட்டாலும், நோக்கம் ஒன்றே! "சுத்த அறிவே சிவமென்று கூறும் சுருதிகள் கேளீரோ பல பித்த மதங்களிலே தடுமாறிப் பெருமையிளப்பீரோ?" என்று பாடிய பாரதியைப் பார்த்து ஒரு மாணவன் கேட்டான், கடவுள் எங்கேயிருக்கிறார்? பாரதி யோசித்தான். பதில் சொன்னான். உன்னிலும், உன்னைவிட உயர்ந்ததிலும், தாழ்ந்ததிலும் கீழான பன்றியினும் மேலான கழுதையிலும் இருக்கிறார். கூளத்திலும் மலத்திலும் கூட இருக்கிறார். ஆக கடவுள்

என்பது நம்பிக்கை! இருக்கிறார் என்றால் இருக்கிறார். இல்லையென்றால் இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும், தன்னுடைய மரபை, பிறப்பை உணர்த்தும் மதத்தில் பற்று இருக்க வேண்டும!. தனித்துவம் இருக்க வேண்டும்! ஆனால் மதம் என்பதில் தெளிவு இருக்க வேண்டும்! அறுபத்திமூன்று நாயன்மாரும், யேசுவும், அல்லாவும், புத்தரும் தங்களுடைய மதத்தின் அடையாளகர்த்தாக்கள்? அதற்காக அவர்கள் வேற்று மதத்தவரை அப்புறப்படுத்தவில்லையே! புனிதப் போரென பறையேதும் சாற்றவில்லையே? அவர்களுடைய மதம் வேறுபட்டது; ஆனால், மனம் ஒன்றுபட்டது! இதையே அனைவரும் உணரவேண்டும்!

அன்பே சிவம் / பௌத்தம் / கிறிஸ்து / இஸ்லாம் அல்லவா?

இந்து சமயமும் தனித்துவமான மரபுகளை உடையது. அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற புருடார்த்தங்கள், தர்மம் செய்து, அதனால் உருவாகும் செல்வங்களையடைந்து இன்பமாக வாழ்ந்து, வீடுபேறு என்கின்ற இறைவனிடம் சரணாகதியாகும் முத்தியின்பத்தையே வலியுறுத்துகின்றன.

"பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் மாற்றுவது சமயம்" என்று கூறினார் இராமகிருஷ்ண பரமஹம்சர். மனிதத்துள் மிருக குணமும் இணைந்தேயிருக்கிறது. மனிதத்துள் இருக்கும் மிருக குணங்களை (ஆசைகளை) அகற்றி, சமயம் மனிதத்தை மாண்புறவைக்கிறது. மனிதம் மாண்புறும்போது, அது தெய்வநிலையை அடைந்து விடுகிறது. அதாவது, ஆசைகள் விடுபட்டு, அல்லல் கடந்து, ஆன்மா அன்புநிலையை அடைந்துவிடுகிறது. இதுவே மதத்தின் சிறப்பு! சமயம் வாழ்வியலைக் கற்றுத்தருவதாலேயே, அதற்கென்று பல மரபு முறைகள் அமைந்துவிடுகின்றன. மரபுகள் மீறப்படுகின்றபோது அல்லது தவறானவகையில் உணர்த்தப்பட்டு உணரப்படுகின்ற போது, மதம் மலிந்துவிடுகிறது.

ஈழம் முதல் உலகின் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் மதத்தின் பெயர்சொல்லி நரபலிகளும், ஜாதிக் கலவரங்களும் உலக யுத்தங்களும் நடைபெறாமலில்லை. 2001ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி அமெரிக்காவை பின்லாடன் அதிரவைத்தது முதல் அமெரிக்காவும் பதிலுக்கு மறுதரப்புக்களும் மதத்தின் பெயர்கொண்டு புனிதப்போரெனப் பிரகடனப்படுத்தி அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் "மனித பலி" களைத் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. உலக பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் (War Against World Terrorism) என ஆரம்பித்த கொடூரம், அப்பாவி மக்களைக் கொன்று குவித்தவண்ணமேயுள்ளது.

தனித்துவமான கலாசார விழுமியங்கள், மனிதனை மனிதனாக்கும் மதத்தின் தனித்துவமான பழக்கவழக்கங்கள், அனைத்தும் நாகரீக மோகத்தால் மறுதலிக்கபடுகின்றன. உதாரணத்துக்கு, இரு தசாப்தங்களின் பின் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆலயங்களை யுத்தத்தினால் இழந்த பின், இலங்கையில் ஓர் உலக



இந்து மகாநாடு என இறுமாப்போடு இருந்த "இந்துக்கள்" இறுதியில் ஏமாந்துபோனதுதான் மிச்சம். செலவழித்த பணத்திற்கு ஆலயங்கள் நிர்மாணிக்கப் பட்டிருந்தால் "இந்துத்துவம்" வாழ்ந்திருக்கும்! தனிப்பட்ட அடையாளங்களுக்காக தனித்துவமான "இந்துத்துவம்" உலக இந்து மகாநாட்டில் பிரகாசமிழந்தது. முயற்சி போற்றுதலுக்குரியது! ஆனால், செய்வன திருந்தச் செய்யலாமே?

இற்றைக்கு 1055 ஆண்டுகால சரித்திரம்கொண்டு யாழ் மக்களின் வாழ்வியலோடு கலந்துவிட்ட நல்லூர்க் கந்தன், சிலரின் பலவிதமான சேஷ்டைகளால் கண்ணீர் வடித்திருப்பான் (மஹோற்சவ நிகழ்வுகளின் போது இடம் பெற்ற கொள்ளைகளும், வெளிநாடுகளிருந்து வந்து மேலத்தேய மோகத்தோடு மரபு மறந்து நின்ற எம்மவரும் இதில் உள்ளடக்கம்). இதனாலோ என்னவோ, அலங்காரக் கந்தன் அபிஷேக கந்தனாக தன்வருத்தத்தை வெளிப்படுத்திக் கொண்டான். (சந்நிதி ரதம் சரிந்து விழுந்த நிகழ்வு). எங்களிடம் வளமான வலிமையான மரபு இருக்கிறது. மரபுகளை இளையசமூகம் மறக்காமலிருக்க வேண்டுமானால் மரபறிந்தவர்கள் வழிகாட்ட வேண்டும். கோயில்களுக்குப் பிள்ளைகள் குறைவான ஆடைகளோடு வந்தால் அது அழைத்துவந்த பெற்றோர்களின் தவறு!

ஆலயம் ஆன்மா இலயிக்கும் இடமே தவிர, அடாவடித்தம் செய்யும் இடமல்ல. ஆலயத்தின் ஒவ்வொரு அங்கங்களும் எமக்கு வாழ்வியலைக் கற்றுத்தருபவை.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே"

திருமூலர் - திருமந்திரம்

உடல் அமைப்போடு ஆலயம் ஒன்றுபடுவதை திருமந்திரம் உணர்த்தி நிற்கிறது. ஒவ்வொரு வார்த்தையிலும் ஆன்மாவின் அர்த்தங்கள் விபரிக்கப்படுகின்றன. ஆக, ஆலயத்தின் புனிதம் உணர்ந்து ஆலயம், தேவையில்லை செல்வது நன்று!

மத நம்பிக்கைகளைக் கடந்து கடவுளின் மீதான அதீத நம்பிக்கையால் மூட நம்பிக்கைகள் சமயங்களில் மலிந்து கிடக்கின்றன. "கற்களும் கற்களும் மோதிக் கொண்டன அங்கே கற்களுக்கு காயம். மதமும் மதமும் மோதிக் கொண்டது அங்கே பரிதவித்த மானிடனுக்கல்லவா காயம்" என புதுக்கவிஞன் மேத்தா சொல்வதற்கும், தேவையில்லை மூடநம்பிக்கைதான் அடிப்படை. நரபலிகள் இதுவரையும் மதம் பெயர் சொல்லி நடாத்தப்படுவதற்கும் அதுதான் காரணம். ஆக, வள்ளுவம் பகர்வதைப் போல, "எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"!



மஹாத்மா சொன்னதைப் போல, "இந்த உலகம் முன்னமே துயரத்திலும் துன்பத்திலும் துடித்துக் கொண்டிருக்கிறது. இதைப் பார்த்து மேலும் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பவர்களால் இந்த சமுதாயத்திற்கு என்ன பயன்? கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உலகத்தில் மக்களினத்தை எவன் கைகொடுத்துக் கரையேற்றுகிறானோ அவன்தான் உத்தமன்!" உத்தமனாக இல்லாவிட்டாலும், உதவாதவனாக இல்லாமலிருப்போம்!

ஒவ்வொரு மதத்திற்கும் தனித்துவமான அடையாளங்கள், மரபுகள், பழக்க வழக்கங்கள் இருந்தாலும், அனைத்தும் மனிதத்துவத்தையே வலியுறுத்துகின்றன. கீதையும், குர்ஆனும், பைபிளும் மனிதத்துவத்தின் மாண்புகளையே வரையறுக்கின்றன. எங்களில் பலருக்கு இருக்கும் பிரச்சனை ஒன்றே!
மற்றவர் பிரச்சனைகளை அடிக்கடி அலசும் நாங்கள், எங்கள் குறைகளை நிவர்த்திக்க முயல்வதில்லை. பிறக்கிறோம்! இறக்கிறோம்! இடையில் எதைக் கொண்டு வந்தோம்? கொண்டு செல்ல!

"ஆ"லயம் "ஆ"லயிக்கும்
இடமென மறந்து
அடாவடித்தனம் செய்து - அல்லலுற்று
மரபுகளை மழுங்கடிப்பதே
"அ"ழகு என்றெண்ணும்
அன்பர்காள்! அதுவே
"அ"ழிவு என
உணர்ந்து கொள்வீர்!

புனித மதம் பெயர்கொண்டு
புனிதப்போர் தொடுக்கும்
அன்(பண்)பறியாதோர்காள்!

அன்பே மதம்!

அன்பே மொழி!

அன்பே ஆன்மா!

அறிந்து கொள்வீர்!

"நாளைய ஜீவன்களை உணர்வுள்ள உயிர்களாக்குவீர்"

1 H

சகலகலாவல்லி மாலை

1st — N. ராஜ்காந்
2nd — B. சியாம் கணேஷ்
3rd — A. அவினேஷ்
3rd — P. மிதுஷன்

பேச்சு

1st — A. அவினேஷ்
2nd — N. ராஜ்காந்
3rd — B. சியாம் கணேஷ்
3rd — G. அனோஜன்

மாலை கோர்த்தல்

1st — R. ஸ்ரீசுபத்சன்
2nd — S. மேகஜன்
3rd — C. நிதீசன்

2 H

சகலகலாவல்லி மாலை

1st — T. ஹரிசுதன்
2nd — S. பிரசாந்த்
3rd — K. மௌலிகரன்
3rd — B. சாருந்தன்

சமய அறிவுப் போட்டி

1st — S. துஷ்யந்தன்
2nd — T. ஹரிசுதன்
3rd — M. பவித்ரன்
3rd — E. பிரம்மானந்தன்

கோலப் போட்டி

1st — V. சுஜீவன்
2nd — V. துவாரகேஷ்
3rd — K. மௌலிகரன்
3rd — S. பிரசாந்த்

1 J

சகலகலாவல்லி மாலை

1st — S. ஹரிகேசன்
2nd — S. மிதுனகாஷ்
3rd — T. விசாகன்

பேச்சு

1st — A. அருள்வர்ணன்
2nd — T. விசாகன்
3rd — K. கௌதம்
3rd — S. ஹரிகேசன்

மாலை கோர்த்தல்

1st — A. சஞ்சயன்
2nd — S. அரவிந்தசர்மா
3rd — K. நவீன்

2 J

சகலகலாவல்லி மாலை

1st — R. யுதிஷ்ரன்
2nd — T. காந்தரூபன்
3rd — S. துஷியந்தன்
3rd — L. கீர்த்திகன்

சமய அறிவுப் போட்டி

1st — G. ஹரிநாத்
2nd — V. ஸ்ரீவத்ஷன்
3rd — R. கோகுலன்
— B. கஜீவ்
— J. கவின் கஷ்வந்த்
— S. ஹரிஷ்மன்

கோலப் போட்டி

1st — B. பிருந்தாபன்
2nd — J. கவின்கஷ்வந்த்
3rd — S. ஹரிஷ்மன்
3rd — S. துஷியந்தன்



3 H

சகலகலாவல்லி மாலை

1st — Y. பிரணவன்
2nd — K. பிரபஞ்சன்
3rd — N. அஷ்வந்த்
3rd — A. செந்தூரன்

சமய அறிவுப் போட்டி

1st — A. செந்தூரன்
2nd — N. சைலொளிபவன்
3rd — S. பானுகோபன்
3rd — N. பிரதீப்

தோரணம் கட்டுதல்

1st — G. அருண் செந்தூரன்
2nd — V. அரவிந்த்குமார்
3rd — S. அருஷன்
3rd — N. அஷ்வந்

3 J

சகலகலாவல்லி மாலை

1st — V. மிதூர்ஷன்
2nd — S. பாலகஜன்
3rd — P. வினோத் பாஸ்கர்
3rd — P. ஆனந்ராம்

சமய அறிவுப் போட்டி

1st — S. பாலகஜன்
2nd — P. ஆனந்ராம்
3rd — K. விவேஷ்
3rd — C. சாய்கிருஷ்ணா

தோரணம் கட்டுதல்

1st — R. டிஷாந்த்
2nd — V. மிதூர்ஷன்
3rd — R. ரவீந்திரதாஸ்

4 H

சகலகலாவல்லி மாலை

1st — J. பிரவீன்
2nd — T. திவியன்
3rd — N. கபிலாஷ்

சமய அறிவுப் போட்டி

1st — J. பிரவீன்
2nd — N. கபிலாஷ்
3rd — P. கோகுல்ராம்

மாலை கோர்த்தல்

1st — P. கோகுல்ராம்
2nd — K. வேதப்பிரியன்
3rd — S. அரவிந்த்
3rd — N. லசந்

4 J

சகலகலாவல்லி மாலை

1st — R. நிறோஷன்
2nd — J. அருஷான்
3rd — R. செந்தூரன்
3rd — R. அருண்தீப்

சமய அறிவுப் போட்டி

1st — M. தமிழ்ஏந்தி
2nd — S. அஸ்வின்
2nd — R. ராகுலன்

மாலை கோர்த்தல்

1st — R. அருண்தீப்
2nd — G. ஜெயபிரசாத்
3rd — R. செந்தூரன்
3rd — R. திவ்யநாத்

5 H

சகலகலாவல்லி மாலை

1st — R. ரமணன்
2nd — P. இந்ரஜித்
3rd — B. சித்தார்த்

சமய அறிவுப் போட்டி

1st — P. இந்ரஜித்
2nd — R. ரமணன்
3rd — K. யசாந்

பேச்சு

1st — V. அநோஜ் அரவிந்
2nd — S. கிருஷாந்த்
3rd — R. ரமணன்
3rd — V. அஸ்விந்

5 J

சகலகலாவல்லி மாலை

1st — B. அஜன்
2nd — N. டிலுக்ஷன்
3rd — S. ஸ்ரீகுணேசன்

சமய அறிவுப் போட்டி

1st — N. டிலுக்ஷன்
2nd — N. பிரவீன்
2nd — S. ஸ்ரீகுணேசன்

பேச்சு

1st — S. ஸ்ரீகுணேசன்
2nd — N. பிரவீன்
3rd — N. டிலுக்ஷன்
3rd — B. அஜன்

* * * * *



சித்தமெல்லாம் சிவனடிக்கே வைத்த

சித்தர்கள்

பக்தர்கள் பரம்பொருளைத் தேடுகிறார்கள். சித்தர்கள் பரம்பொருளுடனேயே வாழ்கின்றார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே கடவுளை உணர்ந்தவர்கள். உணர்ந்ததால் என்றும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்பவர்கள். அவர்களுடைய சங்கல்பங்கள் அந்த ஆண்டவனுடைய சங்கல்பங்களாயே அமையும்.

சித்தர்களுக்கு எங்கேயும் போகவேண்டிய நிலை இல்லை. எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற அவர்கள் பரம்பொருளின் ஆணை பெற்றுவந்து அங்கங்கே தங்கி பணிபுரிபவர்கள். ஆகையினாலே அவர்களுக்கு விருப்புமில்லை, வெறுப்புமில்லை. அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள், வேண்டாதவர்கள் என்று யாரும் கிடையாது. தெருவில் கிடக்கும் உடைந்த ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகப் பார்க்கின்ற சித்தர்கள் அன்பே உருவமானவர்கள். ஆண்டவனைப் போன்றே அளவிலாக் கருணையுடையவர்கள். அட்டமா சித்திகள் கைவரப்பெற்றாலும் அவற்றிற்கடிமையாகாது பிறர்நலன் காக்கவென பயன்படுத்தியவர்கள். சித்தர்கள் அன்பென்ற பிடிக்குள் அடக்கப்படும் மலைகள்.

உள்ளத்திலூறி வரும் அன்பினால் மட்டுமே ஆண்டவனை அடைய முடியுமென்று உலகத்திற்குச் சொன்னவர்கள். தங்கள் அளவுகடந்த கருணையால் மானிட வாழ்வினை எப்படி எல்லாம் வாழ்தல் வேண்டும் என்று எழுதிவைத்த பெருந்தகையாளர்கள். அவர்கள் எதைச் சொல்லவில்லை? வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பின் தெய்வத்திடம் சேர்தல் வரை பல்துறைகளூடாகவும் வழிசமைத்துத் தந்தவர்கள்.

வேதங்கள், ஆகம உபநிடதங்களை, கற்றுத் தெளிந்து இவற்றையெல்லாம் அவர்கள் கண்டுணர்வதில்லை. ஏனைய புலவர்கள் போல, ஏட்டுக்கல்வியை கசடறக்கற்று பாடல்கள் எழுதியதும் இல்லை. முந்திய எந்தப்பிறப்பிலோ செய்யவேண்டியது அனைத்தையும் செய்து முடித்துவிட்டு, இறுதியாய் இப்பிறப்பில் எல்லாவகைச் சித்திகளும் கைவரப்பெற்று சித்தர்களாய் மலர்ந்திருக்கிறார்கள். எனவே ஏனையவர்களைப் போல கல்வி முதலியவற்றை வரன்முறையாக கற்க வேண்டிய தேவை இவர்களைப் பொறுத்தமட்டில் இருக்கவில்லையே தவிர....

"கற்பனவும் இனி அமையும்"

என்று சொல்லும் முறையிலே எந்த அளவுக்கு எந்தத்துறையில் அறிவு செல்லக்கூடுமோ, அந்த அளவுக்கு அந்தத்துறையில் அறிவு செல்லக்கூடிய பேராற்றல் படைத்த பெருமக்களாவார்கள்.

சித்தமெல்லாம் சிவனடிக்கே வைத்த சித்தர்கள் அனிமா முதல் அட்டமாசித்திகளையும் கைவரப்பெற்றவர்கள். அவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை. பாம்பாட்டிச் சித்தர் சித்தர்களின்



வல்லமைகள் பற்றி அழகாய்ப் பாடுவார்.....

"தூணைச் சிறுதுரும்பாக தோன்றிடச் செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவோம்
ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் ஆகச் செய்குவோம்
ஆரவாரித்து எதிராய் நின்று ஆடு பாம்பே.

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்
முந்நீருக்குள் இருப்பினும் மூச்சடக்குவோம்
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்
தார்வேந்தன் முன்பு நீநின்று ஆடு பாம்பே."

இறையருளால் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்ந்தவர்கள் சித்தர்பெருமக்கள். அட்டமா சித்திகளான.....

அனிமா (அணுவைப்போல் சிறுத்தல்)
மகிமா (விஸ்வரூபம் எடுத்தல்)
இலகுமா (மிக மிக இலேசாகுதல்)
கரிமா (மிக மிக பாரமாயிருத்தல்)
பிராப்தி (எல்லாவற்றையும் ஆளுதல்)
வசித்துவம் (எல்லோரையும் வசப்படுத்தல்)
பிரகாமியம் (கூடுவிட்டு கூடு பாய்தல்)
ஈசத்துவம் (விரும்பியதை அனுபவித்தல், செய்துமுடித்தல்)

இவற்றையெல்லாம் இறைவனால் பெற்று சித்தர்கள் உலகத்தவர்களுக்காக உபயோகப்படுத்தினார்கள். அதனால் அவர்களுக்கு வந்த மதிப்பு மரியாதைகளை அவர்கள் திரும்பிக்கூட பார்க்கவில்லை.

மக்களின் உடல் நலத்துக்கும் சித்தர்கள் வழிசொன்னார்கள். உள நலத்துக்கும் வழி சொன்னார்கள்.

"மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாலுநாழி உம்முள்ளே நாடியே இருந்த பின்
பாலனாகி வாழலாம் பரப்பிரமம் ஆகலாம்
ஆலமுண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை உண்மையே"

என்றார் சிவாக்கியர். அதாவது மூலாதாரத்திலே உறங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியைப் பயன்படுத்தி விரும்பினால்..., என்றும் இளமையாகச் சிரஞ்சீவியாய் வாழலாம், அன்றேல் பரம்பொருளோடு இணையலாம் என்றார்.

எத்தனையோ சித்தர்களை வரலாறுகள் காட்டினாலும் பதிணெண் சித்தர்களே முக்கியமாக பேசப்படுகின்றார்கள். அவர்கள்...

அகத்தியர்	திருமூலர்	இடைக்காடர்
போகர்	சட்டைமுனி	நந்தீஸ்வரர்
கைலாயநாதர்	கொங்கணர்	புண்ணாக்கீசர்
கோரக்கர்	கூன்கண்ணர்	உரோம ரிஷி
மச்சமுனி	கமலமுனி	பிரமமுனி
கூர்மமுனி	வாசமுனி	சுந்தரானந்தர்

என்பவர்களாவார்கள். சித்தர்களின் வரலாறு சுவாரசியமானதோடு ஆழ்ந்த தத்துவங்கள் பொருந்தியது. மேற்குறிப்பிட்ட பதினெண் சித்தர்களை தவிர இன்னும் எத்தனையோ பிரபல்யமான சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கருவூர்ச்சித்தர், பட்டினத்தார், பத்திரகிரியார், யோகர் சுவாமிகள், குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச்சித்தர், சிவவாக்கியர் போன்றோர் அத்தகையோர்களாவார்கள்.

சித்தர் பத்திரகிரியார் துளுவ நாட்டு மன்னராய் இருந்தவர். பட்டினத்தாரை கழுவிலேற்ற முயன்று தோற்று, தனது ராஜ போக சுகங்களைத் துறந்து பட்டினத்தாரையே தன் குருவாக ஏற்றுதொண்டு செய்தவர். குருவின் கட்டளைப்படி சட்டியில் பிச்சைவாங்கி குருவுக்கு கொடுத்து எஞ்சியதை தாம் உண்பார். அதில் கொஞ்சத்தை தன்னோடு இருக்கும் நாய்க்கும் கொடுப்பார்.

ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் கிழக்கு கோபுர வாசலில் வீற்றிருந்த பட்டினத்தாரிடம் சென்று பிச்சை கேட்டான். அதற்குப் பட்டினத்தார் "நானோ கோவணம் தாங்குதலை பாரமாகக் கொள்ளும் சந்நியாசி! மேற்குக் கோபுரவாசலில் சோற்றுச் சட்டியும் நாயும் வைத்துக்கொண்டு ஒரு சம்சாரி இருப்பான்! அங்கே போய்க் கேள்!" என்றுரைத்தார். இதை அறிந்த பத்திரகரியார் தம்குருவின் கருத்தை உணர்ந்துகொண்டார். "இந்த சோற்றுச் சட்டியும் நாயும் என்னை பந்தத்தில் ஆழ்த்துகின்றன" என்று உணர்ந்து அவற்றை விலக்கி எறிந்தார். ஞானியானார்.

"புல்லாய் விலங்காய் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பின் இருள் அகல்வது எக்காலம்?
தக்கும் வகைக்கு ஓர் பொருளும் சாராமலே நினைவில்
பக்குவம் வந்துன் அருளைப் பார்த்திருப்பது எக்காலம்?"

என்று இறைவனைக் கேட்டு அவனடி சேர்ந்தார்.

ஆண்டவனின் அன்பருவியிலே மூழ்கி அவனையே நினைத்துக் கிடக்கும் சித்தர் பெருந்தகைகளுக்குத்தான் தெரியும், ஆண்டவன் பக்தர்களிடம் எதை எதிர்பார்க்கின்றான் என்று.

ஆயிரம் குடம் கங்கை நீரால் அம்பாளை அபிஷேகம் பண்ணினால் ஆயுள் முழுதுஞ் செய்த பாவம் எல்லாம் அறுந்துவிடுமோ...? ஒரு நாளுமில்லை! அம்பாள் அதை விரும்பவில்லை. இந்த கங்கை, யமுனை, நர்மதை போன்ற புண்ணிய நதிகளின் நீரெல்லாம் அவள் செய்து எமக்களித்தது.

பின் அவள் எதை வேண்டுகிறாள்? நெஞ்சுருகி தன்னை நினைத்து, பக்தர்கள் அன்போடு விடுகின்ற கண்ணீர்த் துளிகளுக்குத்தான் அன்னை ஏங்கி இருக்கின்றாள் என்று பாசவதைபரணிக்காரர் சொல்லுவார். இதைத்தான் சித்தர்களும் இடித்துரைத்துச் சொன்னர்கள்

"நட்ட கல்லை தெய்வமென்று
நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து முணமுணணென்று
சொல்லு மந்தரமேதடா?"

வெறுமே கல்லாலான கடவுளை, எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று பேரம் பேசிப் பூவைத்து நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் செலவு வைத்து பூஜை செய்து, வெறும் வாயால் மந்திரங்கள், திருமுறைகள் சொல்லி தன்னை பக்திமான் என்று வெளியுலகத்திற்கு காட்டுதல் எல்லாம் பயனற்றவை. 'சிவவாக்கிய சித்தர்' இன்னுஞ் சொல்லுகிறார்

"நட்டகல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்"

உனக்குள்ளே நாதனை நினைத்து நினைந்துருகி கல்லாற் செய்த சிற்பத்திலும் கடவுளிருக்கிறான் என்ற எண்ணத்தோடு, அந்த 'நட்ட கல்லை' சுற்றிவந்த அன்போடு பூப்போட்டால் அந்த நட்ட கல் பேசாது உள்ளிருக்கும் நாதனே உன்னோடு பேசுவான் என்கின்ற சித்தர்கள் மேலுஞ் சொல்கிறார்கள்.

"பரமில்லாததெவ்விடம்
பரமிருப்பதெவ்விடம்"

இது ஒவ்வொரு வரும் தங்களையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகளுள் ஒன்று.

இங்கே இறைவன் எங்கே இருக்கவில்லை? எல்லா இடமும் இருக்கிறான். பஞ்ச பூதங்களில் இருக்கின்றான். உயிர்களில் இருக்கின்றான். சடப்பொருட்களில் இருக்கின்றான். இயற்கையாய் இருக்கின்றான். செயற்கையாய் இருக்கின்றான். எல்லாமுமாய் விளங்குகின்றான்.

"ஆர் அலைந்தாலும்~அகப்பேய்
நீயலையாதேயடி
ஊர் அலைந்தாலும்~அகப்பேய்
ஒன்றையும் நாடாதே!
தேனாறு பாயுமடி~ அப்பேய்
திருவடி கண்டவர்க்கே
ஊனாறும் இல்லையடி~அகப்பேய்
ஒன்றையும் நாடாதே"



என்று பாடியருளினார் அகப்பேய்ச்சித்தர். "இறைவன் திருவடி கண்டால், தேனாறு பாய்வது போல் இன்பவெள்ளம் சூழுமாம். ஆதலால் மனமே நீ வேறு ஒன்றையும் நாடாதே; தலைவன் தாளையே தேடு!" என்றார்.

"பாரப்பா சீவன் விட்டுப் போகும்போது
பாழ்த்த பிணம் கிடக்குதென்பார்; உயிர் போச்சு என்பார்;
ஆரப்பா அறிந்தவர்கள்? ஆருமில்லை
ஆகாய சிவத்துடனே சேரும் என்பார்"

பதினெண் சித்தர்களில் ஒருவரான அகத்தியர் கூறுவார் "செத்த பிறகு அவனை பெயர் சொல்லிக் கூப்பிட மாட்டார்கள். பிணம், சவம், பிரேதம் என்றே அழைப்பார்கள். உயிர் போய்விட்டது என்பார்கள். எங்கு போனது என்று கேட்டால் வானத்தில் சிவபெருமானிடத்தில் சென்றுவிட்டதென்று சொல்லுவார்கள் ஒழிய, உண்மை நிலை யாருக்கும் தெரியாது"

சித்தர்கள் எல்லாக் காலங்களிலும் இருக்கின்றார்கள், எல்லா இடங்களிலும் ஆங்காங்கே இருக்கிறார்கள். இன்றைய காலத்திலும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் பல திருத்தலங்கள் இருக்கின்றன. அவற்றில் சில எக்காலமும் சக்தி பெற்று அருள் மழை பொழிகின்றன. இதற்குக் காரணம் என்ன? சாதாரண ஆலயங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்கிறார்கள். கும்பாபிஷேகத்தால் இறைசக்தி முழுதும் ஆலய விக்கிரகங்கள் மீதும் கோபுரத்திலும் குடிகொள்கிறது. காலப்போக்கில் அவற்றின் சக்தி சிறிது குன்றவும் கூடும். ஏனெனில் கோயிலுக்குப் பலதரப்பட்டவர்களும் வருவார்கள். அவர்களின் மனதில் தீய எண்ணங்களும் நிறைந்திருக்கலாம். அவ்வாறெனின் அத்தீய எண்ண அலைகள் ஆலய சூழலை சிறிது மாசுற வைக்கும். அதனால் தான் பன்னிரு வருடத்திற்கொரு முறை கும்பாபிஷேகம் செய்விக்கப்படுகிறது.

சில திருத்தலங்களில் அந்த தெய்வ சக்தி சிறிது கூட குன்றாமல் மிளிர்கின்றது. அதுமட்டுமல்ல நாளுக்கு வளர்ந்து செல்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தால், அந்த ஆலயத்திற்கருகில் சித்தர்களின் சமாதிகள் இருக்கும். அங்கே சூக்ஷ்ம வடிவிலே அருள் பாலிக்கும் சித்தர்கள் தங்கள் பரம கருணையினால், தங்களுடைய ஆற்றலை அவ் ஆலயங்களுக்கு தந்து கொண்டேயிருக்கின்றார்கள் அதனால்தான் எத்தனை நூற்றாண்டுகளானாலும் எவ்வளவு பக்தர்கள் சென்று வழிபட்டாலும் அவ்வாலயங்களின் அருட்பெருஞ்சக்தி வற்றாது பெருகிக் கொண்டே இருக்கின்றது. சில சித்தர்கள் சமாதியடைந்த தலங்கள் கீழே தரப்படுகிறது.

அகத்தியர்	—	அனந்த சயனம்
திருமூலர்	—	சிதம்பரம்
அகப்பேய்ச்சித்தர்	—	அழகர்மலை
காளாங்கிநாதர்	—	காஞ்சிபுரம்
கமலமுனி	—	திருவாரூர்

கொங்கணவர்	—	திருப்பதி
மச்சமுனி	—	திருப்பரங்குன்றம்
போகர்	—	பழனி
பாம்பாட்டிச்சித்தர்	—	விருத்தாச்சலம்

புண்ணியாத்மாக்களாகிய சிலரின் கண்களுக்கு சில வேளைகளில் சித்தர்களின் தரிசனம் கிடைத்திருக்கிறது. கொல்லிமலைப் பகுதிகள் மற்றும் திருவண்ணாமலை போன்ற இடங்களில் சித்தர்கள் சிலர் கண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலையில் ஒளியுருவாக சித்தர்களைக் கண்டதாய் பகவான் ரமண மகரிஷியே கூறியிருக்கிறார். அதே போல் நம் நாட்டிலும் நல்லூர் போன்ற ஆலயங்கள் சித்தர்கள் திரியும் பூமியில் திகழுகின்றன. செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் எத்தனை எத்தனையோ சித்தர்கள் வந்திருந்து தவம் செய்தார்கள். முக்தி பெற்றார்கள். ஒருமுறை செல்வச்சந்நிதிக்கு வந்த யோகர் சுவாமி "இங்கே மணலெல்லாம் சிவலிங்கமாய் தோன்றுகிறது" என்று கூறினாராம். மேலும் ஈழத்திலும் பெரியானைக் குட்டி, செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற பெரியோர்கள் இன்றும் வழிபடுவோருக்கு அருள் பாலிக்கின்றார்கள்.

கலியுக ஆரம்பத்திலே பழனி மலையிலே போகச்சித்தரால் நவபாஷணத்தால் ஆன முருகன் சிலை ஸ்தாபிக்கப்பட்டது. அங்கேயே உள்ள போகர் சமாதியை ஏதோ விஷயம் தெரிந்தவர்கள் போய் வழிபடுகின்றார்கள். திருச்செந்தூரிலே 'பஞ்சசித்தர்கள்' ஆங்காங்கே சமாதி கொண்டுள்ளனர். தமிழ் நாட்டின் மருவத்தூர் பிரதேசங்களிளும் சித்தர்களின் வாசம் தெரிகிறது. எத்தனை எத்தனையோ இடங்களிலே, சித்தர்கள் மழை பொழிய வைத்திருக்கிறார்கள். பேயாய்ப் பொழியும் மழையை, நிறுத்தி இருக்கிறார்கள். கொழுந்து விட்டு கனன்று எரியும் காட்டுத்தீயை அருள் வாக்காலேயே அணைத்திருக்கிறார்கள். பாட்டாலேயே, தீயை பற்றியெரிய வைத்தார்கள். இறந்து போன தன் தாயின் உடலை 'பச்சை' வாழையிலை மடல்களில் வைத்து பட்டினத்தார் பாடினார்...

"முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்க! மூழ்கவே!"

தீ தன்பாட்டில் பற்றி எரிந்தது. எப்படி அவர்களால் இவற்றை செய்ய முடிகிறது? காரணம், சித்தர்கள் வேறு! இயற்கை வேறல்ல! அவர்களே இயற்கை. வெயிலைக் குளிர்ச்சியாகவும் தீயைப் பனியாகவும் ஆக்குவது அவர்களுக்கு மிகச் சாதாரணம்.

அவர்கள் மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிச் சொன்னதெல்லாம் "அன்பே ஆண்டவன்" என்பதே! சாதிக் கொடுமையைத் தூக்கி எறிந்தார்கள்! தாழ்குலம் என்று கூறப்பட்டவர்களுக்கும் முக்தி தந்தார்கள். செடிக்குக் கூட முக்தி தந்த அருளார்கள் அவர்கள்! "அன்பே சிவமாய்

அமர்ந்திருந்தவனை" அடையும் வழி என்னவென்றால்..., திருமூலர் கூறுகின்றார், "எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதலே" ஆகும்.

பலபேர், அவர்கள் சித்துக்களைச் செய்வதால் சித்தர்கள் எனப்படுகிறார்கள் என்று நினைக்கின்றனர். உண்மை அதுவல்ல! சித்தி அடைந்தமையால்தான் சித்தர்கள் எனப்படுகின்றார்கள்.

"சித்தமெல்லாம் சிவனடிக்கே வைத்து,
சிறப்பையெல்லாம் அவனுக்கே ஆக்கி,
முக்தி நிலைக் கடவுக்குள் மூழ்கி,
மும்மலத்தார் பிணிகள் நீக்கும்
அட்டமா சித்திகள் பெற்று
அன்பென்ற அகச் சமுத்திரத்தால்
பித்தராய்த் தீர்வர்!–எனினும்
பேரின்ப வீட்டிற்கிடப்பர்!
நற்றவ முனிவர் போலும்
நாயினுக்கடியர் போலும்
பற்பலவாகத் தெரிவர்!
பரம்பொருளின் உருவமானவர்!"

அப்போப்பட்ட உத்தமச் சித்தர்களின் பெருமை அறிவிலிகளின் சிந்தைக்குப் புரியாது. சித்தர்களை அவமதித்தும், அவர்களினருளால் பலர், ஞானம் பெற்றிருக்கிறனர். சமுதாயத்தை, வாழ்வை உலகத்தில் சிறந்த முறையில் அமைத்து, வாழ்வதற்கேற்ற நல்வழிகளை சொன்ன அவர்களின் மகிமைகள், பெருமைகள், சேவைகள் எல்லாம் ஆழக்கடலில் சிறு துளியைக் கையில் எடுத்துக் காட்டியது போன்றது. சொல்ல வாக்கிற்கு எட்டாதவை எத்தனையோ!

வி. விமலாதித்தன்
உயிரியற் பிரிவு
உயர்தரம் 2004

துணை நூல்கள்:- *"சித்தர் பாடல்கள்" — மானோஸ்*
"சித்தர்கள்" (கட்டுரை) — அ. ச. ஞானசம்பந்தன்

பிரமசரியம்

ஒரு மனிதனின் வெற்றிக்கு அவன் கொண்டுள்ள அறிவின் உறுதிப்பாடு மிகவும் அவசியம். ஆனால் அறிவை உறுதி செய்துவிட்டு, அயர்ந்து உறங்கப்போவது வெற்றியின் பாதையல்ல. அறிவின் உறுதி, செயலாய் வடிவம் பெற வேண்டும். ஒருவனது எண்ணம் செயல்வடிவங்காண அவனது உடலும் உறுதியாய் அமைய வேண்டும். இந்த உடல் உறுதியின் ரகசியமே பிரமசரியம் அல்லது சுய ஒழுக்கம் என்பதாகும். பிரமசரியம் என்ற வார்த்தையைக் கேட்டதும், "உடலுறவை மறுத்தல் அல்லது ஒடுக்குதல்" என்ற எண்ணம் நம் எல்லோருடைய மனத்திலும் உடனடியாகத் தோன்றும். அது தவறான எண்ணம். ரிஷிகளின் போதனை உறவின் ஒடுக்கமோ அல்லது மறுப்போ அல்ல. மாறாக அது வளர்ச்சியையும் இலட்சியத்தின் மேலுள்ள பற்றுதலையும் உணர்த்தும் ஓர் ஒழுக்க நெறியே.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! மனிதன் தன்னுடைய உடல் வலிமையைச் சாதாரணமாக எப்படிச் செலவிடுகிறான்? கவர்ச்சிக்கு இரையாவது எல்லோருடைய இயற்கையான பலவீனமாக இருக்கிறது! கவர்ச்சியான ரூபத்தைப் பார்ப்பதும், அர்த்தமே இல்லாத பாடல்களைக் கேட்பதும், நாவின் ருசிக்கு எதையும் இழக்கத் தயாராவதும், நறுமணங்களை நாடுவதும் நம் அன்றாட வாழ்க்கையின் சாரம்! ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல. இந்த வாழ்க்கை முறையைப் பல ஆண்டுகளாகத் திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருக்கிறோம். நாம் ஆற்றிய ஏதேனும் ஒரு செயலோ, புலனின்ப நுகர்ச்சியோ, வாழ்க்கையின் நிலையான இலட்சியங்களுக்கோ, கொள்கைக்கோ காரணமாக அமைந்திருக்கிறதா? இல்லை. இப்படி ஒரு கருத்தூன்றாத புலனின்ப நுகர்ச்சிகளிலிருந்து உடலையும் உள்ளத்தையும் விடுவித்து அதன் வலிமையை "ஒரு நோக்கத்திற்காக செலவிடும் வலிமைச் சிக்கனமே" பிரமசரியம் எனப்படும்.

பிரமசரியம் என்பது புலன் "ஒடுக்கம்" அல்ல. அறிவின் முதிர்ச்சியால் ஏற்பட்ட புலன் "அடக்கம்". அடக்கத்திற்கும் ஒடுக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை அறிவு மட்டுமே உணர முடியும். உடலின் அசைவும் வலிமையும், அறிவின் அனுமதி பெற்று நிகழ்வது மனிதனுக்கு மட்டுமே சாத்தியம் ! மனிதனுக்கு மட்டும்தான் உடலும்



உள்ளமும் தான் நினைத்ததை செய்வதற்குரிய கருவிகள் என்ற உண்மை புரியும். உடலின் இச்சைகள் நம் இச்சைகளாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உடல் உணர்ந்தவுடன் அதற்கு அனுபவம் என்னும் தீனி போட்டுப் பழகியதால் நாம் இந்த வேறுபாட்டைக் கவனிக்க முடிவதில்லை. சுகத்தையும், புத்துணர்ச்சியையும் மனிதன் விரும்பினாலும், அதற்காக அவன் தேர்ந்தெடுத்துக்கொண்ட அனுபவங்கள் அவனைச் சலிப்பில் தள்ளுவதாகவே அமைகிறது. எந்தப் புலனின்ப நுகர்ச்சி தான் நமக்கு அயர்வைத் தரவில்லை! இந்த உண்மையை மையமாகக் கொண்டு எழுந்ததே பிரமசரியம் அல்லது புலனடக்கம் என்பதாகும். இது ஒரு தனிமனிதன் – புற உலகோடு வைத்துக் கொள்ளக்கூடிய உறவின் ரகசியத்தையும் அவசியத்தையும் உணர்த்துவது! எவனிடத்தில் ஒழுக்கமான உறவுமுறைகள் இருக்கிறதோ அவன் உடலும் உறுதியாய் இருக்கும். உறுதியுள்ள உடல் உள்ளத்தின் உறுதியை ஏற்றுக்கொண்டு தயங்காமல் தன் இலட்சியத்தை அடைவதற்கான செயல்களைச் செய்யும். கட்டுப்பாடுள்ள ஒருவன் மட்டுமே இந்த உலகைச் சுவைக்க முடியும்! இல்லாவிடில் இந்த உலகம் அவனைச் சுவைக்கும்! சுயக் கட்டுப்பாடு அல்லது புலனடக்கம் என்பது நம்மீது பிற ஒருவர் திணித்த விலங்குகள் அல்ல! மாறாக நாம் கண்டுகொள்ள வேண்டிய சுதந்திரம்.

புலன் ஒடுக்கம் என்ற பெயரிலே பல தவறான கருத்துக்கள், சிலவேளைகளில் சில சமயச் சான்றுகளைத் தாங்கியும், மனிதனிடத்தில் தேவையற்ற ஒரு மனவிறைப்பையும் உருவாக்குகிறது! சித்த வரட்சியில் எந்த இலட்சியப் பயிரும் விளையாது! இவையெல்லாம் சாதனைகளை வேதனையாக்கிக் கொள்ளும் தவறான எண்ணங்கள்! சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சிந்தனை ஒழுக்கம் உள்ளத்தின் உறுதிக்குக் காரணமானால், செயலின் ஒழுக்கம் உடல் உறுதிக்குத் துணை நிற்கும்! எனவே பிரமசரியம் பேணி வளம் பெறுவோமாக.

P. சுந்தரகுமார்
உயர்தரம் 2004
கணிதப் பிரிவு

யோகம்

இந்த வார்த்தையை கேட்டதுமே எம்மனதில் எழும் எண்ணம் ஒன்றுதான். காவி உடை, சடாமுடி, நீண்ட தாடி, காடு, தவம். யோகம் என்றாலே எட்டாக்கனி. யோகத்தை பின்பற்றுவதற்கு கடினமான பல வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தான் நாம் பலரும் எண்ணுகின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல. வாழ்க்கையில் நாம் முன்னேற, வெற்றிபெற அவசியமான, பின்பற்ற வேண்டிய ஒன்றுதான் யோகம். ஊசி மூலம் மருந்தேற்றுவது என்றாலே பல சிறுவர்கள் அழத் தொடங்கிவிடுவர். ஆயின் அம்மருந்தை ஏற்றிய பின் அவர்கள் பயப்படவே மாட்டார்கள். அது போல யோகத்தை பற்றிய எதிர்மறையான சிந்தனைகளை தூக்கி எறிந்துவிட்டு இந்த யோகத்தைப் பின்பற்றி எவ்வாறு நாம் வாழ்விலே வெற்றி பெறலாம் என்று நோக்குதல் வேண்டும்.

யோகம் என்ற பாற்கடலில் இருந்து தெறித்த நுரையை நுகர்ந்து இச்சிறியேனின் சிற்றறிவுக்கு எட்டியதை இச்சிறு தாளிலே அடக்கியுள்ளேன்.

முதலிலே யோகம் என்றால் என்ன என்று வினவுகையில் மன அமைதியே உண்மையான யோகம் என்கிறார் யோக வல்லுனரான பதஞ்சலி. உண்மையிலே மன அமைதி இருந்துவிட்டால் நாம் வாழ்வில் எக்காரியத்திலும் வெற்றி பெற்று விடலாம். எம்வாழ்வில் ஏற்படும் துயரங்களுக்கெல்லாம் வடிகால் இந்த மன அமைதியின்மையே. ஒருவனது மனதில் சந்தோஷம் அற்று போகும் பொழுது தான் அவன் மனதில் எதிர்மறையான எண்ணங்கள் தோன்றி அவனை தீய செயல்களைச் செய்வதற்கு இட்டுச் செல்லும் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து. எம்முடன் உறையும் இறைவனை உணரவைப்பதே இந்த யோகத்தின் பயன். சரி இந்த யோகத்திற்கு என்னென்ன தடைகள் என நாம் நோக்குமிடத்து,

1. உடல் நோய், உடல் சோம்பல், உடல் ஊறு:

நமது உடல் நோய்வாய்ப் படுமிடத்து எம்மால் எமது செயற்பாடுகளை தொடர்ந்து நடத்த முடிவதில்லை. மேலும் உடல் சோம்பல் உறுவதாலும் மேற்சொன்ன விடயங்களே நிகழ்கின்றன. விவேகானந்தர் இதையே ஆன்மீக வாழ்வின் முதற்படி ஆரோக்கியமான உடல் என்கிறார். இந்த உடல் ஆரோக்கியம் எவ்வளவுக்கு யோகத்திற்கு முக்கியமோ அதுபோலவே வாழ்விலே நாம் செய்யும் கருமங்களில் வெற்றி பெற உதவுகின்றது, எனவே நாம் யோகத்தை பின்பற்ற முனையும் போது நாம் எம்மை அறியாமலேயே வாழ்வில் ஏற்படும் தடைகளையும் சிறந்த முறையில் வெற்றி கொள்ள தயாராக்கப்படுகின்றோம். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். எனவே ஆரோக்கிய உடலைப் பேணுவதுடன் சோம்பலை எம் வாழ்வில் இருந்து அறவே அழித்து விட வேண்டும்.

2. மனத்திண்மை:

"திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல் அறிவு வேண்டும்"

என்பது எட்டயபுரத்தவனின் (பாரதியின்) எளிமையான கருத்து. உறுதியான எதையும் ஏற்று கொள்ளும் மனம் எமக்கு நிச்சயம் அவசியம். இறைவன் தேடும் முயற்சியில் எத்தனை தோல்விகள் வரினும் நாம் அம்முயற்சியை கைவிடக்கூடாது. திண்மை யோகத்திற்கும் அத்தியாவசியம். இது போலவே வாழ்விலே நாம் எக்காரியத்தைத் தொடங்கினும் வெற்றி பெறும் வரை முயற்சிக்கும் திண்மை எமக்கு அவசியம். தோல்வியைக் கண்டு நாம் துவண்டு விடவும் கூடாது; வெற்றியை பெற்று ஆர்பரிக்கவும் கூடாது. இவை இரண்டையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் கைவரப் பெறலே மனத் திண்மையாகும். இதுமாத்திரமன்றி பிறர் வெற்றிகளைக் கண்டு மகிழ்ந்து அவர்களை பாராட்ட வேண்டும். மாறாக பொறாமைப் படுதல் ஆகாது. சாதனையாளர்களிலே குறை காண்பதை நிறுத்தி விட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் சிறந்த மனத் திண்மையின் வெளிப்பாடுகளே. எனவே இவ்வாறான மனத் திண்மையை வளர்த்தால் இரட்டை வெற்றி எமக்கு நிச்சயம்.

3. மன ஒருமைப்பாடின்மை, கவனமின்மை, வைராக்கியமின்மை:

ஒருமைப்படாத மனம் சாரதி அற்ற தேர் போன்றது என்கிறார் விவேகானந்தர் ஆம் மனதை ஒருமுகப்படுத்தி ஒரு செயலிலே ஈடுபடாமையின் விளைவே கவனமின்மை இறைவன் மீது மனதை ஒருக்கி நற்குணங்களை வளர்த்து எம்முன் இருக்கும் இறைவனை கவனமாக உணர வேண்டும் என்ற வைராக்கியத்துடன் செயற்பட்டால் அது எம்மை யோகத்தின் பாதையில் இட்டுச் செல்லும். இது போல நாம் சிதறிக் கிடக்கும் சிந்தையை ஒருமுகப்படுத்தி ஒரு செயலிலே ஈடுபடும்போதும் அச்செயற்பாடு வெற்றி பெறவேண்டுமென்ற வைராக்கியத்துடன் இருக்கும் போதும் அவ்விடயம் தொடர்பாக முழுக்கவனத்தையும் செலுத்தும் போதும் வெற்றி நிச்சயம்.

மகாபாரதத்திலே துரோணர் தம்சீடர்களிடம் மரத்தில் இருக்கும் ஒரு கிளிப் பொம்மையை அம்பெய்து வீழ்த்துமாறு பணிக்கிறார். அப்போது உங்களுக்கு என்ன தெரிகிறது என்று துரோணர் வினவியவேளை ஏனைய அரசிளங்குமாரர்களோ மரமும் அதன்மீது இருக்கும் கிளியும் தெரிகிறது என்கையில் அர்ச்சுனன் மாத்திரம் கிளியின் கழுத்து மாத்திரம் தெரிகின்றது என்றான். ஆயின் அக்கிளியை அம்பால் விழுத்தியதும் அர்ச்சுனன் மாத்திரமே. நாமும் அர்சுனனை போல் ஏனைய கவனக் கலைப்பான்களை விடுத்து முழுக் கவனத்தையும் ஒரு செயலிலே செலுத்தினால் **யோக வெற்றி** நிச்சயம்.

ஆனால் மேற்கூறிய தடைகளை வெல்வதற்கு பதஞ்சலி அவர்கள் கூறும் வழிகளையும் நாம் சற்று நோக்குவோமாயின் உணவு, உடற்பயிற்சி மூலம் எம் உடல் ஆரோக்கியத்தை பேணலாம் என்கிறார். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பார்கள். அதுபோல அளவான உணவு உட்கொள்ளல், உடற் பயிற்சி இரண்டும் அவசியம் என்கிறார். நாம் அளவுக்கதிகமாய் உணவை உட்கொண்டு விட்டு அளவுக்கு அதிகமாய் உடற்பயிற்சி செய்வதனால் எமக்கு எவ்வித பலனும் கிடையாது. உடலாரோக்கியத்தை பேண முறையான யோகாசனப் பயிற்சி சிறந்த பலாபலன்களை நல்கும் என்றும் முன்மொழிகிறார். மேலும் மனதைப் பண்படுத்துவதற்கு ஏற்ற ஊடகம் தியானம் ஆகும். சிறிது நேர தியானம் செய்வதால் மனம் ஒருமை படுத்தப்படுகிறது.

இனி யோகத்தை எவ்வாறு அன்றாட வாழ்விலே பின்பற்றுவது என நாம் நோக்குகையில் நித்திய இறைவழிபாடு, எமக்கு கிடைக்கும் சிறு வெற்றிக்கும் நன்மைக்கும் இறைவனுக்கு நன்றி கூறல். மேலும் தோல்விகளை கண்டு துவளாதும், வெற்றிகளைக் கண்டு இறுமாப்படையாதும் இருக்க வேண்டும்.

ஒரு நாளுக்கு ஒரு நல்ல காரியம் ஆவது பண்ணல், மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டு செயற்படல் ஆகியனவே ஞானிகள் கூறும் வழி. யோகாசனத்தை பின்பற்ற இவ்வுலகிற்கு எம்மை அறிமுகப்படுத்திய பெற்றோரையும், எம்மை வழிநடாத்தும் ஆசிரியர்களையும் எமக்குதவும் நண்பர்களையும் நம் வாழ்விலே நாம் காணும் நல்லுள்ளங்களையும் நண்பர்களாகவே காண்பது தான் யோகம்.

எனவே இவ்வாறன விடையங்களை நாம் பின்பற்றும்போது எம்வாழ்வில் தோன்றும் பல்வேறு பிணக்குகள் குழப்பங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனித்துளி போல மறைந்துவிடும். உங்கள் வாழ்வில் அனைத்து சமயங்களும் உணர்த்தும் உன்னத கருத்தான அன்பு மலரும். உங்கள் வாழ்வில் சந்தோஷம் நிறைந்திருக்கும்.

உடலையும் உள்ளத்தையும்
உவகையுடன் உழுது
யோகக்காயைப் பண்புடன் பதித்து
அன்பெனும் நீரூற்றி
அறிவெனும் பசளையும்
அள்ளித் தூவி ஆனந்தமாய் வளர்ந்து
மன அமைதி என்ற
கனி பறிப்பீரே.

நீ. நிஷாந்தனன்
உயர்தரம் 2004
கணிதப் பிரிவு

இந்து சமய வளர்ச்சியில் பத்திரிகைகள்

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திராவிடின் சொல்லு தமிழ் எங்கே? சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? விரசங்கம் எங்கே? நாவலர் தம் பெருமையை எடுத்துக் கூறும் போது இவ்வுண்மையை எவரும் மறந்து விட முடியாது. பத்திரிகை மூலமாகவே நாவலர் தன் போராட்டத்தை நடத்தினார். சமய வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பை ஆராயும் போது நாவலரையே துணைக்கு நாடுவதுண்டு.

இலங்கையில் இந்து சமயம் நிலைபெற்றிருப்பதற்கு தமிழ் பத்திரிகைகள் ஆற்றிய தொண்டினை யாரும் புறக்கணிக்க முடியாது. ஆபத்தான சூழல் இங்கு உருவாகிக் கொண்டிருந்த வேளையில் தமிழ்ப் பத்திரிகைகளே பாதுகாப்பு அரணாக இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

வெள்ளைப் பறங்கியர்கள் என பாரதி வர்ணித்த மேலைத்தேயத்தவர்கள் இந்நாட்டுக்கு வந்ததும் மதம், மொழி, கலாச்சாரம் என்பவற்றில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. கத்தோலிக்க மதம் வளர்ச்சி காணத் தொடங்கியது. இந்து சமயம் பாதிக்கப்பட்டது. பலர் மதம் மாறினார்கள். பெயர்களை மாற்றினர். இந்து சமயத் தலைவர்கள் பிற சமய வளர்ச்சியால் ஏற்படும் ஆபத்தை உணரவில்லை. அன்றிருந்த சமூகத் தலைவர்களும் எவ்வித எதிர்ப்புமின்றி பாராமுகமாகவே இருந்தனர். இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். இன்று கட்சி மாறுபவரைப் போல அன்று சொந்த இலாபத்துக்காக மதம் மாறினார்கள்.

கத்தோலிக்க இயக்கத்தினர் சமயப் பிரசாரத்தை மேற்கொண்டனர். இம்முயற்சியின் விளைவாக இந்துக்கள் பலர் மதம் மாறி மேலைத்தேய வாழ்க்கை நடத்தத் தொடங்கினர்.

இவ்வாறு கிறிஸ்தவம் பிரசாரத்தின் மூலம் வளர்ச்சி காணத் தொடங்கியதும் இதற்கு பதிலளிக்கும் வகையில் பல சைவ ஏடுகள் தோன்றின. பத்திரிகைகளில் ஆறுமுக நாவலர் பலவற்றை எழுதினார். "இது நல்ல சமயம்" எனும் தலைப்பில் நாவலர் எழுதிய விடயம் அக்கால மக்களின் வேதனையை எடுத்துக் காட்டத் தவறவில்லை. நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன. நாவலர் ஆபத்து நிலையை உணர்ந்து கேள்வி பதில் பகிரங்கக் கடிதங்கள் எழுதினார்.

சைவ பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இந்து சமயக் காவலர்கள் பலர் மத ரீதியான போராட்டங்களில் ஈடுபட்டனர். நாவலரைப் போல பல பண்டிதர்கள், அவர்களின் சீடர்கள் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்தனர். பத்திரிகை மூலம் நடைபெற்ற பிரசாரப் போராட்டத்தை இலங்கை நேசன் எனும் பத்திரிகை "புதினக் கடதாசிகளின் யுத்தம்" என வர்ணித்தது.

1883ல் சைவாபிமானி, 1907ல் ஆத்ம போதினி, 1908ல் ஞானசித்தி, இந்து போதினி, 1910ல் சைவ நாலிய சம்போதினி என பல்வேறுபட்ட பத்திரிகைகள் நம் நாட்டில் சைவம் மறைந்திடாது பாதுகாத்தன எனலாம். இதனால் இந்து சமயத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

எனினும் இந்து சமயம் வளர்ச்சி காண வேண்டுமெனில் பொதுஜன ஆதரவு தேவைப்படுகிறது. மக்களின் ஆதரவை ஈர்க்கும் ஏற்பாடுகளை இந்து நிறுவனங்கள் செய்து வருகின்றன.

இன்றைய செய்தி ஏடுகள் மீது இந்நிலையில் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. இந்து மக்களின் தேவைகளையும் சமயம் வளர்ச்சி காண்பதற்குத் தடையாக உள்ள இடர்களையும் இனங்கண்டு அவ்வப்போது உரிய நடவடிக்கைகளை எடுப்பது மிக முக்கியமானதாகும்.

V. T. தினேஷ்
உயர்தரம் 2004
வர்த்தகப் பிரிவு

தியானம்

தியானம் என்றால் ....

மனதை சற்றும் சலனமடைய விடாது ஒரே நிலையில் ஒரே நோக்கில், பிடிப்புடன் ஒன்றை ஒரு பொருளைப்பற்றி நிற்றல் எனலாம்.

தியானம் எதற்காக ....

மனிதன் தன்னிடத்திலே உண்மையான வலிமையை வல்லமையை தேக்கி வைத்து தன் வாழ்க்கையின் இலட்சியத்தை வெற்றிகரமாக முடிப்பதற்காக.

தியானம் யாருக்காக ....

இலட்சியங்கள் இருந்தும், இலட்சியப் பாதையின் முட்கள் கண்டு முடங்கிப் போய் நிற்கும் எவருக்கும்.

தியானம் செய்வது எப்படி ....

அமைதியான சூழலிலே அமருங்கள். அலைபாயும் மனதை ஏதாவது ஒன்றைப்பற்றி மட்டும் எண்ணச் செய்யுங்கள், "ஓம்" எனும் மந்திரத்தை ஓசையுடன் ஆறுதலாய் உச்சரியுங்கள். கண்கள் திறந்த நிலையில் இருப்பது சிறந்தது.

தியானத்திற்கு புதியவரா ....

தியானத்திற்காய் அமர்ந்தவுடன் மனம் ஒன்றை மட்டும் எண்ணவில்லையா? அலைபாய்கிறதா? கலங்காதீர்கள். ஆரம்பத்தில் அலைபாயும் மனம் நாட்கள் செல்ல கட்டுப்பாட்டிற்குள் வரும்.

தியானம் பற்றி பயமா ....

தியானம் பிரம்மசாரிகளுக்குரியது எமக்கு உகந்ததல்ல என்று நினைக்காதீர்கள். அன்றாட வாழ்க்கையிலே அமைதியாய் வாழ்வதற்கே தியானம். தியானம் உங்களின் நியாயமான ஆசைகளை அடக்குமென்பது முற்றிலும் தவறானது.

தியானத்தில் வெற்றி பெற ....

தினம் தோறும் தியானியுங்கள். மனம் தளராமல் தியானத்தை முற்று முழுதாய் நம்புங்கள். ஒரு மாதத்திலோ ஒரு வருடத்திலோ எப்படியும் தியான பலனை அடைவேன் என்ற உறுதியுடன் தியானியுங்கள். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

நம்பிக்கையே மனிதனுக்கு தும்பிக்கை
மன உறுதியுடன் தியானியுங்கள்
நினைத்ததை சாதிப்பீர்கள்.

மனம் அலைபாய்வது உங்கள் தவறல்ல
ஆனால்
அறிந்தும்
அடக்க நினைக்காமல் இருப்பது உங்கள் தவறாகும். தியானியுங்கள்
"சோதனைகளை வென்று சாதனைகள் படைப்போம்".

C. திருப்பரன்
உயர்தரம் 2004
கணிதப் பிரிவு





இந்து சமயமும் தமிழர் வாழ்வும்

உலகிலுள்ள மதங்களிலே மூத்த மதமாய் இன்றும் என்றும் நிலைத்து நிற்கும் இந்து மதம் ஒரு சிறந்த அத்திவாரத்தை பெற்றிருந்தது போலும். தோற்றுவித்தவர் யார்? எங்கே தோன்றியது? என்று அறியமுடியாதளவுக்கு பழமையான வரலாற்றைக் கொண்டிருந்தும் இன்று வரை அது வலுவாக இருக்குமெனின் அதற்கு இந்து மதத்தின் அன்பு வழியே காரணமாகும். அதைப் போலவே கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய தமிழ் மொழிக்கும் யார் தோற்றுவித்தார் என்பது தெரியாததால்தான் இந்து மதமும் தமிழ் மொழியும் இரண்டறக்கலந்துவிட்டன போலும்.

உலகிலுள்ள மதங்களிலே லௌகீக மதமென்று போற்றப்படும் பெருமை இந்து மதம் ஒன்றுக்கு மட்டுமே சேரும். இந்துமதக் கருத்துக்கள் மட்டுமன்றி அதன் இறைவன், இறைவி உட்பட அனைத்து அம்சங்களும் லௌகீக வாழ்க்கைப் பண்புகளை வலியுறுத்துவனவாகவே உள்ளன. தமிழ் மொழியும் கூட லௌகீகத்தையே தனது சாராம்சமாகக்கொண்டு கலைகளையும் கலாச்சார நிகழவுகளையும் அரங்கேற்றியது. அதனால்தான் பெரும்பாலான தமிழர்கள் இந்துக்களாகத் திகழ்கின்றனர் போலும். லௌகீக வாழ்க்கையில். இந்துக்கள் பல ஒழுக்கரீதியான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களாகத் திகழ்கின்றனர்.

லௌகீக வாழ்க்கையின் அடிப்படையே கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான புனிதமான உறவாகும். இவ்வுறவானது திருமணத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. ஓர் இந்துவின் திருமணத்தில் நிகழும் சடங்குகள் அனைத்தும் ஓர் தமிழ் பண்பாடுடைய தம்பதி எவ்வாறு வாழவேண்டும் என்பதை வெளிக்காட்டுவனவாய் அமைகின்றன. இந்துக்களின் திருமணங்களில் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது வழக்கம். இது பெண்ணானவள் அம்மியைப் போல் உறுதியாய் தனது கற்பு நெறி தவறாது இருப்பேன் என்றும் அருந்ததி நட்சத்திரம் போல் கற்பின் நட்சத்திரமாய் தானும் மாறுவேன் என்றும் சத்தியம் செய்வதைக் குறிக்கும். புதுமணத் தம்பதியினர் வலது காலை எடுத்து வைத்து வருவது உலகம் வலது புறமாகச் சுழல்வதால் அதனோடு ஒன்றாய் ஒருமித்திருப்போம் என அவர்கள் உறுதி மொழி எடுப்பதாய் அமைகிறது. இதனாலேயே தமிழர்கள் "ஊரோடு ஒத்துவாழ்" என்ற தம் முன்னோர் வாக்கின்படி வாழ்வதை வழமையாகக் கொண்டுள்ளனர். இதுவே அவர்கள் அயலவர்களுடன் மகிழ்ச்சிகரமாக வாழ்கின்றமைக்குக் காரணம் என்று கூறலாம்.

தமிழ் வாழ்க்கையில் பெண்ணே அதிகளவு பொறுப்புடையவளாக இருக்கின்றாள். எதிர்கால குடும்ப நிம்மதியை நாடும் இளைஞன் ஒருவன் நல்ல மனைவியை தேர்ந்தெடுப்பது எப்படி என்றொரு சுலோகம் இந்து மதத்தில் உண்டு.

கார்யேஷு தாசி
கரணேஷு மந்ரி
திபேஷு லட்சுமி
க்ஷமவா தரித்ரி
போத்யேஷு மாதா

சயனேஷு வேஸ்யா
சமதர்ம யுக்தா
குலதர்ம பத்தினி

என்பதே அச்சுலோகமாகும். சேவை செய்வதில் தாசியைப் போலவும், யோசனை சொல்வதில் மந்திரியைப் போலவும், மன்னிப்பதில் பூமாதேவி போலவும், அன்போடு ஊட்டுவதில் அன்னை போலவும், மஞ்சத்தில் கணிகை போலவும் நடக்கக் கூடிய ஒருத்தியே சிறந்த பத்தினியாவாள் என்பதே இதன் பொருள். இதனையே,

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே அதுமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்"

என்கிறாள் தமிழ் மூதாட்டி

அதாவது இல்லாள் என்பவள் இல்லத்தை ஆள்பவள். அவள் அன்பில்லாது, அடக்கமில்லாதவளாக, பண்பில்லாதவளாக, பத்தினித்தன்மை இல்லாதவளாக இருந்துவிட்டால் உன் வீடு புலி கிடந்த குகையாகிவிடும் என்பது தமிழ் ஆடவருக்கு விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கையாகும்.

கணவன் மனைவி உறவுக்கு அப்பால் பெற்றோர் குழந்தைகள் இடையேயான உறவு புனிதமானதாக இருக்கவேண்டும். பிள்ளைகள் தம் பெற்றோருக்கு கீழ்ப்பட்டவர்களாக எப்போதும் வாழ வேண்டும் என்பது தமிழர் பாரம்பரியம். இதனை வெளிக்காட்டும் பல அரிய வரலாற்றுக் கதைகள் இந்து மதத்தில் கூறப்படுகின்றன. "தாய்தந்தையருக்கு தொண்டு செய்துகொண்டிருந்த ஒரு சிவபக்தன் மாறுவேடத்தில் வந்த இறைவனைக் கவனிக்கவில்லை. இதனால் இறைவன் ஆத்திரம் உற்றபோது தன் முதற் கடன் தாய் தந்தையருக்குப் பணிசெய்வதே என பக்தன் கூற இறைவன் மனமயங்கி அவன் காலில் வீழ்ந்தார்" என்கிறது ஒரு கதை. வாழ்வில் முன்னேறுவதற்கு தாய் தந்தையரின் ஆசிகள் இன்றியமையாதவை என்ற கொள்கையை உடையவர்கள் இந்துக்கள். இதனையே தமிழர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்கில் நாற்குறவரை ஒழுங்குபடுத்தினர். இதனை இன்னோர் இடத்தில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள்" என்றவர்களும் தமிழர்களே.

"உறவுகள் ஒழுக்கங்களுக்கும் நிம்மதிக்குமாகவே உருவாக்கப்பட்டவை" என்கிறது இந்து மதம். உறவுகள் இடையே கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி வாழ்ந்து வருவது தமிழர்களின் கீர்த்தியை மேலோங்கச் செய்யும் ஓர் அம்சமாகும். இவ்வாறான கட்டுப்பாடுகள், கொள்கைகள் என்பவையே தமிழர்களிடையே ஏற்படும் சொற்ப அளவிலான உட்பூசல்கள், சச்சரவுகள் இலகுவாக நீக்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்றன உறவு முறைகள் சண்டை சச்சரவுகளைத் தீர்க்க பேருதவி புரிகின்றமையை எவருமே மறுக்க முடியாது.

தமிழர்களின் சமூகவாழ்க்கையில் பெண்களே அதிக பொறுப்புடையவர்களாகத் திகழ்கின்றார்கள். ஒரு பெண்ணானவள் வீட்டிலிருந்து வெளியே சென்றால் மீண்டும் வந்து சேரும்



வரை அவள் தரையைப் பார்த்தே நடக்க வேண்டும் என்பது ஓர் இந்து மதக் கட்டுப்பாடு ஆகும். தன் கண்களால் ஓர் ஆடவனுடைய ஆசைகளைக் கிளறிவிடும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு. பெண்களின் கண்களைப் பார்த்து ஒரு கவிஞன் "காதல் மொழி பேசும் கயல்விழிகள்" என்று வர்ணிக்கின்றான். இவ்வாறான பெண்களின் கண்களால் ஆடவர்கள் சஞ்சலமடையக் கூடாது என்பதற்காக இவ்வாறான கட்டுப்பாடுகள் இருந்தன. பெண்ணானவள் பிற புருஷனை நினைத்தாலேயே கற்பிழந்தவளாகின்றாள் என்பது தமிழர் கோட்பாடு. தாய் என்னும் பெண்ணே எந்தவொரு குடும்பத்தினதும் அத்திவாரமாகத் திகழ்கின்றாள். குடும்பத்தில் தந்தை ஒழுங்காக இல்லாவிட்டாலும் சிறந்த ஒரு தாயால் குடும்பத்தை உயர்த்த முடியும். ஆனால் தாய் வழி தவறின் தந்தையால் அதனைச் சரிவரச் செய்யமுடியாது. குடும்பத்தின் அத்திவாரமாக திகழும் பெண்கள் பிற ஆடவரை நினைத்தால் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகளால் கட்டிடங்களைப் போல் நிலைபெற வேண்டிய குடும்பங்கள் சரிந்துவிடக்கூடும். அப்பெண்ணானவள் தலை குனிந்து நடந்தால் பிற ஆடவர் முகங்களைப் பார்க்க மாட்டாள். அதனால் குடும்பங்கள் பிரச்சனைகள் எதற்கும் முகம் கொடுக்காமல் அமைதியாய் வாழ்ந்து வளம்பெறும்.

இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்கும் புராணங்களும், இதிகாசங்களும் காலத்தால் முந்தியவை. இராமாயணம், மகாபாரதம் முதலிய இந்து சமய இதிகாசங்கள் அருளப்பட்ட மொழி தமிழாக இல்லாதவிடத்தும் இவ்விலக்கியங்களின் கருத்துச் செறிவுகள் காரணமாக அவை தமிழ் புலவர்களால் தமிழர்களின் பண்பாட்டிற்கு ஏற்ப தமிழில் பாடப்பட்டுள்ளன. கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படுவதற்கும் அவரது கவியாற்றலை உலகுக்குக் கொடுக்கவும், ஒரு வழியமைத்தது இந்து மதக் கருத்துக்களே. அதாவது தமிழ்மொழியானது இந்து சமயக் கருத்துக்களை உள்வாங்கி அதனை அடிப்படையாகக் கொண்டே பெருமளவில் இலக்கியங்களைப் படைத்தது எனலாம். இந்து மதத்தைச் சார்ந்து திருவள்ளுவர் படைத்த தமிழ் இலக்கியமான திருக்குறள் இன்று உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகின்றது. இதிலிருந்து இந்து சமயக் கருத்துக்கள் உலக மக்களின் வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டிகளாக திகழ்கின்றன என்பதை உணரலாம். திருக்குறள் ஆனது தமிழ் மக்களின் நீதிக் கதைகள் கூறும் கருத்துக்களை மேலோங்கச் செய்து மக்கள் வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழியைக் காட்டுகிறது. தமிழிலக்கியங்களில் பெரும்பாலானவற்றில் இந்து மத செல்வாக்கைக் காணலாம்.

தமிழ் மக்கள் மத்தியில் கூத்து, கும்மி, கோலாட்டம், பரதநாட்டியம், சாஸ்திரிய சங்கீதம், கர்நாடக சங்கீதம் முதலிய கலைகள் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன. கூத்துக்களில் இந்து சமய புராணக்கதைகளே பெரும்பாலும் அரங்கேற்றப்படுகின்றன. கூத்துக்கலை பண்டைய தமிழர்களிடம் பெரும் வரவேற்புப் பெற்ற ஓர் இசையுடன் கூடிய நடனக்கலையாகும். இவ்வாறே பரத நாட்டியமும் இந்து சமயக் கதைகளையும் மற்றும் பலரின் உளக்கருத்துக்களையும் தமிழ்மக்களின் வாழ்க்கைத் தத்துவங்களையும் உள்ளடக்கியே வடிவமைக்கப்படுகின்றன. கர்நாடக சங்கீதம், சாஸ்திரிய சங்கீதம் முதலிய இசைக்கலைகளில் இந்துசமய தேவார, திருவாசக பாடல்களுடன் தமிழ் இலக்கிய பாடல்களும் அரங்கேற்றப்படுகின்றன. இக்கலைகள் மன அழுத்தங்களை பெருமளவில் குறைப்பனவாய் உள்ளன. கலைகளானவை அனைவருக்கும்

உள்ளங்களில் ஏற்படும் மனவுழைச்சல்களுக்கும், மன ஆழுத்தங்களுக்கும் அருமருந்தாய் இருக்க வேண்டும் என்பது தமிழர்களின் கொள்கையாகும்.

தமிழர்கள் தீபாவளி, தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு முதலிய பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகைகள் இந்துசமய சாஸ்திரங்களின் அடிப்படையில் தோன்றியவையே. இப்பண்டிகைகளின்போது தமிழர்கள் தம் உறவினர் இல்லங்களுக்குச் சென்றும், தம் சுற்றத்தவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கியும், தம் இல்லத்திற்கு வருவோருக்கு வயிறார உணவளித்தும் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்துவார்கள். இவ்வாறான பண்டிகைகளால் சமுகத்தில் ஒற்றுமையுணர்வு மேலோங்கும். ஒருவரோடு ஒருவர் இணைந்து பழகுவதற்கும் வழியமைக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் முடியும். இதனால் சமுகத்தில் அமைதி மேலோங்கும்.

இவ்வாறு பலவழிகளில் தமிழ் மக்களின் வாழ்க்கையின் மேம்பாட்டில் இந்து மதம் உயரிய பங்குவகித்ததை அவதானிக்கலாம். தமிழரின் வாழ்க்கையோடு இந்துமதம் இரண்டறக்கலந்து மிகவும் உயர்வான ஒரு நிலையில் இருப்பதைக் காணலாம்.

"சாதாரண தமிழ்ப் பழமொழிகளும் அனுபவத்தில் அவற்றின் எதிரொலிகளுமே இந்து மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையை உண்டாக்கி இருக்கின்றன" என்று கவிஞர் கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்து மதம் எனும் நூலின் முதலாம் பாகத்தில் கூறியுள்ளார். தமிழர்களில் தமது வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் இந்துசமயத்தவர்களே. நாமும் விபுலானந்தர், விவேகானந்தர், ஆறுமுகநாவலர் போன்ற தமிழ் மகான்கள் இந்துமதத்துடன் இணைந்து வாழ்ந்து வெற்றி பெற்றுக் காட்டிய பாதையைப் பின்பற்றி நாம் வாழ்வில் ஜெயம் பெறுவோமாக.

T. கோகுலரமணன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2004





இந்து மதத்தில் இசைக் கருவிகளின் செல்வாக்கு

இசையினால் மயங்காதவர் யாருமில்லர். இசைக்கு இறைவனே அடக்கம் என்பதை இராவணன் சாமகானம் பாடியது கோடிட்டுக் காட்டுகிறது. அந்த இசை இன்பம் மூலம் பரமானந்த நிலை அடைந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

அவர்கள் இயற்றி இசைத்த இறை இசை அமுதத்துளிகளுக்கு பண், நடை என்பவற்றை அவர்களே கொடுத்து பாடி இருப்பது ஒரு சிறப்பம்சம். உதாரணமாக "இல்லக விளக்கது இருள்கெடுப்பது" எனும் அப்பரின் நமச்சிவாயப் பதிகத்தின் பண் — காந்தார பஞ்சமம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்படியான இசையைச் "சுருதி" மாதாவாகவும் "லயம்" பிதாவாகவும் விளங்குகிறதென்பர். அந்த லயத்தைக் கொண்டு செல்வதற்காகப் பலவிதமான தாளவாத்தியக் கருவிகளுடனும், சுருதியையும் அதை மெருகூட்டவும் எத்தனையோ இசைக்கருவிகளையும் இசைப்பது கண்கூடு.

முதலாவதாக நாம் மிருதங்கத்தை எடுத்துக்கொள்வோம். மிருதங்கம் என்பது பிரமனின் வாத்தியமென்று சொல்வர் சிலர். பிரமன் மிருதங்கம் வாசிக்கும்போது நடராஜப் பெருமான் திருநடனம் புரிவதாகவும் சில கதைகள் உண்டு. ஆக மிருதங்கம் கடவுளர்களுடன் பின்னிப்பிணைந்துவந்த வாத்தியமாகக் கருதப்படுகிறது.

இன்னுமொரு முக்கியமான வாத்தியம் தவில். இது ஒரு ராஜவாத்தியமாகும். இதனைப் பூதவாத்தியம், ருத்ரவாத்தியம் என்றும் அழைப்பர். தவிலின் இடந்தலை மூட்டில் (தொப்பி) "பதம்" வைத்த பின்னே மூட்டுக்கள் இரண்டும் வாரினால் கோர்த்து இறுக்கப்படும். இங்கு பதம் என்பது கோயில்களில் விக்கிரகங்கள் பாலஸ்தாபனம் செய்யும்போது விக்கிரகங்களை இருந்த இடத்தில் இருந்து வெளியே எடுக்கும்போது விக்கிரகங்களை அசையாது பாதுகாத்து "மருந்து" என்னும் மூலிகைக் கூட்டை எடுத்து அதனை "பாகம்" பண்ணி (பதப்படுத்தி) அதிலொரு சில பகுதியை தொப்பியின் உட்புறத்தின் நடுவில் இருக்கச் செய்தலாகும். தவில் என்ற வாத்தியம் செய்தற்கே கோவிலில் உள்ள ஒரு பொருள் பயன்படுகிறதென்பதில் இருந்து இந்து மதத்துடன் நெருங்கிய தொடர்புடைய வாத்தியம் எனலாம்.

முக்கியமாக கோவில் உற்சவம் தொடங்கியதும் கொடியேற்றத்திற்கு முதல் தவில் வாத்தியத்திற்கு குருக்கள் பூசை செய்து மாவிலையுடன் சேர்த்து கட்டப்பட்ட கழி (குச்சி)யினால் மூன்று முறை தட்டி வாசித்து வணக்கம் செலுத்தப்படும். இதேபோல் தீர்த்தோற்சவ தினத்தன்று சுவாமி வீதிவலம் வரும்போது ஈசான மூலையில் தவில் வாசிப்பவருக்கு தலையில் தலைப்பாகை கட்டி அதன் மேல் தவிலை வைத்து பூசைசெய்து ஒற்றைக் காலில் தவிலை கழியினால் தட்டி வாசித்துக் கொண்டு சுவாமியை மூன்று முறை வலம் வரும் முறையுமுண்டு. இதிலிருந்து தவில் இந்து மதத்துடனும் அதன் வழிபாட்டு முறையுடனும் எவ்வளவு தூரம் பின்னிப் பிணைந்துள்ளது என்பது கண்கூடு.



உடுக்கையை நாம் மறந்துவிட முடியாது. அதாவது இது டமருகம், டமரு, துடி உடுக்கு, கைப்பறை, இடைச் சுருக்குப் பறை என்றுப் பல பெயர் கொண்டழைக்கப்படும். நடராஜப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடும்போது வலது கையில் ஏந்திய வண்ணம் இருக்கும் வாத்தியம் உடுக்கை ஆகும். இவ்வாத்தியம் வாசிக்கும்போது விறுவிறுப்பு, பக்தி, பயம் போன்ற உணர்வுகளை வெளிக்கொணருவதை அறியமுடியும். இதனடிப்படையில் கோயில் வழிபாட்டிற்கு கரகம், காவடி ஆட்டங்களிலும் பஜனைகளில் பக்தியுடன் பாடுவதற்கும் உறுதுணையாயுள்ளது.

பஞ்ச முகம் என்னும் வாத்தியம் முழவம், குடமுழவம், குடபஞ்சமுகி, குடமுழா, பஞ்சாளைப் பஞ்சமுதை, குடமுழுக்கு எனப் பல பெயரால் அழைக்கப்படும். இவ்வாத்தியம் கோயில்களில் நடக்கும் கிரிகைகளின்போது முக்கியமாக வாசிக்கும் வாத்தியமாகும். இது ஐந்து முகங்களையுடைய வாத்தியம். இவ்வைந்து முகங்களையும் சிவபெருமானின் ஐந்து முகங்களான சத்தியோஜாதம், ஈசானம், தற்புருவும், அகோரம், வாமதேவம் என்பவற்றிற்கு ஒப்பாக உருவகிக்கப்படுகிறது. "பரகிலர்" எனும் இனத்தைச் சேர்ந்தவர்களே இதைக் கையாண்டனர். "பாணாரன்"என்னுமசுரன் தனது ஆயிரம் கைகளால் வாசித்தார் என்ற ஐதீகமும் உண்டு. ஆனாலும் இக்காலத்தில் இவ்வாத்தியத்தின் பாவனை இல்லை என்றே கூறமுடியும். அதாவது இவ்வாத்தியத்தை சிதம்பரம், திருவானைக்கா, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் கோயில்களில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

பக்கவாக் எனும் வாத்தியம் விநாயகப் பெருமானால் தோற்றுவிக்கப்பட்டதென்று கூறும் தென்னிந்தியாவில் மிருதங்கம் பக்கவாத்தியத்தில் பிரதானமாகத் திகழ்வது போல் வட இந்தியாவிலும் பிரதானமாகத் திகழ்கின்றது.

புல்லாங்குழல்; இதுவொரு ஏகத்வனி வாத்தியம் ஆகும். இதைத் தமிழில் — குழல் என்றும் வடமொழியில் முரளி, வேணு என்றும் அழைப்பர். கிருஷ்ணபரமாத்மாவுடன் இணைந்துள்ள வாத்தியமாகும். அதை "புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களேன்"என்ற கண்ணதாசனின் பாட்டு வரிகள் எமக்கு ஞாபகமூட்டி சான்றுபகர்கின்றன.

இறுதியாக தந்தி வாத்தியத்தினுள் சிறந்ததாகவும் மிகப் பெருமை வாய்ந்ததுமானது வீணையாகும். சரஸ்வதியின் கையில் இருப்பதன் மூலம் வீனை தெய்வீகத்தன்மையுடையதென அறிய முடிகிறது. "வீணா, வேணு, மிருதங்கம்" என்று கூறும்போது வீணை முதலிடம் வகிக்கிறது. இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கர் மன்னனாலேயே தற்கால வீணையின் அமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டமையால் இதை ரகுநாதவீணை என்றும் அழைப்பர்.

முற்று முழுதாக நோக்குமிடத்து ஒவ்வொரு இசைக்கருவிகளின் ஆரம்பமும் அதன்பாவனையும் இந்துக் கடவுளர்களுடைய வழிபாட்டு முறைகளிலும் இந்துக் கலாச்சாரத்துடனும் பின்னிப்பிணைந்துள்ள விதத்திலிருந்து இந்து மதத்தில் இசைக் கருவிகளின் ஆதிக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என ஊகிக்க முடிகிறது.

R. டிலுக்ஷன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2004



மண்ணில் இந்த ஆலயங்கள்....

வடக்கே வல்லிபுரம், வண்ணை வைத்தீஸ்வரன்
குடம் குடமாய் பால் இறையும் நல்லூர் கந்தன்
கடல்நீரில் கனல் விளக்கெரிக்கும் வற்றாப்பளை
படகேறி பயணித்தோரிற்கு பாவம் போக்கும் மணிபல்லவம்.

சிவராத்திரிக்கு, சிறகுகள் புனல் பருகும் பாலாவிநீர்
தவிக்கின்றோரும், துன்பத்தில் அழுந்தி துடிக்கின்றோரும்
பாவம் போக்கும்; பனையும் படர்முகிலும் சூழ்
மாவிட்டபுரம் என்றும் மண்மணம் வீசும்.

கிழக்கே கீழ்வானில் சூரியன் உதிக்கும் கனவுகள் மலர்காலையில்
முழங்கும் நாதஸ்வரங்களும் கொட்டும் மேளங்களும்
புழங்கும் கொக்கட்டிச்சோலை மாந்தர் தூயர் — தூர்
பழக்கம் களையும் மாமாங்கம்.

தென்னை முக்கோணத்தில் தலம் தீர்த்தம் தலவிருட்சத்தோடு
அன்னை வடிவாம்பிகை சமேத முன்னை நாதர் — முயல்வோருக்கும்
தன்னை அர்ப்பணிப்போருக்கும் அருள் பாலிக்க
புன்னை மரம்நாப்ப புகழ்த்தலம் ஒட்டிசுட்டான் தான்தோன்றிச்சரம்.

அருள் அதிகம் விளங்கும் ஈழம், ஆலயங்களும் அதிகம் — ஆனால்
இருள் அதிகம் மக்கள் மனதில், துன்பச்
சுருள் சுழல மாந்தர் தன்னுயிர் இழந்து
பொருள் துறந்து துயருறக் காரணம்

சுத்தசர்மம் ஓங்கி ஒலிக்கும் புண்ணிய பூமியில்
துட்டம் குரோதம் கொண்டு மக்கள் மனிதநேயம் தொலைத்திடவே
குற்றம், கொலைகள், குண்டுமாரி பட்டிதொட்டி எங்கும் பொழிய
இரத்த ஆறு வெள்ளத்துணிகளை நிரப்ப காவி உடைகள் அதிகமாகின்றனவே !

G. கார்த்தீபன்
உயர்தரம் 2004
கணிதப் பிரிவு

முதுமையின் புலம்பல்

பாடுகிலேன் அவன்புகழைப், பருவம்வந்து
பறந்ததுவுந் தெரியாமல் இளமைத் தேனில்
ஆடுகிறேன் ஆங்காங்கே பாவஞ் செய்து
ஆனந்த வெள்ளத்தில் ஆடி, ஆடி
நாடுகிலேன் நாயகனை நாயேன் நானும்
நடக்கிலனே அவனுருவை நாடி, இன்று
தேடுகிறேன் முதுமை எனைத் தேடவைக்கத்
தேர்ந்திலனே ! பேரின்பத் தேனை யானே !

நினைத்திலனே; நிர்மலனின் மேனிதன்னை
நினைக்காமல் நீணிலத்தின் நினைவையின்னும்
அணைத்திலனே ! அறந்தொலைத்தேன் ! அதர்மமென்னும்
ஆணிதனால் அடிபட்டேன்; அறத்தை யின்னும்
இணைத்திலனே ! போகமெனும் இன்பம் நாடி
இருள்பட்டேன் ! சிறைப்பட்டேன் ! இன்றுங்கூட
வினைத்திறனோ, எனை வாட்டி விரட்டி ஓட்ட
விலங்கிட்டேன் ! வையத்து நினைவை யானே !

மூடாத பூமியென்னும் மேடை மீது
முன்நாளில் இளமையெனும் துடிப்பினாலே
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி ஓய்ந்தேன்
ஐயனவன் திருக்கோயில் நிழலைக் கூட
நாடாமல் என் வழியே நானே சென்று
நலிவுற்றேன் ! நலங்கெட்டேன் ! அதனாலின்று
தேடாத கண்கள் உனைத் தேடி நிற்கத்
தேர்ந்திலனே ! பேரின்பத் தேனை யானே !

A. **ஹரிஷன்**
உயர்தரம் 2005
கணிதப் பிரிவு

அநாதி மதம்

இந்து மதம் அநாதியானது. உலக மதங்களில் தொன்மையானது. விஞ்ஞான பூர்வமானது. பிரபஞ்சத்தின் உண்மைகளையும் உயிரின் இயக்கத்தையும் துல்லியமாக உணர்த்துகின்றது. தொன்றுதொட்டு நிலவிவரும் இந்து மதமானது ஆறுவகையான சமயப் பிரிவுகளுடன் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேருன்றிப் பரந்து உலகளாவிய ரீதியில் நிமிர்ந்து நிற்கின்றது.

சிவனுக்கு இறைமை கூறுவது சைவம். விஷ்ணுவுக்கு இறைமை கூறுவது வைணவம். சக்திக்கு இறைமை கூறுவது சாக்தம். கணபதிக்கு இறைமை கூறுவது காணாபத்யம். முருகனுக்கு இறைமை கூறுவது சௌமாரம். சூரியனுக்கு இறைமை கூறுவது சௌரம். இவ்வாறு ஆறுவகையாகப் பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் காலப்போக்கில் சைவம், வைணவம் ஆகிய இருசமயங்கள் மட்டுமே மக்களோடு மக்களாக இல்லங்களினுள் குடிகொண்டிருக்கின்றன. ஏனைய நால்வகைப் பிரிவுகளும் சைவத்தினுள்ளும் வைணவத்தினுள்ளும் அடக்கப்பட்டுவிட்டன.

இந்து மதத்தை தோற்றுவித்தவர் என்று ஒருவர் இல்லை. உலகம் தோன்றிய அன்றே ஒரு சக்தி தோன்றியிருக்க வேண்டும். அச்சக்தியே இந்து மதமாக இன்றும் வளமையுடன் வாழ்ந்து வருகின்றது.

இந்திய நாட்டினரின் மதமாதலால் இந்து மதம் எனப் பெயர் வந்தது எனக் கூறுபவர்கள் உண்டு. சிந்து நதிக்கரையில் ஆரியர் குடியேறி இந்து மதத்தைத் தோற்றுவித்தமையால் இந்து மதம் எனப் பெயர் வந்தது எனக் கூறுவோரும் உளர்.

இந்து மதம் அன்பை வலியுறுத்துகின்றது. அதாவது எவன் உயிர்களிடத்தில் அன்புடன் இருக்கின்றானோ அவனே இந்து. இதனையே திருமூலரும் "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற பாடலில் விளக்குகின்றார். அன்பே சிவம் என்ற இந்து மதம் முழுமுதற் கடவுள் சிவன் என்கின்றது.

கடவுள் ஒருவர்தானே! மும்மூர்த்திகள் ஏன்? கல்விக்கு, செல்வத்திற்கு, வீரத்திற்கென்று தனித்தனிக் கடவுள்கள் தேவைதானா? என்ற சந்தேகம் பலருக்கு எழலாம். சாதாரண ஆசிரியர் ஒருவரை எடுத்துக்கொள்வோம். பாடசாலையில் ஆசிரியராகவும், மனைவிக்குக் கணவராகவும், பிள்ளைகளுக்குத் தந்தையாகவும், தந்தைக்கு மகனாகவும் பல கடமைப் பொறுப்புக்களை வகிக்கின்றார். இவ்வாறே தன் கடமைகளுக்கு ஏற்ப பல்வேறு உருவங்களை இறைவன் எடுத்து வாழ்வின் தத்துவத்தை உலகிற்கு உணர்த்துகின்றார்.

சிவம் எப்போதும் சக்தியுடன் இணைந்தே காணப்படுகின்றது. சிவத்தில் இருந்து சக்தி நீங்கில் அது முழுமையற்றதாகக் காணப்படும்.

சுடரில் தீயும் வெப்பமும் உண்டு. வெப்பத்தையும் தீயையும் எக்காரணங்கொண்டும் பிரிக்க முடியாது. அதுபோல சிவனும் சக்தியும் ஒன்றிணைந்து உலக மக்களுக்கு உறுதுணை புரிகின்றனர்.

ஒரு மனிதன் உலகில் பிறந்து மோட்சம் அடைய வேண்டுமாயின் அதற்கு இறையருள் அவசியமாகின்றது. அவ்விறையருளை இந்துமதம் நான்கு வகையில் அடைய வழிவகுக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும்.

புறத்தொழில் மாத்திரத்தால் இறைவனை வழிபடுதல் சரியை ஆகின்றது. இது தாச மார்க்கம் எனப்படும். தந்தையும் மகனும் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றிணைந்து செயற்படுவதுபோல, அன்பாகப் பேசி அருகில் நின்று வழிபடுதல் கிரியை வழிபாடாகும். இதனைச் சற்புத்திர மார்க்கம் எனவும் வழங்குவர்.

அகத்தால் மாத்திரம் இறைவனின் அருவத்திருமேனியை வணங்குதல் யோகமாகும். இது நண்பனோடு ஒரு நண்பன் உரிமையுடன் பழகுவதை ஒத்ததாகும். இது சகமார்க்கம் எனப்படுகின்றது.

சோதிமயமான இறைவனாக அனைத்தும் கடந்து நின்று வழிபடும் முறை ஞானமாகும். இது கணவன் மனைவி உறவு முறையையொத்த சன்மார்க்கமாகும்.

மேற்கண்ட நான்கு மார்க்க வழிகளில் இறைவனை அடையலாம் என இந்துமதம் கூறி நிற்கின்றது.

இந்து மதத்திலே கட்டுப்பாடுகள் இல்லை. எனவே கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டது இம்மதம். நாம் இவ்வாறுதான், இந்நேரத்தில், இம்முறையில்தான் இறைவனை வணங்க வேண்டும் என்ற கருத்தை இந்து மதம் முன்வைக்கவில்லை. நாம் சுதந்திரமாக, இறைவனை எப்படியும் வணங்கலாம் என்கின்றது. இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற மாபெரும் உண்மையை உலகுக்கு உணர்த்துவது எமது மதமாகும். ஆஸ்திகனுக்கு மாத்திரமன்றி நாஸ்தீகனுக்கும் உரிய ஒரு சமயமாக இந்து மதம் விளங்குகின்றது.

திருநின்றவூரில் பூசலாரின் மனத்தில் கட்டிய கோயிலுக்கு இறைவன் குடிவந்த கதை யாவரும் அறிந்ததே. பூசலார் நாயனாரின் கதையினூடாக மனித உடலே இறைவன் குடிகொள்ளும் உயராலயம் என்ற உயர்ந்த தத்துவத்தை நாம் காண்கின்றோம்.

இல்லறத்தானும் துறவறத்தானும் இறைவனை அடையலாம் எனக்கூறி நிற்கும் உயர் சமயம் எமது சமயமாகும்.

மனிதனைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்துடனும் விருப்பத்துடனும் இறைவனை அன்பு ஒன்றினாலே வழிபடச்செய்வது இம்மதமாகும்.

நிலையற்ற உலகில் பொருள்களிற் பற்றொழிவதற்கு நிலையான இறைவனைப் பற்றிநிற்றல் நன்மை பயக்கும் என்ற கருத்தைத் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

என்பது திருக்குறள். ஆகவே இந்து மதமானது வாழ்க்கையின் தத்துவத்தை தன்னகத்தே கொண்டு அன்பே சிவமாகக் காட்சியளிக்கின்றது. இம்மதத்தின் எளிமையே இன்றும் எம் மத்தியில் வளமையாக இருக்கின்றது.

வாழ்க இந்து மதம் ! வளர்க சிவத் தொண்டு ! ஓங்குக அதன் புகழ் ! வெல்க அகிம்சை தத்துவம் !

C. சுகோதயன்
ஆண்டு 11 Q





அறநெறிக் கல்வி

அறநெறி என்பது அன்புநெறி, சத்தியநெறி, அருள்நெறி என்று பலவாறு கூறலாம். இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அடியார்கள், அருளாளர்கள், அறநெறியில் வாழ்ந்து அருள் பெற்றவர்களே. அவர்கள் கடைப்பிடித்தொழுகிய அறநெறி வாழ்க்கையே ஏனையோரையும் இக்கொள்கையைக் கடைப்பிடித்தொழுகத் தூண்டுவது. தெய்வ நெறிசார்ந்த நாயன்மார்களும், சமயத் தொண்டர்களும், ஆன்றோர்களும் அறநெறியாகிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்து பிறருய்ய வழிகாட்டிச் சென்றவர்கள். அவர்கள் காட்டிய மார்க்கம் அன்பு நெறியே. அவர்கள் கைக்கொண்ட ஒழுக்கமும் அ.·.தே. அதனாலேயே அவர்களைப் போற்றிப் புகழ முடிகின்றது.

அறத்திற்கு முறனான வழியில் பெற்ற பேரும், புகழும், செல்வமும், ஆளுமையும், அதிகாரமும் நிலைத்து நிற்காமல் நீர்க் குமிழிபோல மாய்ந்து மடிந்து விடும். அன்பாலும் அறத்தாலும் சேர்க்கப்பட்ட பெருமைகள் அனைத்தும் இவ்வுலகுள்ளவரை நிலைத்து, நினைவூட்டி நிற்கும். அறநெறியினை ஊட்டத்தக்க ஏற்ற பருவம் இளமைப் பருவமேயாகும். உலகத் துன்பங்கள் அணுகாத இப்பருவத்திலே இக்கொள்கையைப் புகட்டினால் முற்றான பலனைப் பெற முடியும். இதனையே ஔவையார் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனப் பாடிச் சென்றுள்ளார்.

ஒவ்வொரு மனிதனும் தாம் பிறந்து வளர்ந்த சூழலுக்கேற்பவே நடத்தையினையும், செயற்பாடுகளையும் மேற்கொள்கிறான். மாசுற்ற சூழலில் உள்ளவர்களை புனிதம் நிறைந்த நற்சூழலிற்கு இட்டுச் செல்வதே அறநெறிக்கல்விப்பாதை ஆகும்.

இதிகாச புராணத்தில் (மகாபாரதத்தில்) கர்ணன் எனும் பாத்திரமொன்று உண்டு. அவன் செய்த தருமம் அவனைக் கடைசிவரை காத்து நின்றதை நாம் அனைவரும் அறிவோம். பிறப்பானது ஒருவர் செய்த நன்மை தீமைக்கேற்பவே அமைகின்றது என இந்து சமயம் கூறுகின்றது. நன்மை செய்தவன் நற்பிறவியையும், தீமை செய்தவன் அதற்கேற்ற பிறவியையும் பெறுவான் என இந்துமதம் வலியுறுத்துகின்றது. இதனையே "வினை விதைத்தவன் வினையறுப்பான்" என்ற முதுமொழியும் உணர்த்துகின்றது.

மேலும் அறநெறிக் கல்வியானது மனித மேம்பாட்டிற்கும், மனத்தூய்மைக்கும், அமைதிக்கும் மேலான ஒரு நற்பாதையாக அமைகிறது. இந்த வகையிலேதான் இந்து சமயக் கலாச்சார அலுவல் திணைக்களம் இந்துக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலே எல்லாம் அறநெறிப்பாடசாலைகளை உருவாக்கி அதன் மூலம் அறநெறியைப் புகட்டி அரும் பெரும் பணியாற்றி வருகிறது. நாமும் அறநெறியைக் கற்று அர்த்தமுள்ள எம் இந்துமதத்தின் சிறப்பை உணர்ந்து இந்து சமயத்தினை வளர்ப்போமாக.

K. அரவிந்தன்
ஆண்டு 9 Q

நல்வாழ்வு தரும் நவராத்திரி

இவ்வுலக உயிர்களின் தாயாக விளங்கும் தயாபரியாகிய துர்க்கைக்கே இவ்விழா எடுக்கப்படும். சிவபிரானுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி போல் உலக மாதாவுக்கு ஒன்பது ராத்திரியாக நவராத்திரி அமைகின்றது. புரட்டாதி மாதம் அம்பாளிற்காக இவ்விழா எடுக்கப்படுகின்றது. இவ்விழாவின் பயன் எம் அறிவை வளர்க்க கல்வியையும் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தையும், அவற்றைப் பாதுகாக்க வீரத்தையும் பெறுதலாகும். இவ்விழா இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிகமாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழா தன்னுள் பல நற்கருத்துக்களைக் கொண்டது. மேலும் இவ்விழா அம்மன் கோயில்களில் அதிகமாகச் செய்யப்படும். இவ்விழாவில் கொலுவைத்தல் சிறப்பம்சமாகும். கொலுவில் ஆறு படிகள் நிச்சயமாயிருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. காரணம் முதல் இருபடிகளில் இறைவனோடு தொடர்புடைய உருவசிலைகளும் அடுத்த இருபடிகளில் அரசர்களினது உருவசிலைகளும் மற்றைய படியில் பாமரர் மனிதருடன் தொடர்புடைய உருவ சிலைகளும் வைக்க வேண்டும் என்பது மரபு. இதன் கருத்து இறைவன் அரசர்களையும் அரசர் மக்களையும் வாழவைப்பதாக தொன்றுதொட்டு ஐதீகம் காணப்படுகிறது. மேலும் நிறைகுடம் வைத்தலும் இடம்பெறும். அதுமட்டுமின்றி மிக முக்கியமாக நவதானியம் முளைக்க இடுவர். இதற்குக் கருத்தாக அமைவது மகிடாசுரரின் அழிவு. மகிடாசுரன் ஓர் அரக்கன். அவன் சிவபிரானிடம் தேவர், பாமரர், மிருகம் ஆகியோரால் இறக்காத வரம்பெற்று பற்பல கொடுமைகள் செய்தான். தேவர்களும் உலக மாதாவிடம் முறையிட தாய் பிள்ளைகளிடம் அன்புமிக்கவள் ஆதலால் சரஸ்வதி, இலக்குமி, பராசக்தி மூவரும் இணைந்து மகிடாசுரனை அழிக்கப் புறப்பட்டாள். அவள் போர் முனையில் நின்றபோது அவளது அழகில் மயங்கிய மகிடாசுரன் உலகமாதாவின் மேல் காமஉணர்வுற தாயின் கோபம் இரட்டிப்பாகியது. அவனை அழிக்க முதல்நாள் முடியாமையால் சிவனை நோக்கி தவமிருந்தபோது ஒன்பதாம் நாள் சிவபிரான் காட்சியளிக்க வரங்களுடன் வில்லும் அம்புமேந்தி ஆவேசத்துடன் புறப்பட்டாள். அங்கு எருமை தலையுடையமையால் மகிடாசுரன் எனப் பெயர்பெற்ற அவனை பெண்ணாகிய உலகமாதா கொன்றாள்.

ஆகையால் தாயிற்கு மகிடாசுரமர்த்தினி எனப் பெயருடன் தேவர் பூமாரி பொழிய சாந்தமானாள். இதனை எடுத்துக்காட்டும் வகையில் நவதானியம் ஒன்பது நாள் வளர்க்கப்பட்டு பத்தாம் நாள் விஜயதசமியன்று சூலத்தால் அறுக்கப்படும்.

மேலும் தேவியர் மூவரும் சேர்ந்து அழித்ததால் முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களும் இலக்குமிக்கும், அடுத்த மூன்று நாட்களும் சரஸ்வதிக்கும் இறுதி நாளாகிய விஜயதசமியன்று மானம்பூத்திருவிழாவும் நடைபெறும். முதல் ஒன்பது நாட்களும் சில அம்மன் கோயில்களில் உற்சவமூர்த்தியை சரஸ்வதி, இலக்குமி, துர்க்கையாக அலங்கரிப்பர். இந்நாட்களில் அம்மனிற்கு பட்டுவஸ்திரம் அணிவித்து, பொன் நகைகள் சூட்டி,



பூக்களால் அமைக்கப்பட்ட மாலைகளால் அலங்கரித்தபின் அக்காட்சியை வர்ணிக்க சொற்களே இல்லை எனலாம். மேலும் இறுதி நாளான விஜயதசமியன்று புதுக்கணக்குத் தொடங்குதல், சிறுபிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல், வாத்தியங்கள், வாய்ப்பாட்டு பழக்க ஆரம்பித்தல் போன்றவற்றைத் தொடங்குவர்.

இந்நாளில் பெரும்பாலான அம்மன் கோயில்களில் வாழைவெட்டு நடைபெறும். இது மகிடாசுரனை அம்பாள் அழித்ததையே குறிக்கும். வாழையை கோயிலில் நட்டு உற்சவ மூர்த்தியை பட்டுவஸ்திரம் அணிவித்து மாலை சூடி வாழையருகே கொண்டுவருவர். பின் அம்பாளின் சார்பாக வேதியர் ஒருவர் அம்பாளைச் சாட்சியாய் கொண்டு வாழையின் இலைகளை வெட்டி இறுதியில் வாழையை வெட்டுவர். அதற்குப் பின் அம்பாளிற்கு பச்சை வஸ்திரம் அணிவிப்பர். காரணம் பச்சை குளிர்மை தரும் நிறம். ஆகவே ஆவேசமாய் உள்ள மகிடாசுரமர்த்தினியின் கோபத்தைக் குறைக்கவே இவ்வாறு செய்யப்படும்.

இவ்விழா, பிறர்க்கு தீயதை செய்தால் நிச்சயம் அழிவுண்டு என்பதைக் குறிக்கிறது. மேலும் நாம் கஷ்டம் என்று தாயின் திருவடியில் மன்றாடினால் உலக மாதா பிழை பொறுத்து நல்லருள் புரிவாள். மேலும் நவராத்திரியைப் பற்றி தேவி சத்சரிதம், தேவிமகாத்மியம் போன்ற நூல்கள் மூலம் அறியலாம். மேலும் பாமரர் முதல் பண்டிதர்வரை எளிய தமிழில் அறியக் கூடியவகையில் குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லிமாலை தேவியின் சிறப்பிற்குச் சான்று பகரும். மேலும் நவராத்திரியின் இறுதி நாளான விஜயதசமியன்று பெரும்பாலான பாடசாலைகளில் கலைமகள் விழாவும், கலைசார் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இதன் மூலம் மாணவருள்ளே இலைமறைகாயாக உறங்கிக்கிடக்கும் திறமைகளை வளர்க்க நல்வழியாக அமைகிறது.

இதைவிட நவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் யோகபாதத்தின் பிரிவாகிய யோகத்தில் சரியையின் இயமமாகிய பொய் கூறாமை, சித்தம் கலங்காமை, களவெடுக்காமை போன்றவையும் நியமமாகிய இறை பக்தி, இறை உணர்வு, விரதம் அனுஷ்டித்தல் போன்றவையும் எம்முள் உருவாகும். மேலும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் ஏழைகளின் பசிக் கொடுமையை நாமும் அறியலாம். இவ்விரதம் மூலம் உலக மாதா எமக்கு பல்வேறு படிப்பினைகளை தருகிறாள். இவ்விரதம் எம்மை கட்டுப்படுத்தியுள்ள பாசத்தைக் கெடுத்து முக்தி என்னும் பேரின்ப நிலையையும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் தருகின்றது. இப்படிப்பட்ட விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து முக்தி பெறுவோமாக.

P. சஜீவ்
ஆண்டு 8 Q

சாக்த சமயம்

சக்தியைத் தெய்வமாக வழிபடுபவர்கள் சாக்தர்களெனப்படுவர். சாக்தர்களின் சமயம் 'சாக்தம்' எனப்படும். சாக்த மதம் மிகவும் பழமையானது. வேதங்களே சாக்த வழிபாட்டைப்பற்றிக் கூறுகின்றன. சாக்த சமயத்தவர்கள் சக்தியையே பரம்பொருளாகக் கொள்கின்றனர். பிரம்மா, விஷ்ணு, சிவபிரான் (உருத்திரன்), மகேஸ்வரன் என்னும் நால்வரும் சக்தியின் ஏவல்வழி நிற்பவர் என்று சாக்த மதம் கூறும். பிரம்மனிடத்தே படைப்புச் சக்தியாயும், விஷ்ணு இடத்தில் காத்தற் சக்தியாயும், உருத்திரன் இடத்தில் அழித்தற் சக்தியாயும், மகேஸ்வரன் இடத்தில் மறைத்தற் சக்தியாயும் நிலை பெற்றுள்ளது எனலாம்.

சாக்த சமயத்தில் வாம மார்க்கத்தார், தட்சிண மார்க்கத்தார் என்று இருமுக்கியமான பிரிவினர் உளர். உலக மாதாவாகிய சக்தியைச் சாக்தர்கள் பல்வேறு உருவங்களாக வழிபாடு செய்கின்றார்கள். தேவி, பார்வதி, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, சாமுண்டி, காளி, குமரி, கார்த்தியாயினி எனும் உருவங்களில் சக்தியை அவர்கள் வழிபடுகின்றார்கள். சாத்த சமயத்திற்கென புறம்பான உபநிடதங்களும், புராணங்களும் உள்ளன. சமயதீட்சை, வழிபாட்டு முறை என்பனவும் தனியாக உள. சக்தியை சாக்தர்கள் அன்றி சைவர், வைணவர், பௌத்தரும் வழிபடுகின்றனர்.

சாக்த சமயநூல்கள்

சாக்தருடைய ஆகமங்களைத் தந்திரங்கள் என்பர். அவ்வாறான தந்திரபேதங்கள் 64 என வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நிர்வாண தந்திரம், குலார்வனவம், சூலசூடாமணி, பிரபஞ்சசாரம், திரிபுரா ரகசியம், சதூமகதி, தந்திராலோகம், காமகாலவிலாசம் என்பன முக்கியமானவை.

V. சஞ்சீவ்
ஆண்டு 8 Q

ஈழத்து ஆலயங்கள்

உலகிலேயே முதன்முதலாகத் தோன்றிய சமயமாக இந்து சமயம் விளங்குகின்றது. முதலில் இந்தியாவிலும் பின்பு இலங்கை, மலேசியா, கனடா, சிங்கப்பூர், மொரீஸியஸ் போன்ற பல பல நாடுகளிலும் இந்து சமயம் பரவிற்று. அவற்றில் இந்தியாவிலும் இலங்கையிலும் சிறப்புப்பெற்று விளங்கும் பல கோயில்கள் உள்ளன. இப்பொழுது நாம் இலங்கையை எடுத்துக்கொண்டோமானால் திருக்கோணேஸ்வரம், திருக்கேதிஸ்வரம், கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், பொன்னம்பலவாணேஸ்வரர், நகுலேச்சரம், கீரிமலை முதலிய பல கோயில்கள் சிறப்புப்பெற்று விளங்குகின்றன.

இலங்கையில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் திருகோணமலை குரைகடலுக்கு அண்மையில் காணப்படுகிறது. இங்கு இராவணன் வெட்டு என்று ஓர் இடமும் காணப்படுகிறது. இது போத்துக்கேயரின் ஆட்சியின்போது அழிக்கப்பட்டு பின் புத்துயிர் பெற்று விளங்குகின்றது. இதன் அழகையும் வடிவையும் ரசிக்க இரண்டு கண்களல்ல ஆயிரம் கண்கள் இருந்தாலும் போதாது. இது திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகும்.

அடுத்ததாகத் திருஞானசம்பந்தராலும், சுந்தரராலும் பாடல் பெற்ற தலமாக விளங்குவது. திருக்கேதீச்சரம் ஆகும். இது மன்னாரில் மாதோட்டம் என்னும் நன்னகரில் காணப்படும் ஒரு தலமாகும். இங்கு சிவராத்திரி பூஜையும் மற்றும் சிவனின் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறும்.

அடுத்ததாக நான் சிறு விளக்கம் எழுதப்போகும் கோவில் கதிர்காமம் ஆகும். இது முருகன் மகிழ்ந்து உறையும் ஓர் இடமாகும். இது ஓர் எச்சக்குன்றின் மேல் அமைந்துள்ளது. இது அருணகிரிநாதரால் பாடல் பெற்ற தலமாகும். இதன் புண்ணிய தீர்த்தமாக மாணிக்க கங்கை காணப்படுகிறது. இது தென்மாகாணத்தில் கடலுக்கு அருகாமையில் காணப்படுவது இதன் சிறப்புக்களில் ஒன்றாகும்.

நான் அடுத்ததாக நல்லூரைப்பற்றி ஒரு சிறுவுரை ஆற்றுகிறேன். நல்லூர், வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில், நல்லூர் எனப்படும் இடத்தில் காணப்படுகிறது. இதுவும் முருகப்பெருமான் விரும்பி உறையும் ஓர் இடமாகக் கருதப்படுகிறது. இது யாழ் இந்து மக்களிடையேயும், மற்றும் வேறு பிரதேசத்து இந்து மக்களிடையேயும் சிறப்புப்பெற்று விளங்குவது இதற்குப் பெருமை சேர்ப்பதில் ஒன்றாகும்.

சரி, இனி செல்வச்சந்நிதியை நோக்குவோம். இது யாழ்ப்பாணத்தில் உள்ள பருத்தித்துறைக்கு அருகாமையாகக் காணப்படும் கோயிலாகும். இதுவும் முருகன் விரும்புகின்ற ஒரு கோயிலாக அமைகின்றது.

அடுத்ததாக பொன்னம்பலவாணேஸ்வரரைச் சற்று நோக்குவோம். இது கொழும்புவாழ் இந்து மக்களிடையே சிறப்புப்பெற்று விளங்குகின்றது என்றால் நீங்களே பாருங்களேன். இது முழுவதும் கருங்கல்லால் ஆக்கப்பட்ட கோயிலாகும். இதை சேர் பொன். இராமநாதன் கட்டிவைத்தார். இது சிவன் விரும்பி உறையும் ஓர் இடமாகக் காணப்படுகிறது.

அடுத்ததாக இடம்பெறுவது கீரிமலை சிவன் கோயிலாகும். இது யாழ் மக்களிடையே முக்கியம் பெற்று விளங்குகின்றதில் ஐயமில்லை.

இலங்கையைப் போல இந்தியாவில் காசி, திருப்பதி, உச்சிப் பிள்ளையார் போன்ற பல கோயில்களும் முக்கியம் பெற்று விளங்குகின்றன. இதனால் நாம் பெறும் பயன்கள் பற்பல. ஆகவே இந்து சமயத்தை மதித்துப் பெருவாழ்வு வாழ்வோமாக. வணக்கம்.

P. பிரசாத்
ஆண்டு 7 R



சக்தி விரதங்களும் அனுஷ்டிக்கப்படும் நாட்களும்

* கேதார கௌரி விரதம் — புரட்டாசி வளர்பிறை நவமி தொடக்கம் ஐப்பசி தீபாவளி அமாவாசை வரை — 21 நாட்கள்.
* நவராத்திரி விரதம் — புரட்டாசி மாத சுக்ல பட்ச பிரதமை முதல் நவமி வரை வரும் 9 நாட்கள்.
* வரலக்குமி விரதம் — ஆவணி மாத பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமை.
* காமாட்சி நோன்பு — மாசி மாதம் முடிந்து பங்குனி மாதம் பிறக்கும் நேரம்.
* பணிகௌரி விரதம் — ஆவணி மாத வளர்பிறைப் பஞ்சமி திதி.
* சாவித்திரி விரதம் — ஆவணி மாத பௌர்ணமி தினம்.
* சாவித்திரி கௌரி விரதம் — தை மாதம் 2ம் நாள் ஆரம்பித்து 9 நாட்கள்.
* மங்களகௌரி விரதம் — பெண்கள் திருமணமான முதல் ஆண்டு தன் தாய் வீட்டிலும் தொடர்ந்து 4 ஆண்டுகள் கணவன் வீட்டிலுமாக அனுஷ்டிக்க வேண்டும்.
* ஸ்வர்ண கௌரி விரதம் — ஆவணி மாதம் விநாயக சதுர்த்திக்கு முதல் நாள்.
* யமுனா விரதம் — புரட்டாசி மாத சுக்ல பட்ச பஞ்சமி திதியன்று நடுப்பகலில்.
* ரிஷி பஞ்சமி விரதம் — யமுனா விரத பூஜையை நடுப்பகலில் செய்த பெண்கள் இரவில் ரிஷி பஞ்சமி பூசையைச் செய்தல் வேண்டும்.
* சரஸ்வதி விரதம் — ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை காலத்தில் கடைப்பிடிக்க வேண்டும்.

* மகா லஷ்மி விரதம் — ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை.

* பராசக்தி விரதம் — ஒவ்வொரு மாதமும் கடைசி செவ்வாய்க்கிழமை.

* றோகினி விரதம் — திங்கட்கிழமை, றோகினி நட்சத்திரம், வளர்பிறை, அஷ்டமி திதி கூடியிருக்கும் நாள்.

* வஷ்மி குபேர விரதம் — ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை.

* சப்தமி விரதம் — மாசி மாதம் வரும் சுத்தபஞ்சமியன்று ஆரம்பித்து 52 நாட்கள்.

* உமாசுக்கிரவார விரதம் — சித்திரை மாத வளர்பிறை முதல் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வெள்ளிக்கிழமை தோறும்.

* ஐப்பசி உத்தர விரதம் — ஐப்பசி மாத உத்தர நட்சத்திரம்.

* பங்குனித் திங்கள் விரதம் — பங்குனி மாத திங்கள் தோறும்.

* ஆடிப்பூர விரதம் — ஆடிமாத பூர நட்சத்திரம்.

* பங்குனி உத்தர விரதம் — பங்குனி மாத உத்தர நட்சத்திரம்.

* தை அமாவாசை விரதம் — தை மாதத்தில் வரும் அமாவாசை.

தொகுப்பு
லவன் சதானந்தன்
ஆண்டு 6 R



கல்லூரிக்குள்ளான சமயத் திறன்காண் போட்டிகளின் முடிவுகள்

பேச்சுப் போட்டி

கீழ்ப்பிரிவு	–	1வது	– T. தியாகேசன்	– 6 Q
		2வது	– U. பிரசாத்	– 7 R
		2வது	– T. கபிலன்	– 8 R
		3வது	– P. ஜெயமயூரேஷ்	– 7 R
மத்தியபிரிவு	–	1வது	– S. சூரியபிரதாப்	– 11 R
		2வது	– S. சுகோதயன்	– 11 Q
		3வது	– T. ஸ்ரீரமணன்	– 11 Q

கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு	–	1வது	– S. உமாஷங்கரன்	– 8 Q
		2வது	– U. சஜீவ்	– 8 Q
		3வது	– U. பிரசாந்	– 7 R
மத்தியபிரிவு	–	1வது	– T. ஸ்ரீரமணன்	– 11 Q
		2வது	– M. மயூரேசன்	– 9 R
		3வது	– A. சோபன்	– 11 R

கவிதைப் போட்டி

கீழ்ப்பிரிவு	–	1வது	– M. பிரணவன்	– 8 R
		2வது	– P. சுசாந்தன்	– 6 R
		3வது	– T. லுசாந்தன்	– 8 R
மத்தியபிரிவு	–	1வது	– B. பார்த்திபன்	– 11 Q
		1வது	– S. சூரியபிரதாப்	– 11 R
		3வது	– T. கஜபாகு	– 11 R

சிறுகதைப் போட்டி

கீழ்ப்பிரிவு	–	1வது	– T. கபிலன்	– 8 R
		2வது	– P. விசாகசரண்	– 6 Q
		2வது	– Y. காந்தீபன்	– 7 Q
மத்தியபிரிவு	–	1வது	– S. நிஷாந்தன்	– 10 R
		2வது	– N. K. அஷோக்பரன்	– 9 R
		3வது	– S. அர்ச்சுனா	– 9 R
		3வது	– S. துவாரகன்	– 9 R

பண்ணிசைப் போட்டி

கீழ்ப்பிரிவு	–	1வது	– K. சசிவர்ணன்	– 7 Q
		2வது	– Y. இளங்குமரன்	– 8 R
		3வது	– S. உமாசங்கரன்	– 8 Q
		3வது	– K.R. ஸ்வாகதன்	– 7 Q
மத்தியபிரிவு	–	1வது	– K. அரவிந்தன்	– 9 Q
		2வது	– K. T. துவாரகன்	– 9 R
		3வது	– S. அர்ஜுனா	– 11 R

பல்வேறு கடமைகளின் மத்தியிலும் சிரமம் பாராது எமக்காக, இப்போட்டிகளில் நடுவுநிலை வகித்த நடுவர் பெருந்தகைகளுக்கெல்லாம் எங்கள் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் !

செயற்குழு
2003 - 2004



கல்லூரிக்குள்ளான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

உயிர்களிடத்தே அன்பு வேண்டும்

"அன்பிற்கு ஈடேது" என்பது போல "உயிர்களிடத்தே அன்பிற்கு ஈடேது" என்பதை நாம் வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும். "அன்பு" எனும் பொன் வார்த்தைகள் மனிதனுக்கு மட்டும் உரித்தானதல்ல — மிருகங்களிற்குமே உரித்தானவை ஆகும். "அன்பு" எனும் வார்த்தையை மனிதர்களுக்கிடையே மட்டும் பகிர்ந்துகொண்டு மிருகங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளாமல் அவ்வார்த்தையையே கொச்சப்படுத்துகின்றனர்.

வெளியுலகத்தில் பலர் உயிர்களிடத்தே அன்புகாட்டுவதேயில்லை. சிலர் "உயிர்களிடத்தே அன்பு" எனும் சொல்லைக் கேள்வியுறாமலும் இருக்கலாம். அவர்கள் பெற்றோர்கள் வளர்ப்பு எப்படி என சிந்தித்துப் பாருங்கள். சில சிறுவர்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் நாய், பூனை, போன்ற அழகான பிராணிகளை கேட்டாலும் அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். பிற்காலத்தில் அச்சிறுவர்களும் தமது பெற்றோர்களின் நிலைமையையே அடைவர். இப்படி இப்படி உயிர்களிடத்தே அன்பு வைத்திருப்பவர்கள் குறைந்து குறைந்து அண்ணளவாக நூற்றிற்குப் பதினைந்து வீதமே உள்ளனர் எனக் கருதலாம். அன்பு எனும் வார்த்தையால் பலர் அடிமைப்பட்டுள்ளனர். ஆனால் அந்த அன்பை மற்றவர்களிற்குக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்தே இல்லை. இதனால்தான் மிருகங்கள் நம்மீது வெறுப்புக்கொள்கின்றன. உதாரணமாக நாம் வீதியில் நடந்து சென்றுகொண்டிருக்கையில் நாய் நம்மைப் பார்த்து குரைக்கிறது. ஆனால் மனிதர்கள் அதைப் பார்த்துவிட்டு அது சும்மாதானே குரைக்கிறது என்று போக மாட்டார்கள். உடனே நிலத்தில் இருக்கும் கல்லைத் தூக்கிப்போடுவர். அப்பாவியான, ஐந்தறிவுள்ள, அந்த வாயில்ல ஜீவன்மேல் கல் பட்டவுடன் அது ஓடிவிடுகிறது. அதே நாய்க்கு நாம் தினமும் அன்பு செலுத்தினால் அது நமது காலிற்குள் வந்து வாலை ஆட்டிக்கொண்டிருக்கும். ஆனால் ஒரு கல்வியறிவுள்ள ஒருவருக்கு இவ்வெண்ணம் தோன்றுவதேயில்லை. ஆனால் ஒரு பாமர மனிதனுக்கு இவ்வெண்ணம் நன்றாகவே தோன்றுகின்றது. இதனாலேயே நாம் கிராமப்புறங்களில் பார்க்கும்போது ஒரு வீட்டில் ஒரு நாய்க்குப் பதிலாக இரண்டு மூன்று நாய்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். ஒரு கற்றவனைவிட ஒரு பாமரமனிதனுக்கே உயிர்களிடத்தில் அதிக அன்பைக் காட்டமுடியும்.

உலகில் பெரிய பெரிய மகான்களெல்லாம் "அன்பு" என்ற சொல்லில் பல பாட்டுக்களையும் வேறு சில குறள்களையும் இயற்றியுள்ளனர். மகாகவி பாரதியார் கூட அன்பைப்பற்றி அதாவது உயிர்களிடத்தே அன்பைப் பற்றிப் பாட்டு பாடியுள்ளார். பொய்யாமொழி என்னும் பெயரால்

அழைக்கப்படும் திருக்குறளை இயற்றிய பொய்யாமொழித் தேவர், தெய்வப்புலவர் என்னும் பெயர்களையுடைய திருவள்ளுவர் கூட "அன்பு" எனும் தலைப்பில் ஓர் அதிகாரத்தை இயற்றிப பாடியுள்ளார். அதாவது பத்துக் குறளை இயற்றிப் பாடியுள்ளார். திருவள்ளுவர், பாரதியார் போன்ற பெரிய பெரிய மகான்களெல்லாருடைய இழப்பும் ஒரு பேரிழப்பாகக் கருதப்படுகின்றது. இவர்கள் இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருந்தால் அன்பு எனும் தலைப்பில் ஓர் இதிகாசத்தையே இயற்றியிருப்பர் என்பதில் ஐயமில்லை.

நாம் பிராணிகளிடம் அன்பு காட்டும்போதெல்லாம் நமது பெற்றோர் நம்மைத் திட்டுகின்றனர். "அந்த வருத்தம் வரும், இந்த வருத்தம் வரும்" என்று நம்மை அதன் கிட்டவே செல்ல விடுவதில்லை. அப்பிராணி நம்மீது ஆசை கொண்டு மீண்டும் மீண்டும் வந்தால், பெற்றோர்கள் கூட்டிக்கொண்டிருந்தால், அப்பிராணியைத் துடைப்பம் கட்டை பதம் பார்க்கும். காலில் செருப்புடன் இருக்கும் போது இப்பிராணி வந்தால் செருப்பு அப்பிராணியைப் பதம் பார்க்கும். கையில் சீப்புப் போன்றவை இருக்கும் போது அவை அப்பிராணியைப் பதம் பார்க்கும். இப்படியான நாச காரியங்களைச் செய்தே அப்பிராணியைத் துன்பப்படுத்துவர். சில நேரங்களில் இக்காரியங்களால் அப்பிராணி இறந்தே போய்விடும். கீரந்தை தமது மனைவிமீது வைத்திருக்கும் "அன்பு" பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக எல்லோருடைய வீட்டுக்கதவுகளையும் தட்ட, கடைசியில் நாட்டு மக்கள் பிரச்சினையைச் சொல்ல மன்னன் "அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்" என்று கேட்க, மக்கள் அவனுக்கு அவன் கையை வெட்ட வேண்டும் என்று கூறினர். அதைக்கேட்டு மன்னர் இடையில் செருகியிருந்த வாளை உருவித் தமது கையைத் தாமே வெட்டிக்கொண்டார். அதன்பின் நடந்தவற்றை நன்கு விளக்கி மக்களுக்குக் கூறினார்.

இவர் எதற்காகக் கையை வெட்ட வேண்டும்? அனபிற்காகவே தனது கையைத் தாமே வெட்டிக்கொண்டார். இதனால் தேவியார் மனமிரங்கி இவருக்குப் பொற்கையை அளித்தார். அதனாலேயே இவருக்குப் பொற்கைப் பாண்டியன் என்ற பெயர் வந்தது. இவர் இதைவிட அதிகமாக உயிர்களிடத்தே அன்பு வைத்தார். புத்தர் தனது நண்பன் தேவதத்தன் அம்பெய்து வீழ்த்திய புறாவை எடுத்து மருந்து போட்டார். இவருடைய அன்பிற்கு ஈடெதுவுமில்லை.

இப்படிப்பட்ட மாபெரும் மகான்கள் இருக்கும் வரையில் "உயிர்களிடத்தே அன்பு" மிக்கநிலைத்திருந்தது. இவர்களுக்குப்பின் நாம் "உயர்களிடத்தே அன்பு" வைத்து அன்பைச் சமுதாயத்தில் ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவோமாக.

S. உமாஷங்கரன்

ஆண்டு 8 Q

கல்லூரிக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

சமயவாழ்வும் மாணவர் பணியும்

உலகில் மிகத் தொன்மையானது என்றும் சனாதன தர்மம் என்றும் புகழ் பெற்றது நமது இந்து மதம். அனைத்து மதங்களினதும் தாய் எனவும் அனைத்து உண்மைகளினதும் பிறப்பிடம் என்றும் போற்றப்படுவது நம்மதம். ஆனால் இன்று காலத்தின் கோலத்தால் ஞாலமெங்கும் சிதைவடைந்து வருவதுவும் இம்மதமே. அப்படியானால் எமது மதத்திற்கு எதிர்காலமே இல்லையா? இன்னும் ஆயிரம் ஆண்டுகளின் பின் "நான் ஓர் இந்து" என்று கூறிக்கொள்ளும் ஒருவன் இருப்பானா?

உலகைத் துறந்து, காட்டிற்குச் சென்று, சடாமுடி தரித்துத் தவம் செய்பவனைப் போன்ற சுயநலவாதி உலகில் எங்கும் இருக்க முடியாது. தான் மட்டுமே இறைவனை அடைய வேண்டும் என்று நினைப்பவன் அவன். தன்னை ஈடேற்றிய மதம் இன்னொருவனுக்குப் பயன்படவேண்டும் என்று நினைத்தானா அவன்? அவன் தவம் செய்வதால் மட்டுமே தன்னுடைய சமய வாழ்வின் குறிக்கோளை அடைந்துவிட முடியும் என்றால் சமயங்கள் போதிக்கும் அன்பிற்கு என்ன ஆகிவிட்டது?

உன்னோடு வாழும் ஒருவனுக்காவது உன்னால் நன்மை செய்ய முடியுமானால் உனது தீய குணங்கள், அக அழுக்குகளை நீக்கிவிட முடியுமானால், நீ உனது சமய வாழ்வில் வெற்றி பெற்றுவிட்டாய் என்கிறது ரிக்வேதம்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தவை தொழித்து விடின்"

என்கிறார் வள்ளுவர்.

நம்மைச் சுற்றிப் பாருங்கள், விதியின் வலியால் வீடிழந்தோர், போரின் கொடுமையால் நிர்க்கதியானோர், இயற்கையின் சீற்றத்தால் அநாதையானோர்.

"பசித்திருக்கும் அவர்களுக்கு உணவளியுங்கள். சமயத்தை மறந்துவிடுங்கள்" என்றார் விவேகானந்தர். ஆம். இங்கேதான் மாணவர்களாகிய எமக்கு வழி தென்படுகின்றது. பாரிய அளவில் மற்றவர்களுக்கு உதவிசெய்யமுடியாவிடிலும் சக உயிர்களுக்கு அன்புகாட்டவாவது முடியுமல்லவா?

எமது சமயம் மறைந்துவருவதற்குக் காரணம் இதுவே. நாம் கிரியைகளில் செலுத்தும் கவனத்தை உண்மையான சமய வாழ்வில் செலுத்தியிருந்தோமானால் இன்று இவ்வாறு தவிக்க வேண்டியதில்லை.



விவேகானந்தர் அன்று நூறு இளைஞர்களைக் கேட்டார். எவரும் எழவில்லை. இன்றோ ஆயிரக்கணக்கானோர் சேர்ந்து மகாநாடுகள் நடத்துகின்றோம். ஆனால் என்ன சாதித்தோம்? அன்று அம்மாமனிதர் தனி ஒருவராக நின்று செய்ததன் நூற்றில் ஒரு பங்கைக்கூட எம்மால் சாதிக்க முடியவில்லை. ஏன்? எமது குறிக்கோளை நாம் உணரவில்லை.

இளைஞர்களாகிய எமக்கு முன் இன்று இரண்டு பணிகள் உள்ளன. அவற்றுள் முதலாவது எமது மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாகும். நாம் அனைவரும் எமது கருத்துக்களை வெளியிடுவதில் வீரர்கள். கவிதைகள், கட்டுரைகள், பேச்சுக்கள்.... இன்று முதியோரைவிட மாணவர்களே இதிற் சிறந்து காணப்படுகின்றனர். அப்படியானால் எமது மக்களைத் தட்டியெழுப்புவதற்கு இந்த மாணவர்களை விட வேறு யாரும் உண்டோ? எமது திறமைகளை, எமது ஆக்கங்களை எமது சமயத்திற்குச் சாதகமாகத் திருப்புவது எமக்கு ஒன்றும் பெரிய விடயமல்ல.

நாம் இதைச் செய்துவிட்டோமென்றால் எமது இரண்டாவது கடமை ஒன்றும் பெரிதல்ல. உலகிலுள்ள அனைவருக்கும் அன்பு செலுத்துவதே அது,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே"

என்கிறார் திருமூலர்.

இந்து மதத்தின் உச்ச நிலை அதுவே. பூரணமான அன்பைச் செலுத்தும் ஒருவன் முத்தியடைந்து விடுகிறான் என்பதற்கு உதாரணமாக விளங்கியவன் குகன்.

"அற்றம் நீத்த மனத்தினன். அன்பினன்" என்று கம்பர் குகனைப் பாடுகிறார். அவன் பின்பு பேரின்பப் பெருவாழ்வு பெறுகிறான். அன்பு செலுத்துவது எமக்கு ஒன்றும் கடினமானது அன்று. அது பிறருக்கும் எமக்கும் நன்மை செய்வது. கொடுக்கக் கொடுக்கக் குறையாதது.

இந்து மதம் ஒரு கத்தியின் விளிம்பில் நடக்கின்றது. அதைக்காப்பது எமது கடமை. உண்மையான சமய வாழ்வே நமது போர்முறை. அன்பே நம் ஆயுதம்.

"எழுமின்! விழிமின்! கருதிய காரியம் கைகூடும்வரை
அயராது உழைமின்!"

T. ஸ்ரீரமணன்
ஆண்டு 11 Q

கல்லூரிக்குள்ளான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

சிந்திப்போம் சிறகடிப்போம்

சுதந்திரமாய் சிறகடித்துத் திரிந்தாய் என் மனதே – நீ
சிந்தித்தால் உயர்ந்திடுவாய் ஆழிகூட உனதே
பூமியிலே மிக உயர்ந்த கொள்கைதனை நோக்கினால்
பூமழையாய் பொழியும் உன் உள்ளமெனும் வெளியில் . . . .

விதிதனையே மதியால் வெல்லும் சிந்தனையை நோக்கி
வீடுபேறு அடைந்த முன்னோர் கூறும் வார்த்தை கேளீர் . . . .
வேதனையே களையாக முளைக்கின்ற பாரினிலே
வேரைப் போன்ற உறுதியுடன் சிந்தனை செய் மனமே . . . .

அச்சமில்லை அச்சமில்லை என்றுரைத்த பாரதி
அறிவுடனே கூறும் வார்த்தை சிந்தனையால் உயர்வதே . . . .
சிந்தனையால் உயர்ந்திடுவோம் சிறகடித்துப் பறந்திடுவோம் . . . .
சிறுவராக இருந்தாலும் சிந்தனை தனில் உயர்வு வேண்டும்.

சோககீதம் உன் வாழ்வில் இடையிடையே ஒலித்தாலும்
சோர்வின்றி சிந்தித்து செயற்பட்டால் வெற்றியே
வாழ்வினில் ஓர் இலக்கை நோக்கி புறப்படுவாய் மனமே
வன்மையாக சிந்தித்தால் அருகில் வெற்றி தினமே.

மகிழ்ச்சியாக வாழ்வதெனில் சிந்தனையே வேண்டும்
மறுபிறப்பில் தொடரும் கல்வி சிந்தனையால் வளமுறும்
சிந்தனையால் செய்யும் செயல் என்றென்று வளம் பெறும்
ஆண்டுதோறும் சோகங்களை சிந்தனையால் வெல்லலாம்.

வறுமையிலும் செழுமையாக வாழ்வதற்குதவும் சிந்தனை
வலிமையின்றி வாழ்ந்தாலும் சிந்தனையால் உயர்வாய்
முன்னோர் சொல் வார்த்தைக்கிணங்க நடத்தைதனை காண்பாய்
முழுமையான வாழ்வதனில் சிந்திப்பாய் சிறகடிப்பாய்.

M. பிரணவன்
ஆண்டு 8 R

கல்லூரிக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

தாயே எம்மைத் தாலாட்டு

பிறந்த பொன் நாட்டிலே
பித்தர்களாய்,
அடிமைத் திறத்திற்கோர்
அடையாளங்களாய்,
அலைந்து திரிந்தவர்களை...

தலை குனியக் கூடாதென்பதற்காய்த்
தலையையே இழந்து
தத்தளித்தவர்களை...

சிறுபான்மை என்ற போர்வையிலே
சதிகாரர்களாற்
சிதைக்கப்பட்டவர்களை

தட்டியெழுப்பித்
"தமிழன்" என்று
பறைசாற்றிவிட்டோம் ...

தாய்மண்ணிலே
தத்தளித்த
தமிழரைத்
தீச்சுடராய்ச் சீற வைத்தோம் ...

அகதிகளாய்
அலைந்து திரிந்தவரை
அனலாய் மாற்றிவிட்டோம் ...
மறத்தமிழன் இவனென்று
மண்ணிலே பறைசாற்றிவிட்டோம் ...

அடுப்பங்கரையில்
அக்கினியால் வெந்தவர்களைப்
பூக்களல்ல
பூகம்பமென்று
புரிய வைத்துவிட்டோம் ...

தாயே! உனை
வென்றெடுக்க
வேங்கைகளாய்ப் பாய்ந்து விட்டோம் ...

அடங்கிப் போவான்
அற்பத்தமிழன் என்று
ஆதிக்கம் செலுத்தியவர்களை,
அறை கூவியின்று
அழித்துவிட்டோம் ...

சமாதான அழைப்புக்களை
இழிவாக்கிச்
சன்னதம் கொண்டிருந்த
சதிகாரரைச்
சாய்த்து விட்டோம் ...

குண்டு மழைபெய்ய
நின்று விளையாடி,
இன்று வென்று விட்டோம் — புதிய
சரித்திரம் படைத்துவிட்டோம் ...

"அடுத்தவன்" பிடியிலிருந்து
ஆனையிறவு
மண்ணைக் காக்க,
மாய்ந்து விட்டோம் — இன்று
மாவீரர்களாய் ...

உனக்காய்
உயிர் துறந்த பெருமையிலே
உறங்குகிறோம்
உன்மடியில்
"தாயே எம்மைத் தாலாட்டு."

B. பார்த்திபன்
ஆண்டு 11 Q



கல்லூரிக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

தாயே எம்மைத் தாலாட்டு . . . .

புதைக்கப்பட்ட உரிமைகேட்க
புறப்பட்டவர்கள் நாங்கள்...
புயலாய் வீசி பூகம்பமாய் வெடித்து
புதைந்து கிடக்கிறோம்
புண்ணிய பூமியின் கீழ் ...

கதைகளைப் பேசி
காத்திருந்தோம் காரியம் நடக்கவில்லை ...
கையில் எடுத்தோம்
கற்றுக்கொண்ட போர்க்கலையை
களத்தில் வீசினோம் ...

இருபது ஆண்டுகளாய்
இரத்தமுற்றி ஏற்றிவைத்த தீபம், ...
இருளை விலக்க
இதுவரை போராடியது, ...
இணங்காத காற்றோடு ! ...

ஏனிந்த போராட்டம்? ...
என்பவர்க்கு ஒருபதில் ...

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
ஆட்சி செய்த எம்மொழி
ஐம்பதாண்டு பள்ளத்தில் ...
அழிந்து போதல் முறையோ ...

உலக மொழிகள்
வேர்விடும் முன்பே
விழுதிறக்கிய விருட்சத்தை ...

வீணென்று — வெட்டி
வீழ்த்துதல் சரியோ ! ...
தமிழ்த்தாயின் மானம் காப்பது
தமிழரெம் கடமையன்றோ ...

தாகம் வந்த போது
தமிழைக் குடித்த நாங்கள் — அது
தடுக்கி விழும் போது
தள்ளி நிற்கலாமோ? ...

எரிக்கப்பட்டாலும், புதைக்கப்பட்டாலும்
எம் தமிழுக்காம்
எழுந்து வரும்
எங்கள் போராட்டம் ...

பயனேதுமின்றிப்போம் — எனப்
பயந்திருந்தோம் ! ...

எங்கள் வீரர்களின்
எழுச்சிப் போராட்டம் — விழுந்த தாயை
எழுந்து நிற்க செய்ததன்றோ ! ...

போர்க்கொடி உயர்த்தி
புண்ணாகிக் கிடக்கும் — எங்கள்
கடந்த காலங்கள் ! ...
மண்ணோடு அரித்த
மனக்கதவுகளின்
சாவித்துளையினூடு வந்து
சௌக்கியம் பேசுகின்றன ! ...

விடுதலை வேண்டி — விம்மி வெடித்து
விழுந்து ஓடி ...
மடிந்த பனையோடும்
இடிந்த மனையோடும்
கதைகள் மீட்டினோம் ! ...

நிலவு முற்றத்தினில்,
உலவும் தென்றலிடை, ...
உறக்கம் தேடினோம் ! ...

கீரிமலைக் கேணி
நீரில் குளித்து
ஊரின் கடற்கரை மண்
வாரி இறைத்து
ஒற்றைக் கால் துள்ளி
ஓடி விளையாடி

கழிந்துபோன — எங்கள்
கடந்த காலங்கள் ! ...

இனி எப்போது வந்து
இணையப் போகிறது? ...

அதன் நினைவுகள் ...
அல்லும் பகலும் ... ஆவியை
அலைக் கழிக்கிறது ! ...

எமக்கு மறுக்கப்பட்ட — இந்த சுதந்திரம்
இனி வருபவர்க்காவது
இனிதாம் கிடைக்க வேண்டும் ...

இதனால் எழுந்த போராட்டம்
இதோ இருசாராரின்
இணக்கத்தில் இறுதி நாற்கு எல்லை
கண்டது ...

எங்கள்
செங்குருதியை
செந்தூரமாய் எடுத்து
அழிந்த தமிழ் தாயின்
திலகத்தை மீண்டும்
கொடுத்திருக்கிறோம் ...

நாங்கள் புதைக்கப்பட வில்லை —
தமிழ் மீண்டும்
துளிர்ப்பதற்கு
விதைக்கப்பட்டிருக்கிறோம் ! ...

தமிழ்தாயே ... உன்மடியில்
தலைவைத்து
உறக்கம் கொள்ள ஆசை
உன்மடிக்காகவே உயிர் இன்னும்
உலவுகிறது ! ...

தகர்ந்து கிடக்கும் — உன்
தனையன்கள் உறங்க — ஒரு
தாலாட்டுப் பாடு
தாயே ! ...

S. சூரியபிரதாப்
ஆண்டு 11 R

கல்லூரிக்குள்ளான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

சோற்றுப் பருக்கைக்காக . . . .

சுரேஸ் என்பவன் ஒரு சிறிய கிராமத்தில் படித்து வந்தான். அவன் தனது ஒரு வேளை உணவுக்குக் கூட கஷ்டப்படும் குடும்பத்தைச் சார்ந்தவன். அவனுடைய அப்பா குடிப்பதே தன் வாழ்க்கை எனக் கொண்டவர். அவனுடைய அம்மாதான் அயலிலுள்ள பணக்காரர்களிடம் பாத்திரங்கள் கழுவி பணம் சம்பாதித்து வந்தார். அந்தக் காசைக் கொண்டுதான் தனது மகனுடைய படிப்புச் செலவுக்காகச் செலவு செய்தார். அந்த அன்னை தான் உணவு உண்ணாமல் வாடியாவது மகனைப் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்திருந்தார்.

மகன் பள்ளிக்கூடத்தில் நன்றாகப் படித்து வந்தான். அவனுடைய நண்பர்களில் சிலர் அவனை படிக்க விடாது சூதாடுதல் போன்ற தீய பழக்கங்களுக்கு உட்படுத்தினர். மகன் தினமும் பாடசாலை செல்லாது தனது நண்பர்களுடன் ஊர் சுற்றித்திரிந்து வந்தான். அவன் அம்மாவிடம் படிப்புச் செலவுக்கு எனக் கொண்டு செல்லும் பணத்தை எல்லாம் சூதாட்டத்தில் இழந்துவிடுவான். அவன் படிப்பைப் பெரிதும் கவனத்திற் கொள்ளாது அம்மாவின் பணம் முழுவதையும் செலவு செய்து வீடு திரும்புவான்.

பாவம் அவனுடைய அம்மா.... மகன் நன்றாகப் படிக்கிறான் என எண்ணி அவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு அவர் அரை வயிறு கஞ்சியோ கால் வயிறு கஞ்சியோ குடித்துக் காலத்தை போக்கினார். அவர் திடீரென ஒரு நாள் மயக்கமிட்டு விழுந்து விட்டார். அன்று அவள் மகன் பாடசாலைத் தவணைக் கட்டணத்திற்குப் பணம் கொடுத்திருந்தார். தாயார் மயங்கிய விடையம் தெரியாத சுரேஸ் பணம் முழுவதையும் செலவு செய்துவிட்டு வீடு திரும்பினான்.

அம்மா பார்க்க யாருமில்லாது அநாதையாக மயங்கிக் கிடந்ததைக் கண்ட அவனுக்கு கையுமோடவில்லை காலும் ஓடவில்லை. அம்மா தினமும் கால் வயிற்றுக் கஞ்சிக்கே தள்ளாடுவது அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது. பின் சுரேஷ், அம்மா வேலை செய்யும் பெரியவர்களிடம் காலில் விழுந்து சிறிதளவு பணம் புரட்டி வைத்தியரைக் கூட்டி வந்து பார்த்தால் அம்மா இறந்து விட்டார்.

சுரேஷ் பின்னர் கல்வி கற்கவும் முடியாமல் ஒரு வேலையும் தெரியாமல் வாழ்க்கையில் என்ன செய்வது என்றும் புரியாது குழம்பினான். அன்று அவன் வேலைதேடிச் சென்று வரும் வழியில் அவனுடைய அப்பா குடிமயக்கத்தில் இருப்பதைக் கண்டான். பின்னர் அப்பாவை வீட்டுக்கு கூட்டிச் சென்று அவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு ஆளானான்.

இவ்வாறே சிறிது காலத்தில் அவனுடைய அப்பாவும் இறைவனடி சேர்ந்துவிட்டார். அவன் என்ன செய்வது எனத் தெரியாமல் வேலையில்லாமல் ஒரு சோற்றுப் பருக்கைக்காக அலைந்தான். அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது கல்வியின் பெருமை பற்றி. கல்வி இல்லாமல் வாழ்க்கையில்லை. அவனது கனவு வாழ்க்கை பசியிலேயே தொடர்ந்தது.

முற்றும்.....

T. கபிலன்
ஆண்டு 8 R

கல்லூரிக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

காற்று சொன்ன கதை

டாண் !, டாண்!, டாண்!; கோயிலின் மணி பூசைக்கான அறிவிப்பைச் சொல்லாமல் சொல்லியது. காலையில் பள்ளி செல்லும் சிறார்கள் வெண்ணிற மல்லிகைகள் போல் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தார்கள்; பறவைகள் சிறகடித்துப் பறந்தன; ஆக மொத்தத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே கிராமியக் களையும் பசுமையும் மாற்றமின்றி அப்படியே இருந்தது.

நான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் படிப்பைத் தொடர்வதற்காக நாகராயப்பட்டினமாகிய என் அழகிய சிற்றூரை விட்டு வெளியூர் சென்றேன். இப்போது படிப்பு முடிந்து ஆறாண்டுகள் ஆகின்றன. ஒரு நிரந்தரமான உத்தியோகமும் கிடைத்துவிட்டது. இருந்தாலும் சொந்த ஊருக்குத் திரும்பி வரவேண்டும் என்ற இயற்கையான உந்துதல்தான் என்னைத் திரும்பியும் நாகராயப்பட்டினம் வரை இழுத்து வந்திருக்கிறது. எனக்கு உறவினர்கள் யாரும் இல்லை. ஆனாலும் இக் கிராமத்தில் முன்பு வாழ்ந்த வீடு இருக்கிறது.

ஊரினுள் பிரவேசித்தவுடன் என்னை மக்கள் அடையாளம் கண்டுகொண்டபின் வரவேற்பு அமோகமாக இருந்தது. என் பழைய வீடு பாழடைந்திருந்தாலும் பெரிதாக ஒன்றும் நடந்திருக்கவில்லை. வீட்டை சுத்தம் செய்யவே இரு நாட்கள் ஆனது. என் நண்பர்களெல்லாம் காட்டிய அன்பு மழையை உணர்ந்தபோது எனக்குத் தொழிலை விட்டு கிராமத்துக்கு வந்துவிடலாமோ எனக்கூடத் தோன்றியது.

கிராமம் வந்து மூன்றாம் நாள் மாலை நண்பர்களுடன் கோயிலுக்குச் சென்றேன். சிவன் கோயில் விஸ்தீரணமான கருங்கற் கோயில். என் பால்ய ஆத்ம நண்பர்களுடன் பூசைகளில் கலந்து கொண்டேன். அந்தக் கோயில் மீது இவ்வளவு நாளும் இல்லாத பாசமும் பற்றும் என்னையறியாது வந்தன. என் சொற்ப கல்வியறிவைக் கொண்டு அதன் மதிப்பை அளவிட்டேன். குறைந்தது இருநூறு வருடங்கள் பழமையான கோவில். ஆரம்ப காலத்தில் வேடுவர்கள் இக் கோயிலைப் பராமரித்து வந்ததாகக் கூறக் கேட்டுள்ளேன். இதன் அருமை புரியாது பயன்படுத்தப்படுகிறது என உணரவும் உள்ளூர, இதைப் புனரமைக்க வேண்டுமென்ற எண்ணமும் உருவானது.

பூசைகள் முடிந்ததும் என் நண்பர்கள் என்னைக் கோயில் மண்டபத்தினுள் அழைத்துச் சென்று ஒரு முக்கியமான விடயத்தைக் கூறினார்கள்.



"பக்கத்து ஊரில் உள்ள வெள்ளைக்காரர் சங்கம் இந்தக் கோயிலை இடித்து விட்டு அங்கு தேவாலயம் கட்டப் போகிறார்களாம். போன வாரம் இங்கு வந்து இடமெல்லாம் அளந்து விட்டுப் போனார்கள்."

உள்நெஞ்சில் உருகக் காய்ச்சிய ஈயத்தை ஊற்றியதுபோல் இருந்தது எனக்கு. தொடர்ந்து அவர்கள் பேச்சில், ஊர்மக்கள் அனைவரும் இதை வெறுப்பதும், சரியான தலைமை இல்லாமல் ஆங்கிலேய சர்க்கார் அரசாங்கத்தை எதிர்க்க முடியாமலுள்ளதும் விளங்கியது.

அன்று மாலையே நான் நண்பர்களை அழைத்து ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டினேன். நண்பர்கள் ஆமோதிப்பவற்றை ஆமோதித்தார்கள். மற்றவற்றை ஆட்சேபித்து வேறு யோசனைகளும் கூறினார்கள். இறுதியாக ஒரு சிறந்த திட்டம் தயாரானது.

ஊர்மக்கள் அனைவரையும் கூட்டினோம். திட்டத்தை எடுத்துக்கூறி அனைவரின் விருப்பத்தையும் கையெழுத்தையும் பெற்றோம். சுமார் நூறு குடும்பங்கள் ஆமோதிக்கப்பட்ட மனு தயாரானது. ஆனாலும் அது தயாராகி முடியும்போதே எதிரிகள் விஸ்வரூபமெடுத்துவிட்டார்கள்.

கோயிலை "அடையாள இடிப்பு" இடிப்பதற்காக ஒரு புல்டோசர் இயந்திரமும் வெள்ளைத் துரைமாரின் ஜீப்பும் கோயில் வாசலில் வந்து நின்றன.

"எல்லோரும் வெளியே வாருங்கள்! கோயிலை இடிக்கப்போகிறோம்." துரையின் செக்குத்தடி கூவினான். நான் ஊர்மக்களைக் கோயிலுள் நிறுத்திவிட்டு நண்பர்களுடன் வெளியே வந்தேன். "இடிக்க விடமாட்டோம். செய்ய முடிந்ததைச் செய்யுங்கள்." ஆங்கிலத்தில் கூறினேன்.

துரையின் தலைக்கு விஷமுறுக்கேறியது. புல்டோசருக்கு கட்டளையிட்டான். மறுநொடி பலத்த காற்று புயல்போல் வீசத்தொடங்கியது. புல்டோசர் சட்டை செய்யாது முன்னேறியது. அதன் கை கோயில் கோபுரத்தைத் தொட்டு..... தொட்..... "சடார்!" என ஒரு பூகம்பம் போன்ற ஓசை. கோபுரம் வீழ்ந்தது என எண்ணி மெதுவாகத் தலையைத் தூக்கினோம். என்னே இறைவன் கருணை! புயற்காற்றால் சரிந்த மரம் புல்டோசரையும் துரையையும் ஒருமிக்கத் தரைமட்டமாக்கிக் கொண்டு விழுந்திருந்தது கோயில் வாசலிலிருந்த ஆலமரம். துரையும் உதவியாளர்களும் இரத்த வெள்ளத்தில் மிதந்தார்கள். ஊராரோடு சேர்ந்து நானும் சந்தோஷக் கூத்தாடினேன்.

அநியாயக்காரர்களை அப்படியே விட்டுவிட்டு வீடுகள் ஏகினோம். புயற்காற்று குளிர்ந்து தென்றலாக மாறியது. "இந்த ஊரை விட்டுப் போகாதே! இந்த துரை போனால் இன்னொரு துரை வருவான். அவர்களிடமிருந்து இவர்களைக் காப்பாற்று!" எனக் காதில் கூறியது. ஏதோ ஒரு ஊக்கமும் நம்பிக்கையும் கைகொடுக்க, ஒரு காகிதத்தை எடுத்தேன். எனது நிறுவனத்திற்கு இராஜினாமாக் கடிதம் எழுத.

S. நிஷாந்தன்
ஆண்டு 10 R

இந்து மாணவர் மன்றம் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையே 2.2.2003 அன்று நடாத்திய "சமயத் திறன்காண் போட்டிகள் 2003"இன் முடிவுகள்

பேச்சுப் போட்டி

கீழ்ப்பிரிவு

1வது	–	T. தியாகேசன்	– நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம்.
2வது	–	L. பிரியதர்சினி	– இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது	–	Y. கார்த்திகா	– மகாஜன கல்லூரி, தெல்லிப்பளை.

மத்தியபிரிவு

1வது	–	T. கர்சன்	– யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
2வது	–	K. கிரீசன்	– சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு.
3வது	–	S. வித்யாஷினி	– புனித திருத்துவ கல்லூரி, நுவரெலியா.

மேற்பிரிவு

1வது	–	K. R. கோகுல்நாத்	– விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.
2வது	–	V. S. அஜந்தன்	– பரி. தோமாவின் கல்லூரி, கல்கிசை.
3வது	–	K. விஜயஷாந்தி	– விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.

கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு

1வது	–	P. துவாரகன்	– இந்துக் கல்லூரி, கொழும்பு.
2வது	–	U. லக்ஷிகா	– பிஷப் கல்லூரி, கொழும்பு
3வது	–	S. ஜெகன் விஷ்ணுவர்த்தன்	– பரி. தோமாவின் கனிஷ்ட பாடசாலை, கொழும்பு

மத்தியபிரிவு

1வது	–	S. தாஸ்குமார்	– இந்துக் கல்லூரி, இரத்மலானை.
2வது	–	T. நிதர்ஷனா	– திருக்குடும்பக் கன்னியர்மடம், கொழும்பு.
3வது	–	N. குருஷாந்	– இந்துக் கல்லூரி, இரத்மலானை.

மேற்பிரிவு

1வது	–	R. சுகன்யா	– இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது	–	S. கீர்த்தனா	– திருக்குடும்ப கன்னியர்மடம், கொழும்பு.
3வது	–	S. திலகா	– இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.

கவிதைப் போட்டி

கீழ்ப்பிரிவு

1வது	–	M. அபிலாஷினி	– பிஷப் கல்லூரி, கொழும்பு.
1வது	–	S. டயஸ் ஷாந்தன்	– புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை.
3வது	–	K. அஸ்வின்காந்த்	– புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை.

மத்தியபிரிவு

1வது	–	S. ஷண்முகபிரியா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது	–	S. சஷிகா	– திருக்குடும்பக் கன்னியர்மடம், கொழும்பு.
3வது	–	M. ஷாளினி	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது	–	S. ஜனனி	– சாந்த கிளெயர் கல்லூரி, கொழும்பு.

மேற்பிரிவு

1வது	–	S. கார்த்திகா	– மோபிறே கல்லூரி, கண்டி.
2வது	–	S. திவ்யா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது	–	R. கிரிதரன்	– யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

சிறுகதைப் போட்டி

கீழ்ப்பிரிவு

1வது	–	P. செந்தூரன்	– திருத்துவ கல்லூரி, கண்டி.
2வது	–	G. ஜனனி	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது	–	N. நவலக்ஷி	– சாந்த கிளெயர் கல்லூரி, கொழும்பு.

மத்தியபிரிவு

1வது	–	A. பானுஜா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது	–	S. அபர்ணா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது	–	K. கௌசல்யா	– மெதடிஸ்ட் கல்லூரி, கொழும்பு.

மேற்பிரிவு

1வது	–	G. ஜெகவித்தியா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது	–	J. சுதர்சனா	– இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது	–	S. மயூரன்	– யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
3வது	–	N. சுபாஷினி	– மெதடிஸ்ட் கல்லூரி, கொழும்பு.





பண்ணிசைப் போட்டி

கீழ்ப்பிரிவு

1வது – S. கஸ்தூரி – மெதடிஸ்ட் கல்லூரி, கொழும்பு.
2வது – S. நிஷா – திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு
3வது – T. தர்ஷாந் – புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை.

மத்தியபிரிவு

1வது – S. கவினாளி – இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது – S. சிந்துஜா – சாந்த கிளெயர் கல்லூரி, கொழும்பு.
3வது – M. ஆரணி – இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.

மேற்பிரிவு

1வது – J. காண்டீபன் – யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
2வது – K. பவித்ரா – இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.

திருக்குறள் மனனப் போட்டி

1வது – R. அகல்யா – இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
2வது – K. திவியா – இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
3வது – D. ரஜிகா – இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.

சமய அறிவு வினாவிடைப் போட்டி 2003

1வது – இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு.
- S. சுனந்தா
- C. நீரஜா
- B. ஷியாமளா
- A. வித்யா

2வது – இந்துக் கல்லூரி, கொழும்பு.
- S. வசந்த்
- P. சுகந்தன்
- R. ருக்ஷான்
- K. திவாகரன்

3வது – திருத்துவக் கல்லூரி, கண்டி.
- G. மகேந்ரா
- K. பிரதீப்குமார்
- B. பரந்தாமன்
- S. நிஷாந்

சமய அறிவு வினாவிடைப் போட்டியின் சிறந்த போட்டியாளர்:
R. ருக்ஷான்
இந்துக் கல்லூரி, கொழும்பு

நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமயத் திறன்காண் போட்டிகளில் கிடைத்த இடங்களின் அடிப்படையில் அதிக புள்ளிக்கள் பெற்று

அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்

நினைவுக் கேடயத்தை

இவ்வருடம் கைப்பற்றும் பாடசாலை

இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

கொழும்பு

மேன்மைகொள் சைவநீதி எங்கும் விளங்கிடல் வேண்டும் என்ற உயரிய நோக்குடன், மாணவர் திறனை வெளிக்கொணர, இறையருளால் நாம் நடாத்திய அகில இலங்கை ரீதியான "சமயத் திறன்காண் போட்டிகள் 2003"ல் பங்கு பற்றிய அனைத்து மாணவச் சகோதர, சகோதரிகளுக்கும் பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் அவர்களைப் பாதுகாப்புடன் அழைத்துவந்த பொறுப்பாசிரியர்களுக்கும் அவர்தம் பாடசாலைகளுக்கும் றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இதுபோல் என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டிநிற்கிறது.

வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

செயற்குழு

2003 — 2004

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

தமிழும் இந்து மதமும்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடிகளாற் பேசப்பட்டது எமது தாய்மொழியாம் தமிழ்மொழி. கன்னித் தமிழ், கவித் தமிழ், இன்பத் தமிழ் எங்கள் இனிய தமிழ். கரும்பிலும் இனியது இசைத் தமிழ். தித்திக்கும் தேன் போன்றது இயல் தமிழ். தீம்பான மாங்கனி போன்றது நாடகத் தமிழ். இத்துணை சிறப்புவாய்ந்த எம்தாய் மொழியாம் தமிழ்மொழியுடன் அன்று தொட்டு இன்றுவரை பிண்ணிப் பிணைந்து, இணைந்து, ஒன்றுபட்டுக் காணப்படுவது நாற்குரவர்கள் தோன்றி வளர்த்த இந்து சமயம். தமிழ் உயிரென்றால், உடல் இந்து சமயம்.

சைவத்தின் முதல்வர்களாம், நாற்குரவர் பாடிய திருப்பாடல்கள் இருப்பது தமிழ் மொழியில். அமிழ்தினும் இனிய மொழியாம் தமிழ்மொழிக்கு உயிர் நாடியாக, உடன் பிறப்பாக இருப்பது எது? இந்து சமயம். இதுவே திக்கெட்டிலும் இருந்து வரும் ஒரே பதிலாகும்.

பாண்டிய மன்னர் வளர்த்த பண்டைத் தமிழ் வகைவகையாய் வரங்கள் தந்த வண்ணத் தமிழ், இளமை குன்றா இனிமைத் தமிழ், என்றுமழியா அன்புத் தமிழ் எங்கள் தமிழ். இச்சிறப்புக்கள் வாய்ந்த நற்றமிழின் நண்பனாக கைகோர்த்து நிற்பது தமிழ் தோன்றிய காலத்திலேயே தோன்றி, தமிழுடன் ஒட்டி உறவாடும் இந்து சமயம்! மட்டுமே என்பதை எவராலும் மறுக்க முடியாது!

தமிழ் கலாச்சாரமும், இந்து மதக் கலாச்சாரமும் ஒன்று என்பது இவையிரண்டும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதைக் காட்டும் சான்றாகும். எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இந்து சமயம் ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி நிலை பெற்று நிற்குமென்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. வேட்டி கட்டுவது தமிழர் பண்பாடு எனில் அதுவே இந்து சமயத்தின் கலாச்சாரம் ஆகும். தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பை நாம் இங்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இளையான் குடிமாற நாயனார் சிவனடியார்களுக்கு அமுது படைத்து முத்தி பெற்ற ஒரு நாயனார் ஆவார். "செந்தமிழ் நாட்டினிலே வாழ்கின்ற சேயிழை யார் எவரும் வந்த விருந்தோம்பும் வழக்கத்தை வாய்விட்டுச் சொல்லுகையில்" என்ற வரகவி பாரதியின் தாசனாம் பாரதிதாசனின் பாடலடியில் இருந்து தமிழ்ப் பெண்களின் தொன்றுதொட்டு வரும் வழக்கமானது விருந்தோம்பல் வழக்கம் என்று இங்கு தெட்டத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றது.

பண்டைக்காலத் தமிழ் மன்னர் தமிழோடு இந்து சமயத்தையும் வளர்த்ததாகக் கூறுகின்றது வரலாறு. சோழ மன்னர்கள் சிவபக்தர்கள். இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய சிறப்புக்களைக் கொண்ட பிரசித்தி பெற்ற சிவாலயங்களை



அமைத்துள்ளனர். இதிலிருந்தே தமிழுக்கும், இந்து சமயத்திற்கும் அக்காலத்திலிருந்தே காணப்பட்டு வந்த தொடர்பு தெட்டத்தெளிவாக விளக்கப்படுகிறது.

இந்து சமயத் தோத்திரப் பாடல்கள் சைவ சித்தார்ந்த நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே காணப்படுகின்றன. நடராஜர் திருநடனம் புரியும் பொன்னம்பலத்தில் வாழும் மக்கள் அனைவரும் தமிழர்கள். தில்லை வாழ் அந்தணர்களால் பூட்டிவைக்கப்பட்டிருந்த ஓர் அறைக்குள்ளேயே திருப்பாடல்கள் காணப்பட்டதாகவும், அவ்வரிச்சுவடிகள் ஒரு தமிழ் மன்னனின் முயற்சியினால் வெளிக்கொணரப்பட்டு நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டதாகவும் கூறுகின்றது புராண வரலாறு.

இந்து சமய நூல்கள் எம் தமிழன்னைக்கு அழகிய ஆபரணங்களாகி அழகிற்கு அழகு சேர்க்கின்றன. இந்து சமயத்தின் இணையற்ற வளர்ச்சிக்கு தோளோடு, தோள்கொடுத்து நண்பனாக நின்ற பெருமை தமிழ் மொழியையே சாரும். அதே போல் இந்து சமயமும் தமிழின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது என்று நாம் இயம்பினால் மிகையாகாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்றான் பாரதி. தமிழ் மொழிக்குக் கிடைத்த இந்த வளர்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும் காரணமாக அமைவது இந்த இந்து சமயமே என்பதில் ஐயமில்லை.

இந்து சமயக் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்களில் காணப்படும் கொடிகள் பண்டைய தமிழ் மன்னரினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்து சமயத்தை வளர்த்த பல புலவர்கள் தமிழ் புராணங்களில் காணாப்படுகின்றனர். அவர்கள் என்றும் புகழாரத்தோடு, வெற்றி நடை, வீரநடை போடும் தமிழையும் வளர்த்துள்ளனர்.

இன்று நாம் பார்ப்போமானால் நூற்றிற்கு தொண்ணூறு சதவீதமான தமிழர்கள் இந்து சமயத்தையே பின்பற்றுகின்றனர். மேற்கத்தேய நாட்டாரின் வருகையின் பின்னரே தமிழரில் சிலர் வெவ்வேறு மதங்களிற்கு மாறினர். அதற்கு முன்னர் தமிழர் அனைவரும் இந்துக்களே என்ற கோட்பாடு உலகெங்கும் பரந்து, விரிந்து காணப்பட்டது எனலாம்.

அன்று முதல் இன்றுவரை தமிழ்மொழியும், இந்து சமயமும் என்றும் மங்காத ஒளி விளக்குகளாக காணப்படுகின்றன. தொன்றுதொட்டு புகழ் மணம் பரப்பிவரும் தமிழ் மொழியும், இந்து சமயமும் ஈருடல் ஓருயிர் என்று கூட நாம் விளக்கிவிடலாம். வண்டமிழ், தண்டமிழ் என்றெல்லாம் அழைக்கப்படும் தமிழ் இந்து சமயத்தின் இணைபிரியா நண்பன் என்று கூடச் சொல்லி விடலாம். தேனையும் பாலையும் அனைவரும் விரும்புவது போல தமிழ் மொழியையும், இந்து சமயத்தையும் எல்லோரும் விரும்புவர். உலகெங்கும் பேசப்படும் தமிழ் மொழியும் நாற்குரவர்களால் வளர்க்கப்பட்ட இந்து சமயமும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். எவ்வாறு நகமும், சதையும் ஒன்றிணைந்து இருக்குமோ, அதேபோன்று தமிழும், இந்து சமயமும் ஒன்றிணைந்து காணப்படும். ஆகவே நாமும் தமிழ் மொழியையும், இந்து சமயத்தையும் வளர்ப்போமாக!

P. துவாரகன்
இந்துக் கல்லூரி, கொழும்பு



பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

சைவத் தமிழ் இலக்கியங்களில் ஆன்மீகம்

பண்டைக் காலம் தொட்டு இற்றைய நவீன காலம் வரையும் "கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய மூத்த பெருங்குடிமக்கள்" என வரைவிலக்கணத்தைப்பெறும் ஏராளமான இலக்கியங்கள், காவியங்கள் தோன்றியுள்ளன. கண்ணோட்டமாகப் பார்ப்பில் அனைத்து இலக்கியங்களிலோ, நாவல்களிலோ ஆன்மீகம் எனும் ஓர் அடிப்படைத் தேவை ஒன்று மேலோங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. ஒரு தமிழ் இலக்கியம் சிறப்புப் பெற வேண்டுமாயின் அதில் ஆன்மீகம் எனும் ஆத்ம உணர்வு இரண்டறக் கலத்தல் வேண்டும்.

பண்டைக் காலத்திலே புலவர்கள் இருந்தார்கள். புலவரை ஆதரிக்கும் மன்னர்கள் இருந்தார்கள். அவைகளிலே சிறப்பு நிகழ்ச்சி, பொது நிகழ்ச்சி என கவியரங்குகளை நடத்தி பரிசில் வழங்கினார்கள். மேலும் புலவர்கள் பாடும் பல்வேறான இலக்கியங்களை நாட்டு மக்களும் கேட்டோ, படித்தோ இன்புற வேண்டும் என்பதற்காக மேடையேற்றங்களை நடத்தினார்கள்.

தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்கள் என்று வரையறுக்கும்போது தெய்வத்தைப் போலவே ஆக்கவும், அழிக்கவும், படைக்கவும் வல்லமை பெற்றவர்கள் இருந்தார்கள். ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் என்போரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இதிகாசங்களைப் பார்த்தோமானால் இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் என மூன்று உண்டு. இங்கெல்லாம் உற்று நோக்குவோமானால் ஆன்மீகம் எவ்வளவு அவற்றில் ஊன்றியிருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

நாற்குரவர்கள் இயற்றிய தேவார திருப்பதியங்கள், ஆழ்வார் பன்னிருவரும் இயற்றிய நாலாயிரம் திவ்ய பிரபந்தங்கள் என்பன பக்திரசம் சொட்டும் இனிமையும், சுவையும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருட்சுவையும் கொண்டவை.

உதாரணமாக இராமாயணத்தை உற்று நோக்கிப் பார்த்தோமானால் அரக்கர்களின் தலைவனான இராவணன் ஒரு ஆத்மீக சிவபக்தன். அவன் தனது தவவலிமையால் ஏராளமான வரங்களைப் பெற்று மூவுலகத்தையும் ஆழ்கின்றான். திருமால் தனது அவதார கடமையை உணர்கின்றார். பூமி பாரத்தை குறைக்கவும், மக்கள் மனதில் ஆத்மீகம் நிலைபெறவும் இராம அவதாரம் எடுக்கின்றார். இராமாயணம் உட்பட அனைத்து இலக்கியங்களையும் பார்த்தோமானால் எல்லோருமே கடவுளையே நம்புகின்றார்கள். எதனைச் செய்யவேண்டுமானாலும் கடவுளையே

கேட்கின்றார்கள். தவமிருந்து கடவுளிடம் வரத்தைப் பெறுகின்றார்கள். இராமாயணமே இக்காலத்திற்குரிய நெறிமுறைகளைக் கூறுகின்றது எனலாம். அவ் இதிகாசம் பெயர் பெற்றது போன்று எமது இந்துசமயமும் பெயர் பெற்றது.

இலக்கியங்களில் எமது இந்து சமயம் எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றது என்பதை எடுத்துக்காட்ட திருக்குறள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அறத்துப்பால் உட்பட மூன்று பகுதிகளும் ஆன்மீகம் கலந்த இரண்டு வரிகள். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என ஆரம்பிக்கின்றது. தமிழ் இலக்கியமானதும் அதுவும் இந்து சமயத்தின் முக்கியத்துவமும் பெற்ற திருக்குறளானது இன்று உலகெங்கும் உள்ள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றது. மேலும் அமரர் கல்கி அவர்களை எடுத்துக் கொண்டால் அவர் ஒரு சிறந்த பக்திமானும், நாவல் எழுத்தாளரும் ஆவார். அவர் பல்லவ நாட்டு ஆலயங்களிலே உள்ள சிற்பங்களைப் பன்னிரண்டு வருடங்கள் கண் இமை மூடாது பார்த்து 'சிவகாமி சபதம்' எனும் நூலைப் படைத்தார். அதிலேயிருந்து இந்துக்களும், சைவ சமயமும் எவ்வளவு புகழ் பெற்றது என்று அறிந்து கொள்ளலாம்.

சைவத் தமிழ் இலக்கியங்களாகக் கருதப்படும்போது முக்கிய இடம் பெறுபவை தேவார திருப்பதிகங்கள் என்றால் அது மிகையாகாது. தமிழ் இனம் தனித்துவமான உலகில் முதல் தோன்றிய இனம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கும் இக்கால கட்டங்களில் நாற்குரவர்கள் ஆகியோர் தேவாரப் பதிகங்களைப் பாடி சைவசமயத்திற்குப் பெருமை சேர்த்தவர்களாகக் கீழ்வரும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் மூவரையும் குறிப்பிடலாம். ஒவ்வொரு வரிகளிலும் உள்ள சொல், பொருள் கருத்துக்கள் யாப்பமைவு என்பன மிகவும் ரசிக்கத் தக்கவை. ஒவ்வொரு பதிகமும் எமது சமயத்தில் முக்கியமான ஆலயங்களையும் எமது சமயத்தின் உன்னத நெறிகோட்பாடுகளையும் காட்டி நிற்கும். மேலும் அன்று எவ்வாறு சைவ சமயம் விருத்தியடைந்தது? நால்வகை வேதங்களின் துணைகொண்டும் இசையின் துணை கொண்டும் சமயம் வளர்ச்சியடைந்ததை காட்டி நிற்கும். தமது அற்புதமான கவிவன்மையாலும், பக்திநெறியாலும் பல இலக்கியங்களைப் புனைந்து அதன்மூலம் இறைவனைத் தம்வசப்படுத்தி இறைவனுடன் இரண்டறக்கலந்த பெருமை நால்வகை நாயன்மார்களுக்கும் உண்டு.

அடுத்ததாகத் திருமந்திரத்தை எடுத்தோமானால் திருமந்திரத்தைப் பாடியவர் திருமூலர். அவர் இறைவனால் மக்களுக்கு சைவசமயத்தில் மிகுந்த உன்னதமான கோட்பாட்டையும் கருத்துக்களையும் கூறுவதற்காக அனுப்பப்பட்டவர். அவர் இப்பூவுலகிலே மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கொரு தடவை ஒரு பாடலைப் பாடி 3000 பாடல்களைப் பாடி முடித்தார். அவருடைய ஒவ்வொரு பாடலிலும் சைவசமயத்தின் உட்கருத்துக்கள் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக "அன்பே சிவம்", "ஒருவனே தேவன்", "ஒன்றவன் தானே" எனும் சைவ சமயத்தின் உன்னத கோட்பாடுகள் திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ளன.

மேலும் திருவருட்பயனை எடுத்துப் பார்ப்போமானால் திருக்குறள் வடிவில் அமைந்திருக்கும் திருவருட்பயன் ஐந்து அதிகாரங்களும் மொத்தமாக ஐம்பது பாடல்களும் கொண்டது. மேலும் பதி, பசு, பாசம் என்பனபற்றியும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைப் பற்றியும் கூறுகின்றது. அதிலே பதியும் பசுவும் ஒன்றே என்றும், சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்





எனும் மூவகை ஆன்மாக்களையும் பற்றிக் கொண்டுள்ள ஆணவத்தை சிவவழிபாட்டின் மூலமே நீக்கமுடியும் என்றும் திமெலத்தார் எவ்வகை இயல்பினை உடையவர்கள் என்றும் அவர்கள் எவ்வகை ஆன்மாக்களை சார்ந்து எப்படியான வழிகளில் அவற்றின் சிறைகளிலிருந்து தப்பித்து இறைவனோடு இரண்டறக் கலக்க முடியும் எனவும் அழகாகவும் தத்ரூபமாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் பதியின் இயல்புகள் எவை? எண்குணங்கள் எவை? பசுவின் இயல்புகள் எவை? பசு பாசத்தில் இருந்து நீங்கி எவ்வாறு பதியை அடைய முடியும் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களைப் பற்றியும் அவற்றைப் பின்பற்றிய நாயன்மாரை மேற்கோள் காட்டி எவ்வாறான தொண்டுகளைச் செய்யலாம்; எம்மால் எவ்வளவு முடியும் என்பதும் வரையறுக்கப்பட்டுள்ளன.

சில இலக்கியங்கள் சைவ சமய கோட்பாடுகளைக் கூறுவதற்காகவே எழுந்தன. உதாரணமாக நாம் மேலே ஆராய்ந்த திருமந்திரம், திருவருட்பயன் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் இசை மூலம் இறைவனை இலகுவாக அடையலாம் என்பதற்கு இணங்க தேவாரப் பதிகங்களை நாற்குரவர்களும் பாடி மகிழ்ந்தார்கள். இவற்றில் திருவாசகம் சற்று வித்தியாசமானது. திருவாசகம் எமது முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அருட்கோலங்கள். இறைவனை நாயகனாகவும் தன்னை (மணிவாசகரை) நாயகியாகவும் புனைந்து பாடும் பதங்கள் என்பனவும் நாம் சிவபுராணமாக வெள்ளி தோறும் கோயிலில் பாடும் கிடைத்தற்கரிய யாவும் திருவாசகமே ஆகும். திருவாசகத்தின் மணிபோன்ற இனிமையினால் இறைவனே மாறு வேடத்தில் வந்து திருவாசகத்தைப் புனைந்தார். மணிவாசகர் எனும் பெயரும் பெற்றார் மாணிக்கவாசகர்.

ஆகமங்கள் சைவ சமயத்தோடு ஒன்றியவை. கோயில் கட்டவும், திருவுருவங்கள் புனைவதற்கும் அடித்தளமாக அமைந்தது. இது இறைவனால் உமாதேவியருக்கும், தேவியால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மானிடர்களுக்கும் போதிக்கப்பட்டன. சைவ சமயத்தின் இன்றியமையாத கருத்துக்களை சிவாகமங்கள் கூறுகின்றன என்றால் அது மிகையாகாது.

எனவே மேலே பார்த்தோமானால் சைவத் தமிழ் இலக்கியங்களில் எமது சமயநெறி எவ்வளவு ஆழமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது என்பதையும் அவ்விலக்கியங்களால் எமது சைவ சமயம் எவ்வளவு பாரிய முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. சில இலக்கியங்கள் எமது சமய உண்மைகளையும் கருத்துக்களையும் கூறுவதற்காகவே தோற்றம் பெற்றன. திருவருட்பயன், திருமந்திரம், ஆகமங்கள் போன்றவை. சில ஏற்கனவே உள்ள கருத்துக்களை வலியுறுத்தியும் மக்களின் மனதில் ஆத்மீகத்தை நிலை பெறச்செய்யவும் மக்களின் நெறி தவறாத வாழ்க்கை ஆன்மீக கருத்துக்களை கூறுவதற்காகவும் தோற்றம் பெற்றன. ஐம்பெரும் காப்பியங்கள், இதிகாசங்கள், தேவார திருப்பதிகங்கள், ஏனைய சமய கருவி நூல்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

S. தாஸ்குமார்
இந்துக் கல்லூரி
இரத்மலானை

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

உடலொடு உள்ளத்தையும் பண்படுத்தும் விரதங்கள்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது ..." என்கிறார் ஔவைப்பாட்டி. அவரது அந்த வரிகளில்தான் எத்தனை தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றன. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சமயமாக எமது சமயம் பிரகாசிக்கின்றது. இதனை தொல்பொருள் ஆய்வுகளும் இலக்கிய நூல்களும் மெய்ப்பித்து நிற்கின்றன. சேர் ஜேன் மார்ஷல், சேர் வில்லியம் ஜோன்ஸ் போன்ற தொல்பொருள் ஆய்வாளர்கள் கூட எமது சமயத்தின் தொன்மையையும் புதுமையையும் கண்டு வியந்து போயிருக்கின்றனர்.

"அன்பே சிவம்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய எம் சமயத்தில் எத்தனை எத்தனை புதுமைகள் புதைந்து கிடக்கின்றன! நாம் அறிந்தது சில! அறியாதது எத்தனை எத்தனை ! வார்த்தைச் சொற்களுக்குள் சிறைப்படுத்த முடியாத எம் சமயத்திலுள்ள தத்துவங்களை ஓரளவேனும் தெரிந்திருப்பதுவும், புரிந்திருப்பதுவும் அத்தியாவசியமானதே!

இவ்வாறானதொரு சமய சமுத்திரத்திலே இறைவனை எண்ணி மனதாலும் உடலாலும் நெருங்கியிருப்பதற்கென உருவாக்கப்பட்டவையே விரதங்கள். விரதம் என்றால் 'பட்டினி கிடப்பது' என பலர் எண்ணுகிறார்கள். உண்மை அதுவல்ல! எமது சமயத்தில் காணப்படும் ஒவ்வொரு சிறிய வார்த்தையிலும் கூட ஆழமான கருத்துண்டு! உண்மையில் விரதம் என்றால் உணவை விடுத்து மனதாலும் அறிவாலும் இறைவனுக்குக் கட்டுண்டு இறைவனை நெருங்கும் ஒரு வழிமுறையாகும். உணவை தனித்துவிடுத்திருப்பது 'பட்டினி' ஆனால் விரதம் என்பது அதுவல்ல! உணவை விட்டு மனதால் இறை நாமத்தை ஜெபித்து இறைவனுடன் நெருங்கும் ஓர் அணுகுமுறையாகும்.

எமது சமயத்தில் பல விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஒவ்வொரு இறைவனுக்குமென சிறப்பு விரதங்கள்! உதாரணமாக சுவாமிநாதனென போற்றப்படும் முருகனை நினைத்து 'கந்தசஷ்டி' விரதமும், மாணவர்களிற்கென சிறப்பாக அமைந்த 'நவராத்திரி' விரதமும், மார்கழி மாதத்தில் பீடைகள் நீங்க 'திருவாதிரை' விரதமும், சிறப்பானவை! இவற்றைவிட கார்த்திகை விரதம் போன்ற சிறு விரதங்களும் கூட எமது சமயத்தவர்களால் காலந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய விரதங்கள் ஏன் உருவாக்கப்பட்டவை? எதற்காக நாம் விரதத்தை அனுஷ்டிக்கிறோம்? இக்கேள்விகளிற்கு பலரிடையே தெளிவான விளக்கம் காணப்படுவதில்லை! எமது சமயத்தின் கருத்துக்கள் ஆழமானவை! தத்துவமின்றி சமயத்தில் எந்தவொரு கருத்தும் முன்வைக்கப்படவில்லை! இயந்திரமயமாக வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மிடையே ஆன்மீக உணர்வு குறைந்து வருவதற்கும் எமது அறியாமைதான் காரணம். எம் சமய கருத்துக்களை நாம் அறியாதுவிட்டால் எமது சந்ததியினரிடமும் எதிர்கால உலகத்திடமும் இதுவரை பேணிக்காக்கப்பட்ட எமது சமயக்கருத்துக்கள் சிதைவடைந்து போகலாம். எனவே எம் சமயம் தொடர்பான ஒவ்வொரு சிறிய விடயத்தையும்கூட நாம் அறிந்திருக்க வேண்டும்.

சரி! இனி எம் விரதத்தின் நோக்கங்களைப்பற்றி ஆராய்வோம். உணவைத் துறந்து விரதம் இருப்பது பட்டினி கிடப்பதல்ல. வாரத்தில் சில நாட்களோ, மாதத்தில் சில நாட்களோ அல்லது வருடத்தில் சில





நாட்களோ நாம் விரதமிருப்பது எம் உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்தது என விஞ்ஞான ரீதியாகக் கூட நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாம் விரதத்தை அனுஷ்டிக்கும்போது எம் மனதைக் கட்டுப்படுத்துகிறோம். மனக்கட்டுப்பாடு என்பது ஒரு மனிதன் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும். மனக்கட்டுப்பாடு இல்லையெனில் ஒரு மனிதன், மனித உணர்வை விடுத்து மிருக உணர்விற்கு மாறும் சந்தர்ப்பம் எழலாம். விரதத்தின்போது உணவை விடுத்து இறைநாமத்தை மனதுக்குள் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது மனரீதியில் ஒருவகையான பூரிப்பு, சந்தோஷம் ஏற்படுகின்றது. அத்துடன் எம் கோப தாபங்களை விடுக்கும் சந்தர்ப்பம் கூட ஏற்படுகின்றது. எம் மனம் தீய வழிகளில் போவதைக் கட்டுப்படுத்துகின்றது. இறைவனே பரம்பொருள் என்ற உண்மையை உணர வழிகோலுகிறது. அத்துடன் இறைவனே பதி (தலைவன்) நாமெல்லாம் அவனுக்கு கட்டுப்பட்டவர்கள் என்ற ஞான உணர்வைப் பெற வழிவகுக்கிறது. விரதம் அனுஷ்டிப்பதன் மூலம் உளத்தூய்மை பேணப்படுகின்றது!

அது மட்டுமல்ல விஞ்ஞான ரீதியாகக் கூட விரதமிருப்பது சிறப்பான ஒன்று எனக் கருதப்படுகிறது. கந்தசஷ்டி விரதத்தின் மூலம் பிள்ளைப் பேறு இல்லாதவர்கள் கூட பிள்ளைப்பேற்றைப் பெற முடியும் என எமது சமய நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது ! இதை நம்ப மறுத்த பலருக்கு விஞ்ஞானம் விளக்கமளிக்கிறது. விரதமிருக்கும்போது கருப்பையில் கொழுப்பு படிவது தடுக்கப்படுகிறது. எனவே அந்த சமயம் பிள்ளை தங்க வாய்ப்புண்டு. இவ்வாறு எமது சமயம் கூறும் அறக்கருத்துக்கள் அழகிற்காக எழுதப்படவில்லை. அதிலுள்ள தத்துவங்கள் ஆழமான கருத்தை வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் எமது சமய விரதங்கள் அமைகின்றன. எமது உடலையும் உள்ளத்தையும் எம்மை அறியாமலே இவை பண்படுத்துகின்றன.

"கருவறையிலிருந்து இறங்கி கல்லறையை நோக்கிச் செல்லும் வரையான பயணம்தான் வாழ்க்கை என்பது". இவ் வாழ்க்கையில் எம்மை நல்வழிப்படுத்த எம்மைவிட அறிவான, அனுபவமிக்க பெரியார்களால் எம் சமயக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எப்படியெல்லாமோ வாழலாம் என்பது வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதுதான் வாழ்க்கை! எம் சமய கருத்துக்களை முழுமையாக அறியாது ஆராயாது அதனை நையாண்டி செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை நம்பி அவ்வழியில் நாம் செல்லாது உண்மையை உணரவேண்டும். 'அவனின்றி அணுவும் அசையாது' என்பதை உணரவேண்டும். சுதந்திரமாய்த் திரியும் காற்றை மூங்கில் குழலினுள் அடைத்து விரல்களால் ஆணைப்படுத்தப்படும்போதுதான் அது இசையாகிறது. அதேபோல் மனிதன் என்பவனை மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு ஈடுபடுத்துவதுதான் சமயம்! எமது சமயக் கருத்துக்களின் ஆழத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் எம் சமயம் என்றைக்குமே நிலைத்திருக்கும் ஒரு சமயமாக மக்களின் வழிகாட்டியாக அமைய முடியும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அ.·.திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

- திருக்குறள் -

R. சுகன்யா
இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதைகள்

அன்பெனும் வசந்தம் வாழ்க !

தாய்க்குத் தன் பிள்ளையின் மீது அன்பு
கணவனுக்குத் தன் மனைவியின் மீது அன்பு
நடனத்திற்குத் தன் அழகின் மீது அன்பு
தீக்கற்றவனுக்குத் தன் தெய்வத்தின் மீது அன்பு

காக்கைக்குத் தன் குஞ்சின் மீது அன்பு
பசுவிற்குத் தன் கன்றின் மீது அன்பு
நெல்லுக்குத் தன் நாற்றின் மீது அன்பு
வாழைக்குத் தன் குட்டியின் மீது அன்பு

ஆசிரியைக்குத் தன் கடமையின் மீது அன்பு
தோழிகளுக்குத் தம் நட்பின் மீது அன்பு
கடலுக்குத் தன் அலையின் மீது அன்பு
விரலுக்குத் தன் நகத்தின் மீது அன்பு

உடலுக்குத் தன் உயிரின் மீது அன்பு
பாதத்துக்குத் தன் செருப்பின் மீது அன்பு — ஆனால்
எனக்கோ என்றும் உன் மீது அன்பு
இத்தகைய அன்பெனும் வசந்தம் வளமுடன் வாழ்க !

M. அபிலாஷினி
பிஷப் கல்லூரி
கொழும்பு



பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதைகள்

அன்னையெனும் கோயில்

அன்னை என்பதும் முன்றெழுத்தே ! — அந்த
அன்பு என்பதும் முன்றெழுத்தே !
பாசம் காட்டும் அன்னை ! — என்னை
தூக்கி வளர்க்கும் அன்னை !

என்னை வயிற்றில் சுமந்த அன்னை ! — என்னை
வாழவைக்கும் அன்னை !
என்னை முத்தம் கொடுத்து அணைப்பாள் ! — என்னை
பாசமாக வளர்ப்பாள் !

தவறு செய்தால் தண்டிப்பாள் ! — என்
அன்பு மிகுந்த அன்னை !
தாலாட்டுப் பாடி — என்னை
தூங்க வைப்பாள் அன்னை.

சுவையாக சமைத்துத் தருவாள் — என்னை
நெஞ்சில் வைத்துக் காப்பாள்
என் ஆசையான அன்னை — என்னை
பாதுகாத்துக் காப்பாள்.

S. டயஸ் ஷாந்தன்
புனித அந்தோனியார் கல்லூரி
வத்தளை

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

கடைக்கண் பாராயோ தாயே!

ஈரைந்து மாதங்கள் எம்மையே,
ஈன்றெடுத்தாள் நம் அன்னையே!
கருவினிற் சுமக்காமல் நம்மையே,
காக்கும் அன்புடைய தாயவளே!
இம்மண்ணின் மைந்தர் தம்மையே,
இடுக்கணுக் கிரையாகும் முன்னரே,
காத்தருளாயோ நம் தாயே!
கடைக்கண் பாராயோ தாயே!

பால்குடம் சுமந்தோமே தாயே!
எம் பாவங்களை அழிப்பாய் நீயே!
வேள்விகள் புரிந்தோமே தாயே!
எம் வேண்டுதல் அறியாயோ நீயே!
வேம்பிலும் தெரிந்தாயே நீயே!
என்று வேம்பையும் தொழுதோமே நாமே!
கேளாயோ எம்குரலை தாயே!
கடைக்கண் பாராயோ தாயே!

வேம்பாடை தரித்தோமே தாயே!
பாம்பாட தொழுதோமே தாயே!
நீயாட களித்தோமே தாயே!
நிழல் காண தவித்தோமே தாயே!
பசியென்று சொன்னோமே தாயே!
பசிபோக்க வருவாயே நீயே!
இரக்கம் காட்டாயோ தாயே!
கடைக்கண் பாராயோ தாயே!



மாதம் பல நினைந் துன்னை
விரதம் இருந்தோமே தாயே!
மாயம் பல புரியும் தாயே — இந்த
மகள் குறை கேளாயோ நீயே?
மல்லிகை மலர்தூவி உன்னை,
நித்தமும் பணியும் என்னை
கணப்பொழுதும் நினையாயோ தாயே!
கடைக்கண் பாராயோ தாயே!

வார்த்தைகள் இல்லையடி தாயே!
வஞ்சியுனை நான் போற்றுதற்கு!
கோடிக்கண் இல்லையடி தாயே!
கருணைக் கோலந்தனை காணுதற்கு!
இத்தனை சொல்லியும் தாயே!
இரங்க மாட்டாயோ நீயே!
கருணை புரியாயோ தாயே!
கடைக்கண் பாராயோ தாயே?

S. ஷண்முகப்பிரியா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

இந்துவின் இனிய நினைவுகள்...

உணர்வுகள் கனவுகளாகி...
கனவுகள் நினைவுகளாகும் போது...
அங்கு இனிமை வேண்டும்...!

எனக்குள் சில நினைவும்...
நமக்குள் பல நினைவும்...
இருந்தாலும்...
ஒரு இந்துவின் நினைவு ஒன்று தான்...!
அதற்குள் இருப்பது இனிமை மட்டும் தான்...!

யுத்தம் இல்லாத உலகம்...
சத்தம் இல்லாத தனிமை...
ரத்தம் இல்லாத பூமி...
ஒரே மதம்...
ஒரே குணம்...
ஒரே மனம்...
என்ற இனிமை நிறைந்த நினைவு தான்...
ஒரு இந்துவின் நினைவு...!

நீறணிந்த நெற்றிகள்...
நீதியறிந்த நெறிகள்...
தர்மம் காக்கும் மனங்கள்...
அதர்மம் அழிக்கும் கரங்கள்...
நல்ல மனமுள்ள மனிதர்கள்...
அதற்கும் மேலான புனிதர்கள்...
வேண்டும் இந்த பாரினிலே...!
என்ற இனிமை நிறைந்த நினைவு தான்...
ஒரு இந்துவின் நினைவு...!

உயராகமங்கள் உயிராக வேண்டும் – அது...
துயர் யாவும் நீக்கும் நற் பயிராக வேண்டும்...
இவைக்கு பொன் அள்ளி தந்தாலும் ஈடாகுமா..?
என்றும் பொருள் சொட்டும் பொன் ஏட்டில்...
"சைவம்" தேனாகுமா..?

கண் இன்றி மண் வாழ்வில்...
பயன் ஏதம்மா...?
ஆனால், நம் வாழ்வில் அருள் கூட்டும்
கண்தானம்மா, பக்தி கண்தானம்மா..!
என்ற இனிமை நிறைந்த நினைவுதான்
ஒரு இந்துவின் நினைவு...!

அருள் தீபமே அணையா விளக்கே...
இறைவா! உம் பாதத்தில் விளக்கேற்றுவோம்...
நம் வாழ்விலே அருள் கூட்டவா...
என்ற இனிமை நிறைந்த நினைவு தான்...
ஒரு இந்துவின் நினைவு...!

தீமை நிறைந்த தீய நினைவுகள் அழியலாம்...
ஆனால், ஒரு இந்துவின்...
நல்ல உணர்வோ...
இனிய நினைவோ...
என்றும் என்றென்றும் சிதையாமல், சிதறாமல்...
நிலையாய், நிரந்தரமாய் வாழ்கவென்று வாழ்த்துவது தான்...
ஒவ்வொரு இந்துவின் இதயத்திலிருக்கும்...
இனிய நினைவாக இருக்கவேண்டும்...!
இந்த இனிய இந்துவின் நினைவுகளுக்கு...
முற்றுப் புள்ளிகள் இருக்கக் கூடாது என்பதே...
எந்தன் இதயத்தின் இனிய நினைவு...
அதுவும் ஓர் இந்துவின் இனிய நினைவே...!

S. கார்த்திகா
மோபீறே கல்லூரி, கண்டி

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

தேர் வருகின்றது

அன்று திங்கட்கிழமை தமயந்தி தனது கட்டிலில் அயர்ந்து கொண்டிருந்தாள். அது ஒரு காலை வேளை. சூரியன் தனது பொற்கிரணங்களை உலகிற்குக் காட்டும் நேரம். பூமாதேவி இருள் என்னும் போர்வையை மெல்ல மெல்லக் கழற்றி வீசும் நேரம். அக்கிராமத்தில் ஒரு சிறிய வீடு, ஏழை வீடு. அங்குதான் தமயந்தி வசிக்கிறாள். அவள் ஓர் ஏழைப்பெண். அவள் உயர் படிப்பு படித்து முடித்துவிட்டாள். ஆனால் மூன்று வருடமாகத் தேடியும் அவளுக்கு வேலை கிடைக்கவில்லை. "அம்மா தமயந்தி எழுந்திரம்மா" என அம்மா கத்துகிறாள். "மூன்று வருடமாக தேடிக் கிடைக்காத வேலை இனியுமா கிடைக்கப்போகின்றது" என தமயந்தி திரும்பக் கத்தினாள். ஒருவாறாக அன்று வெளிக்கிட்டு வேலை தேடிப் புறப்பட்டாள். வழியில் ஒரு மரத்தடியில் கிளி சோதிடன். தன் கையில் அன்றைய வேலையை முடித்து மிச்சமாக ஐந்து ரூபாய் இருப்பதை உணர்ந்தாள். சோதிடன் அருகில் சென்றாள். அவள் ஐந்து ரூபாயைக் கொடுத்ததும் கிளி வெளியே வந்து ஒரு தேர்ப்படமுள்ள சீட்டு எடுத்துக் கொடுத்தது. அதைப் பார்த்த சோதிடன் "அம்மா உன் அருகில் தேர்வருகின்றது, தேர்வருகின்றது" எனக் கூறினான். தமயந்திக்குக் கவலை. இன்று வேலையும் கிடைக்கவில்லை அதோடு கையிலிருந்த ஐந்து ரூபாயையும் சோதிடனுக்குக் கொடுத்துவிட்டாள். இனி என்ன செய்வது என வீட்டிற்குச் சென்றாள். அடுத்தநாள் ஒரு கடிதம். அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில் அவள் தங்கைக்கு பெரிய வேலை கிடைத்துள்ளதாக எழுதப்பட்டிருந்தது. தமயந்திக்கு மூன்று வருடம் தேடிக் கிடைக்காத வேலை அவள் தங்கை ஒரு வருடத்துள் தேடி விட்டாளே என்ற மனக்கவலை. அதனால் அவள் வீட்டை விட்டு வெளியேறினாள். தற்கொலை என்னும் முடிவிற்கு வந்தாள். கோயில் குளத்திற்குச் சென்றாள். குளத்தினுள் குதிக்க முற்பட்டாள். அப்போது ஒரு கரம் அவளைப் பாயவிடாது பற்றியது. தமயந்தி திரும்பிப் பார்த்தாள். அது ஒரு வயோதிபர்.

"ஏனம்மா நீ இம்முடிவிற்கு வந்தாய்?" என அம்முதியவர் அன்பாகக் கேட்டார். அதற்குத் தமயந்தி அழுதுகொண்டே "ஐயா நான் மூன்று வருடமாகத் தேடியும் எனக்கு வேலை கிடைக்கவில்லை, ஆனால் என் தங்கைக்கு ....." அதற்கு அம்முதியவர் "இதற்கெல்லாமா தற்கொலை செய்வது. இந்தா சிறிது பணம் இதைக்கொண்டு பிழைச்சுக்கோ" என்று கூறி அனுப்பி வைத்தார். அப்பணத்தைக் கொண்டு எங்கு தேடியும் வேலை கிடைக்கவில்லை. இறுதியாக அடுத்த ஊரிற்குச் சென்றாள். அங்கு ஒரு கம்பனி. அதன் பெயர்ப்பலகையில் அண்ணாமலை கம்பனி என எழுதப்பட்டிருந்தது. உள்ளே நடுக்கத்துடன் சென்றாள். அங்கு தலைமை அதிகாரியின் அறையின் முன்னே இருந்தாள். சிறிது நேரத்தில் ஒருவர் இவளைக் கூப்பிட, உள்ளே சென்றாள். அதிர்ச்சி... அங்கே அவளுக்கு அறிமுகமான முகம். அம்முகமே அவளைக் காப்பாற்றிய முகம். அதுவே அம்முதியவர். அவளை அழைத்துக் கதிரையில் இருத்தினார். "உனக்காகத் தான் காத்திருந்தேன். உனக்கு ஒரு வேலை உள்ளது அதைச் செய்ய வேண்டும். முன்பணம் எதுவும் கட்டத்தேவையில்லை" எனக் கூறினார். தமயந்தி மகிழ்ச்சியின் உச்சகட்டத்தில் இருந்தாள். இப்போதுதான் அவளுக்குத் தெரிகிறது சோதிடன் என்ன சொன்னானென்று. அவளை நோக்கி தேர் வருகிறது அதாவது அதிர்ஷ்டம் என்னும் தேர்வருகிறது. கடுமையாகவும், நேர்மையாகவும் உழைத்து வந்தாள். அவளின் குடிசை பெரிய மாளிகையாகியது. வசதிகள் பெருகின. இவ்வாறு இருந்தும் கடினமான உழைப்பைத் தொடர்ந்து இறுதியாக அண்ணாமலை கம்பனியின் தலைமை அதிகாரி ஆனாள்.

R. செந்தூரன்
திருத்துவக் கல்லூரி
கண்டி



பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

அன்னதானம்

வயல்களின் வரம்புகளில் அச்சின்ன கால் தடயங்களை பரப்பிக் கொண்டு திரிந்தாள் சிறுமி துவாரகா. ஏறாவூர் வயல்களின் வரம்புகளின் பல பக்கங்களிலும் துவாரகாவின் நண்பிகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பச்சைப் பசேல் எனக் கண்ணுக்குக் குளிர்மையைத் தரும் வயல்களின் எஜமானின் மகள்தான் துவாரகா. துவாரகாவின் உயிர் நண்பிதான் ரேணுகா. ரேணுகாவோ துவாரகாவுக்கு எதிர்மறை அதாவது கந்தல் உடையுடன் வறுமையின் விளிம்பில் நிற்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவள். இருவரும் இணைபிரியா உயிர் நண்பிகள். ஆனால் துவாரகாவின் தந்தையான வரதராஜனுக்கு அவளைக் கண்டால் துளிகூட பிடிக்காது. காரணம் அவள் ஏழை என்பதாகும்.

ஒரு நாள் இருவரும் பாடசாலையை விட்டு வந்துகொண்டிருந்தபொழுது துவாரகா சொன்னாள் "நாம் இருவரும் என்றென்றும் இணை பிரியாமல் தோழிகளாகவே இருக்க வேண்டும்" என்றாள். அதற்கு ரேணுகா "அது முடியாத காரியம். உன் அப்பா உன்னை பட்டணத்திற்கு படிக்கிறதுக்கு அனுப்பப்போகிறார். பிறகு எப்படி நானும் நீயும் உயிர் நண்பிகளாய் இருப்பது" என்றாள். அதற்கு துவாரகா "ஏன் நானும் நீயும் ஒவ்வொரு நாளும் சந்தித்துக்கொண்டிருந்தால்தான் நட்பு வளருமா? நான் பட்டணத்துக்குப் போய் அங்கே இருந்து உனக்கு நான் கடிதம் போடுவேன். அதிலேயே எங்கள் நட்பு வளர்ந்து கொண்டேயிருக்கும். எப்படி என்னுடைய யோசனை?" என்றாள். அதைக் கேட்டவுடன் உடனே ரேணுகா "அப்ப நானும் நீயும் சாகும் வரைக்கும் உயிர்தோழிகளாவே இருப்போம் என்ன? எனக்கு இதைக் கேட்டதே ரொம்ப சந்தோசமா இருக்கிறது" என்றாள். இப்படியாக ஒரிரு நாட்களின் பின் வரதராஜன் சொன்னபடி மகள் துவாரகாவை பட்டணத்தில் உள்ள தன் தங்கையின் வீட்டிற்கு அனுப்பி விட்டான். காலங்கள் மிக வேகமாக உருண்டோடி விட்டன. ரேணுகா நினைத்தபடியே இன்றுவரை அவர்களுடைய நட்பு கடிதத்தின் மூலம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இப்பொழுது ரேணுகா உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். விதியின் விளையாட்டோ தெரியவில்லை அக்கிராமத்தில் உள்ள அம்மன் கோயிலுக்கு அவ்வாண்டு விழா எடுக்காததால் அவ்வூரில் கடந்த ஒரு வருடமாக மழைபெய்யவில்லை. அதன் காரணமாக அவ்வூருக்கு அழகைக் கொடுத்துக் கொண்டிருந்த தாவரங்கள் அதாவது வயல்கள் எல்லாம் தலைகுனிந்து போயின. அதனால் மக்கள் பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்வூரில் உள்ள வரதராஜன் மட்டும் தான் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த தானியங்களைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான்.



பட்டணத்தில் உயர்தர பரீட்சையை எடுத்துவிட்டு துவாரகா ஊருக்கு வந்தாள். ஊருக்குள் கால் எடுத்து வைத்தவுடனேயே அவளுடைய மனம் பதைத்தது. காரணம் அன்று அவள் ஓடித்திரிந்த வயல்வெளிகள் எல்லாம் வெறிச்சோடிப்போய் கிடந்தன. கண்கள் கலங்கின. அவள் நடந்து சென்றுகொண்டிருந்த பொழுது அவள் எதிரே வந்த ஊரார்களைப் பார்த்து கண்கள் அகன்று விரிந்தன. காரணம் பட்டினியால் மக்கள் மிக கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். அவள் உடனடியாக தன்னுடைய நண்பியான ரேணுகாவின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு சென்று "ரேணுகா, ரேணுகா" என்று கூவி அழைத்தாள். உள்ளே இருந்து ரேணுகா வந்தாள். அவளைப் பார்த்தவுடன் துவாரகா அதிர்ந்து போனாள். காரணம் அவள் யாரோபோல் மெலிந்து காட்சியளித்தாள். ரேணுகா சிறிது நேரம் அவளை உற்றுப் பார்த்தாள். பின்பு அவளுடைய எலும்புடன் ஒட்டிய முகத்தில் ஒரு புன்னகை ஒளி இழந்து மலர்ந்தது. ரேணுகா "நீ, நீ... துவாரகாதானே ! எப்படி வந்தாய்? ஏன் நீ எனக்கு வருவதைப்பற்றி ஒண்ணுமே சொல்லவே இல்லை" என்று உடலில் சக்தி இழந்தவள் போல் கதைத்தாள். துவாரகா "இது என்ன ஊர் இப்படி கிடக்குது? என்ன நடந்தது" என்று கேட்டாள். அதற்கு ரேணுகா எல்லாவற்றையும் விபரித்தாள். பின்பு சொன்னாள் "நாங்க எல்லோரும் வயிராற சாப்பிட்டு ரொம்ப நாள் ஆயிட்டுது" என்றாள். அதைக் கேட்டு துவாரகாவின் கண்களில் நீர் வழிந்தோடியது.

"அப்பா, அப்பா எங்கே இருக்கிறீர்கள்" என்று கேட்டவாறே துவாரகா உள்ளே நுழைந்தாள். வரதராஜன் வந்தார். "எப்பம்மா வந்தாய் நீ. நல்லாயிருக்கியா? என் தங்கச்சி எல்லாம் எப்படி இருக்காங்க?" என்று கேள்வியை அடுக்கிக் கொண்டே போனார். உடனே துவாரகா இடைமறித்து "என்னப்பா இது ஊரே இப்படி கிடக்குது, எல்லோரும் கேவலமா கிடக்கிறாங்க. சின்னப் பிள்ளைங்க எல்லாம் சாப்பாடு இல்லாம கஷ்டப்படுறாங்க நீங்க என்னன்னா ரொம்ப சந்தோசமா இருக்கிறீர்கள்" என்றாள். அதற்கு வரதராஜன் "நான் என்ன செய்யிறது எல்லாம் விதியின் விளையாட்டு. அதற்கு என்னால என்ன செய்ய முடியும்" என்றார். உடனே துவாரகா "ஏன் அப்பா நீங்கதான் எல்லாத்தையும் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பீங்களே அதைக் கொண்டு இவங்களுக்கெல்லாம் ஒருநாளாவது வயிராற சாப்பாடு போடலாமே" என்றாள். "அப்ப நாங்க எப்படி சீவிக்கிறது" என்றார் அப்பா. உடனே "துவாரகா நீங்க எப்ப இப்படி ஒரு முடிவுக்கு வந்தீர்களோ நான் இனி உங்களோட இருக்கமாட்டேன். நான் எப்படியாவது இவங்களுக்கு ஒரு வழி செய்வேன்" என்று கூறிவிட்டு வெளியேறிவிட்டாள்.

ஒரிரு நாட்களின் பின் அவள் ரேணுகாவையும் உடன் அழைத்துக்கொண்டு பட்டணத்திற்கு சென்றாள். அங்கு எப்படியோ அரும்பாடுபட்டு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு ஊர் திரும்பினார்கள். அதைக் கொண்டுபோய் தன்னுடைய தகப்பனாரிடம் கொடுத்துவிட்டுச் சொன்னாள் "ஐயா இந்தாருங்கள் பணம். இதைக் கொண்டு எப்படியாவது இந்த ஊரிலே இருக்கிற சனங்களுக்கெல்லாம் சாப்பாடு போடுங்கள்" என்றாள். இதைக்



கேட்டவுடன் வரதராஜன் துடித்தார். "என்னம்மா இப்படி கதைக்கிறாய். இது எல்லாம் உன்னுடையதுதானே ஏன் இப்படிச் செய்கிறாய். ஏன் இப்படி என்னைக் கேவலப்படுத்துகிறீர்கள்" என்றார். அதற்கு துவாரகா "நீங்கள் மட்டும் என்ன திறமான செயலா செய்யிருங்க. உங்களை என் அப்பா என்று சொல்லவே வெட்கமாக இருக்கு. ஊரே பட்டினியாலேயும், பஞ்சத்தாலேயும் கஷ்டப்படுகிறது. நீங்க சந்தோசமா இருக்கிறீர்கள் என்ன. அப்பா பெரிய மனுசன் என்று பெயர் மட்டும் இருந்தாக் காணாது அதற்குத் தக்கதாக செயல் முறையிலும் காட்டவேண்டும். தானத்திலேயே பெரிய தானமே அன்னதானம்தான். பசித்த வயிறுக்கு எல்லாம் சாப்பாடு போடுகிறதை விட பெரிய புண்ணியம் எதுவுமே இல்லையப்பா. அப்பேர்பட்ட மணி மேகலையும், செய்த புண்ணியமே இதுதான் அப்பா. அவங்க வயிராற சாப்பிட்டாலே எங்கள் வயிறு நிரம்பும் அப்பா. அவங்க சாப்பிட்டு காட்டுற சிரித்த முகம் எங்களுக்கு எவ்வளவு சந்தோசம் தரும் தெரியுமா. இது எல்லாம் தெரியாமல் கஞ்சத்தனமாவே இருந்திட்டீர்களே அப்பா" என்று அழுகையுடன் கூறினாள். அப்பொழுதான் வரதராஜன் உணர்ந்தார் இதைவிட பெரிய புண்ணியம் எதுவுமே இல்லை என்று.

அடுத்தநாள் அவர் ஊருக்கெல்லாம் தடபுடலாக பல்வேறு காய்கறிகளுடன் அன்னதானம் இட்டார். எல்லோரும் மிக சந்தோசமாக உணவை உட்கொண்டு மலர்ந்த முகத்தினைக் காட்டினார்கள். இதை எல்லாம் பார்த்து வரதராஜன், துவாரகா, ரேணுகா எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். எல்லோரும் அவர்களை வாழ்த்திவிட்டு சென்றார்கள். அதன்பின் ஊர் செழிப்பான ஊராக மாறியது.

தானத்திலேயே சிறந்த தானம் அன்னதானம்

பசித்தோருக்கு உணவளித்தல் மிகப் பெரிய புண்ணியம் ஆகும்.

A. பானுஜா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு 4



பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

வெள்ளை மனங்கள்

"மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதையே நோக்கமாகக்கொண்டு துரிதகதியில் இயங்கிக்கொண்டிருக்கும் அந்த ஆண்கள் கல்லூரி அன்றைய தின்ம்தான் நீண்ட இறுதித்தவணை விடுமுறைக்குப் பின் ஆரம்பித்திருந்தது. புத்தம் புதியவையாய் சீருடைகளும், புத்தகப்பைகளும், காலணிகளும் ஆக மாணவர் குழாத்தினர் கல்லூரி வளாகத்தில் அரங்கேறியிருந்தனர். விடுமுறைக்கால சுற்றுலா அனுபவங்கள், பண்டிகைக்கொண்டாட்டங்கள் பற்றி தம் நண்பர்களுக்கிடையே கலந்துரையாடிய வண்ணம் மாணவரிருந்தபோது காலை எட்டு மணியாகிவிட்டதை உணர்த்தும் வகையில் மணி "டாண்! டாண்!" என ஒலித்தது.

ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் வெள்ளை நிற புகையிரதங்களாக மாறி மைதானத்தை அடைந்தபோது அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கம் நெஞ்சை நிறைத்தது. கல்லூரி அதிபர் புதிய ஆண்டில் மாணவர்களை வரவேற்று, ஆலோசனைகள் கூறி விடைபெற்றார். மணி எட்டரை இருக்கும் மாணவர்கள் வகுப்பை அடைந்தனர். முதலாம் பாடவேளை ஆரம்பமானது. ஆண்டு மூன்று வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருந்த ஆதவனை சூழ்ந்திருந்து அவனைப்பற்றிய விபரங்களை கேட்டறிந்த வண்ணம் இருந்தனர். விபரங்கள் அறிந்தவர்கள் அறியாதவர்களிடம் அவனைப்பற்றி பறை சாற்றிக்கொண்டிருந்தனர். தமக்குள்ளே "அவனுடைய அப்பா கல்வி மேலதிகாரியாம்! தாய் ஏதோ ஒரு கல்லூரி அதிபராம்! சரியான பணக்காரன் போலிருக்கிறது! படிப்பிலும் கெட்டிக்காரனாம்! விளையாட்டிலும் சூரனாம்!" எனப் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருந்தனர். கதை கேள்விப்பட்டவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அவனுடைய உடைமைகள் யாவும் அவர்களுக்கு கிடைத்தற்கரியவையாயின. அன்றே ஆதவன் அவர்களது நட்சத்திர நாயகனானான். அந்த மாணவர்கள் அவனை வெகுவாக ஏற்றுக்கொண்டதையெண்ணி அவனும் மனம் மகிழ்ந்தான்.

பாடங்கள் நடைபெற்றன. நான்காம் பாட இறுதியை அறிவிக்க மணியொலித்தது. அன்றைய நாள் இடைவேளையின்போது ஆதவன் இனிப்பு வழங்கி, அவர்களுடன் இணைந்ததையிட்டு தனது மகிழ்ச்சியை அறிவித்தான். இடைவேளையின் போது மைதானத்தில் வகுப்பு மாணவர்களுடன் விளையாடியபின் வகுப்பிற்கு அவன் வந்தபோது ஐந்தாம் பாடவேளை ஆரம்பித்திருந்தது. அது வரைதல் பாடம். படம் வரைவதற்காக தனது புதிய உறையிடப்பட்ட வரைதற் கொப்பியையும் நிறப்பென்சில்களையும் வெளியிலெடுத்தான். ஆர்வத்துடன் கொப்பியைத் திறந்தவன் ஆச்சரியமடைந்தான். அவனது கொப்பியில் "முட்டாள் ! மடையன் !" என நிறநிறப் பென்சில்களால் எழுதப்பட்ட சொற்கள் பக்கங்கள் அனைத்தையும் நிறைத்திருந்தன. கடைசிப்பக்க கீழ்மூலையில் "ரத்திஷ்" எனக் கையொப்பமிடப்பட்டிருந்தது.

ஆதவன் செயலற்று நின்றான். "யார் இந்த ரத்திஷ்? யார் இந்த ரத்திஷ்?" என்றே அவனது ஒவ்வொரு அணுவும் கேள்வி அடுக்கின. அதற்கு விடைதேட முயன்று தோற்று பக்கத்திலிருந்தவனை அணுகினான். பக்கத்திலிருந்தவனுக்கு யாவும் புரிந்தது. ரத்திஷை ஆதவனுக்கு அடையாளம் காட்ட நினைத்து தன் பார்வையை வகுப்பைச் சுற்றித் தவழவிட்டான். ரத்திஷ் தட்டுப்படவில்லை. "ரத்திஷை இன்று ஒருகை பார்க்கவேண்டும்!" என்றான் ஆதவனிடம். தொடர்ந்து "அவன் அப்படித்தான்! சரியான கிறுக்கன்!

எத்தனையோ தடவை என்னவோவெல்லாம் செய்தாயிற்று. திருந்தும் நினைப்பு அறவே இல்லை!" என்று பொருமினான். "ஏன் அவன் அப்படி இருக்கிறான்?" என்ற ஆதவனின் கேள்விக்கு "வீட்டில் அவனை யாரும் கவனிப்பதில்லை. அம்மாவும் அப்பாவும் காசுதான் எல்லாம் என்று நினைத்துக்கொண்டு திரிபவர்கள். பெரிய பணக்காரர்கள். படிப்பிலும் மந்தம். ஆசிரியர்களிடமும் அடியுதை வேண்டுவான். அடிவேண்டியே அவனுக்கு உடம்பு மரத்துப் போயிருக்கும். அதிபரிடமும் கூட வாரமொருமுறையாவது அடிவேண்டுவான். ரத்திஷ் அடிவேண்டாத நாள் இந்த வகுப்புக்கு உலக அதிசயம். நீ போய் ஆசிரியரிடம் சொல்லு" என்றான். ஆதவன் இதுவரையில் கண்டறியாத அந்த ரத்திஷுக்காக இரக்கப்பட்டான். ஆசிரியரிடம் மெல்ல நடந்து சென்று தான் வரைதற் கொப்பி கொண்டுவரவில்லை எனவும், அதற்காகத் தன்னை மன்னிக்குமாறும் வேண்டிக்கொண்டான். அன்றுதான் அவன் புதிதாய் வந்ததால் ஆசிரியரும் மன்னித்து விட்டார்.

பாடசாலை விட்டு காருக்காக காத்திருந்த போது நண்பனொருவன் ரத்திஷை அடையாளம் காட்டியபோது ஆதவன் மெல்லியதாய்ப் புன்னகைத்தான். அதற்கு அவன் முறைத்துப் பார்த்துவிட்டு சென்றுவிட்டான். அந்தக் கணமே ரத்திஷுடன் எப்படியாவது நண்பனாகி விடவேண்டும் என மனதிற்குள் தீர்மானித்தான் ஆதவன்.

ஓரிரு நாட்கள் கழிந்தன. வழமைபோல் இடைவேளை நேரத்தின்போது தனது உணவுப் பொதியை திறந்தவனை பொதிக்குள்ளிருந்த காகிதக் குப்பைகள் பார்த்துச் சிரித்தன. உடனே திரும்பி ரத்திஷைப் பார்த்தபோது அவன் அசட்டுப்புன்னகையை முகத்தில் தவழவிட்ட வண்ணம் சிரித்தான். அதற்கு ஆதவனும் மெல்லிதாய்ப் புன்னகைத்துவிட்டு சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று இரண்டு உணவுப் பொதிகளை வாங்கி ஒன்றை ரத்திஷிடம் நீட்டினான். அதைப் பறித்த ரத்திஷ் பொதியைப் பிய்த்து நிலத்தில் கொட்டிவிட்டு ஆதவனைப்பார்த்து முறைத்துவிட்டு சென்றுவிட்டான்.

மிகுந்த கவலையுடன் ஆதவனும் அன்று உண்ணவில்லை. பசியால் வாடிப்போனான். எப்படி ரத்திஷை மாற்றுவது என்று யோசித்தே களைத்தான். ஏன் தன்னுடன் அவ்வாறு நடக்கிறான் என எண்ணி விழித்தான்.

தினமும் முறைப்புகளும், புன்னகைகளும் பரிமாறப்பட்டன. அன்று கணித பாடநேரம். ஆசிரியரிடம் கொப்பி காட்டிவிட்டுத் திரும்பிய ஆதவன் கதிரையில் அமர்ந்தபோது கதிரை இடத்தை விட்டு அசைந்தது. கீழே விழுந்த அவனது தலையை பின் மேசை பதம்பார்த்தது. வலியுடன் எழும்பிய அவனைப் பார்த்து அதே அசட்டுப்புன்னகையுடன் பார்த்துச் சிரித்தான் ரத்திஷ். அந்தச் சிரிப்பு ஆதவனின் வலியை மேலும் கூட்டியது. பல்லைக் கடித்துக்கொண்டு கதிரையை இழுத்து நிறுத்தி அமர்ந்தான்.

அன்று மதியம் காருக்காகக் காத்திருந்தபோது ரத்திஷ் வந்தான். "எப்படி வலித்ததா? இனிமேல் என் வழியில் குறுக்கிடாதே!" என்று கூறினான். அதற்கு ஆதவன் "இன்றுமட்டும் தானே எனக்கு அடிபட்டது. ஆனால் எனக்கு வலிக்கவில்லை. ஆனால் நல்லவனான நீ ஒவ்வொரு நாளும் அடிவேண்டுகிறாயே? உனக்கு எப்படி வலிக்கும்?" எனக் கண்கலங்கக் கூறினான். "நான் நல்லவனா? யார்சொன்னது?" என்றான் ரத்திஷ். "நான் சொல்கிறேன் நீ என் உண்மையான நல்ல நண்பன்" என்றான் ஆதவன்.

ரத்திஷ் ஆதவனைக் கட்டியணைத்தான் இறுக்கமாக. வார்த்தைகள் இல்லை. அவர்கள் ஆடைபோல் மனங்களும் பிரகாசித்தன.

(யாவும் கற்பனை)

G. ஜெகவித்தியா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு

கவனத்திற்கு ஐந்து விஷயங்கள்

'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்று சான்றோர் கூறுவதுண்டு. குழந்தைகள் எப்போதும் உண்மையே பேசும் இயல்புடையவர்கள். "இறைவனை அடைய கள்ளம் கபடமற்ற மனநிலை வேண்டும்" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடி தன் பக்தர்களிடம் கூறுவார்.

இந்நிலையை அடைய நாம் எப்போதும் தூய்மையான உயர்ந்த எண்ணங்களையே எண்ண வேண்டும். உலக விஷயங்களில் ஊறியிருக்கும் நம் மனம் எளிதில் உயர்ந்த எண்ணங்களைச் சிந்திக்க விடாது.

இறைவனின் திருநாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதாலும், சத்சங்கத்திற்கு அடிக்கடி சென்று ஆன்மீகக் கருத்துக்களைக் கேட்பதாலும், நம் மனம் படிப்படியாகத் தூய்மை அடையும். அப்போது நம்மால் உண்மையை மட்டுமே பேச இயலும்.

"இக்கலியுகத்தில் உண்மை பேசுவதே தவம்" என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். மேலும், "நாம் இவ்வாழ்க்கையில், உண்மை பேசுவதை உறுதியுடன் கடைப்பிடிக்கும்போது, நிச்சயம் இறைவனை அடைய முடியும்" என்றும் கூறுகிறார் குருதேவர்.

உண்மை = உள் + உண்மை. ஒரு நல்ல எண்ணம் உள்ளத்தில் உதிக்கும்போது 'உண்மை' என்றும், அது சொல் வடிவில் வார்த்தைகளாக வெளிப்படும்போது 'வாய்மை' என்றும், அவ்வார்த்தை செயல் வடிவில் வரும்போது 'மெய்மை' என்றும் கூறப்படுகிறது.

மனத்தூய்மை அடைவதற்குரிய பயிற்சியாக நம்மை நாமே கவனிக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் 'Watch Your Selves' என்பார்கள்.

1. Watch Your Words
2. Watch Your Action
3. Watch Your Thoughts
4. Watch Your Character
5. Watch Your Heart

இவற்றின் விளக்கத்தைக் காண்போம். முதலில் நம் வார்த்தைகளைக் கவனித்தல். நாம் பேசுவது உயர்ந்த விஷயங்களைப் பற்றியதாகவும், பிறரைப் புண்படுத்தாமல் இருக்கும்படியாகவும் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு நல்லார் இணக்கமும், தெய்வீகப் புத்தகங்களைப் படிப்பதும் மிகத்தேவையாகிறது. இதன்மூலம் நம்மிடமிருந்து தேவையில்லாததைப் பேசும் பழக்கம் கழன்றுவிடுகிறது.



இரண்டாவதாக, நம்முடைய செயல்களைக் கவனித்தல். நாம் பேசும் நல்ல விஷயங்களை அன்றாடம் நம்வாழ்வில் கடைப்பிடிப்பதில் உறுதியுடன் முனைந்து செயல்பட வேண்டும். அவ்வாறு செய்யும்போது நம்முடைய அனைத்து செயல்களும் நம்மை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

மூன்றாவதாக நம் எண்ணங்களைக் கவனித்தல். நம் மனதில் எழுகின்ற எண்ணங்களின் மூலமே, நாம் எந்நிலையில் இருக்கிறோம் என்பதை அனுமானிக்க முடியும். நம் உள்ளத்தில் தோன்றும் தேவையில்லாத எண்ணங்களைக் கவனித்து விலக்க வேண்டும்.

நான்காவதாக நம் எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் நேர்கோட்டில் இருக்கவேண்டும். நம் எண்ணங்கள்தான் சொல் வடிவிலும், செயல் வடிவிலும் வெளிப்படுகின்றன. இம்மூன்றின் தொகுப்பே நமது குணநலன்களாக அமைகிறது. இறுதியில் வருவது, நம் இதயத்தைக் கவனித்தல்.

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

என்கிறார் திருவள்ளுவர். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதாலும், சத்தியமே உருவான இறைவனையே எப்பொழுதும் நினைப்பதாலும், நம் உள்ளம் தூய்மை அடையும். இத்தூய்மையான மனதில்தான் இறைவன் ஆர்வமுடன் எழுந்தருள்வான். எனவே நாமும், நம் மனதை இறைவன் எழுந்தருளும் கோவிலாக ஆக்குவோம்.

ஆதாரம் : ஸ்ரீராமகிருஷ்ண ஆனந்தம்



Hindu Students' Union - Primary Section

Grade 1 'J'
K. Gowdthaman
S. Mithushan
A. Gavinko
R. Nareshwar
C. Dushyandhan
R. Hanoj Krushanthan
S. Harikeshan
S. Karnan
K. Naveen
N. Hinushkar
S. Arulvarunan
T. Visakan
C. Dushiyanthan
R. Suwamiraj
E. Gouthaman
A. Sanjayan
P. Harikrishan
S. Ragurakavan
S. Mithunagash
J. Abishek Prasanth
R. R. Ashragan

Grade 1 'H'
S. Lakshan
P. Midushan
P. Raguwaren
G. Anojan
M. Arjuna
S. Haridhakshan
S. A. Pranavan
W. A. A. Avineash
M. Withwasaharan
B. Harish
Y. Sarvesh
T. Thananchayan
S. Varnasuthan
N. Praveen
B. Gurubaran
T. Apinayan
R. Srisubathsan
C. Nitheesan
A. Gowtham
B. Syaam Ganesh
S. Sooriyapratheep
N. Rajkhanth
S. Megajan

Grade 2 'J'
S. Dushiyanthan
G. Harinath
S. Harishman
T. Kantharupan
L. Keerthigan
S. Khowreeshan
J. Kiritharan
R. Kogulan
S. Rajinees
V. Srivathson
V. Thivyan
Y. Umasuthan
J. Kavin Hashventh
K. Hirishegan
D. Dinnush

Grade 2 'H'
M .Pavithran
B. Balamurali
K. Mowliharan
V. Thuwaragesh
S. Prasanth
V. Neelan Krinath
S. Dushyanthan
R. Mithooshan
V. Sujeevan
K. Sindujan
B. Sharounthan

Grade 3 'J'
P. Rathegesh
R. Gogulgobiram
J. Sasishekar
K. Vivesh
R. Visnuventhan
B. Vinuth
V. Virshanth
K. Dinushan
G. Gogulnath
R. Kaveeshwaran
S. Ajanthan
L. Dhilipkumar
V. Mithurshan
V. Thuwaharan

Grade 3 'H'
M. Varna
Y. Pranavan
M. Saroonan
G. Dharshon
N. Aswanth
T. Dinashan
M. Suganthan
M. Banugopan
A. Senthuran
N. Abiram
S. Arushan

Grade 4 'J'
R. Senthuran
R. Haresha
J. Arushan
S. Arulvarman
G. Jeyaprasath
R. Jayanath
R. Niroshan
M. Kajendran

Grade 4 'H'
S. Arunprasath
T. Kishathanan
P. Shaidev
G. Vithyanath
S. Nishanthan
N. Lashanth
M. Jayapradap
Y. Prasath Rajiv
S. Ushakiran
J. Karthigan
J. Praween
K. Vethapriyan
S. Srivarman
T. Thiviyan
N. Satheeswaran

Grade 5 'J'
S. Srigunesan
N. Praveen
M. Mathithayanan
B. Ajan
S. Amaranath
R. Manoj
V. Venket
G. Arunmoli
U. Nivethan
S. Arunakavan

Grade 5 'H'
P. Indrajith
K. Sasibalan
B. Sivaasvin
S. Pradap
K. Shan
S. Radipan
P. Arundev
K. Kapildev
S. Anoj Aravind
R. Ramanan
S. Krasanth
J. Karishanthan
M. Indiran
S. Sooriya Prasanth
K. Yasaanth
S. Arunothayan
K. Shadurshan

Co-ordinators
T. Sri Ramanan
S. Sugothayan
S. Risheeban



Hindu Students' Union - Primary Section

With Best Wishes

from



GNANAM IMPORTS (PVT) LTD.

No. 79, 5th Cross Street, Colombo 11
Tel: 2449255, 2439334, 2441944

With Best Compliments from

Subharani Jewellers

185 1/4, Sea Street, Colombo 11, Sri Lanka

Tel: 2393030 Fax: 2447255

With Best Compliments from

Suranga Nagai Madam

Gold & Jewel Merchants

157/1, Kasthuriar Road, Jaffna

Tel: 021-2222480

Arul Murugan Nagaiyakam

96/1, Kasthuriar Road, Jaffna

Tel: 021-2226059

Surangan Nagai Madam & Center

45, Kasthuriar Road, Jaffna

Tel: 021-2226059

With Best Compliments from

A

WELL-WISHER

Mr. Kannan

With Best Compliments from

DART ENTERPRISE

Wholesale & Retail Dealers in Watches, Wallclocks,
Electronic, Electrical, Gift Items & Fancy Goods.

No. 11, 12, New Market Inside, Jaffna
Tel: 222-3098

With Best Compliments from
Royal College
6'R' & 6 'Q' Students
ROYAL PARADE
2005
T. Heshoban, S. Gowtharam, G. Vijayananth, P. Sushanthan, S. Ragaventhan,
P. Harendra, M. Duwaragan, S. Darshan, J. Nijanthan, S. Lavan, S. Venushajan, T. Bowranigan

With Best Compliments from



AMCOM

AMCOM (PVT) LTD.

School Brand Items, Science Laboratory Items

163/2B, Main Street, Colombo 11, Sri Lanka
Tel: 2423241, 074-723512


With Best Compliments
from
Royal College
Year 8 Students
R. Sarangan, M. Pranavan,
T. Kapilan, V. Artheeckumar, J. Rishonavinraj

With Best Wishes from

M. Umeshan, S. Mayuran, G. Pirahalaathan
B. Krisheban, S. Reshanth, R. Anapayan
M. Mathurangan, M. Niroshan, S. Vasuneyan
A. Navin, B. Kokulan

விநாயகர்

விநாயகரின் தோற்றம் பற்றி, விநாயக புராணம் முதலான நூல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய நூல்களில் விபரிக்கும் கதைகளில் ஒன்றை நோக்குவோம். வசிட்டமுனிவர் மரபில் வந்தவர் மாகதர். அவர் மகான்; முனிவர். அந்த மாகதருக்கும் விபுதை எனும் அசுரப் பெண்ணுக்கும் பிறந்தவன் கஜமுகாசுரன். இவன் அசுர குருவாகிய சுக்கிராச் சாரியாரின் ஆணைப்படி சிவனை நோக்கித் தவஞ்செய்து, பல அரிய வரங்களைப் பெற்றான் தேவர், மானுடர், அசுரர் முதலானவர்களாலும் எந்த ஆயுதங்களாலும் இறவாத வரத்தைப் பெற்றான். திருமால், பிரமன், இந்திரன் முதலானவர்கள் தினந்தோறும் கஜமுகா அரனின் முன் செல்லும் போது, அவர்கள் தம் சிரசில் மும்முறை குட்டிக் கொள்ளவும், தோப்புக்கரணம் செய்யவும் பணிக்கப் பட்டிருந்தனர். இத்தகைய கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவர் தேவர்களைக் காக்கத் திருவுளங் கொண்டார். திருக்கயிலைமலையில் மந்திரங்கள் எழுதி இருந்த சித்திர மண்டபத்திற்கு உமா தேவியுடன் எழுந்தருளினார். அங்கே எழுதப்பட்டிருந்த பிரணவத்தைக் கண்டார். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து, ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும் மாறின. இரண்டும் சேர்வது போல் காட்சி அளித்தன. அப்பொழுது யானை முகத்தோடு கூடிய விநாயகப் பெருமான் தோன்றினார்.

தேவர்கள் தம் துயரைத் தீர்க்குமாறு விநாயகப் பெருமானை வேண்டினர். அவர்கள் துயர் தீர்க்கத் திருவுளங்கொண்ட விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் செய்தார். தமது ஆயுதங்களால் அவனது படைகளை அழித்தார்.

அவன் தேவர், மனிதர்களாலோ அல்லது எந்த ஆயுதங்களாலோ இறவாதிருக்க வரம் பெற்றுள்ளதை உணர்ந்தார். அவனது வரத்திற்கு மாறில்லாமல் தேவ, மனித, மிருக அம்சமாகிய திருவுடைய விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எறிந்து அவனை வதம் செய்தார். கஜமுகாசுரன் அந்த உடலைவிட்டு பெருச்சாளி வடிவம் எடுக்க விநாயகர் அதனைத் தன் வாகனமாகக் கொண்டார்.

விநாயகரின் திருவுருவம் யானை முகமும், மூன்று கண்களும், ஐந்து கரங்களும், பருத்த உடலும், தொந்தி வயிறும், கட்டையான கால்களும் கொண்டதாகும். இத்திருவுருவமூர்த்தி மஞ்சள், சிவப்பு, வெண்மை ஆகிய நிறங்களைத் தனித்தனி உடையதாய், வெண் பட்டாடை தரித்து, தலையில் ஜடா கிரீடம், கிரீட மகுடம், கரண்ட மகுடம் ஆகியவற்றில் ஒன்றினைத் திரித்ததாய், நாகமாகிய பூணூலை அணிந்ததாய், மாலை முதலான சர்வ ஆபரணங்களும் உள்ளதாய், திருக்கரங்களில் அங்குசம், பாசம், தந்தம், மோதகம், கும்பம் என்பவற்றை ஏந்தியதாய் அமைந்திருக்கும்.

விநாயகரின் திருவுருவம் நிற்றல், இருத்தல், நர்த்தனம் ஆகிய கோலங்களில் அமைந்திருக்கும்.

விநாயகரின் திரு அவதாரங்களும், திரு உருவங்களும் 32 வகை எனப் புராணமும், சிற்ப நூல்களும் குறிப்பிடுகின்றன.

(1) பால கணபதி



கைகளில் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளைத் தரித்திருப்பவரும், பால சூரியனைப் போன்ற சரீரகாந்தி உடையவருமான இந்த பால கணபதியை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

(2) தருண கணபதி



எப்பொழுதும் கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம், ஒற்றைத் தந்தம், நெற்கதிர், கரும்பு ஆகிய எட்டுப் பொருட்களையும் தரித்திருப்பவரும், நடுப்பகல் சூரியனைப் போல பிரகாசம் உடையவருமாகிய தருண கணபதியானவர் உங்களைக் காப்பாற்றுவாராக. (ரத்த வர்ணம்)

(3) பக்த கணபதி



கைகளில் தேங்காய், மாம்பழம், வெல்லம், பாயசம் இவைகளைத் தரித் திருப்பவரும், சரத்கால சந்திரனைப் போல வெண்மையான சரீரத்தை உடையவருமான பக்த கணபதியை வணங்குகின்றேன் (வெளுப்பு நிறம்)

(4) வீர கணபதி



வேதாளம், சக்தியாயுதம், அம்பு, வில், சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், இரும்பு உலக்கை, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், சூந்தம், மழு, துவஜம் ஆகிய 16 ஆயுதங்களையும் தரித்திருப்பவரான வீர கணபதியை எப்பொழுதும் தியானிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

(5) சக்தி கணபதி



சக்தியை ஆலிங்கனம் செய்து கொண்டு இருப்பவரும், ஒருவரையெருவர் கட்டிக் கொண்டிருக்கின்ற இருப்பை உடையவரும், சந்யாகால மேகம் போல சிவந்த நிறம் உடையவரும், பாசம், அங்குசம், தரித் திருப்பவரும், பயங்களைப் போக்குபவருமான சக்தி கணபதியை வணங்குகின்றேன். (செந்தூர நிறம்)

(6) த்விஜ கணபதி



ஹே! த்விஜ கணபதியே! யாரொருவன் புஸ்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் இவைகளின் சோபையுடன் பிரகாசிக்கின்றவரும், கைகளில் அணிந்திருக்கின்ற ஆபரணங்களை உடையவரும், சந்திரனைப்போல வெண்மையான நிறமுடையவரும், நான்கு யானை முகங்களுடன் இருப்பவருவமான தங்களை நினைக்கின்றானோ அவன் பாக்யசாலியாவான். (வெண்மை நிறம்)

(7) சித்தி கணபதி



மாம்பழம், பூக்கொத்து, கருப்பங்கழி, எள்ளுக்கொழுக்கட்டை, மழு இவைகளை தரித்திருப்பவரும், தங்கம் போன்ற மஞ்சள் நிறமுடையவரும், ஸ்ரீதேவி, ஸம்ருத்திதேவி இவர்களுடன் இருப்பவருமாகிய சித்தி கணபதியை வணங்குகின்றேன்.

(8) உச்சிஷ்ட கணபதி



கைகளில் நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெல்கதிர், குன்றிமணிஜபமாலை இவைகளைத் தரித்திருப்பவரும், நீலநிறம் உடையவருமான உச்சிஷ்ட கணபதியானவர் எம்மைக் காப்பாற்றுவாராக.

(9) விக்ன கணபதி

சங்கு, கரும்புவில், புஷ்பபானம், கோடரி, பாசம், சக்ரம், தந்தம், மழு, பூங்கொத்து, அம்பு இவைகளை கைகளில் வைத்திருப்பவரும், விரும்பி அணிந்திருக்கும் சொயை உடையவரும், தங்கத்தைப் போல நிறமுடையவரும், விக்கினங்களை நீக்குபவராக விளங்குகிறார்.

(10) க்ஷிப்ப்ரீர கணபதி



தந்தம், கல்பவிருக்ஷ கிளை, பாசம், ரத்ன கலசம், அங்குசம், இவைகளை தரித்திருப்பவரும், செம்பரத்தம் பூப்போல அழகான சரீர காந்தியுடையவருமான ஷிப்ர கணபதியை தியானம் செய்வாயாக.

(11) ஹேரம்ப கணபதி



அபயம், வரதம், பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவைகளைத் தரித்திருப்பவரும், சிம்மவாஹனத்தில் இருப்பவரும் ஐந்து யானை முகத்தை உடையவரும், மஞ்சள் நிறமுடையவருமான ஹேரம்ப கணபதியானவர் எம்மைக் காப்பாற்றுவாராக.

(12 லக்ஷ்மீ கணபதி



கிளி, மாதுளம்பழம், மாணிக்கரத்ன, மகுடங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கல் பலதை, ஒளிபொருந்திய கத்தி இவைகளை தரித்திருப்பவரும், அமிர்தமயமாக இருப்பவரும், நீலோத்பலத்தை கையில் வைத்திருப்பவரும், இரண்டு தேவியரை இருபக்கத்திலும் வகித்து வாதஹஸ் தழுடன் இருக்கும் லக்ஷ்மீ கணபதி எம்மைக் காப்பாற்றுவாராக (மஞ்சள் நிறம்)

(13) மஹா கணபதி

யானை முகத்தையுடையவரும், சந்திரனை சிரசில் தரித்திருப்பவரும், முக்கண் உடையவரும், தாமரை மலரைக் கையில் தரித்த சக்தியை சந்தோஷமுடன் தமது மடியில் ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பவரும், மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்ரம், தாமரைமலர், பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவைகளை வஹிப்பராகிய மஹா கணபதியை சேவிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

(14) விஜய கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் திரித்திருப்பவரும், மூஷிக வாகனத்தில் இருப்பவரும், சிவப்பு நிறம் உள்ளவருமான விஜயகணபதி நம்முடைய இடையூறுகளை நீக்கி வெற்றியை தருவாராக.

(15) நிருத்த கணபதி

பாசம், அங்குசம், அபூபம் (அதிரசம்), கோடரி, தந்தத்தில் சுழழுகின்ற கைவிரல் உடையவரும், கல்பவிருட்ச அடியில் இருக்கும் நிருத்த கணபதியை வணங்குகின்றேன்.

(16) ஊர்த்வ கணபதி



செங்கழிநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு வில், அம்பு, கதை, தந்தம் இவைகளைத் தரிப்பவரும், தங்கம் போல பிரகாசிக்கின்ற மேனியையுடையவரும், பச்சை நிறமுடைய தேவியினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவருமான ஊர்த்வ கணபதியானவர் எனக்கு மங்களத்தைக் கொடுப்பாராக.

(17) ஏகாக்ஷர கணபதி

சிவப்பு நிறமுடையவரும், சிவந்த சந்தனம், செம்பட்டு, சிவந்தபூ இவைகளை அணிந்தவரும், பெரிய வயிறுடையவரும், சந்திரனை சிரசில் தரித்திருப்பவரும், முக்கண் உடையவரும், குட்டையான கை, கால் உடையவரும், மாதுளம்பழம், பாசம், அங்குசம், தந்தம், வரதம் இவைகளைக் கைகளில் தரித்திருப்பவரும், சர்பத்தை அணிந்து, பத்மாசனத்தில் அமர்ந்த விக்னராஜர் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பாராக.

(18) வர கணபதி

சிந்தூரத்தைப் போன்ற நிறமுடையவரும், யானை முகமுடையவரும், முக்கண்களை உடையவரும், கைகளில் பாசம், அங்குசம், மதுக்கபாலம், இவைகளுடன் சிரசில் சந்திரனைத் தரித்திருப்பவரும், துவஜாக்ரம், தாமரைமலர் இவைகளை தரித்திருப்பவளான புஷ்டியினாலே ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்ட சரீரத்தையுடையவரும், சகல செல்வங்களையும் அளிக்கும் தாமரைமலரை துதிக்கையில் வைத்திருப்பவருமான வர கணபதியை வணங்குகின்றேன்.

(19) திரியக்ஷர கணபதி

யானை முகமுடையவரும், அசைந்து கொண்டிருக்கும் சாமரைப் போன்ற காதுகளை உடையவரும், தங்க நிறமுடையவரும், நான்கு கைகளுடையவரும், பாசம், அங்குசம், வலது கையில் தந்தம், இடது கையில் மாம் பழத்தையும், துதிக்கையில் மோதகத்தையும் தரித்திருப்ப வருமான கணபதியை சேவிக்க வேண்டும்.

(20) ஷிப்ரபிரசாத கணபதி



பாசம், அங்குசம், கல்பலதை, தந்தம், மாதுளம்பழம், தாமரைப்பூ இவைகளைக்

கைகளில் தரித்திருப்பவரும், சந்திரனை சிரசில் சூடியவரும், மூன்று கண்கள் உடையவரும், பெருவயிற்றுடன் பத்மா சனத்தில் இருப்பவரும், எப்பொழுதும் விக்கினங்களை நீக்குகின்றவரான ஷிப்ர பிரசாத கணபதி எனக்குச் செல்வத்தை அளிப்பாராக.

(21) ஹரித்திரா கணபதி



மஞ்சள் நிறமுடையவரும், நான்கு கைகள், மஞ்சளான முகமும், பாசம், அங்குசம், மோதகம், தந்தம், இவைகளை தரித்திருப்பவரும், பக்தர்களுக்கு அபயம் அளிப்பவருமான ஹரித்திரா கணபதியை வணங்குகிறேன்.

(22) ஹரித்திரா கணபதி



பெரிய வயிறும், நீல நிறமானவரும், மேல் கையில் கோடரி, ஜபமாலையும், கீழ்கையில் இட்லி, தந்தம் இவைகளையும், தரித்திருப்பவருமான ஏகாந்த கணபதியை வணங்குகிறேன்.

(23) ஸ்ருஷ்டி கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளை தரிப்பவரும், மூஞ்சூறு வாஹனத்தில் இருப்பவரும், சிவந்த நிறமுடையவரும், ஸ்ருஷ்டி செய்வதில் சிறந்த சாமர்த்தியம் உடையவருமான விநாயகர் நம்முடைய சகல விக்கினங்களையும் நாசம் செய்வாராக.

(24) உத்தண்ட கணபதி



நீலோத்பலம் அல்லது, செழுங்கழுநீர், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், புஷ்பம், ரத்ன கலசம், நெற்கதிர், பாசம், அங்குசம், அப்ஜம் இவைகளை கைகளில் தரிப்பவரும், மஞ்சள் நிறமுடையவரும், தாமரையை கையில் தரித்தவளான தேவியினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், சிவப்பு நிறமுடையவருமான உத்தண்ட கணபதியானவர் துதிப்பவர்களுக்கு மங்களத்தை அளிப்பாராக.

(25) ருணமோசந கணபதி



பாசம், அங்குசம், தந்தம், நாவல்பழம் இவைகளைத் தரித்திருப்பவருமாகிய ருணமோசந கணபதியானவர் சந்தோஷத்தை கொடுப்பாராக.

(26) டுண்டி கணபதி



ஜபமாலை, கோடரி, ரத்னபாத்திரம், தந்தம் இவைகளைக் கைகளில் தரித்து இருப்பவருமாகிய டுண்டி கணபதியானவர், விக்கினங்களை நீக்கி ஷேமத்தை அளிப்பாராக.

(27) இருமுகக் கணபதி

தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவைகளைத் தரித்தவரும், நீலநிறமுடையவரும், சிவந்த ரத்தினங்களால் ஆன கிரீடம், மாலைகளைத் தரிப்பவருமான இருமுகக் கணபதியானவர் எனக்குச் செல்வத்தைக் கொடுப்பாராக.

(28) திரிமுக கணபதி



கூர்மையான மாவெட்டி, ஜபமாலை, வரதம் இவைகளை இடது பக்கத்திலும், பாசம், அமிர்த கலசம், அபயம் இவைகளை வலது பக்கத்திலும், கைகளில் தரிப்பவரும், தங்கத்தாமரையில் கர்ணிகையுடன் கூடிய பீடத்தில் சந்தோஷமாக வீற்றிருப்பவரும் பூவரசம்பூ போல சிவந்த நிறமுடையவருமான திரிமுக கணபதி நம்மைக் காப்பாற்றுவாராக.

(29) சிம்ம கணபதி



வீணை, கல்பலதை, சக்ராயுதம், வரதம் இவைகளை இடது கைகளிலும், தாமரை, ரத்ன கலசம், அழகான பூக்கொத்து, அபயம் இவைகளை வலது கைகளிலும் தரிப்பவரும், துதிக்கையுடைய சிம்மமுகத்துடன் கூடியவரும், சங்கம், சந்திரன் இவைகளைப் போல வெண்மை நிறமுடையவரும், சகல மங்களங்களையும் தருபவரும், ரத்னம் போன்ற ஆடையினால் பிரகாசிக்கின்ற வருமான சிம்ம கணபதியானவர் நம்மை துன்பங்களிலிருந்து காப்பாற்றுவாராக.

(30) யோக கணபதி



யோகத்தில் இருப்பவரும், யோகபட்டத்தை அணிந்து அழகாக இருப்பவரும், இளம் சந்திரனைப் போன்ற சரீரகாந்தியுடையவரும், இந்திர நீலம் போன்ற ஆடையணிந்து இருப்பவரும், பாசம், கரும்பு, ஜபமாலை, யோகதண்டம் இவைகளைத் தரித்திருப்ப வருமான யோக கணபதியானவர் நம்மை எப்பொழுதும் காப்பாற்றுவாராக.

(31) துர்கா கணபதி



உருக்கிய தங்கம் போன்ற நிறம் உடையவரும், எட்டுக் கைகள் உடையவரும், பருத்த சரீரமுடையவரும், வலது பக்க கைகளில் பிரகாசிக்கின்ற அங்குசம், அம்பு, ஜபமாலை, தந்தம் இவைகளையும், இடது கைகளில் பாசம், வில், கல்பலதை நாவற்பழம் இவைகளை தரித்திருப்பவரும், சிவப்பு ஆடை அணிந்தவருமான துர்கா கணபதி எப்போதும் சந்தோஷத்தை அளிப்பாராக.

(32) ஸங்கடஹர கணபதி

பாலசூரியனைப் போல ஒளியுடையவரும், மஞ்சள் நிறத்தவரும், ஜொலிக்கும் ரத்னா பரணங்களை அணிந்திருப்பவரும், கையில் நீலோற்பலத்தை வைத்திருக்கும் பாலைப் பருவமுடைய சக்தியை இடது மடியில் வைத்திருப்பவரும், இடதுபக்கம் அங்குசம், வரதமும், வலதுபக்கம் பாயசபாத்திரம், பாசம் இவைகளை தரித்திருப்பவரும், நீல நிற ஆடையை அணிந்திருப்பவரும் ஸங்கடஹர கணபதியானவர் எப்போதும் காப்பாற்றுவாராக.

அருள் தரும் திருத்தலங்கள்

குற்றாலநாதர்

திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குப் பெயர் திருக்குற்றாலநாதர் என்பதாகும். இத்திருத்தலம் தென்காசியில் இருந்து சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. இது திருநெல்வேலி மாவட்டம் சார்ந்த ஊராகும். குற்றாலநாதரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்பாக குற்றாலம் பற்றியும் தெரிந்துகொள்வோம்.

இத்திருக்குற்றாலம் 5000 அடி உயரமான மலை ஆகும். இதற்கு திரிகூடமலை என்கிற சிறப்புப் பெயரும் உண்டு. இந்த மலையில் மூன்று சிகரங்கள் இருக்கின்றன. இவற்றுள் மிக உயரமான சிகரம் பஞ்சந்தாங்கி என்பதாகும். இங்கு மலையில் பல காடுகள் உள்ளன. இந்தக் காடுகளுக்குச் செண்பகக் காடு என்பது பெயராகின்றது.

இங்குள்ள காடுகளில் மூலிகைகள், மரம், செடி, கொடிகள் முதலியன நிரம்பி இந்த மலையே பசுமைக் காட்சியாக இருக்கின்றது. இங்கு பல சிறப்பு மிக்க அருவிகள் உள்ளன. இவற்றுள் தேனருவி, செண்பகா தேவி அருவி, ஐந்தருவி, வடஅருவி போன்றன சிறப்புமிக்க அருவிகள் ஆகும். இத்தகு சிறப்புடைய அருவிக்கு மிக அருகிலேயே குற்றாலநாதர் ஆலயம்.

இங்குள்ள குற்றாலநாதர் லிங்க வடிவில் இப்போது இருக்கின்றார். இதற்கு முன்பாக இவர் விஷ்ணுவாகவே இருந்தார். பின்னர் அகத்திய முனிவரின் தவப்பயனால் சிவலிங்கமாக மாற்றப்பட்டார். அகத்திய முனிவர் சிவனடியார் தோற்றத்தில் இக்கோயிலுக்கு வந்து விஷ்ணுவைத் தரிசிக்க எண்ணியிருந்த போது அவரால் இந்தக் கோயிலுக்குள் செல்ல முடியவில்லை. அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. இதனால் மனம் வருந்திய அகத்திய முனிவர் இலஞ்சி மலைக்குச் சென்று அங்கு முருகப் பெருமானை வணங்கி நின்றார். முருகப் பெருமான் அகத்தியருக்கு ஒரு தந்திரம் சொன்னார்.

அதன்படி பழுத்த வைணவர் கோலம் பூண்டு கோயிலுக்குச் சென்று, அங்கு கற்பகிரகத்தில் தாமே பூசையும் செய்தார். கற்பகிருகத்தின் கதவினைச் சாத்திக்கொண்டு, அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளின் தலையினை தமது கைகளால் அமுக்கி சிவபெருமானை வேண்டி அவரைக் குறுகச் செய்து குறுகிய நாதராக்கி, குற்றாலநாதராக்கிவிட்டார்.

சைவமும் வைணவமும் ஒன்று என்கின்ற நினைவினை ஏற்படுத்துகின்ற வகையில் எழுந்தருளியிருப்பவரே இந்தக் குற்றாலநாதர் ஆவார். இங்கு அம்பாள் குழல் வாய்மொழி அம்மையாகத் தனியாகக் கோயில் கொண்டுள்ளார்.

இந்தத் தலத்தின் விருட்ச மரம் குறும்பலா ஆகும். நான்கு வேதங்களின் தவப்பயனாக இந்தக் குறும்பலா மரம் திகழ்கின்றது. இந்தப் பலாமரத்தின் அடியில் லிங்கம் ஒன்று இருக்கின்றது. இதன் காரணமாக இப்பலா மரம் தெய்வீகத் தன்மை பொருந்திய மரமாகக் கருதப்படுகின்றது. இதிலுள்ள பழங்களையும் இலைகளையும் யாரும் பறிப்பது கிடையாது. இங்குள்ள சிவன் சதுர்வேதியனாகத் திகழ்கின்றார்.



இந்தத் திருத்தலம் மக்களின் குறைகளைப் போக்கி, நோயற்ற வாழ்வு வாழ வைக்கும், பிறவிப்பிணியைத் தீர்க்க வல்ல திருத்தலமாகும். இங்குள்ள பராசக்தி சந்நதியில் யோகநிலையில் பராசக்தி இருப்பதால் இதற்கு யோக பீடம் என்கிற பெயர் உண்டாகி இருக்கின்றது. இந்தச் சந்நதியில் பூந்தொட்டில் ஒன்று இருக்கின்றது. இதற்கு தாணு மாலயன் பூந்தொட்டில் என்கிற பெயர் உண்டு. கபிலர், பட்டினத்தடிகள் போன்றவராலும் பாடல் பெற்றது இந்தத் திருத்தலம்.

அரி-அரண்-அயன் ஆகிய மூன்று பேரையும் அன்னை கர்ப்பத்தில் சுமந்ததாக வரலாறு இருக்கின்றது. இதனைச் சோழ நாட்டு மன்னர்களும், பாண்டிய நாட்டு மன்னர்களும் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றார்கள் என்பதை இங்குள்ள கல்வெட்டுக்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இந்த அரசர்களால் மானியங்களும் கட்டளைகளும் தரப்பட்டு மிகச் சிறந்த கோயிலாக இவை மாறியுள்ளன. திருப்பணிகளும் இவர்கள் காலத்தில் சிறப்புற நடைபெற்றுள்ளன.

ஸ்ரீரங்கம் திருக்கோயில்

வைணவக் கோயில்களிலேயே மிகவும் முதன்மையானதும், முக்கியத்துவமானதுமான திருக்கோயில் இந்தத் திருக்கோயிலாகும். இது காவிரி-கொள்ளிட நதிகளின் நடுவே அமைந்துள்ள திருச்சியில் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீரங்கநாதப்பெருமான் மூலவராகக் காட்சியளிக்கின்றார். இவர் ஆதிசேஷ சயனத் திருக்கோலம் கொண்டவராக விளங்குகின்றார். அதாவது இங்குள்ள பெருமாள் பள்ளிகொண்டு வீற்றிருக்கின்றார். இவரை பெரிய பெருமாள், எம்பெருமாள், அழகிய மணவாளன் என்கிற பெயரிட்டு அழைக்கப் பெறுகின்றார். இங்குள்ள உற்சவருக்குப் பெயர் நம்பெருமாள் என்பதாகும்.

இங்கு எழுந்தருளியுள்ள தாயார் சந்நிதிக்குப் பெயர் ஸ்ரீஅரங்கநாயகி என்பதாகும். ரங்க நாச்சியார் என்கிற திருப்பெயரும் வைத்து இவளை அழைப்பார்கள். இக்கோயிலில் காவேரி, கொள்ளிடம், சந்தரபுஷ்கரிணி, வேதச்சுருங்கம் போன்ற தீர்த்தங்கள் உள்ளன. இந்தக் கோயிலின் ஸ்தல விருட்சம் புன்னை மரமாகும்.

இந்தத் திருத்தலம் பட்டர் வடக்குத் திருவீதிப்பிள்ளை-பிள்ளை லோகாசார்யர் பெரியநம்பி போன்றோர்கள் அவதரித்துள்ள திருத்தலம் ஆகும். இதனைச் சோழ நாட்டுத் திருப்பதி என்றும், திருவரங்கம் என்றும் அழைக்கின்றார்கள். இந்தத் திருத்தலம் ஆழ்வார்களாலும், ஆண்டாளாலும் மங்களா சாசனம் பெற்ற திருத்தலமாகும். இந்தத் திருத்தலத்தின்மேல் ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் மொத்தம் 247 ஆகும்.

பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் போன்ற பத்து ஆழ்வார்களும், இவர்களைத் தவிர ஆண்டாளும் இந்தத் திருத்தலத்தின் மேல் பாடல்களைப் பாடியிருக்கின்றனர். நந்தவன கைங்கர்யமும், திருமதில் கைங்கர்யமும் செய்யப்பெற்ற திருத்தலம் இந்தத் திருத்தலம் ஆகும். இங்கு திவ்யப் பிரபந்தத்தைப் பாடும் முறை "அரையர் சேவை" என்கிற பெயரில் இங்கு இசைக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திருத்தலத்தை பூலோக வைகுண்டம் என்று அழைக்கிறார்கள்.

ஒவ்வொரு வைகுண்ட ஏகாதாசியிலும் இந்தத் திருக்கோயிலில் சொர்க்க வாசல் திறக்கப்பட்டு வைகுண்டனாகிய ஸ்ரீரங்கப் பெருமாளை மக்கள் தரிசனம் செய்கிறார்கள். இங்குள்ள ராஜகோபுரம் நமது பாரத திருநாட்டிலேயே மிகப் பெரிய கோபுரமாகத் திகழ்கிறது. இப்போது தமிழ்நாடு அரசினாலேயே இந்தக் கோபுரம் பூர்த்தியானது. இந்தத் திருத்தலத்திற்கும், இலங்கைக்கும் தொடர்பு உள்ளதாக அறிவியல் பூர்வமாகக் கண்டுணரப்பட்டிருக்கின்றது.

இந்த ஸ்ரீரங்க கோபுரத்தில் இருந்து செல்லுகின்ற ஒளியானது இலங்கையை நோக்கி விழுகின்றது. இவ்விமானத்தில் இருந்து விழுகின்ற இந்த ஒளியின் சக்தியைத் தாளாத காரணத்தினாலேயே இலங்கையில் இன்று பல பிரச்சனைகள் நிகழ்வதாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இத்திருக்கோயிலில் 1986 ஆம் ஆண்டில்தான் ராஜகோபுரம் சீர்செய்யப் பெற்று மகாகும்பாபிஷேக வைபவம் நிகழ்வுற்றது. இந்தத்திருக்கோவிலின் வடக்குப் பக்கம் பரமபத வாசலில் வரஜா நதி ஓடுவதாக ஐதிகம் நிலவுகின்றது.

இங்கு "மேட்டு அழகியசங்கர்" என அழைக்கப்படுகின்ற ஸ்ரீநரஸிம்ம மூர்த்தி திருக்கோயில் கொண்டுள்ளார். இதன் நுழைவாயிலில் தாயாரின் சந்நிதி உள்ளது. ஸ்ரீதரன் வந்தரி பகவானின் சந்நிதி வேறெந்த கோயிலிலும் காணப்படாத வகையிலில் இந்தத் திருக்கோயிலில் அமைந்துள்ளது. இங்குள்ள தீர்த்தத்திற்குப் பெயர் சந்த்ரபுஷ்கரணி என்பதாகும். ஸ்ரீ அரங்கநாதரின் சந்நிதிக்கு மேலாக தங்க விக்ரவளம் விமானமாக அமைந்துள்ளது.

இங்கு பெருமாளைத் தரிசித்துவிட்டு வருகின்றவர்கள் தங்க விமானத்தையும், பரவாஸ தேவரையும் சேவிக்கின்ற வழக்கம் இன்று இருந்து வருகின்றது. ஸ்ரீராமானுஜர் ஆசாரியராலும், அதற்கும் முற்பட்ட ஆசாரியர்களாலும் மங்களா சாசனம் பெற்ற வைணவ திவ்ய தேசங்களுள் ஒன்று இந்தத் திருத்தலம் ஆகும்.

திருக்கழுக்குன்ற[illegible] திருக்கோயில்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது இந்தத் திருத்தலம். திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம் இதுவாகும். இது தமிழகத்தில் உள்ள மிகப் பிரபல்யமான சிவாலயம் ஆகும். இது ஒரு மலைக்கோயில். இங்கு சங்கு தீர்த்தம் உள்ளது. இந்த மலைக்கோயிலில் குடியிருக்கும் இறைவன் வேதகிரீசுவரர் ஆவார்.

இங்கு தினந்தோறும் மதிய உணவிற்கு இரண்டு கழுகுகள் வந்தமர்ந்து உணவருந்திய பின்னரே சிவதரிசனம் செய்யப்படுகிறது. திருஞான சம்பந்தர் மட்டுமல்லாது திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலியவர்களாலும். பாடல் பெற்ற ஸ்தலமாகும். அருணகிரிநாதர், இராமலிங்கவள்ளலார், சிதம்பரம் சுவாமிகள், அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலிய ஞானிகளால் பாடப்பெற்ற திருத்தலம்.

வேதகிரீசுவரர் இங்குள்ள மலையில் குடியிருக்கின்றார். இங்கு நான்கு வேதங்கள் சங்கமிக்கின்ற நான்கு மலைகள் சங்கமிக்கின்ற இடமாக இது விளங்குவதால் இதற்கு இப்பெயர்



வந்தது. இங்கே கருடன், அஸ்டவஸ்து போன்ற ருத்ரர்கள் கொலுவிருக்கும் திருக்கோயில். இங்கு மதிய உணவு வேளைகளில் கழுகு வந்து உணவு உண்பது அதிசயங்களில் ஒன்றாகும். இந்தக் காட்சியை நாம் காண்பதால் நமக்கு மோட்சம் கிடைப்பதாக ஓர் ஐதிகம் இருக்கின்றது. இந்த கழுகுகளுக்கு சாந்தன், பிரசண்டன் என்கிற பெயர் திருதயுகத்தில் சொல்லப்பட்டது. சம்பதி, ஜடாயு என்கிற பெயர்கள் கிருத யுகத்திலும், சம்யுக்தன், முகுந்தன் என்கிற பெயர்கள் துவாரக யுகத்திலும் இப்போது கலியுகத்தில் புஷா, விதாதக என்கிற பெயர்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்த கோடிகள் இங்கு வந்து தரிசனம் பெற்று செல்கின்றார்கள். இந்தக் கழுகுகள் பிரம்மாவின் புதல்வர்களாக கருதப்படுகின்றார்கள். இங்கு காணப்படும் சங்கு தீர்த்தத்தில் இருந்து சங்கு கொண்டுபோகப்பட்டு கோயிலில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர இந்தத் திருத்தலத்தில் பக்தவத்சலீஸ்வரர் ஆலயமும், திருப்புர சுந்திரி அம்மன் ஆலயமும் உள்ளன.

இந்தக் கோயிலுக்கு பல நிலபுலன்களும் ஆஸ்தியும் உண்டு. இங்கு வருகின்ற பக்தர்கள் தாங்கள் நிச்சயமாக மோட்சம் பெறும் பலனை அடைவதாக நம்புகின்றார்கள். "சிவாய நம என சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருகாலும் இல்லை" என்பதை அருள் பாவிக்கும் திருக்கோயில் இது. பக்தர்கள் இங்கு சென்று சிவதரிசனம் பெற்று உய்வார்களாக!

சூரியனார் கோயில்

இந்தக் கோயில் இந்தியாவின் தமிழ் நாட்டு ஆடுதுறைக்கு வடக்காக சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இந்தக் கோவிலுக்கு சூரியனார் கோவில் என்றும், நவக்கிரகக் கோயில் என்றும், குலோத்துங்க சோழ மார்த்தாண்டலயம் என்றும் பெ _டு அழைக்கப்படுகின்றது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயிலாகும்.

சூரிய வழிபாடு என்பது பன்னெடுங்காலமாக நமது நாட்டில் இருந்து வருகின்றது. சூரிய பகவான் யாகங்கள், சோதிடம் முதலியவற்றினால் மிகவும் சிறப்பினை உடையவனாகக் கருதப்படுகின்றான். வேதம், உபநிடதம் முதலியன உருவாகுவதற்குக் காரணமாக விளங்குபவன் சூரிய பகவானாவான். விசுவாமித்திரர் அருளிய காயத்திரி ஜெபத்தினை ஓதாத வைதீகர்கள் கிடயாது. காஞ்சியில் உள்ள காமாட்சி அம்மன் கோயில், திருவரங்கர் கோயில் முதலிய இடங்கள் தோறும் காயத்திரி மண்டபக் கருவறைகள் இருக்கின்றன.

இராமபிரான் அவதரித்தது இந்த சூரிய குலத்தில்தான். சோழ மன்னர்கள் சூரிய குலத்தினர் ஆவார்கள். பழைய இலக்கியங்களில் 116 பகுதிகள் மூலமாக சூரிய வழியினர் பேசப்படுகின்றனர். சூரிய வழிபாடு என்பது சிந்துவெளி நாகரிகம், சுமேரியா, எகிப்து நாகரிகம் தொட்டு இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சூரிய வழிபாடு என்பது சந்தியவந்தனமாகக் கூறப்படுகின்றது. வேதம் ஓதுகின்றவர்கள் சூரிய வழிபாட்டை நாள்தோறும் கடைப்பிடித்து வருகின்றனர்.



தர்மத்தில் இருந்து தவறியவர்களைச் சூரிய பகவான் தண்டிப்பான் என்பது சங்க காலத்துச் செய்தியாகச் சொல்லப்படுகின்றது. "பகல் வாயில் உச்சிக் கிழான் கோட்டம்" என்று சிலப்பதிகாரத்தில் வருகின்ற வரியில் இருந்து அப்போதைய பூம்புகார் நகரில் சூரியன் கோயில் இருந்து வந்துள்ளது என்பது தெரிய வருகின்றது. எல்லாக் கோயில்களிலும் சூரிய வணக்கம், சூரிய வடிவம் இவை அமைக்கப்பட்டுள்ளன.

சூரிய வழிபாட்டினை ஒட்டியே சித்திரைப் பிறப்பு, அமாவாசை, கார்த்திகை விழா, அய காலங்கள் இவைபோன்ற முக்கிய விரத நாள்கள் கணிக்கப்படுகின்றன. ஆதித்தன், கண்டராதித்தன் போன்ற பெயர்கள் சூரிய பகவானின் பெயராலேயே வழங்கப்பட்டு வருகின்றது. தமிழகத்திலும், ஒரிசா மாநிலத்திலும் மட்டுமே சூரியனார் கோயில்கள் இருக்கின்றன.

தமிழ் நாட்டில் உள்ளது சூரியனார் கோயில் என்றும், ஒரிசாவில் உள்ளது 'கொனாரக்' கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. தமிழர்களே முதன்முதலாக சூரியனார் கோயிலைக் கட்டினார்கள் என்பது வரலாற்றுச் செய்தியாகும். ஒரிசாவில் சூரியனார் கோயில் உள்ள கொனரக் திருத்தலத்தில் பூரி ஜகந்நாத் ஆலயம் இருக்கின்றது. இங்கு மட்டுமே தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. வடக்கே வேறெந்த கோயிலிலும் தேர்த்திருவிழா நடைபெறுவது கிடையாது.

சூரியனார் கோயில் இயற்கை வளம் சூழ்ந்த சூழலில் அமைந்து இருக்கின்றது. இந்தக் கேயில் கருங்கற்களால் கட்டப்பட்டது ஆகும். மற்ற கோயில்கள் செங்கல் கோயில்களாக உள்ளன. சூரியனுக்கு முன்புறம் அவர் தமது வாகனமான குதிரை வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகக் கருதப்படுகிறது.

சித்திரை மாதத்தில் முதல் மூன்று நாட்கள் சூரியன் பரம உச்சனாக இருக்கின்றான். இதனால் இந்த நாட்களில் கிரக சாந்திகளை இந்தக் கோயிலில் செய்து நற்பலனைப் பெறலாம். கோயில்கள் தோறும், குறிப்பாக சைவக் கோயில்களில், அம்பாள் சிவன் கோயில்கள் தோறும் நம்மால் நவக்கிரகங்களைக் காணமுடிகின்றது. எட்டுக் கிரகங்களும் சூரியனைச் சுற்றியே எழுப்பப்பட்டிருக்கும்.

இந்த நவக்கிரகங்களையும் சுற்றி வருகின்றவர் தாம் நினைத்ததை முடித்துக் கொள்ளலாம். அத்தோடு ஏழரை நாட்டுச் சனி என்று சொல்லப்படுகின்ற சனிபகவானின் ஆட்சி நிலைபெறும் போது படாத துன்பங்களைப்படுகின்றவர்கள் இந்த நவக்கிரகத்தினை சுற்றி வந்தால் பலவாறாக நற்பலன்களைப் பெற முடியும். குறிப்பாக சூரிய பகவானுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அர்ச்சனை செய்து வந்தால் எல்லாவிதமான கஷ்டங்கள் நீங்குவதற்கும் வழிகோல் உண்டாகின்றது.

திருக்கடவூர் திருக்கோயில்

திருக்கடவூர் அன்னை அபிராமி எழுந்தருளியுள்ள திருத்தலமாகும். இந்தத் திருக்கடவூர் இந்தியாவில் தமிழ்நாட்டின் மயிலாடுதுறையில் இருக்கின்றது. இந்தத் திருத்தலம் அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள ஈசனுக்குப் பெயர் அமிர்த கடேஸ்வரர் என்பது ஆகும். இங்குள்ள அன்னை ஈஸ்வரிக்குப் பெயரே அபிராமி என்பதாகும். மிகவும் பெரிய கோயிலாக இது விளங்குகின்றது.



பக்தர்களைக் காப்பதில் ஈஸ்வரனைவிட ஈஸ்வரிக்கே அதிக விருப்பம் இருப்பதினால் இவர் பக்தர்களை விரைந்து சென்று காப்பாற்றுகின்றார். இந்தக் கோவிலின் கோபுரமானது இராஜகோபுரம் என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கோயிலுக்கு ஐந்து பிரகாரங்கள் இருக்கின்றன. இவற்றைப் பஞ்சபிரகாரம் என அழைக்கின்றார்கள். இதில் முதல் பிரகாரத்தை நாம் கடந்து சென்றால் கள்ளவாரனப் பிள்ளையாரையும் காலசம்ஹாரரையும் நாம் காண முடியும்.

இங்கு காலசம்ஹாரன் செப்புச் சிலையாகக் காணப்படுகின்றார். இவருக்கு வருடம் தோறும் 11 முறைகளே அபிஷேகம் செய்யப்படுகின்றன. இவர் வெள்ளைப் பீதாம்பரம் அணிந்து காட்சி தருகின்றார். இவரைக் கடந்து சென்றால் நாம் அமிர்தகடேஸ்வரர் சந்நதியைக் காண முடியும். இவரைத் தரிசித்த பிறகே அன்னை அபிராமி காட்சி தருகின்றார். இவள் அமர்ந்துள்ள பீடம் மிகவும் அழகாகவும், நான்கு திருக்கரங்களைக் கொண்டும், இரண்டு அபய விரத முத்திரைகளோடும், தனது மற்றைய இரண்டு கரங்களில் மாலையும் மலருமாகக் காட்சி அளிக்கின்றார்.

இவள் மூன்று அடி உயரத்தில் கேட்டவர்க்கு இனிய வரம் அளிக்கின்ற தெய்வமாக அன்னை அபிராமி காட்சி அளிக்கின்றாள். இங்குள்ள சிவனுக்குப் பெயர் காலசம்ஹாரர் என்றும், அமிர்தகடேஸ்வரர் என்றும் பெயர் இருப்பதற்குக் காரணம் உண்டு. மார்க்கண்டேயன் சிவபெருமானைப் பூசித்து வரலானார். இவ்வாறு இவர் பூசை செய்து வரும் பட்சத்தில் எமதூதன் மார்க்கண்டேயன் மீது பாசக் கயிற்றினை எறிகின்றான். உடனே மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைப் பிடித்து அணைத்துக் கொள்கின்றார். லிங்கமாக இருந்த இறைவன் திருவுருவெடுத்து எமனை எட்டி உதைத்து தம்முடைய சூலத்தை அவன்மீது பாய்ச்சி மார்க்கண்டேயனைக் காப்பாற்றி, என்றும் பதினாறாக அவர் இருக்கும் வகையில் வரம் அளிக்கின்றார்.

இவ்வாறாக காலனைச் சம்ஹாரம் செய்ததினால் இவருக்கு காலசம்ஹரர் என்கிற பெயர் உண்டானது. பாற்கடலினைக் கடைந்து அமிர்தம் எடுத்துச் சென்ற தேவர்கள், அதனை ஒரு குடத்திலிட்டு எடுத்துச் செல்கின்றார்கள். அவர்கள் ஓரிடத்தில் அமிர்தக் குடத்தினை வைத்துவிட்டு நீராடச்செல்கின்றார்கள். பின்னர் நீராடிவிட்டு வந்து அமிர்தக் குடத்தை எடுக்க முயலும்போது அது லிங்க வடிவமாக மாறி பூமியிலேயே புதைந்துவிட்டிருந்தது. இதனால் அமிர்தகடேஸ்வரர் என்கிற பெயர் இதற்கு உருவானது. இங்குள்ள பிள்ளையாருக்குப் பெயர் கள்ளவாரனாப் பிள்ளையார் ஆகும் என்பதனை முன்பே கூறியிருக்கின்றோம்.

தேவர்கள் தேவலோகத்திற்குக் கொண்டுவந்த அமுதக் குடத்தை எடுத்து ஒளித்து வைத்து விடுகின்றார் விநாயகர். தேவர்கள் அமுதக் குடம் காணாமல் தவிக்கின்றனர். இதனால் தேவர்கள் விநாயகப் பெருமானை வணங்கிக் குடத்தினைப் பெறுகின்றனர். இவர்கள் வணங்கிய பின்னரே குடத்தை எடுத்துத் தருகின்றார் பிள்ளையார்.

இதனால் இங்குள்ள பிள்ளையாருக்குக் கள்ளவாரனப் பிள்ளையார் என்கிற பெயர் உண்டானது. இதன் காரணமாகவே இந்தத் திருத்தலம் வருகின்றவர்கள் முதலில் இந்தப் பிள்ளையாரை வணங்கிய பிறகே இந்தக் கோயிலின் உள்ளே செல்கின்றார்கள் என்பது இந்தக் கோயிலுக்கு உரிய ஐதிகம் ஆகும். இந்தக் கோயிலில் கார்த்திகை சோமவாரங்களில் வலம்புரிச் சங்கினால் மற்றும் 1008 சங்குகளால் இங்குள்ள ஈஸ்வரிக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றது.

இப்படி செய்யப்படும் சங்கு அபிஷேகத்தினை தரிசிக்கின்றவர்கள் சகல அந்தஸ்தையும் அடைகின்றார்கள். அன்னை அபிராமிக்கும் இங்கு வரலாறு உண்டு. அன்னைமீது ஆழ்ந்த பக்தி கொண்ட பட்டர் ஒருவர் இருந்தார். இவருக்கு அபிராமிபட்டர் என்பது பெயராகும். ஒருநாள் இவர் தமது மன்னரிடம் அமாவாசை நாளன்று பௌர்ணமி எனக் கூறிவிடுகின்றார். அப்போது மன்னர் கோபம் கொண்டு இன்று நிலா வருமா என்று வினவுகின்றார். வரும் என்று பட்டரும் பதில் அளிக்கின்றார்.

மன்னர் மேலும் கோபம் கொண்டு அன்று இரவில் நிலவை வரவழைக்குமாறு கூறுகின்றார். பட்டர் அபிராமி மீது அந்தாதி பாடி தனது காது தோடுளில் ஒன்றை வானத்தை நோக்கி வீசி எறிகின்றார். அந்தத் தோடானது வானத்தில் தங்கி நிலவாகக் காட்சி அளிக்கின்றது. மன்னர் அவர்தம் பெருமையை உணர்ந்தார். இவர் நிலவை வரவழைக்கப் பாடிய இந்த நூறு பாடல்களே "அபிராமி அந்தாதி" என அழைக்கப்பெற்றது.

இந்தத் திருத்தலம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்றோராலும் பாடல் பெற்ற தலமாகும். இங்குள்ள தீர்த்தத்திற்குப் பெயர் அமிர்தபுஷ்கரணி என்பதாகும். பாண்டிய மன்னர்களாலும், சோழ மன்னர்களாலும் இந்தத் திருத்தலம் சிறப்புப் பெற்றது.

மதுரை மீனாட்சி

மதுரை தமிழை மட்டுமல்ல, தமிழரையும் வளர்த்தது! தமிழ்ப் பண்பாடு — தமிழர் தம் கலாச்சாரம் — தமிழ் உணர்வு — தமிழர் அறம் ஆகிய இத்தனையையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஒன்றுக்கொன்று அடித்தளமாக ஆதாரமாகச் செழித்து வளர்ந்தது இந்த மதுரை மண்ணிலே.

மதுரை வீரத்திற்கும் பெயர் பெற்றது! நியாயத்திற்கும் பெயர் பெற்றது! உலகப் பொதுமறை திருக்குறள் என்றால் உலகத்திற்கே உதாரண ஊராகத் திகழ்ந்தது இந்த மதுரை! அரசு எப்படி இயங்க வேண்டும் என்பதற்கும் ஆட்சி எப்படி அமைய வேண்டும் என்பதற்கும் மேற்படி அரசாட்சியில் மக்களுக்கு எப்படி நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்கும் நியாயம் நீதி சரியாகக் கிடைக்கவில்லை என்றால் தெய்வம் தமது நீதியை எப்படி வழங்கும் என்பதற்கும் மதுரை அன்றும் இன்றும் ஏன் இனி என்றும் சான்றாகத் திகழும்.

இந்தத் தலத்தில் உள்ள சிவனை வழிபடுவோருக்கு, மீண்டும் பிறப்பதையும், பிறந்து இறப்பதையும் கடந்த முக்தியை, அதாவது இனிப் பிறவி எடுக்காத மோட்ச கதியைத் தருகின்ற ஆற்றலையும் சக்தியையும் தரவல்லது! சிவன் முக்திபுரம் என்றும் ஜீவன் முத்திபுரம் என்றும் இதனைக் கூறுவர். யாகங்கள் — ஹோமங்கள் அதிலும் அக்கால அரசர்கள் செய்து வந்த ராஜசூய யாகம் போன்ற மாபெரும் யாகங்கள் செய்த பலன்களையும், காசி ராமேச்வரம் போன்ற புண்ணிய க்ஷேத்திரங்களில் முன்னோர்களுக்காக செய்யப்பட்ட காரியங்கள் கிரியைகள் ஆகியவற்றால் கிடைக்கும் பயன்களையும் கங்கை, காவிரி, கோதாவரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடிய பலன்களையும் இந்த மதுரையில் ஒரு நாள் வாழ்ந்து இங்குள்ள சோமசுந்தர மூர்த்தியை வழிபட்டாலே கிடைத்துவிடுமாம்.

இங்குள்ள மூர்த்தியைப் போலவே மற்ற நதிகளுக்கும் கடல்களுக்கும் முன் தோன்றியதும் சிவனால் தனக்கு அபிஷேகம் செய்வதற்காக பக்தர்களுக்காக உருவாக்கப்பட்டதுமான பொற்றாமரை தீர்த்தம்! ஆதி தீர்த்தம் — பரம தீர்த்தம், அருட்சிவ தீர்ததம், முக்தி தீர்த்தம் — ஞான தீர்த்தம் இப்படிப் பல சிறப்புப் பெயர்களைக் கொண்டது இந்த பொற்றாமரை தீர்த்தம்! தர்ம – காம – அர்த்த – மோட்ச தீர்த்தம் என்றும் கூறுவர்!

சிவன் தனது சிரத்தில் சூடிய பிறையில் உள்ள அமிர்தத்தை எடுத்துத் தெளித்து கால நாகம் உமிழ்ந்த கொடிய விஷத்தை நீக்கியதனால் மதுரை என்றும் — பரமன் தனக்கு மாலையாகக் கழுத்தில் அணிந்திருந்த நாகம் வட்டவடிவமாகத் தனது வாயாலேயே தன் வாலைக் கவ்வி இந்த நகரின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்றும் அதுவே பின்னாளில் திருவாலவாய் என்றும் — சிவன் தனது ஜடாமுடியில் சூடிய பிறையில் இருந்து நான்கு மேகங்களை மதுரையைக் காப்பதற்காக அமைத்ததால் கூடல் நான் மாடக் கூடல் என்றும் — ஆதியில் தடாதகை அரசி கன்னிப் பெண்ணாக இருந்து அரசாண்டதால் கன்னிபுரீசம் என்றும் — பரமசிவனே பாண்டிய மன்னனாக சுந்தர பாண்டியன் என்ற பெயருடன் அரசை நிர்மாணித்து ஆட்சி புரிந்ததால் சிவ நகரம், சிவராஜதானி, சிவலோகம், பூலோக கைலாசம் என்றும் இங்கு வாழ்நாளில் ஒரு முறை வழிபட்டாலே போதும் ஜீவன் முக்தி அடைந்துவிடும் என்பதால் ஜீவன் முக்திபுரம், சமஷ்டிவிச்சாபுரம் என்றும் இப்படிப்பல திருப்பெயர்களையும் சிறப்புகளையும் பெற்றது இந்த மதுரை மாநகர்!

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் எத்தனை சிறப்புக்கள் பெற்றுள்ளன என்பதை அறியும்போது மெய் சிலிர்க்கிறது! மதுரை ஆற்றல்கள் பல கொண்டிருப்பினும் அல்லல்களையும் கண்டது. கி.பி. 13-ம் நூற்றாண்டில் மாலிக்காப்பூர், அல்லாபுதீன் கில்ஜி, குஸ்குகான், உலூகான், முகமது பின் துக்ளக் ஆகியோரின் படையெடுப்பிற்கும் ஆளானது. அதிலும் மாலிக்காபூரின் படையெடுப்பின் போது அன்னை மீனாட்சியின் ஆலயம் சேதம் அடைந்தது. இந்தச் சேதம் பின்னர் மதுரையை ஆண்ட விச்வநாதநாயக்கரால் சரி செய்யப்பட்டு வலிவையும் பொலிவையும் கொண்டது!

பின்னர் ஆண்ட திருமலை நாயக்கர் நோய்வாய்ப்பட அது அன்னை மீனாட்சியின் அருளால் குணமடைந்தது காரணமாக மன்னன் மகிழ்ந்து மனமுவந்து ஆலயத்தை மேன்மேலும் நன்கு விரிவுபடுத்திக் கட்டி கலை எழில் மிக்க பல மண்டபங்களையும் எழுப்பினார்! மதுரையை 15 ஆண்டு காலம் அரசாண்ட ராணி மங்கம்மாள் தனது பெயரால் சத்திரம் ஒன்றைக் கட்டியுள்ளார். ஆங்கிலேயர்களும் தமது பங்கிற்கு மதுரையைச் சிறப்பித்துள்ளனர். 1840-ல் மதுரையின் கலெக்டராக இருந்த பிளாக் பர்ன் என்பவர் கோட்டைகளைத் தவிர்த்து அகழிகளைத் தூர்த்து புதிய நகரை நான்கு வெளி வீதிகளும் அமைத்து நிர்மாணித்துள்ளார்.

மதுரை நகரின் நடுவில்அமைந்துள்ளது திருக்கோயில். அதனைச் சுற்றி 5 வீதிகள். ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு உற்சவம் ஆண்டு தோறும் நடைபெறுகின்றது. ஆடி வீதி! ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் நடக்கும் விழா முளைக்கொட்டு விழா! இந்த விழா நடப்பது இந்த ஆடி வீதியிலேதான். இந்த ஆடி வீதி கோயில் மதிலுக்கு உள்ளேயே இருக்கின்றது. அடுத்த சுற்று வீதி சித்திரை வீதி! மாசி மாதம் நடக்கும் மகவிழா இந்த சித்திரை வீதியிலே நடக்கிறது.

அடுத்தது ஆவணி மூல வீதி! ஆவணி மாதம் நடக்கும் மூலப்பெருவிழா இந்த ஆவணி வீதியில் நடக்கும்! அடுத்தது மாசி வீதி! சித்திரையில் நடக்கும் பெருவிழாவான பிரம்மோத்சவம் நடப்பது இந்த வீதியில்தான். அடுத்து இருப்பது வெளிவீதி, போக்குவரத்திற்கு ஏற்ற அகன்ற பெரிய வீதி. இங்கே தினம்தோறும் திருவிழாதான்.

இனி கோயிலின் உள்ளே அமைக்கப் பெற்றுள்ள மண்டபங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். அவை அஷ்டசக்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், திருக்கல்யாண மண்டபம், சேர்வைக்கார மண்டபம், கம்பத்தடி மண்டபம், மண்டப நாயக மண்டபம், திருஞானசம்பந்தர் மண்டபம், புது மண்டபம், நகரா மண்டபம், தேரடி மண்டபம், மைய மண்டபம், இப்படிப் பல மண்டபங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனித் தனிச் சிறப்புக்களைப் பெற்றவைகளாகத் திகழ்கின்றன. இம்மண்டபங்களின் சிறப்புக்கள் அவை வடிவமைக்கப்பட்டுள்ள விதங்களாலும் மேன்மை பெறும் விதமாக அமையப்பெற்றுள்ளன.

அஷ்டசக்தி மண்டபம் அஷ்டலஷ்மி மண்டபம் என்றும் வழங்கப்படுகிறது. எட்டு சக்திகளை மண்டபத்தின் இரண்டு புறங்களிலும் உள்ள தூண்களில் படைத்துள்ளனர். கௌமாரி, ரௌத்ரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, யக்ஞரூபிணி, மகேஸ்வரி, சாமளை, மனோன்மணி ஆகிய சக்திகளின் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தில் அமர்ந்து சிந்தையை ஒரு நிலைப்படுத்திச் சில நிமிடங்களோ சில மணி நேரமோ தியானம் செய்தால் அதுவும் தொடர்ந்து செய்து வந்தால் மனிதனுக்குத் தேவைப்படும் அஷ்டசித்திகளும் கைவரப் பெறும் என்பதும், அவன் அனைவரும் போற்றும் அஷ்டாவதானி ஆக சிறப்புப் பெறுவான் என்றும் பெரியவர்கள் கூறுகிறார்கள். ஆயிரங்கால் மண்டபத்தில் 985 தூண்கள் உள்ளன. ஆனால் அருகில் உள்ள கோயிலில் 15 தூண்கள் உள்ளன. இரண்டும் சேர ஆயிரம் கால்களாகிவிடுகின்றன.

கலை வண்ணத்தையும் கலை நயத்தையும் தமிழன் கல்லிலே வடித்ததோடு மட்டுமல்ல கல்தூண்களிலும் தட்டினால் விதம் விதமாக இசைவரும் விதமாக இசைத் தூண்களையும் இங்கே கண்டு — இசைத்து — ரசித்து இன்புறலாம்! ஒரே தூணில் தண்டுகள் பலவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் மொத்தம் 44 ஆகும். மேலும் செப்புப் பட்டயங்களும் உண்டு. பராக்கிரம பாண்டியன், செண்பகமாறன், குலசேகரதேவர், மல்லிகார்ச்சுனராயர், வீர பாண்டியதேவர், கோனேரின்மைகொண்டான், சுந்தர பாண்டியன், விச்வநாத நாயக்கர், திருமலை நாயக்கர், வீரமநாயக்கர், விக்கிரமபாண்டிய தேவர் ஆகியோர்களால் இக்கோயிலின் தினப்படி பூஜைகளுக்கும் வழிபாடுகளுக்கும் சுவாமி புறப்பாடு, உலாவருதல் போன்ற பல்வகைக் காரண காரியங்களுக்காகவும் மான்யங்களாக நிலங்கள் பொன் ஆபரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

அன்னை மீனாட்சியம்மன் அருள் ஆலயத்தில் திருவிழாக்களுக்குக் குறைவே இல்லை. முக்கிய திருவிழாக்கள் மூன்று. அவை: சித்திரைத் திருவிழா, ஆவணி மூலத் திருவிழா, தெப்பத் திருவிழா ஆகும்! இவையெல்லாம் மாதம் தோறும் அதாவது பன்னிரண்டு தமிழ் மாதங்களிலும் ஒவ்வொரு விழா நடந்து வருகின்றது. சித்திரை மாதத்திலே நடைபெற்றுவருகின்ற இந்த விழா 12

நாட்கள் நடைபெறும். திருக்கல்யாணம் விழாவின் முக்கிய அம்சம். கள்ளழகர் வைகையாற்று மண்டபத்தில் எழுந்தருளி தச அவதாரத்தையும் வெளிப்படுத்தும் அம்சமும் சிறப்புப் பெறும் விழாவாகும். சைவமும் வைணவமும் ஆற்றின் இரண்டு கரைகள்போல என்பதை உணர்த்திடும் விழாவாகவே இவ்விழா கருதப்படுகிறது. இம்மாதம் அன்னைக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்படும்.

வைகாசி மாதத்திலே நடப்பது வசந்த விழா. 10 நாட்கள் நடைபெறும். திருஞானசம்பந்தர் விழாவும் நடைபெறும். ஆனி மாதத்தில் நடைபெறுவது ஊஞ்சல் திருவிழாவாகும். 10 நாட்கள் நடைபெறும். ஆடி மாதத்தில் முளைக்கொட்டு விழா. இதுவும் 10 நாட்கள் நடைபெறும். இதில் முழுக்க முழுக்க அம்மை மீனாட்சி மட்டுமே வீதிகளில் விதவித வாகனங்களில் உலா வருதலும் பலவகை நவதானியங்களை விதைத்து முளைவிட்ட அவைகளைக் கோலாகலமாகக் குளத்தில் விடுகின்ற விழா இது. விதைப்பது அனைத்தும் முளைத்துச் செழித்து வளர்ந்து பயிராகி அனைவரின் உயிராகவும் உணவாகவும் பயன்பட நீரோடு சேர்ந்து நெடும் பலன் பெற்றுச் சிறந்திட வேண்டும் என்பது இதன் நோக்கம் என்று நாம் கருதுகிறோம். ஆடிப்பட்டம் தேடி விதை என்பதற்கேற்ப ஆடிமாதத்தில் நடக்கும் அற்புத விழா.

ஆவணி மாதத்தில் நடைபெறும் விழா ஆவணி மூலப் பெருவிழா என்று சிறப்புப் பெறும். 18 நாட்கள் நடைபெறும். மீனாட்சி நாதனான சுந்தரேச்வரருக்கு இம்மாதம் நடக்கும் விழாவில் முடிசூட்டும் அம்சமும் இடம்பெறும். மாநகர் மதுரையை சித்திரை மாதத்திலிருந்து ஆடிமாதம் வரை கடும் கோடையில் அன்னை மீனாட்சி அருளாட்சி புரிகிறாராம். பின்னர் வெப்பத்தைத் தணித்து விதைக்கும் காலத்தில் விதைக்கவும் வழிவகை செய்து வளங்கொழிக்க அடிகோலியதும் அப்பன் சுந்தரேச்வரர் ஆவணி மாதத்திலிருந்து பங்குனி முடிய ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாராம்.

புரட்டாசியிலே அம்மன் நவராத்திரியில் கொலுவிருந்து குதூகலிக்கச் செய்யும் விழா 10 நாட்கள் நடைபெறும். மங்கையரும் தத்தம் மனைகளில் கொலு வைத்து அன்னையின் அருளாசி வேண்டித் தவமிருந்து வீட்டிற்கு மங்கல மங்கையரை வரவழைத்து மஞ்சள், குங்குமம், பூ, பழம் முதலிய மங்கலப் பொருட்களை அளித்து பொங்கும் மங்களம் எங்கும் தங்கச் செய்யும் விழா இது! தங்கள் வீட்டிற்கு வரும் மங்கல மங்கையரில் ஒருவராக அன்னை பராசக்தியும் வந்து மஞ்சள் குங்குமம் பெற்று மனைவாழ வாழ்த்தி அருள்வதாகத்தான் இன்றும் நவராத்திரி விழா அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

ஐப்பசி மாதத்தில் கோலாகலமாக நடக்கும் விழா கோலாட்டத் திருவிழா. இது ஆறு நாட்கள் நடைபெறும். கந்தசஸ்டி திருவிழாவும் இங்கே நடைபெறும். ஆனால் இங்கு மட்டும் சூர சம்ஹார நிகழ்ச்சி கிடையாது! கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை எனப்படும் தீபத்திருவிழா 10 நாட்கள் நடைபெறும். ஊரெங்கும் தீபமும் அதன் ஜொலிப்பும் கண்கொள்ளாக் காட்சியாகும்!

மார்கழியில் 9 நாட்கள் நடைபெறுவது எண்ணெய்க்காப்புத் திருவிழா என்பதாகும். திருப்பாவை, திருவெம்பாவை பள்ளியெழுச்சிப் பாடல்களும் இசைக்கப்படுவதை ஒலி வடிவமாகக் கேட்போர் பரவசம் பெறுவாராம். தைமாதத்திலே தெப்பத் திருவிழா. இது ஈராறு நாட்கள் நடைபெறும். ஆம்! ஆடியில் விதைத்ததைத் கதிராக அறுத்துச் சேர்த்திடும் விழாவாகக் கருதலாம். மாசியில் நடப்பது மகவிழா. ஐந்து மூர்த்திகளுக்கும் நடைபெறும் விழா இது.

பங்குனியில் நடப்பது கோடை வசந்த விழா. இது 9 நாட்கள் நடைபெறும். இவ்விழாவின் சிறப்பு அம்சமானது திருப்பரங்குன்றத்தில் இலங்கும் தன் மைந்தன் சுப்பிரமணியனின் சிறப்புமிகு திருமணத்திற்குக் காலையில் சென்று மாலையில் மதுரை திரும்புவதாகும். மதுரையை விழா நகரம் என்பதற்கு முற்றிலும் அர்த்தம் உள்ளதாக மேற்சொன்ன விழாக்கள் கட்டியங் கூறுகின்றன.

விழா என்றால் உறவினர், நண்பர் கூடி மகிழ்ந்து கொண்டாடிப் பயன்பெறுவதுதானே! அவ்வித நற்பயனைத் துய்ப்பதற்கு மதுரையும் மதுரையம்பதியில் நடக்கும் அநேக திருவிழாக்களும் காரண காரியங்களாக விளங்குகின்றன.

திருச்செந்தூர் முருகன் (திருச்சீரலைவாய்)

திருநெல்வேலி மாவட்டத்தில் கிழக்கே கடற்கரையை ஒட்டி திருச்செந்தூர் உள்ளது. புனிதமும் வளமும் அருளும் ஒருங்கே கொண்ட வெற்றி நகர் மாநகர் என்றும் திருச்செந்தூர் பெயர் பெற்றது. அலகைடல் ஓரத்தில் முருகன் குடிகொண்டுள்ளதால் கடலின் ஒவ்வொரு அலையும் அவன் பாதம் கழுவிப் பின்னேயும் முன்னேயும் செல்லும் அழகே அலாதிதான். அலைவாய் சீரலைவாய், "திருச்சீரலைவாய்" என்றும் பெயர்கள் உண்டு.

ஆறுபடை வீடுகளில் இரண்டாவது ஆன திருச்செந்தூர், செந்தில் செந்தூர், வீரவாகுப்பட்டினம், வியாழத்தலம், சந்தனாமலை என்றும் வழங்கப் பெறுகிறது. திருச்செந்தூர், தலையாய தலை வரலாற்றினைச் சிறப்பாகச் சொல்கிறது. சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் ஆகிய அசுரர்கள் தேவர்களுக்கு இடைவிடாமல் தொல்லைகளைத் தந்துகொண்டிருந்த நிலையில் இனி இதற்குமேல் இல்லை ஓர் எல்லை என்ற அளவில் தொல்லை பெருகியதும், தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். தேவர்கள் முறையீட்டைச் சிந்தையுடன் செவிமடுத்த சிவபெருமான் தன் குமரனான குமரனை அவர்களின் தொல்லையைத் தீர்த்துத்தரப் பணித்தார்.

தனது ஐந்து திருமுகங்களுடன் இன்னொரு முகம் கொண்டு ஆறுமுகங்களின் நெற்றிக்கண்களிலிருந்து ஆறு பொறிகளை உதிர்த்து அந்த ஆறு பொறிகளை வாயு தேவர் ஏந்திச்சென்று அக்னி பகவானிடம் தந்துவிட அக்னி பகவானோ அந்த ஆறு பொறிகளின் சக்தி மிகுந்த வெப்பத்தைத் தாங்காமல் கங்கையில் விட்டுவிட, கங்கை அவற்றைக்கொண்டு சரவணப் பொய்கையில் சேர்த்துவிட, அங்கே அந்த ஆறு பொறிகளும் ஆறு அழகிய குழந்தைகளாகத் தோன்றின. இக்குழந்தைகளைக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டிச் சீராட்டி வளர்த்துவந்தனர். இவர்களை, இந்த ஆறு குழந்தைகளையும் ஆறு முகங்களோடு ஒரே குழந்தையாக மாற்றுகின்றனர் சிவனும் சக்தியும்! நவ சக்திமிகுந்த 9 வீரர்களையும் மற்றும் 11 ருத்திரர்களையும் ஆற்றல் மிக்க தோமரம், கொடி, குளசம், கணை, வாள், மணி, தாமரை அங்குசம், தடி, வில், மழு ஆகிய ஆயுதங்களாக்கி குமரனின் பதினொரு கரங்களிலும் தந்தார். வேல் படையை பன்னிரண்டாவது கரத்தில் தந்து முழுச்சக்தியாக்கினார்.

போருக்குத் தேரில் கிளம்பிய முருகனுக்கு வாயுதேவரே தேரை ஓட்டும் சாரதியானார். தேருக்குக் குறுக்கே நின்றது கிரௌஞ்ச மலை. இந்த கிரௌஞ்ச மலை அகத்திய முனிவரின்

சாபம் கொண்டு ஜாலங்கள் பல புரிந்துவந்த மலையாகும். இம் மலையில் மாயபுரி என்ற பகுதியில் தாரகாசுரன் இருந்தான். இவன் சூரபத்மனின் தம்பியாவான். இவனுடைய முகம் யானையைப் போன்றது. மகாவிஷ்ணுவையே போரில் ஒரு சமயம் வென்றவன். மகாவிஷ்ணு சக்கரத்தை மார்பில் பதக்கமாக அணிந்து பலம் பெற்றவன்.

முதலில் வீரபாகுவைத் தூதனாக அனுப்பிவைக்க, தூது பலனளிக்காததால் போர் வெடித்தது. தரகனுடன் முதலில் போர் புரிந்த அவனை வென்று மாயங்கள் செய்து தடையாக நின்ற கிரௌஞ்ச மலையை அழித்து முதல் வெற்றியைப் பெற்ற முருகன் தனது தேரினை பல தலங்கள் வழியாகச் செலுத்தி திருச்செந்தூர் தலத்தினை அடைந்தார். சூரபத்மனின் தாய் மாயை என்பவள். இவள் சுக்கிராச்சாரியாரிடம் மாய வித்தைகளைக் கற்றுத் தேர்ந்து காச்யப முனிவருடன் வஞ்சகமாகச் சேர்ந்து 3 பேர்களைப் பெற்றெடுத்தாள். சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகியவர் மட்டுமின்றி கோடிக்கணக்கான அசுரர்களை உருவாக்கினாள். மாயையின் புதல்வர்கள் மூவரும் சிவபெருமானை நினைத்து கடும் தவம் புரிந்து ஏராளமான வரங்களை மிகவும் தாராளமாகப் பெற்றனர். அப்படிப் பெற்ற வரங்கள் மூலம் தேவர்கள் முனிவர்கள் ஆகியோரை வதைத்துவந்த வேளையில்தான் முருகப் பெருமான் தாரகனைப் போரில் அழித்தார்.

பெரும்புகழ் பெற்ற திருச்செந்தூர்க் கோயிலின் கிழக்குப் பக்கத்தில் உள்ள கொடிமரம் தங்கத்தகடுகள் வேயப்பட்டது. தற்போது உள்ள கொடிமரம் முழுவதும் சந்தன மரத்தால் ஆனது என்றும் இந்தச் சந்தன மரத்தை இலங்கை கண்டியை அரசாண்ட மன்னனின் கனவில் கந்தன் இட்ட கட்டளைப்படி கடலில் அனுப்பி வைத்தான் என்றும் அதனை எருமை மாடு ஒன்று கடலில் துள்ளிக் குதித்து நீந்திச் சென்று தானாக அதனை முகத்தால் தள்ளித்தள்ளி கரைக்குக் கொண்டு வந்தது என்றும் இந்தக் கொடிமரத்தின் சிறப்பைக் கூறுகிறார்கள்.

ராஜகோபுரம் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது என்றும் இதனை திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்த ஒடுக்கத்தம்பிரான், முருகன் கட்டளைப்படி முன்னின்று கட்டினார் என்றும் கூறப்படுகிறது. கோபுரம் கட்டும் பணியில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுக்கக் கையில் பணம் இல்லாத நிலையில் செந்தில் ஆண்டவரின் விபூதிப் பிரசாதத்தினை இலையில் மடித்துக் கொஞ்ச தூரம் சென்றதும் திறந்து பார்க்கும்படி சொல்லி அளித்து வந்தாராம்.

அப்படிப் பார்த்தவர்களுக்கு அவர்களுக்கான கூலிப் பணம் அதில் இருக்கக் கண்டனராம். இப்படிக் கொஞ்ச காலம் நிகழ்ந்து வந்த அற்புதம் திடீரென்று நிகழாமல் நின்று விட்டதும் இறைபணியைத் தொடர வழி தெரியாமல் திகைத்துத் தவித்த தம்பிரானிடம் காயல்பட்டினம் சென்று சீதக்காதியைச் சந்திக்கக் கட்டளையிட்டாராம் செந்தில் ஆண்டவர். அதன்படி சீதக்காதியைச் சந்தித்தபோது அவர் தனது அன்பின் அடையாளமாக ஒரே ஒரு மூட்டை உப்பை அளித்தாராம். ஆம், அவரைச் சந்திக்க வரும் தம்பிரானுக்கு உப்பு மூட்டை ஒன்று மட்டும் அளிக்கும்படி முருகன் கட்டளையோ என்னவோ? ஆனால் அடுத்த நாள் அந்த உப்பு மூட்டையில் மொத்தமாக — முழுவதுமாகத் தங்கக் காசுகளாக இருந்தனவாம்.

திருச்செந்தூர் முருகனின் அடியவள் ஒருத்தி இருந்தாள். அவள் தேவதாசி ஆனாலும் தூயமனத்தோடு தன்னை வணங்கி வந்ததன் காரணமாக முருகன் அவளுக்கு ஆபத்து



நேர்ந்தபோது காப்பாற்றி அருளிய நிகழ்ச்சியையும் அறிய முடிகிறது. செந்தில் ஆண்டவரைத் தரிசித்துவிட்டு வீடு திரும்பும்போது அவள் அறியாமல் அவளைப் பின் தொடர்ந்து வந்து அவள் அணிந்திருந்த பொன் நகைகளைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டுத் திருடர்கள் வந்த நிலையில் முருகனின் பெயர் சொல்லியபடி அவள் கிள்ளிப் போட்ட வெற்றிலைகளின் காம்புகள் முருகன் கைவேலாக மாறி திருடர்களைக் கொன்று அவளைக் காத்து ரட்சித்ததாம்.

பேசாத பிள்ளைக்குப் பேசும் சக்தியை அளித்ததன் காரணமாக அவன் குமரகுருபரர் ஆகி அவரால் கந்தனை நினைத்துக் கனிந்து கசிந்துருகிப் பாடினார் என்ற வகையில் கந்தர் கலிவெண்பா இயற்ற முடிந்தது. தீராத வயிற்று வலியால் தினமும் துடித்து வந்த வைணவப் பெரியார் பகழிக் கூத்தர் என்பவரை தன்னைப் பற்றிய பிள்ளைத் தமிழ் பாடும்படி கட்டளையிட அவரும் அதனைப் பாடி முடிக்கும் தறுவாயில் தனது வயிற்றுவலி நீங்கப் பெற்றுப் பேரானந்தம் கொண்டாராம்.

இந்தத் திருத்தலம் தன்னில் உள்ள பன்னீர் மரங்களின் இலைக்கு தனி மகத்துவம் உண்டு. பன்னிரண்டு நரம்புகள் உள்ள பன்னீர் இலையின் உள்ளே முருகனின் விபூதிப் பிரசாதத்தை இரவில் மடித்து வைத்துவிட்டுக் காலையில் குளித்து அந்த விபூதியை அணிந்தும் பன்னீர் இலையின் ஒரு பகுதியை உண்டும் வந்தால் தீராத பிணிகள் தீரும் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

செந்தில் ஆண்டவருக்கு இரண்டு திருவிழாக்கள் வருஷம் தோறும் ஆவணி, மாசி மாதங்களில் நடைபெறுகின்றன. இவை தவிர நித்யோத்சவம், வாரோத்சவம், பட்சோத்சவம், விரம்மோத்சவம், வருஷோத்சவம், விரதோத்ஸவம், பவித்ரோத்சவம் ஆகியவை தின வார பட்சங்களில் (15 நாட்கள்) மாதங்களில் நடைபெறும் விழாக்கள் ஆகும்.

திருச்செந்தூரில் ஐப்பசி மாத அமாவாசை அன்று மாலையில் இருந்து ஆறு நாட்கள் தொடர்ந்து விரதம் அதுவும் முருகன் காலடியான கோயிலை விட்டு அகலாமல் தத்தம் விருப்பம் சக்திக்கேற்ப நோய் தீர, குறை தீர முறைப்படி இருந்து வந்தால் இடர் அகலும், துயர் தீரும், வாழ்வில் வளமும் நலமும் பெறுவர் என்று பயன் அடைந்தவர்கள் கூறுகிறார்கள். வெற்றிக்கும் வீரத்திற்கும் வழித்துணைக்கும் வெற்றிவேல் வீரவேல் இது. அது கந்தவேளின் கைவேல். ஓராறு முகமும் ஈராறு கைகளும் யாமிருக்கப் பயமேன் என்று நாடிவரும் அடியார்க்கு அருள்பவன அல்லவா!

திருவானைக்கா

காவேரி நதிக்கும் கொள்ளிடம் நதிக்கும் இடையில் காவேரியின் கரையில் உள்ள ஒரு தீவாக உள்ளது இந்த திருவானைக்கா தலம்.

இதனை ஆனைக்கா என்றும் திருவானைக்கோயில் என்றும் கூறுவர். ஆனைக்கா என்றால் யானைகள் வசித்த காடு, எழிற்சோலை என்றும் கூறுவர். இதனைக் கஜகாரண்யம் என்றே புராணம் குறிப்பிடுகிறது.

திருக்கயிலையில் அன்னை பார்வதிதேவி பெருமான் சிவனிடம் யோகம் மற்றும் போகம் பற்றித் தனக்கு உள்ள ஐயத்தைப் போக்கி அருளுமாறு கேட்டாள். இறைவன் அதற்காக பூவுலகு

சென்று அங்கு ஞானிகள் தவம் செய்யும் தலத்தில் தவம் செய்யப் பணிக்கிறான். அன்னையும் இங்கே காவேரிக் கரைக்கு வந்து முனிவர்கள் தவம் செய்யும் சோலையில் தனது தவத்தினை மேற்கொண்டாள். இனியதினும் இனிய சுவை உள்ள நீரைக் கொண்டே அன்னை லிங்கமாகச் செய்து — அப்பு லிங்கமாக்கி அதற்கு அபிஷேகம் முதலியன செய்து வழிபட்டு வந்தாள். அப்பு என்பது தண்ணீரைக் குறிக்கும். எனவே தண்ணீரால் ஆனது அப்புலிங்கம். இதற்கு அமுதலிங்கம் என்றும் அமுதீச்வரம் என்றும் சிறப்புப் பெயர்களாகக் கூறுவர். உலகினர் அறிந்து கொள்வதற்காகத் தானே போகியாகணம் யோகியாகவும் ஆவதாக அன்னைக்கு விளக்கம் அளித்து அருள் புரிந்தார் ஈசர்.

திருவானைக்காவல் நடனம் ஆடும் மோகனாங்கியின் காதலன் அந்த மடைப்பள்ளிப் பணியாள். தனது நடனம் பார்க்க வந்தவன் அன்று உறங்கி விட்டான். உறங்கி விட்டவனை அன்று நடனம் முடிந்ததும் எழுப்பி அழைத்துச் செல்ல மறந்து விட்டாள் அந்த நடனமாது.

அந்த இரவில்தான் வாயைப் பிளந்தபடி உறங்கிக் கிடந்தவன் அன்னையின் பேரருள் கிடைக்கப் பெற்றான். அவனே காளமேகப்புலவர் எனப் புகழ் பெற்றான்.

கவிகாளமேகப்புலவர் பாடிய திருவானைக்காஉலா அற்புதம் ஆனது. இனிமையும் பொருளும் கொண்டது ஆகும்.

சினம் கொண்டிருந்த அன்னையின் சந்நிதியின் கதவைத் திறக்காமலே பூசை செய்து வந்த வேளையில் ஆதிசங்கரர் அவள் கருவறையில் இரவு தங்கி துர்க்கை வடிவினளாக வந்த அன்னையிடம் லோக ஷேமம் கருதி தர்க்கம் செய்து துதித்து பணிந்து அருள் பெற்றார்.

அன்னைக்கே தனாகர்ஷண ஜனாகர்ஷண என்ற இரண்டு சக்கரங்களை ஸ்தாபித்தார். இவற்றால் அன்னை சாந்த ஸ்வரூபியாக சகலருக்கும் வரம் தரும் வல்லபியாகத் திகழ்கிறாள்.

ஆதிசங்கரர் தானே தனது திருக்கரங்களால் பனையோலையில் மேற்படி சக்கரங்களை எழுதி இவற்றையே பொன் ஆபரணமாக ஏற்றுக் கொள்ள பிரார்த்தித்துச் சமர்ப்பித்தவை.

அன்னையின் மேனியில் பட்டவுடன் அத்தனையும் பொன்னாக மாறிவிட்டிருக்கின்றன. இப்படி ஆதிசங்கரர் அளித்ததை ஏற்றுக்கொண்ட அன்னையின் அவ்விருதாடகங்களையும் அவற்றில் ஏற்பட்ட சிறு பழுதினை நீக்கித் தந்த பாக்கியம் பெற்றவர் காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள்.

சிவன் தலத்தில் நடைபெறும் வழக்கமான அனைத்து விழாக்களும் இங்கு உண்டு. பிரதி பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சபபிரகார உற்சவம் சிறப்பானது. இறைவன் பெண்வேடத்திலும் இறைவி ஆண்வேடத்திலும் திருவீதி உலா வரும் இந்த விழா கண்ணிற்கும் கருத்துக்கும் விருந்து அளிக்கும் விழா ஆகும். படைக்கும் தொழிலைச் செய்து வந்த பிரம்மன் தான் படைத்த பெண்ணின் மேல் மோகம் கொண்டு தனது தொழிலைத் தொடர முடியாமல் திணறித் தவித்துப் பின் தனது செயலுக்கு வருந்தி இறைவனை எண்ணித் தவம் இருந்தபோது இறைவனும் இறைவியும் முறையே பிரம்மனுக்குப் புத்தி புகட்டினார்.

பிரம்மாண்ட கோடி அகிலத்தை ஆளும் ஈச்வரி அகிலாண்டேச்வரி தன்னைத் துதிப்போர்க்குத் துயர் நீக்கி இடர் நீக்கி இருள் போக்கிச் சகல வரங்களையும் சகல சௌபாக்கியங்களையும் அளித்து வரும் மகாவரப்பிரசாதி.

சமயபுரம் மாரியம்மன்

ஏழை பணக்காரன், இருப்பவன் இல்லாதவன், வலியவன் எளியவன் இப்படிப் பேதம் ஏதும் இன்றித் தனது கருணையைத் தன்னை எண்ணித் துதிப்போர்க்கு மாரியாகப் பொழிந்து அருள் பாலித்துத் துன்பம் துயர் என்னும் இருள் நீக்கி இன்புறச் செய்வதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி மாந்தர் தம் வாழ்வில் என்றும் ஒளியாகத் திகழ்ந்து உதவிடும் வல்லமை கொண்டவள் இந்தச் சமயபுரம் மாரியம்மன்.

சமயபுரம் திருச்சியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. கோயில் இருக்கும் இடம் கண்னூர் என்பதாகும். இந்தக் கண்ணனூர் வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஊராகும். சோழனின் தங்கையை மணந்துகொண்ட கங்க நாட்டு அரசனுக்கு இந்தக் கண்ணனூரில் ஒரு கோட்டையைக் கட்டி அதனைச் சுற்றிலும் நகரத்தையும் நிர்மாணித்துத் தந்தான் சோழமன்னன். இது தனது தங்கைக்குச் சீதனமாக அளிக்கப்பட்ட நகரமாகும். காலப்போக்கில் இந்த நகரம் பாண்டியனின் படையெடுப்பின்போது பாழ்பட்டது. நாளடைவில் இந்த இடம் வேப்ப மரங்கள் சூழ்ந்த இடமாக ஆனது.

விஜய நகர மன்னர்களால் வணங்கப்பட்டு வந்தது இந்த மாரியம்மன். விஜய நகர பேரரசு பிறர் நாட்டினர் படையெடுப்புக்கு இலக்கானபோது இந்தச் சிலையின் மீது பெரிதும் ஈடுபாடு கொண்டு வணங்கி வந்ததால் இது அந்தச் சமயத்தில் எதிரிகள் கையில் சிக்கிப் பாழ்பட்டுவிடக்கூடாது என்று கருதி பத்திரமாகப் பாதுகாக்கப் பல்லக்கில் வைத்து அனுப்பி வைக்கப்பட்டது. இப்படி அனுப்பி வைக்கப்பட்ட திசை வடதிசையாகும். அம்மன் இருந்த பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் சற்று இளைப்பாற வேண்டி தாங்கள் சுமந்த பல்லக்கைக் கீழே இறக்கி வைத்தனர். களைத்தவர்கள் உண்டு உறங்கி விழித்துப் பின்னர் மீண்டும் பல்லக்கைச் சுமக்க முயன்றபோது என்ன முயன்றும் எத்தனைபேர்கள் முயன்ற போதும் அம்மன் இருந்த பல்லக்கை கொஞ்சம் கூட அசைக்க முடியவில்லையாம். ஆமாம் வேம்புகள் சூழ்ந்த அந்த இடத்தை விட்டு அசைய மறுத்துவிட்டாள். அன்னையவள் அந்த இடத்திலே கோயில் கொண்டுவிட இசைந்துவிட்டதை அறிந்து அதற்காக சிறிய அளவில் கோயில் அமைக்கப்பட்டது. பின்னர் விஜயரங்க சொக்கநாதர் இந்தக் கண்ணனூரில் கோயில் எழுப்பி அன்னை மாரியை எழுந்தருளச் செய்தார்.

இந்தத் தலத்தில் தீர்த்தம் பெருவிளை வாய்க்கால் நீர் ஆகும். இக்கோயிலின் மேற்குப் பக்கம் இருக்கும் குளம் மாரித் தீர்த்தம் எனப்படுவதாகும். சமயபுரம் அன்னையின் ஆலய உற்சவங்கள் அனைத்துமே மக்களின் உற்சாகம். உத்வேகம் கொண்டு நடாத்தப்படுபவையாகும். சித்திரையில் தேரோட்டமும் தெப்ப உற்சவமும் — வைகாசியில் பஞ்சப்பரகார விழா — இதில் அன்னைக்கு உச்சி வேளைவரை செய்யப்படும் பலவகை அபிஷேகங்கள் நிலத்தையும் நீரையும் மக்களையும்



குளிர்விக்கச் செய்து வெம்மையின் கொடுமை தன் பிள்ளைகளை அணுகாத வண்ணம் அன்னை காத்து வருவதாகும். ஆடி மாதம் பூர நட்சத்திர விழா, புரட்டாசியில் கொலுவிருக்கும் நவராத்திரி விழா. தை மாதம் பூச விழா. மாசியில் மனங்கவர் பூச் சொரியும் பூமாரி பெய்யும் விழா. பங்குனி உற்சவம் பத்து நாள்.

தாம் வணங்கும் அன்னைக்காக மக்கள் விரதம் இருப்பதுதானே வழக்கம். ஆனால் இங்கே தம் மக்களுக்காக இந்த சமயபுர மாரியம்மனே 4 வாரங்கள் நைவேத்தியம் எதுவும் இன்றி வெறும் நீர் மோரும் பானகமும் மட்டுமே நிவேதனமாகக் கொண்டு பச்சைப் பட்டினியாக விரதம் இருக்கிறாள் என்றால். அன்னை மட்டுமே பட்டினியாக இருக்கும் நாட்களில் அன்னையின் பிள்ளைகள் அந்த நாட்களில் பசியும், பசியால் பிணியும் யாருக்கும் வரக்கூடாது என்ற கருத்தில் அவள் கட்டளை சித்த படி அன்னதானத்தை அமோகமாகச் செய்து வருகிறார்கள்.

தஞ்சைப் பெரிய கோயில்

நெஞ்சையள்ளும் தஞ்சை என்றாலே நினைவிற்கு வருவது அங்குள்ள பிரகதீச்வரர் கோயில்தான். இதனைப் பெருவுடையார் கோயில் என்றும் கூறுவர். இந்தத் தஞ்சை வரலாற்றுச் சிறப்புகள் கொண்டது. சங்க காலத்தில் சோழர்கள் ஆண்டனர். கி.பி. 6–8 நூற்றாண்டுகளில் முத்தரையர்கள் என்ற குறுநில மன்னர்கள் ஆட்சியில் தஞ்சை இருந்தது. இந்த முத்தரையர்கள் என்று கூறப்படுபவர்கள் இன்றும் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் பரவி உள்ளனர். முத்து ராஜாக்கள், முத்திரியர் என்றும் இன்றும் குறிப்பிடப்படுகின்றனர். இங்கு முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி முதன் முதலில் சோழர்கள் ஆட்சிக்கு வித்திட்டவன் விஜயாலயச் சோழன் ஆவான்.

சோழர்களின் தலைநகராகத் திகழ்ந்த தஞ்சாவூர் கி.பி. 9–10ஆம் நூற்றாண்டுகளில் ராஜராஜ சோழன் காலத்தில் பல சிறப்புக்களைப் பெற்றது. ராஜராஜனின் மகன் ராஜேந்திர சோழன் காலத்தில் தலைநகர் கங்கை கொண்ட சோழ புரத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் பாண்டியர்கள் எழுச்சி கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தஞ்சையின் வீழ்ச்சியாக அமைந்தது. பின்னர் அது விஜய நகர அரசின் கீழ்வந்தது. நாயக்க மன்னர்கள் 15ஆம் நூற்றாண்டில் தஞ்சையைக் கைப்பற்றினர். முதல் நாயக்க மன்னன் செவப்பன் என்பவன். ரகுநாத நாயக்கர் என்பவர் நாயக்க மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர். பின்னர் மதுரை நாயக்க மன்னர் ஆட்சியின் கீழ் தஞ்சை இணைந்தது. இதற்குச் சொக்க நாத நாயக்கர் காரணமாவார். இவர் தனது பிரதிநிதி அழகிரி என்பவரை நியமித்துத் தஞ்சையை ஆண்டார். 16ஆம் நூற்றாண்டில் மராட்டிய அரசு தஞ்சையைக் கைப்பற்றியது. வெங்காஜி முதல் மராட்டிய மன்னரானார். மராட்டிய அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் 2ஆம் சரபோஜி அரசர்.



தமிழ் நாட்டில் பெரிய கோயில் என்று சொன்னால் அது தஞ்சை பிரகதீச்வரர் ஆலயத்தையே குறிக்கும். வடக்கில் உள்ள உத்தரமேருவுக்கு ஏற்ப தெற்கே தட்சிண மேருவை சவாலாக ஏற்று உருவாக்கியுள்ளான் ராஜராஜ சோழன். கருவறையின் மேலே 96 அடி சதுரமான அடித்தளத்தின் பேரில் 216 அடி உயர விமானம் எழுந்துள்ளது. இது அடி முதல் நுனி வரை ஒரே கல்லால் உருவாகி உள்ளது.

கோயில் விமானத்தின் உச்சியிலே 25 அடி சதுரம் உள்ளது. பிரமாண்டக் கல் அது 80 டன் எடை கொண்டது என்று இன்று மதிப்பிடுகின்றனர். இந்தக் கல் அழகி என்ற கிழவியின் வீட்டுக்கு அருகில் இருந்ததாம். நான்கு மைல் தூரம் சாரம் கட்டி சிற்பிகள் இதனை விமானத்தின் மேல் ஏற்றினர் என்றும் சாரம் தொடங்கிய ஊர் சாரப்பள்ளம் என்றும் வழங்கப்பெறுகிறது. பன்னிரெண்டு அடி உயரம்கொண்ட கலசம் இந்த விமானத்தின் உச்சியில் உள்ளது. மூலைக்கு இரண்டு நந்திகளாக எட்டு நந்திகள் இந்த விமானத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் வெளி முற்றத்தில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி மேடையுள்ளது. தஞ்சாவூர் பெரிய நந்தி புகழ் பெற்றது. 12 அடி உயரம் 20 அடி நீளம் 8 அடி அகலம் 25 டன் எடை என்று விவரம் அறிய முடிகிறது. மகா மண்டபம், அர்த்த மண்டபம் கடந்து வந்தால் கருவறை. 54 அடி சுற்றளவு உள்ள ஆவுடையார் பேரில் 23 அடி உயரம் கொண்ட லிங்கம் கன கம்பீரமாகக் காட்சியளிப்பதும் அன்றாடம் அபிஷேகம் புஷ்பம் அணிவித்தல் எல்லாம் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுகள் வழியாக ஏறிச்செய்யப்படுவதும் கண்கொள்ளாக் காட்சியாகும். நர்மதை நதிக்கரையில் இருந்து இந்த லிங்கம் அமைக்கக் கல் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை ஆவுடையாரில் பொருத்த கருவூர்ச்சித்தர் வந்தாராம்.

பைரவர், விநாயகர், கருவூரார், சுப்பிரமணியர் ஆகிய தெய்வ சந்நிதிகள் கடந்து வந்தால் தெற்கு நோக்கி 10 அடி உயரத்தில் அன்னை பெரிய நாயகி எழுந்தருளியுள்ளார். அடுத்து நடராஜர் சந்நிதி. தமிழர்களின் கலை, கலாச்சாரம், கற்பனைத்திறன், சிற்பத்திறன் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைந்து காண்போர் கண்டுகளித்து மெய்சிலிர்க்கச் செய்யும் வண்ணம் அமைந்துள்ள தஞ்சை பெரியகோயில் தமிழர்களின் ஆட்சித்திறத்திற்கும் அறம் வளர்த்து ஆலயம் எழுப்பிய ஆன்மீகப்பணிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது. தஞ்சைக் கோயிலின் நிழல் தரையை என்றும் தொட்டதில்லை என்பது சிறப்பிற்குச் சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சிதம்பரம் நடராஜர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் உள்ளது. இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் நடராஜர் ஆலயம் உள்ளது. கிழக்கு மேற்கு வடக்குத் தெற்கு ஆகிய 4 வாயில்களைக் கொண்டும் ஒவ்வொரு வாயிலுக்கும் மேல் கோபுரங்களைக் கொண்டும் மிகவும் விஸ்தீரணமான பரப்பளவில் அற்புத எழில் கொஞ்சும் விதமான சிற்ப வேலைப்பாடுகள் கொண்டும் இந்தத் தலத்தின் திருக்கோயில் கம்பீரமாகக் காண்போரைத் தன்வசம் ஈர்க்கிறது.



தலம் தீர்த்தம் மூர்த்தி என மூன்று சிறப்புக்களையும் பெற்றது சிதம்பரம். சிதம்பரம் கோயிலுக்குப் பல சோழ மன்னர்கள் திருப்பணிகளைச் செய்திருக்கின்றனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தகச் சோழன் சிற்றம்பலம் எனப்படும் சிற்சபைக்குப் பொன் வேய்ந்து உள்ளார். 13 ஆம் நூற்றான்டில் விக்ரம சோழன் நுற்றுக்கால் மண்டபத்தைக் கட்டியுள்ளார். இந்த விக்ர சோழனின் புதல்வர்கள் இரண்டாம் குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் மேலும் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

12ஆம் நுற்றாண்டில் சடையவர்மன் சுந்தரபாண்டியன் தான் பெற்ற வெற்றிகளை நினைவுச் சின்னமாகத் துலாபாரதானம் அளித்துள்ளார். இந்தக் கோயிலுக்கு மேலும் ராஜகோபுரத்தையும் கட்டியுள்ளார். தெற்குக் கோபுரத்தைப் பல்லவர் வழித்தோன்றலான கோப்பெருஞ்சிங்கன் கட்டியுள்ளார்.

13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்காபூரின் படையெடுப்பால் சிதம்பரம் ஆலயம் சேதம் அடைந்தாலும் 15 ஆம் நூற்றாண்டில் கிருஷ்ண தேவராயர் தான் வடக்கே பெற்ற கோபுரத்தைக் கட்டியுள்ளார். அதே நூற்றாண்டின் இறுதியில் மதுரையை ஆண்டு வந்த நாயக்க மன்னர் வீரப்ப நாயக்கர் தன் பெயர் விளங்கும் வகையில் பெரிய மதிலையும் கட்டியுள்ளார்.

17 ஆம் நூற்றாண்டில் வள்ளல் பச்சையப்ப முதலியாரும் அவரது சகோதரி சுப்பம்பாளும் இக்கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளனர். இந்த நூற்றாண்டிலேயே பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இக்கோயிலைத் தங்கள் பாசறையாகக் கருதிப் பயன்படுத்தி வந்தனர். அக்காலத்தில் தில்லைவனம் என்ற பெயரில் இத்தலம் திகழ்ந்து வந்தது. இந்தத் தலத்திலே சுயம்பு லிங்கமாக சிவலிங்கம் இருந்தது.

சிதம்பரம் நடராஜர் கோயில் 40 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. 4 ராஜகோபுரங்கள். இவற்றை இணைக்கும் நீண்டு நெடிதுயர்ந்த கருங்கல்லால் ஆன மதிற்சுவர்கள். அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் ஆகியோர் பாடியுள்ள தலம் இது. முக்குறுணிப் பிள்ளையார், கற்பக விநாயகர், நர்த்தன கணபதி, சண்முகர், சுப்பிரமணியர், மீனாட்சி சுந்தரேச்வரர், துர்க்கை ஆகிய தெய்வ சந்நிதிகளும் உள்ளன.

இந்த ஆலயத்தில் தெற்குத் திசையில் தலைவைத்து வடக்குத் திசையில் கால் நீட்டிப்படுத்து எழுந்தருளியுள்ளார் கோவிந்தராஜர். இவருக்கும் வழக்கம் போலவே, நடராஜருக்கு செய்யும் பூஜைகள் போன்று நடைபெற்று வருகிறது. கோவிந்தராஜர். இவருக்கும் வழக்கம் போலவே, நடராஜருக்கு செய்யும் பூஜைகள் போன்று நடைபெற்று வருகிறது. கோவிந்தராஜர் குடி கொண்டு உள்ள இடத்திற்கு சித்ர கூடம் என்று பெயர். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். இரண்டாம் குலோத்துங்கனால் 12 ஆம் நூற்றாண்டில் கடலில் தூக்கி எறியப்பட்ட இந்த கோவிந்தராஜர் மீண்டும் ராமானுஜரால் எடுக்கப்பட்டுத் திருப்பதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டார் என்றும் பின்னர் 16ஆம் நூற்றாண்டில் கிருஷ்ண தேவராயரின் சகோதரர் அச்சுதராயன் திருப்பதியிலிருந்து கொண்டு வந்து மீண்டும் தில்லையில் கோவிந்தராஜரை பிரதிஷ்டை செய்தார் என்றும் வரலாறு கூறுகிறது. சைவ வைஷ்ணவ ஒற்றுமைக்கு ஓர் உரைகல் எனத் திகழ்கிறது சிதம்பரம்.



திருவாசகம் பாடிய மாணிக்கவாசகருக்கு அந்தணர் உருவில் வந்து அவர் சொல்லச் சொல்ல எழுதி முடித்ததும் இறைவனே தான் அந்த அந்தணர் என்று உணர்த்தினான். சிற்றம்பலக் கோவையையும் அவ்வாறே மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையான் எழுதியது என்று எழுதிப் பெருமான் தன் கையொப்பமிட்டு அதனை பஞ்சாட்சரப் படியின் அடியில் வைத்து மறைந்தார்.

புத்த மன்னனுடன் வாதம் புரிந்து ஊமையாக இருந்த அவனது மகளைப் பேசவைத்த நிகழ்ச்சிக்குப் பெருமானே மாணிக்க வாசகருக்கு உதவினார். மற்றும் திருநீலகண்டர், திருநாளைப் போவார், கூற்றுவார், கோச்செங்கட் சோழர் கணம்புல்லர், சேரமான் பெருமாள் ஆகியோருக்கு முக்தியும் கிடைக்கப் பெற்றுள்ளது இந்தத் தலத்தில்.

இந்தத் தலத்திலே சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) அரங்கேற்றம் நடந்தது. சேரமான் பெருமானுக்குத் தான் அன்று ஆடிய தாண்டவத்தின் சலங்கை ஒலியினைக் கேட்கச் செய்து அருள் புரிந்தார் பெருமான். சபாநாயகர், கூத்த பெருமான், நடராஜர், விடங்கர், மேரு விடங்கர், தட்சிண மேரு விடங்கர், பொன்னம்பலம், திருச்சிற்றம்பலம் என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் பெருமானுக்கு உண்டு.

நடராஜர் ஆனந்த நடனம் புரிந்த இடம் சிற்றம்பலம். இதனை சிற்சபை, சித்சபை என்று கூறுவர். இந்த சித்சபையின் நாயகரின் வலது புறம் ஒரு சிறுவாயில் உள்ளது. அதில் உள்ள திரையை விலக்கி கற்பூர ஆரத்தி காட்டப்படும்போது தங்க வில்வ மாலை ஒன்று மட்டும் காணப்படும். விக்கிரகம் எதுவும் இன்றி வெறும் தங்க வில்வ மாலை மட்டும் இருப்பது பெருமான் ஆகாய உருவாக அதாவது அருவமாக எங்கும் வியாபித்து இருக்கிறார் என்பதை உலகிற்கு உணர்த்துவதே இங்குள்ள புகழ் பெற்ற "சிதம்பர ரகசியம்" ஆகும்.

திருவானைக்காவில் நீராக, திருவாரூரில் நிலமாக, அண்ணாமலையிலே நெருப்பாக திருக்காளத்தியிலே காற்றாக, இந்தச் சிதம்பரத்திலே ஆகாயமாக இறைவன் திகழ்வதாகக் கருதப்படுகிறது. பஞ்ச பூதங்களும் இறைவன் ஒருவன்தான். அவனால்தான் அனைத்துமே என்று உணர முடிகிறது. இந்தத் தளத்திலே சிற்றம்பலத்தை சிற்சபை என்பர். பொன்னம்பலத்தைக் கனகசபை என்பர். பேரம்பலத்தைத் தேவசபை என்பர். நிருத்தசபை எனப்படுவது சிவபெருமான் ஊர்த்தவ தாண்டவம் ஆடிய இடம். ராஜசபை என்பதில் ஆயிரங்கால் மண்டபம் பல அடங்கியுள்ளன.

இங்கே தீர்த்தங்கள் பத்து உள்ளன. அவை சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்ர பாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை புலி மடு, குய்ய தீர்த்தம் திருப்பாற்கடல் ஆகும். இன்றும் முத்துத் தாண்டவர் கிருதி என்றும், கீர்த்தனைகள் என்றும், பரதம் ஆடுவோரால் பாடப்படுகின்றன. அவற்றை வறுமையில் வாடிய முத்துத் தாண்டவர் ஆனந்த நடனம் நின்றாடும் இந்த ஆண்டவனைக் கண்டு மெய்யுருகி முதல் நாள் "பூலோகக்கைலாசம் சிதம்பரமே" என்று தனது அடுத்தடுத்த நாட்களில் அவ்வாறே தன் காதில் விழுந்த வார்த்தைகளைக் கொண்டு இறைவன் புகழ் பாடிப்பாடி பெருமானின் பெரும் கருணைக்குப் பாத்திரமாகி அவனது ஜோதியில் கலந்து விட்டாராம்.

இந்தத் திருத்தலத்தில் ஆனியில் நடக்கும் திருமஞ்சன விழாவும், மார்கழியில் நடக்கும் திருவாதிரை விழாவும் பெரிய திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றன. இவை தவிர மாதந்தோறும், பல விதமான விழாக்கள் நடந்த வண்ணம் இருக்கும். தில்லை நாயகனை வாழ்வில் ஒரு முறையேனும் தரிசிப்போர்க்கு இனித் தொல்லை ஒரு நாளும் இல்லை என்பது நிதர்சனமாகும்.

கர்மவினை என்னும் விஷத்தை...

மீராபாய் என்ற பெயரைக் கேட்டவுடன், ஸ்ரீகிருஷ்ணனிடம் மீரா கொண்ட பிரேமையே நமது நெஞ்சில் எழும். மீராவின் வாழ்க்கை அவள் காலத்தில் மட்டுமல்ல இன்றும் பல பக்தர்களுக்கு பக்தியுணர்வை ஊட்டுவதாக அமைந்துள்ளது.

மீரா குழந்தைப் பருவத்திலிருந்தே கண்ணனிடம் தீவிர அன்பு கொண்டிருந்தாள். கண்ணனையே மணம் புரிந்து கொள்ளவும் விரும்பினாள். ஆனால் மானுடப் பெண்ணான அவள் இறைவனை மணக்க முடியாது என்று கூறி பெற்றோர் அவளை கும்பராணா என்ற மன்னனுக்கு மணமுடித்து வைத்தனர்.

அவளது பக்தியை, கண்ணன் மேல் அவள் கொண்டிருந்த அளவற்ற பிரேமையை, அவளது கணவன் மற்றும் அவனது உறவினரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அளித்த பல துன்பங்களையும் மீரா தன் பக்தியினால் தாங்கிக்கொண்டாள்.

அவளுடைய கணவனின் தங்கை அவளுக்குப் பாலில் விஷத்தைக் கலந்து கிரிதாரியின் பிரசாதம் எனக் கொடுக்க 'விஷமும் கண்ணன் அடியார்க்கு அமுதம்' என்று கூறிக் குடித்து விட்டாள் மீரா. விஷத்தைக் கண்ணனே ஏற்றுக் கொண்டதால் அவளுக்கு ஏதும் நேரவில்லை.

கண்ணனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த மீராவால் அரசியாக சிம்மாசனத்தில் அமரவோ, ஆடை ஆபரணங்கள் பூண்டு ஆடம்பர வாழ்வு வாழவோ முடியவில்லை. குடும்ப வாழ்வைத் துறந்து பிருந்தாவனத்தை அடைந்தாள் மீரா. அங்கிருந்து கண்ணனை இனிய பாடல்களால் துதித்து வந்தாள் மீரா.

ஒருநாள் மீரா ரூபகோஸ்வாமி என்ற சாதுவை சந்திக்கச் சென்றாள். அவரோ சாதுவாகிய தான் ஒரு பெண்ணைச் சந்திக்க முடியாது என்று தன் சீடர்கள் மூலம் சொல்லி அனுப்பினார். இதைக்கேட்ட மீரா, "இந்த உலகில் பரமாத்மாவாகிய கண்ணன் ஒருவனே ஆண். மற்ற ஜீவாத்மாக்கள் அனைவரும் பெண்களே, இதை உங்கள் குரு அறியவில்லையா? தன்னை அவர் ஆணாக எண்ணுகிறாரா," என்று சீடர்களிடம் கேட்டாள்.

தன் சீடர்கள் மூலம் இதை அறிந்த கோஸ்வாமி, மீரா முற்றும் உணர்ந்தவர் என்பதை உணர்ந்து அவளிடம் வந்து மன்னிப்புக் கேட்டார். ஞானி ஒருவர் ஒருமுறை மீராவிடம், "இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருளாக இருக்கிறான். எனவே அவனை அருவமாக தியானிப்பதை விடுத்து ஏன் இப்படி ஒரு உருவத்தைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விடுவதும், பாடுவதும், சிரிப்பதுமாக உணர்ச்சிவசப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு மீரா, "மதம் பிடித்த ஆண்யானையை நேருக்கு நேர் நின்று அடக்குவது எளிதா? அல்லது ஒரு பெண் யானையை அனுப்பி அதன் மதத்தை அடக்குவது எளிதா?" என்று பதில் கேள்வி கேட்டாள். அதற்கு ஞானி, "பெண் யானையை அனுப்பி ஆண் யானையின் மதத்தை அடக்குவதுதான் எளிது" என்று பதிலளித்தார்.

உடனே மீரா, "பக்திமார்க்கத்தில் செல்வதும் அதைப்போன்றதுதான். மனம், மதம் பிடித்த யானையைப் போன்றது. அதை அடக்கி அருவக்கடவுளைத் தியானிப்பது கடினம். ஆனால் மனம் என்னும் மதயானையின் முன் இஷ்ட தெய்வம் என்ற பெண் யானையை அனுப்பும்போது அது அடங்கி விடுகிறது. ஞானமார்க்கம் கடினமானது. பக்திமார்க்கம் எளிமையானது" என்று விளக்கினாள். ஞானியும் உண்மையைப் புரிந்துகொண்டார்.

பிரேமை பக்தி முதிர்ந்த மீரா துவாரகை சென்று அங்கிருந்த கிருஷ்ண விக்கிரகத்தில் ஐக்கியமாகி விட்டாள். அன்று தன்னிடம் பிரேமை பக்தி கொண்ட மீராவைக் காக்க கண்ணனே விஷத்தை அருந்தினான். இன்றும் நமது கர்மவினைகள் என்னும் விஷத்தை அவனே அருந்தி நம்மைக் காக்கத் தயாராக இருக்கிறான்.

இறைவனிடம் நம்மை முழுமையாக அர்ப்பணித்தால் போதும். அதற்கு என்ன வழி? மீரா கூறுவது போல இறைவனிடம் பிரேமையை வளர்த்துக் கொள்வோம். அவனது கருணையையும், அன்பையும் நினைத்து நினைத்து, அவனுக்காக உருகுகின்ற மனநிலையை வளர்த்துக் கொள்வோம். முழுமையாக அவனிடம் சரணடையும்போது நமது கர்மவினைகளை இறைவனே ஏற்றுக்கொண்டு நம்மை ஆனந்தமாக வாழவைப்பான்.

ஆதாரம் : ஸ்ரீராமகிருஷ்ண ஆனந்தம்

பிள்ளையார் ஆயுதங்கள்

எழுத்தணிவயல் ஸ்ரீ பஞ்சாக்ஷர விநாயகர் ஆலய
மஹாகும்பாபிஷேக மலர் (29.03.1956)

காலதேவன் நமது வாழ்க்கைப் பாதையை பல்வேறு வழிகளில், பலநாட்டு மக்களுடைய கூட்டுறவைக் கொண்டு கணந்தோறும் மாற்றி அமைக்கின்றான். அதனால் நமது அகவாழ்வு புறவாழ்வு இரண்டுமே மாறுகின்றன. நமது பண்டைய வாழ்வியலின் துணைப்பொருள்களான பாத்திரபண்டங்களும், போர்க்கருவிகளும் இன்று வேற்றுருவத்தில் வேறு வேறு பெயர் தாங்கி நிற்கின்றன. சில மறைந்தே போயின. சில பெயர் மட்டும் மறைந்து போயின. ஆதலால் அவற்றைப் பற்றி இந்த இருபத்தொராம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது.

கருவிகள் கருவிகளாக இருந்த காலத்தில் காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும், தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில், ஆடம்பரமும் அணியழகும் அடிவைக்கத் தொடங்கிய காலத்து, எத்தனையோ இழப்பு வேலைகளும், கொடிக்கருக்கு வேலைகளும், சிற்ப சித்திர வேலைகளும் கலந்துவிட்டன. அதனால் அவை ஆயுதங்களா? அல்லது அணியா? என்று கூற முடியாத நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது. அவ்வண்ணமே (ஆயுதங்களை) போர்க்கருவிகளை மக்கள் கையாண்ட காலத்துக் கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மந்திரிகளும் கையாளுவனவற்றில் சித்திரம் கலந்தன. கடவுட் கைகளில் இருப்பன என்றும் காட்சிப் பொருளாகவே இருப்பதால் அவை அழகுப் பொருளாகவே ஆயின. ஆதலால் அவைகளின் இயற்கையமைப்பும், இன்று கடவுளார் கரங்களில் விளங்கும் அமைப்பையும் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. மற்றும், நாட்டிற்கு நாடு கருவிகளினுடைய அமைப்பு மாறியிருக்கிறது.

கல்லுக்கு உயிர்கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி, கலைத் தெய்வத்தின் கருணையை விளங்கச் செய்த பல்லவர்களில் முற்காலப் பல்லவர்கள் சாளுக்கியர்கள் இவர்களின் சிற்பங்களில் கருவிகளின் அமைப்பு நிலை வேறு. அவற்றினின்றும், பிற்காலச் சாளுக்கிய, பல்லவ, ஹொய்சள மன்னர்களின் சிற்பங்களிலுள்ள கருவிகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. அவற்றைக் கிடைத்தவரையில் கணபதி கணபதி கரங்களிலுள்ள கருவி வகைகளைக்கொண்டு காட்ட முயலுவோம்.

(1) பாசம்:

இது கயிறு. பகைவர்களின் கைகளையும், கால்களையும் கட்டப் பயன்படும். ஒரு கயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி. நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகளும் நான்கு.



(2) அங்குசம்:

இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப் பெற்ற வளைந்த மூக்கும், குத்தி அடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்குரிய சிறப்புக் கருவிகளில் இதுவும் ஒன்று.

(3) தந்தம்:

ஒடிந்த யானைக் கொம்பு.

(4) வேதாளம்:

தசை நாரில்லாத, அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க பூத வடிவாக இருப்பது. இதனை ஏவிப் பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

(5) சக்தி:

இது வேல். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது.முருகனுக்குச்சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிக்கிறார். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில்ஒன்று. வேல்மட்டும்இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது.

(6) அம்பு (Arrow):

இது வில்லை வளைத்து அதில்வைத்து எய்யப்பெறுங்கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகி இருப்பார்கள். அதனது வால் பக்கத்தில் கழுகின் இறகுகளையும் மற்ற பறவை இறகுகளையும், கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிற்கே இது பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

(7) வில்:

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில் சிலை என்னும் மரம் முதலான வளையக் கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல் அல்லது, நார்க்கயிற்றானியன்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுக்கக்கட்டி, அதன் நடுவில் அம்பை வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின், வலியும், நாணின் உணறுதியும், இழுத்துவிடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக் அவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம்

தோய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறை மதி போலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

(8) சக்கரம்:

இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. இதில் இருவகை உண்டு. ஒன்று தேர் உருளை போன்றது. மற்றது வளையம் போன்றது.

(9) கத்தி:

தலைப் பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப்பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டையோடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவும் கூட அமைந்து இருப்பதுண்டு.

(10) கேடகம்:



இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர் யானை, காண்டா மிருகம் இவற்றின் தோலாலும் செய்யப் பெறும், சதுரம், நீளச் சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களில் செய்யப் பெறும்.

(11) சம்மட்டி:



இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும்சிறுகழியைக் கோர்த்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப் பெறும்.

(12) கதை:

குண்டாந்தடி. இதில் பல வகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையை விட்டு அகலாதபடி, காவலாக இருந்து, உடையவனைப் பாதுகாப்பது.

(13) நாகபாசம்:

இதுவும் பாசவகைகளில் ஒன்று.

(14) சூலம்:

இது மூன்று நுனிகளை உடையது. சிவபொருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரை வரையிலும் எ.ஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக் காம்பிற் கோர்க்கப் பெற்றிருக்கும்.



(15) குந்தாலி:

இன்று, வன்மையான நிலப் பாறைகளை உடைக்கப் பயன் பெறும். தலை கனத்து கூரிய நுனியோடு இருக்கும். இரும்பானி யன்ற கருவி இது. இதில் பல வகைகள் உள்ளன.



(16) மழு:

இன்று மரங்களை வெட்டப் பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. 'வாய்ச்சி' என்னும் மரஞ் செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபொருமா னுக்கு விருப்பமான கருவி.

(17) கொடி:

இது வெற்றிக்கு அறிகுறி யானது. துணியாலி யன்றது. அடையாளம் எழுதப் பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கி இருக்கின்றார்.



(18) தண்டம்:

இது நீளமான கைத்தடி. மரத்தாலானது.

(19) கமண்டலம்:

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்து இருப்பார்கள். இதுவும் அக்ஷி மாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும், திருவுருவ நிலையை அறிந்துகொள்ள உதவும் கருவிகள்.

(20) பரசு:

இது சற்றேறக்குறைய மழுப் போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப் பெற்றுப் பயன்படுத்தப் பெறும் கருவியாகும்.

(21) கரும்புவில்:

கரும்பால் செய்யப்பட்ட வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரி ஆகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.

(22) சங்கம்:

இதுவும் விஷ்ணுவுக் குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்கி அடங்கச் செய்யும் அச்சக் கருவியுமாம்.



(23) புஷ்பபாணம்:

தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

(24) கோடரி:

மரம் பிளக்கப்பயன்படும் கருவி போலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இரும்பால், வாய் கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

(25) அக்ஷமாலை:

உருத்திராக்ஷ மாலை. இது தனித்தனியே ஒரு மாலையாகத் திரு உருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம்.

(26) சாமரம்:

இது கவரிமான் வால் மயிரினால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப் பெருமான் உடைய திரு உருவ அடையாளங்களில்ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

(27) கட்டுவாங்கம்:

இது நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப் பயன்படுவது. இதில் ஒரு முனையுடையதும், இரு முனை உடையதும் என இருவகை உண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனி உடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகி யிருப்பது வழக்கம்.

(28) தீ அகல்:

ஒரு தீப்பிளம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவம் இப்படியேதான் இருக்கும்.

(29) வீணை:



இது ஒரு இசைக் கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படை வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்டப் பயன்படுவது.



Our Grateful Thanks to.....

- Swami Bothamayanantha of Ramakrishna Mission Ashrama, Chennai, for honouring this occasion with his presence as Chief Guest,
- Our Principal Mr. H. L. B. Gomes, for his whole-hearted support and encouragement for our venture,
- Our Vice Principal, Assistant Principals and Teachers,
- Our Teacher-in-charge Mrs. P. Neelalojanan, Assistant Teachers-in-charge Mrs. L. Thavakumar, Mr. S. Balaendran, Mrs. S. Gajanthan, Mr. S. Sivakumar and our teachers for standing by us always and giving us all the encouragement and support,
- Those who contributed articles for this souvenir,
- The Old Boys who have helped us as and when necessary,
- All Representatives and Students of other Schools who have participated in this "Kalaimagal Vizha 2003" and the Judges,
- The Advertisers and Well-wishers who have contributed to the success of this souvenir,
- **Nalravi English Language Centre** for sponsoring the event.
- **Vemake and AMT Transport** for sponsoring the Soft Drinks.
- **Shivashanmugaraja & Company and Vino Nakai Poonka** for sponsoring the Food,
- **Arasan Printers** for having printed the Invitation Cards, Certificates and this Souvenir,
- **Baseline Electrons** for their excellent Lighting and Sound System,
- **Vidio Blossom** for Videography & Photography,
- All parents who have granted their support to hold such an event,
- All Patrons who have come to grace this occasion,

"Our feeling of gratitude are immeasurable"

Hindu Students' Union
Royal College



நன்றி நவிலல்

- பிரதம அதிதியாகப் பெருமனதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த சென்னை, இராமகிருஷ்ண மிஷின் ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி போதமயானந்தா அவர்களுக்கும்,
- கலைவாணிக்கு முத்தமிழால் விழாவெடுக்க நிறைந்த மனதுடன் அனுமதியும், உதவியும் வாழ்த்தும் வழங்கிய எமது மதிப்புக்குரிய அதிபர், உயர்திரு H. L. B. கோமஸ் அவர்களுக்கும்,
- எம் கல்லூரி உப அதிபர், துணை அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கும்,
- பல சிரமங்களுக்கு மத்தியிலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எமது இன்ப துன்பங்களில் பங்கெடுத்த எமது மன்ற பொறுப்பாசிரியை திருமதி புஷ்பா நீலலோஜனன், உதவி பொறுப்பாசிரியர்கள், திருமதி லை. தவகுமார், திரு. சூ. பாலேந்திரன், திருமதி சு. கஜந்தன், திரு. ச. சிவகுமார் அவர்களுக்கும்,
- இவ்விதழுக்கு ஆசிச் செய்திகளையும், ஆக்கங்களையும் வழங்கிய அனைவருக்கும்,
- என்றுமே எமக்கு உதவிக் கரம் கொடுக்கும் பழைய மாணவர்களுக்கும்,
- எமது பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கலந்து கொண்ட ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும், நடுவர்களுக்கும்,
- இவ்விதழுக்கு விளம்பரம் தந்த விளம்பரதாரர்களுக்கும் இவ்விழாவுக்கு பிரதான அனுசரணை புரியும் **Nalravi English Language Centre** நிறுவனத்திற்கும்,
- இவ்விழாவிற்கு உணவு அனுசரணை புரிந்த **Shivashanmugaraja & Company** மற்றும் "வினோ நகைப் பூங்கா" நிறுவனத்திற்கும்,
- இவ்விழாவிற்குக் குளிர்பான அனுசரணை புரிந்த **Vemake** மற்றும் **AMT Transport** தாபனத்தினருக்கும்,
- அழைப்பிதழ்களையும், சான்றிதழ்களையும், உங்கள் கைகளில் தவழும் "சிவசக்தி 2003" மலரினையும் அச்சிட்டுதவிய அரசன் அச்சகத்தாருக்கும்,
- விழாவிற்கு ஒலி, ஒளி அலைகளைத் தந்து கொண்டிருக்கும் **Baseline Electrons**" தாபனத்தினருக்கும்,
- விழாவிற்குத் தேவையான ஒளிப்பதிவும், புகைப்படங்களும் எடுத்துதவிய **Video Blossoms** தாபனத்தினருக்கும்,
- எமக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தமது முழு ஊக்கத்தைத் தந்துதவிய பெற்றோர்களுக்கும்,
- இனிக்கும் இந்த மாலைப் பொழுதினிலே இந்த "நவரங்கஹல" நந்ததவனத்தில் கூடியிருக்கும் ரசிகர்களுக்கும்,
- குறிப்பறிந்து பல உதவிகள் வழங்கிய அனைவருக்கும்,

"நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி"

இந்து மாணவர் மன்றம்
றோயல் கல்லூரி

சிவசக்தி

With Best Compliments from

Arasan Printers

- Type-setting (English, Tamil, Sinhala)
- Graphic Designing
- Photo-Offset Printing
- Letterpress Printing
- Screen Printing
- Foiling
- Laminating
- Die-Cutting

Sole Agents for
Sheet-fed & Web-Offset
Printing Machines
Manufactured by
Manugraph India Ltd.
Mumbai, India



30, Hyde Park Corner, Colombo 2
Telephone : 2326482, 2422393
Facsimile : (941) 2422393
E-mail : tprem@eureka.lk

Designed and Printed by Arasan Printers, Colombo 2